காவேரி

CONNEMARA PUBLIC LIBRARY
20 FEB 1960

பொருளடக்கம்

விகாரி-ஹு மலர் 19	ஜனவரி — 1960	மார்கழி இதழ் 5

பரிதியருள் பாடிடுவோம்!	நா. சீ. வரதராஜன்	4
டில்லித் தபால்	கே. ஸ்ரீநிவாஸன்	5
குமுதமலர் குணவதி	தே. ஸ்ரீ. ரா.	9
விவசாயமும் விவகாரமும்	கே. ஸ்ரீநிவாஸன்	15
உலக விவசாயக் கண்காட்சி	,,	18
இன்பமே இங்கே வா (தொடர்கதை)	தி. சேஷாத்திரி	25
இருளும் ஒளியும்	கு. ப. சேது அம்மாள்	33
அண்ணாமலைத் தீபம்	எஸ். லட்சுமி சுப்பிரமணியம்	39
சாட்சி எங்கே?	ரா. வேங்கடசாமி	44
விஞ்ஞானத் துணுக்குகள்	நா. கி. நாகராசன்	53
விதி வழியே....	இளம்பாரதி	57
வஜ்ரவீணை (தொடர்கதை)	கே. சுந்தராம்பாள்	63
நர்ஸ் மீனு	வனமாலிகை	70
தொழில் துணுக்குகள்	விசால்தேவ்	76
புதுமைப் பெண்	பாலு	80
சிறுவர் பகுதி	எஸ். விசாலாட்சி	89
பெண்களுக்கு மட்டும்	எஸ். விஜயா	92
திரை உலகம்	விச்வம்	94

JEYRAD
RADIO



எங்கும்
எப்பொழுதும்
குதூகலமளிப்பது
ஜேராட் ரேடியோ

மாடல்-A 96
6-வால்வுகள் – AC-ஆல்வேவ் 3-பாண்ட்கள்
நிகர விலை ரூ. 295/- (உள்ளூர் வரிகள் தனி)

தயாரிப்பவர்கள் :
ஜேராட் எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரீஸ்,
38, தங்கசாலை வீதி, மதராஸ்-3

அத்தாக்ஷி பெற்ற விற்பனையாளர்கள்:
திருவாரூர்: பாலன் எலக்ட்ரிகல்ஸ், விஜயபுரம்
தஞ்சாவூர்: ரேடியோ ஹவுஸ், மேலராஜ வீதி
திருச்சி: ரேடியோ ஹவுஸ்

காவேரி

விகாரி-ஹு	"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச்	மார்கழி
மலர் 19	செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"	இதழ் 5

பரிதியருள் பாடிடுவோம்!

நா. சீ. வரதராஜன்

வா! வா! வடிவழகி! வஞ்சியெனும் அஞ்சுகமே!
பாவால் பரிதியருள் பரவித் துதித்திடுவோம்!
பாடுபட்ட நெஞ்சத்தில் பால்வார்த்து, பனிப்புகையால்
மூடிவிட்ட நிலமங்கை முகத்தழகில் ஒளிகூட்டி,
புற்றரையில், பூங்காவில் பொங்குகின்ற கடலலைமேல்
சுற்றியுள்ள பொருளிலெலாம் சோபை பரப்பியுளம்
சூழ்ந்திருக்கும் இருள்போக்கி, சுடர்கூட்டி, உணர்வினிலே
ஆழ்ந்திருக்கும் கவியுணர்வை அலர்ந்தொளிரச் செய்வதற்கே
வந்துதித்த இளங்கதிரோன் வாழ்விலருள் பெய்திடுவான்!
செந்தமிழர் நன்னாடு செழித்துயரச் செய்திடுவான்!
புலமளித்த புதுநெல்லின் புத்தரிசி வட்டித்து
கலைமணத்த சுவைகூட்டும் கரும்பினது சாறிட்டு,
பசுவின்பால், நெய்சேர்த்து, பானையினில் பொங்கலிடு!
ருசிகமழச் சிறுஏலப் பொடிதூவு! அன்பிணையே
கூட்டிக் கலந்ததிலே குங்குமப்பூ, முந்திரிசேர்.
ஊட்டிவிட்ட களியுடனே உற்சாகம் பொங்குதல்போல்
நாமணக்கப் பாற்பொங்கல், ஞாயிற்றின் புகழ்பாடும்
பாமணக்கும் அன்பிவைதான் பரிமளமாய்ப் பொங்கட்டும்!
குளிர்மதியின் முழுநிலவின் குளிர்கரத்தைத் தீண்டியதும்
களிர்கடலும் பொங்குதல்போல் நமதன்புக்கதிர் தீண்டி
பரிதியருள் பொங்கட்டும்! பாரில் மழைபொழியட்டும்!
சுருதியுடன் தமிழ் வாழ்வு சோபையுறச் செய்யட்டும்!
வா! வா! வடிவழகி! வஞ்சியெனும் அஞ்சுகமே!
பாவால் பரிதியருள் பரவித் துதித்திடுவோம்!

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

"ஐக்" வந்தார், கண்டார், வென்றார்" என்று ரத்தினச் சுருக்கமாக சொல்வார்கள் அமெரிக்கர்கள் தங்கள் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைக் குறித்துச் சொல்வது என்னும் பக்ஷத்தில். அமெரிக்கர்களுக்கு வார்த்தைகளைக் கொட்டி, அவைகளை அழகுபடுத்தி அலங்காரப் பந்தல் போடத் தெரியாது. டில்லியில் கூடிய பெரிய ஜனத்திரளை அவர்கள் நிருபர்கள் விவரித்த அழகு ஒன்றே போதும். "எங்கு பார்த்தாலும் ஜனங்கள் ஜனங்கள் ஜனங்கள்" என்று கிட்டத்தட்ட எல்லோரும் விவரித்தார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் சென்ற மகா யுத்தத்தில் தன் அபார ராணுவ தந்திரத்திற்கும் அதிகாரிகளை அரவணைத்து ஏகோபித்த நடவடிக்கைகள் எடுப்பதற்கும் பெயர் வாங்கியவர். "இனி ஹிட்லரை மடக்க முடியாது. உலகத்தில் பாதியை அவரும் ஜப்பானியர்களும் சாப்பிட்டு ஏப்பம்கூட விட்டுவிட்டார்கள்" என்று பிரபல ராணுவ விமரிசகர்கள் கூட அபிப்பிராயப்பட்ட பொழுதுதான் நேச நாடுகளின் கூட்டு முன்னணி ஏற்பட்டு அதற்கு ஐஸன்ஹோவர் தலைமை ஏற்றார். உலகத்தை காலின் கீழ் போட்டு மிதிக்கும் பலிஷ்டர்களை எதிர்ப்பது ஒரு பக்கம், பலபட்டரை நாடுகளின் ராணுவ தளகர்த்தர்களை கட்டிமேய்ப்பது மற்றொரு பக்கமாக ஐஸன்ஹோவரின் பதவி என்றும் எளிதானதல்ல. சமயங்களில் சிவில் அதிகாரிகளான ஸர் வின்ஸ்டன் சர்ச்சில், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் போன்றவர்களைக் கூட அவர் மேக்கரிக்கவேண்டியிருந்தது என்றால் அவர் வகித்த பொறுப்புக்கு எவ்வளவு இன்னல்கள் என்று ஊகிக்கலாம்.

இம்மாதிரி புகழ் பெற்றவர் என்ற ஒரு காரணத்தால்தான் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஸ்தானத்திற்கு போட்டிபோட்டு அமோகமாக வெற்றியடைந்தார். அமெரிக்காவில் டெமாக்கிரட் கட்சி இருபது வருஷங்கள் இடைவிடாது பதவி வகித்த கட்சி, முற்போக்காளர்கள் நிறைந்த கட்சி, ஜனாதிபதி ரூஸ்வெல்டின் தனிப்பெரும் அந்தஸ்து மூலம் தானும் புகழ்தேடிக்கொண்ட கட்சி. அக்கட்சியை எதிர்த்து ஜனாதிபதி ஸ்தானத்தைக் கைப்பற்றினார் ஜெனரல் ஐஸன்ஹோவர் என்றால் அவரிடம் அமெரிக்க மக்கள் வைத்திருக்கும் மதிப்புக்கு அந்த சம்பவம் ஒரு பெரும் அத்தாட்சி.

எந்நாட்டிலும் ஒரு தனி மனிதரின் அந்தஸ்துக்கும் புகழுக்கும் தனி மரியாதை உண்டு. இந்தியாவில் மட்டும்தான் நேரு ஸ்துதி என்று வாசகர்கள் எண்ணக்கூடாது. எவ்வளவு முன்னேறிய நாடாக இருந்தாலும் அங்கும் மக்கள் தனிப்பட்ட மனிதருக்கு விசேஷ மரியாதை செலுத்துகிறார்கள். சமீபத்தில் அமெரிக்காவில் ஒரே நபர் இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்ற சட்டம் அமலாயிற்று. அந்தச் சட்டம் இல்லாவிட்டால் ஐஸன்ஹோவர் இன்னும் ஓரிரு தடவைகள் ஜனாதிபதியாவதில் யாதொரு சிரமமும் இருக்காது.

* * * *

இவ்வளவெல்லாம் எதற்காக எழுதினேன் என்பதை வாசகர்கள் நன்றாக ஊகித்துக்கொண்டிருப்பார்கள். அமெரிக்க ஜனாதிபதி சாதாரணமாக அமெரிக்காவை விட்டு வெளியே போவதில்லை. அதற்கு விதிவிலக்காக ஜனாதிபதி ஐஸன்ஹோவர் ஒரு டஜன் நாடுகளுக்குமேல் விஜயம் செய்யத் தீர்மானித்ததுடன் இந்தியாவுக்கு நான்கு தினங்கள் ஒதுக்கியது ஒரு மகத்தான சம்பவம். உலகத்து இரு வல்லரசுகளில் அமெரிக்கா குடியரசு நாடுகளின் உற்ற தோழன் என்பதுடன் உலகத்தில் கம்யூனிஸம் பரவாமல் பார்த்துக் கொள்வதில் அமெரிக்காவுக்கு பெரிதும் அக்கறை உண்டு. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் சென்ற 10 வருஷங்களாக அபிவிருத்தித் துறையில் போட்டியிருப்பது யாவரும் அறிந்த விஷயம். இந்தப் போட்டியில் இந்தியா பின் வாங்கக்கூடாது என்று அமெரிக்கா பெரும்பாடு பட்டிருப்பதுடன் இந்தியாவுக்கு ஏராள உதவியும் அளித்து வந்திருக்கிறது. உணவு சப்ளை முதல் இந்திய ஐந்து வருஷத் திட்டங்களுக்கு நிதி யீட்டுவதுவரை அமெரிக்கா நேரடியாக உதவி செய்து வந்திருக்கிறது. அமெரிக்காவின் எண்ணங்களை இந்தியாவில் சில சமயங்கள் தப்பிதமாகக்கூட எடுத்துக் காட்டியதுண்டு. ஆனாலும் இந்தியா ஒரு பெரிய ஜனநாயக தேசம், அதைக் கைவிடக்கூடாது என்ற எண்ணம் அமெரிக்காவை எப்பொழுதும் இயக்கி வந்திருக்கிறது. கம்யூனிஸத்தை கட்டுப்படுத்தும் உலகளாவிய திட்டத்தின் கீழ்தான் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ராணுவ உதவி செய்தது. அமெரிக்கா அளிக்கும் தளவாடங்கள் இந்தியாவுக்கு எதிராக உபயோகிக்கப்படும்

என்று அமெரிக்காவை குறைகூறும் நபர்கள் சொன்னார்கள். ஏன், பிரதமர் நேரு கூட கிட்டத்தட்ட இதே அபிப்பிராயத்தை பல தடவைகள் தெரிவித்தார். தாங்கள் கொடுக்கும் ராணுவ உதவி இந்தியாவுக்கு பாதகமாக அல்ல என்று பல தடவைகள் டல்லஸ் கூறியதை யாரும் பொருட்படுத்தவில்லை. ஏனென்றால் சென்ற சில மாதங்களாகத்தானே இந்தியப் பத்திரிகைகள் தங்கள் மூளையை உபயோகித்து சிந்திக்க ஆரம்பித்திருக்கின்றன! அன்று டல்லஸ் சுட்டிக்காட்டிய நண்பன் என்ற துரோகி தான் இன்று இந்தியாவை துருவமில்லாமல் தாக்குகிறான். பாகிஸ்தானத்துக்கும் கூட திபெத்துடன் எல்லை இருக்கிறது, அதை சீனா ஆக்கிரமிக்க முயல்வதுதானே?

ஜனாதிபதி ஐஸன்ஹோவருக்கு இந்தியாவில் கிடைத்த வரவேற்பு இதுவரை கண்டிராத குதூகல கோலாகல வரவேற்பு. ஸ்ரீகுருஷேவுக்கும் மார்ஷல் புல்கானினுக்கும் கிடைத்த வரவேற்பு அமோகமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஜெனரல் ஐஸன்ஹோவருக்குக் கிடைத்த ஆரவாரமும் கும்மாளமும், ருஷ்யத் தலைவர்களுக்குக் கிடைத்த வரவேற்பை குப்பையில் தூக்கிப்போட்டு விட்டது. சீனாவுடன் இந்தியாவுக்கு சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் "நல்லுறவு" காரணமாகத்தான் இந்த வரவேற்பு என்று சொல்லுவது அபத்தம். பத்து வருஷங்களாக இந்தியாவில் செய்துவரும் பிரசாரமும் கல்வி முயற்சிகளும் பயனளித்து வருகின்றன. கேவலம் கையெழுத்து மட்டுமே போடத் தெரிந்தவர்கள்கூட சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள். பொது ஜன அபிப்பிராயம் என்பது இப்பொழுது தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது இந்த பொதுஜன அபிப்பிராயமே ஆணைப்பட்ட பிரதமர் நேருவைக்கூட பல பல்டிகள அடிக்கச் செய்து "அவசியமானால் இந்தியா ஒரு ஆயுதம் தாங்கிய முகாம் ஆனாலும் ஆகலாம்" என்று சென்ற மாதம் கர்ஜிக்கச் செய்தது.

ஜெனரல் ஐஸன்ஹோவருக்குக் கிடைத்த மரியாதை ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள ஜனங்கள் ஜனநாயகம் ஊறிய தேசத் தலைவருக்கு அளிக்கும் மகத்தான வரவேற்பு. தாங்கள் சொல்லி வந்ததுபோல் நடந்தும் வந்திருக்கிறார்கள் என்பதை இந்தியர்கள் பாராட்டுகிறார்கள் என்று இதற்கு அர்த்தம்.

நாம் சுதந்திரம் அடைந்தது முதல் அமெரிக்காவிடமிருந்து இன்று வரை உதவிகள் பிரமாதமாகக் கிடைத்து வந்திருக்கிறது. உணவானாலும் சரி, டாலர்களானாலும் சரி, தொழில் நுட்பங்கள் ஆனாலும் சரி இந்தியாவுக்குக் கிடைத்த உதவி மிகவும் சிலாகிக்க வேண்டியது. "பாயி பாயி" என்று சொல்லிக் கொள்ளும் சீனர்களிடமிருந்து நமக்குக் கிடைத்ததென்ன? சுமார் 2,000 மைல் நீள எல்லைத் தொந்திரவு, அகதியான டலாய்லாமா, ஆயிரக்கணக்கான திபெத் அகதிகள், ஏழு இந்திய போலீசாரின் பிரேதங்கள், பஸிபிக் சமுத்திரம் நிரம்ப வல்லவரைப் பிரளயம்.

ஜெனரல் ஐஸன்ஹோவரின் விஜயத்தின் பயனாக "சூ, மந்திரக்காளி" என்ற அபூர்வம் நிகழாது. ஆனால் இந்தியாவுக்கு ஏராள நன்மதிப்பும் இந்நாட்டை நன்கறிந்த அமெரிக்க ஜனாதிபதியின் நல்லெண்ணமும் கிடைக்கும். தனித் துறையில் உள்ளவர்கள் பணம் ஈட்ட அமெரிக்க சர்க்கார் உதவி செய்யலாம். நாம் கேட்காவிட்டாலும் சீனர்களுடன் நம் "நல்லுறவு" முற்றினால் அமெரிக்காவின் உதவி கிட்டலாம். அமெரிக்கா நமக்கு பின்னால் இருக்கிறது என்ற உணர்ச்சியே பல லக்ஷம் சிப்பாய்கள் நிறைந்த சேனைக்கு ஈடாகும்.

* * * *

பஞ்ச தந்திரத்தில் வரும் கதையில் வருமுன் காப்போன் வந்தபின் காப்போன் என்ற இருவித சிருஷ்டிகளைப்பற்றி படித்திருக்கிறோம். நம் பிரதமர் பின் சொன்ன ரகத்தையாவது சேர்ந்தவராக இருப்பது பற்றி சந்தோஷம்தான். 1950-ல் நேபாளத்தில் காங்கிரஸ் திரண்டெழுந்த சமயம். திரிபுவனர் நாட்டைத் துறந்து இந்தியாவில் அடைக்கலம் புகுந்திருந்தார். ராணாக்கள் நாங்கள் பதவியை விடமாட்டோம் என்று காங்கிரஸை நசுக்க முற்பட்டிருந்தார்கள். இறுதியில், ஜனநாயகம் வெற்றி பெற்றது; ராணாக்கள் விட்டுக்கொடுக்க நேர்ந்தது, மன்னர் திரிபுவனர் நாடுதிரும்பினார்.

அகல அடிப்படை கொண்ட ஒரு மக்கள் சர்க்கார் அமைக்க முற்பட்ட மன்னர் நேபாளத்தின் பாதுகாப்பு, போக்குவரத்து, அயல் நாட்டு விவகாரம் முதலியவைகளை இந்தியாவுடன் ஒப்படைக்கத் தயாராக இருந்தார். அவர் அப்படிச்செய்ய முடிவு செய்ததற்குக் காரணம் உண்டு, நேபாளம் மிகவும் பின்னடைந்தநாடு, எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்குஒருவர்கூடக்கிடையாது. அரசியல் துறையிலும் காங்கிரஸைத்தவிர பல உதிரிக் கட்சிகள் கிளம்பியிருந்தன. எந்தக்கட்சியும் நேபாளத்தில் அடிப்படைவேலை செய்ததல்ல. ஏனென்றால் ராணாக்கள் ராஜ்யத்தில் எவ்வித சுதந்திரமும் கிடையாது. ஆதலால் தீவிரவாதிகளின் பிரசாரத்துக்கு மக்கள் இலக்காவது அபாயம் என்று மன்னர் திரிபுவனர் கருதினார்.

இந்தியா அந்தக் கட்டத்தில் மன்னர் திருபுவனரின் சிந்தனையளவுக்கு எழும்பவில்லை. மன்னரின் அபிலாஷையைப் பூர்த்தி செய்தால் இந்தியர்களுக்கு எதிராக நேபாளத்தில் அரசியல் சுழல்கள் உண்டாகும்

என்று பிரதமர் நேரு நினைத்தார். அவர் அப்படி எண்ணியதற்கு ஆதாரம் உண்டு. அடிமைகளாக இருந்து சுதந்திரம் அடைந்த மக்களுக்கு தன்மானத்தில் மிகவும் அக்கரை இருக்கும். ஆனால் அதை பொருட்படுத்திய தன் பலனை இருநாடுகளும் அனுபவிக்க இருக்கின்றன. ஏனென்றால் பத்து வருஷங்களுக்குப் பிறகு ஒரு பலமான அஸ்திவாரம் உள்ள சர்க்கார் ஏற்பட்ட போதிலும் காங்கிரஸிடம் உதை வாங்கிய கட்சிகள் நாசகாரி வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன. அதுவும் வட எல்லையில் சீனா முஸ்தீப்பு செய்யும் சமயம் நேபாள சர்க்காரின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது.

சீனா ஆக்கிரமிப்பு பற்றி பார்லிமெண்டில் நடந்த விவாதத்திற்கு பதிலளித்த பிரதமர் நேரு “வேண்டுமென்றால் இந்தியா பூராவையுமே ஒரு ஆயுதம் தாங்கிய முகமாகச் செய்யத் தயார்” என்றார் அல்லவா? அவர் அத்துடன் நிற்கவில்லை. “நேபாளத்தின்மேல் ஏற்படும் எந்த ஆக்கிரமிப்பையும் இந்தியா தன் மேல் ஏற்பட்ட ஆக்கிரமிப்பாகக் கருதும்” என்றுசொன்னார். இதை சமயோஜித கம்யூனிஸ்ட்களும் அவர்கள் அனுதாபிகளும் அனர்த்த வியாக்கியானம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். நேரு சொல்வதற்கு அர்த்தம் நேபாளம் இந்தியாவுக்கு உட்பட்ட நாடு என்பது என்று அவர்கள் புரளி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இது கம்யூனிஸ்ட்களின் பழைய தந்திரம். கலசலைக் கிளப்பிவிட்டு உண்மையில் சீனர்களின் ஆக்கிரமிப்பை வரவழைக்க இப்படி தீவிர இடதுசாரியாட்கள் செய்கிறார்கள் என்று எல்லோருக்கும் தெரியும், இந்நிலைமையில் நேபாள பிரதமர் ஸ்ரீ பி, பி, கோயிராலா, நேபாளத்துக்கு சீனர்களிடமிருந்து யாதொரு ஆபத்தும் இல்லை என்று சொல்லவேண்டி வந்தது.

நேபாளத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இந்தியா மகோன்னதமாக முன்னேறிய தேசம் என்று கருதவேண்டும், சீனர்களின் ஆக்கிரமிப்பை இந்தியாவால் சமாளிக்க முடியாதபொழுது நேபாளத்தால் முடியுமா என்பது ஆணித்தரமான கேள்வி. இதுமட்டுமல்ல, நேபாளத்தில் பல பாகங்களுக்கு சரியான ரோடு, போக்கு வரத்து வசதிகளே கிடையா. ஆகவே சீனர்கள் நேபாளத்தில் புகுந்து அதை கபளீகரம் செய்ய ஆரம்பித்தால் அந்தச்செய்தி காத்மாண்டுவுக்கு பல நாட்களுக்குத் தெரியக் கூடத் தெரியாது. நேபாளத்தை இந்தியாவால் காப்பாற்ற முடியுமா என்பது கிடக்கட்டும். நேபாள கபளீகரம் இன்னும் சில காலத்திற்காவது நடக்காமல் இருக்கலாம்.

* * * *

எந்த நாட்டிலும் குடியரசு சுதந்திர நியாய ஸ்தலங்களால் நிலை நாட்டப்படுகிறது.



பாலோ சர்க்கரையோ தேவையில்லை

மால்டைன்

வைட்டமின் சத்துக்கள் நிறைந்த
சிறந்த பானம்

வெந்நீரில் மட்டும் கலந்தால் போதும்!

குழந்தைகளும், வியாதியஸ்தர்களும்
கர்ப்பிணிகளும் சாப்பிடலாம்.

ஹோட்டல்கள், கான்டீன்கள் மற்றும் உணவு
விடுதிகளுக்கென, சாக்லேட் மணங்கமழும்
மால்டைன் 5½ பவுண்ட் பாக்கிங்கு
களில் கிடைக்கும்.

எங்கும் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ,
சென்னை-1.

ஸ்டாக்கிஸ்டுகள் :

பாண்டிச்சேரி, தென் ஆற்காடு, தஞ்சை மற்றும்
திருச்சி பிராந்தியங்களுக்கு ஏகபோக
பிரதிநிதிகள் :

ஸ்ரீனிவாசன் & பிரதர்ஸ்
8, ஆற்றங்கரை தெரு, திருவேந்திபுரம்
திருப்பாதிரிபுலியூர் (S. A.)

சிதம்பரம்: வாணி பார்மஸி.
தஞ்சாவூர்: அனுகாந்தி ஏஜன்ஸீஸ், ('அசோகா' ஏஜண்ட்ஸ் & ஜெனரல் மர்ச்சண்ட்ஸ்,) 16, கீழ வெளிவாசல்.
கும்பகோணம்: ஸ்ரீ மாரியப்ப நாடார், (பாரீஸ் ஜாடி டிஸ்ட்ரிப்யூட்டர் & ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் வியாபாரிகள்) கும்பேஸ்வர ஸ்வாமி ஸன்னிதி.
உதகை: H. ராமலிங்கம், உரிமையாளர், திட மானுபாக்சரர்ஸ் அசோஸியேஷன், கமர்ஷியல் ரோட்
புது டில்லி: மதராஸ் ஸ்டோர்ஸ்; பேர்ட் ரோட்.
கல்கத்தா: அசோக் ஸ்டோர்ஸ்; 183, லான்ஸ் டவுன் ரோட்.
பம்பாய்: கிருஷ்ணா ஜெனரல் ஸ்டோர்ஸ், அன்னபூர்னேஸ்வரி ஸ்டோர்ஸ், "மஹாவீர் பில்டிங்ஸ்", மாதுங்கா.

இந்தியாவில் கோர்ட்டுகள் இல்லாமலிருந்திருந்தால் நாம் அதிகாரவர்க்கத்தின்கீழ் அவதிப்பட்டுக்கொண்டிருப்போம். கோர்ட்டுகள் அதிகாரவர்க்கத்து அதீதசெய்கைகளைக் கண்டிப்பது அதிகார வர்க்கத்துக்கு பிரேக்போடுவதை ஒத்தது. அப்படியிருக்கும்பொழுதே "கோர்ட்டு கிடக்கிறது" என்ற அலட்சிய மனப்பான்மை பல மாகாணங்களில் நிலவி வந்திருக்கிறது. ஆனால் சமீப காலத்தில் பஞ்சாப் மாகாண கிரேவால் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பைப் போன்ற காரசாரமான விஷயம் நான் படித்ததில்லை. பஞ்சாப் பிரதமர் ஸ்ரீ பிரதாப்சிங் கெய்ரான் சீக்கியர் என்ற காரணத்தால் சில தீவட்டிக் கொள்ளைக்காரர்களுக்கு ஆதரவு கொடுத்தார் என்றும் அவரையும் மேக்கரித்து அந்தக் கொள்ளைக்காரர்களை ஒழித்துக் கட்டியதால் போலீஸ் சூப்பரிண்டெண்டாக இருந்த ஸ்ரீ கிரேவால் மீது அபாண்ட கேஸ் தொடரப்பட்டது என்றும், பிரதமரை திருப்தி செய்ய பல போலீஸ் அதிகாரிகள் ஆபாசமான வேலைகளில் ஈடுபட்டு தஸ்தாவேஜிகளை பொய்ப்பித்தார்கள் என்பது நீதிபதியின் தீர்ப்பில் வெளியாயிற்று. இம்மாதிரி தீர்ப்பான பிறகு ஸ்ரீ கெய்ரான் பதவியில் இருப்பது ஜனநாயகத்தை கேலி செய்யும் செய்கையாகும். இந்த வழக்கைக் குறித்து பார்லிமெண்டில் அங்கத்தினர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆனால் திருப்திகரமான பதில் இல்லை பிரதமர் நேரு ஸ்ரீ கெய்ரானை பதவியைவிட்டு வெளியேற்ற யாதொரு நடவடிக்கைகளும் எடுக்கக்கூடாது என்று சொன்னபொழுது அவருடைய நல்லபெயர் ஒருமுழம் கீழே இறங்கிற்று. ஊழல்களும் லஞ்சமும் ஒழிய வேண்டும் என்று பறைசாற்றினால் மட்டும் போதுமா? அந்த நோக்கத்தை நிறைவேற்ற வழிகாட்ட வேண்டாமா?

யாவரும் விரும்புவது

மணத்திலும் குணத்திலும் நிகரற்ற

வி. எஸ். & சன்ஸ்

பெப்பர்மெண்டுகளே.

தயாரிப்பாளர்கள்:-

தென் இந்தியா பெப்பர்மெண்ட் தொழிற்சாலை,

கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1925

குமுதமலர்

குணவதி

தே. ஸ்ரீ. ரா.

"அரசே! இங்ஙனம் சோர்வுற்று வாளா இருத்தல் தகுதியாமோ? அன்று சோழன் செங்கணான் அவைக்களம் முன்பு எத்தகைய வீரமும் உற்சாகமுங் கொண்டு அப்பேரரசனிடம் உரையாடினீர்கள். சோழ சாம்ராஜ்ய சாசனம் பெற்று நம் படையுடன் நாடு திரும்பிய பொழுதும் குதூகலம் கண்டோம். இன்று—"?

"அமைச்சரே! காரணம் தெரியாதா? அன்று நமது வைத்தியர் நாராயண தாஸரைச் சந்தித்தோம். அவர் மூலிகை பறித்துக் கொண்டிருந்த சமயம் ஓர் அற்புத தெய்வ நங்கை நந்தவனத்திலிருந்து குமுத மலர் கொய்து கொண்டு அவரை நோக்கித் தென்பட்டாள். அவ்வளவுதான்! அசந்து போனேன்; அவள் அழகில் ஆழ்ந்து போனேன். அன்றே அவளிடமே ஆருயிரும் ஆவியும் அர்ப்பணித்து விட்டேன். உண்மையாகவே அவள் ஓர் தெய்வ நங்கைதான். வைத்தியர் அவள் தந்தையல்ல. தாமரைப் பொய்கையிலே தனியே நின்று தவித்துத் திணறினாள். இவர் அவளை தனது வீட்டில் அழைத்து வந்து அன்று முதல் ஆதரித்து வருகிறார். அப்ஸரஸ் ஸ்த்ரீகள் அத்தடாகத்தில் அநுஷ்டானஞ் செய்ய வந்ததாகவும், அழகில் சிறந்து மலர்ந்திருந்த ஓர் குமுத மலரைக் கண்டு மெய் மறந்து, அதை மிக விரும்பி கரை தொட்டு மேலெழுந்து தரைமீது படர்ந்த கொடியை எடுத்துவிட்டு அம்மலரை இவள் பறித்தெடுத்ததாகவும் சொன்னார். சூரியன் உதயமாகவே அவர்கள் காலக்ரமம் அறிந்து இவளை விட்டுவிட்டுச் சென்றனராம். இருமுறை பூமியின் பரிசம் பட்டதன் பயனாக இவள் மேலெழ முடியாது போயிற்றாம். சற்றும் சலியாது குமுத மலரின் ஆனந்தப்பெருக்கில்

புவியிலேயே தங்கிவிடத் தீர்மானித்து, தகுந்த வசிக்குமிடம் தெரியாது திகைத்து நின்றவேளை நாராயண தாஸர் வந்து கைகொடுத்து கரையேற்றி வீட்டிற்கு அழைத்து வந்து தனது மகளேபோல் பரிபாலித்து வருவதாகவும் தெரிவித்தார். இவ் விஷயங்களை அறிந்து இங்கு வந்தது முதல் என் மனம் அவளை விட்டகலாது தோய்ந்து விட்டது. இனி—"

"ப்ரபோ! கவலை ஏன்! அவ்வைத்தியரைக் காணப்போவோம். திருமணத்திற்கு சம்மதத்தை வினவுவோம். எழுந்திருங்கள். இறைவன் இருக்கிறார்."

இந்த ரசமான சம்பாஷணை சோழ நாட்டின் ஆவிநகர் அரசன் நீல மகாராஜனுக்கும் திருநாங்கூர் தோழப்பர் எனும் அவனது மந்திரிக்குமிடையே சுமார் நான்காயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் முன் நடந்த சம்பாஷணை (சரித்திரப் பேராசிரியர்கள "லோவிஸ் ரைஸ்" "டாக்டர் பர்னல்" இவர்கள் குறிப்புகளின் ஆராய்ச்சி கொண்ட, ஒரு வியாசத்தினின்றும் "ஹிஸ்டாரிகல் ரிகார்ட்ஸ் கமிஷன் வருடாந்தர சபை முன் வாசிக்கப்பட்டது. "அப்ப காவ்யம்" எனும் தெலுங்கு நூலினின்றும் தொகுக்கப்பெற்ற ஒரு சம்பவத்தின் வரலாறு இது.)

நாங்கூர் பிரபல வைத்தியர் நாராயண தாசரிடம் ஓடோடியும் வருகிறான் சேவகன். ஆவி நாட்டரசர் நீல மகாராஜரும் அமைச்சரும் உங்களிடம் வருகிறார்கள்"

"அப்படியா? ராஜமரியாதை ஏற்பாடுகள் சீக்கிரம் நடக்கட்டும், ஓடு—"

இரு குதிரைகள் வேகமாய் வரும் சப்தங் கேட்டு நாராயணதாஸ் வெளியே வந்து நிற்கிறார். அமோகமாக வரவேற்பு. விநயத்துடன் வைத்தியர், அரசன் அருள் புரிய அங்கு வந்த காரணம் வினவ அமைச்சர் தோழப்பர் வைத்தியர் வீட்டில் வளர்ந்து வரும் வடிவழகியைப்பற்றி வினவுகிறார். அவள்பால் அரசன் கொண்ட அபிப்பிராயத்தை அறிவிக்கிறார்.

"இமையோர் இளநங்கை இம்மாநிலத்து இனத்தினனுக்கு இசைவளோ அறியேன். எனினும் அவளையே கேட்டுவிடுதல் நன்றாகும்," என்று கூறி, வந்தவர்களை உள்ளழைத்துச் சென்றார்.

"குமுதவல்லி! நம்மூர் ஆவிநாட்டு மன்னவன் உன்னை மணஞ்செய்து கொள்ள மனப் பூர்வமாக யாசிக்கிறார்.

மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும் சம்மந்தம் கூடுமோ?

"ஏன் கூடாது?

"இம்மண்ணுலகிலேயேவா?"

"ஆம்! இங்குதான் அது முடியும்."

"அப்படியா?

"அரசரே இங்கு வரட்டும். இப்பொழுது நான் திரையைவிட்டு வெளி வருவதற்கில்லை. திரைக்கு எதிரே நிற்கட்டும்"

"குமுதவல்லி!"

"மன்னவா? தந்தைக்குரைத்ததைக் கேட்டீர்களல்லவா?

"ஆம், கேட்டேன். எனக்கு உன்னையடைய வழி வகுக்க வேண்டும்."

"ஆம், அன்று நானும் உங்களை தாமரைப் பொய்கையில் கண்ணுற்றேன். உங்கள் பார்வையையும் அதன் கருத்தையும் கவனித்தேன். ஆனால்—"

"ஆனாலென்ன—"?

"நீங்கள் மானிட வர்க்கத்தினின்று உயரெழ வேண்டும். உண்மையாக அமரத்வம் பெற வேண்டும். அதைப்பெற்ற பின்பே என்னை அடைய முடியும்."

"அதைப் பெறும் வழி"?

"ஐயனே! நான் விண்ணுலகில் திருமாலுக்குத் தொண்டு புரிகிறவள். நீங்களும் அவ்வாறு தொண்டு செய்வீராயின் நாம் ஒன்று சேரலாம். திருமால் அடியார்கள் வைணவர்கள். "பரதுக்க துக்கித்வம்" எனும் கொள்கையை அடிப்படையாய்க் கொண்டது வைணவம்.

"ஐயோ பாவம்! என்று பிறருடைய கஷ்டங்களை பச்சாத்தாபங்கொண்டு போக்க முற்படுவர்கள் வைணவத்தில் உண்டு. அடியார்களது அல்லலை அகற்றுதலே ஆண்டவனை அடிபணிவதாகும் என்றிருப்பவர் வைணவர்கள். இவர்களுக்கு ஊக்கமளிக்கவே ஸ்ரீ மகாவிஷ்ணு அநேக இடங்களில் அர்ச்சையில் எழுந்தருளியுள்ளார். இந்த ஆலயங்களை செப்பனிட்டு அடியார்கள் அவஸ்தையின்றி அரவணைத் துயில்வானை அடிபணியுமாறு அவர்களுக்கு வசதியளிக்க வேண்டும். தினமும் ஆயிரம் வைணவர்களுக்கு அன்னமளித்து, திருமாலின் துளசியையும் தீர்த்தத்தையும் எஞ்சிய பிரசாதத்தையும் நீங்கள் உண்டு எனக்களிக்க வேண்டும். இவை நிர்வகிக்க உங்களால் முடியுமா—"?

"ஏன் முடியாது? ஆனால்—"

"ஆனாலென்ன"?

"எனது பொருளனைத்தும் இத்திருப்பணியில் உபயோகிக்கிறேன். அது சீக்கிரமே செலவழிந்து போம். பின்னர்—"

"பின்னர் அது பரமனது பாரம். உங்களுக்குக் கவலையேன்?

"அப்படியாயின் இதோ இன்றே எனது பிரதிக்ஞை."

"சரி. ஒரு வருஷம் வரை இவ்வாறு உற்சாகத்துடன் திருப்பணி செய்வீர்களாயின் அதன் பயனை நீங்கள் உயர்வீர்கள். ஆண்டு முடிந்த தினத்தன்று திருமணம் முடிக்கலாம்.

"அப்படியே, குமுதவல்லி."

அரசனும் அமைச்சனும் ஆலிநகர் அடைகின்றனர்.

* * * *

தஞ்சை மாவட்டத்தில் சமணபுத்த சமயத் தலைவர்கள் ஒருநாள் சோர்வுற்று நெஞ்சு தளர்ந்து, ஒன்றும் பேசாது ஓரிருவராக வந்து கூடினர். சோழ நாட்டில் இப்பொழுது எழுந்து பரவிவரும் எதிர்ப்பைப் பற்றியும், வறுமையினாலும் பஞ்சப் பிணியாலும் வருந்திய நாட்டு மக்கள், எவ்வாறு முன்பு புத்த விஹாரங்களிலும் சமண மடங்களிலும் கஞ்சிக்காக குழுமியிருந்தனர். என்பதையும் இன்று அவர்கள் அனைவருக்கும் ஆலயங்களில் அன்னமளிக்கப்பட்டு வருவதையும், வேதமார்க்கம் விமரிசையாகப் பரவிவருவதையும், இதைத் தடைப்படுத்தும் முறையைப் பற்றியும் வெகு நேரம் ஆலோசனை செய்யப்பட்டன. இறுதியில் அன்று உறையூரில் ஆட்சி செலுத்திய கோச்செங்கட் சோழன் முன்பு அவனது சிற்றரசனை ஆலிநாட்டு நீல மன்னன் மீது, நீண்டதோர் குற்றோலை சமர்ப்பிக்கவும் அக்கூட்டம் தீர்மானமிட்டுக் கலைந்தது. அதன் விளைவு?

* * * *

"தேவி குமுதவல்லி"!

"கொற்றவி! கோபம் மிகுந்த இக்கூக்குரல் ஏன்"?

"ஆபத்து வேளை, குமுதினி. சோழ மன்னனிடமிருந்து அவசர ஆக்கினை. அவனுக்குச் சேரவேண்டிய பகுதிப் பணம் செலுத்தவில்லையாம். நேற்றிரவு அவன் படையினர் வந்து சூழ்ந்தனர். நம் பட்டாளத்தைக் கொண்டு அவர்களை விரட்டியோட்டினோம். கட்டாயமாக சோழன் பெரும்படையனுப்பி என்னைச் சிறைப்படுத்தலாம். எனது பிரதிக்ஞைப்படி கோயில் திருப்பணியிலும் ஆயிரம் பேருக்கு தினமும் அன்னமளிப்பதிலும் எனது எல்லாப் பொருளும் செலவழிந்து போயிற்று, இப்பொழுது?

இப்பொழுது ஏன் கவலை? இறைவன் பணியில் ஈடுபட்டிருக்கும் உங்களது இடர் களைவது ஈசாதி ஈசனின் இரட்சண்யமன்றோ? முழு மனதுடன் உங்கள் திருப்பணி நடந்தேறியதாயின், அத்திருப்பணிக்குப் பல

திருடர்களிடமிருந்தும், கொடிய மிருகங்களிடமிருந்தும் காப்பாற்றிக்கொள்ளுங்கள்

உல்லாச விருந்து, பிரயாணம், நாடகம் முதலியவைகளுக்கு உபயோகமுள்ளது.

தானாகவே ஆறு தடவை சுடும் ரிவால்வர்



மிகவும் லேசானது. அதிக வெளிச்சமுள்ள நெருப்பை உண்டுபண்ணுகிறது. அபாயங்களிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.

விலை நெ.	777	888	999
ரூ.	8/-	10/-	15/-

25 குண்டுகள் இனாம்

அதிகப்படி 100-க்கு ரூ. 5/- தோல் பெட்டி ரூ. 6.

தபால் & பேக்கிங் ரூ. 2/-

லைசென்ஸ் தேவையில்லை

நியூயார்க் ஏஜன்ஸீஸ் (இந்தியா)

தபால் பெட்டி எண் 4092

பம்பாய்-7

னுண்டாயின் அத்திருப்பணி ஆதிமூலமான ஆதிநாதன் உகப்பிற்குரியதாயின் உங்களைப் பற்றிய பொறுப்பு அவனதன்றோ?

"கேள் குமுதவல்லி, நான் ஒரு அரசன். க்ஷத்திரியன். உன்னைக் கண்டது முதல் உன்னையடையத் தீர்மானித்து உன் சொற்படி பணியாற்றினேன். திருநறையூர் சென்றேன். முறைப்படி வடக்கிருந்து நோன்பு நூற்றேன். பின்னர் அவ்வெம் பெருமான் சன்னதியில் தீயிற் பொலிந்த திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே திரு இலச்சனை பெற்றேன்; கேசவாதி த்வாதச ஊர்த்வ புண்ட்ரங்கள் தரிக்கத் தகுதியாக பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றேன். திருமால் அடியார்க்குத் தொண்டு செய்து தீவிர வைணவனானேன். உனது திருப்தியைக் கண்டு களித்தேன். ஆனால்—"

"ஆனலென்ன, ஆலிநாடரசே! திருமாலின் திருப்தியையும் அறியப் போகிறீர்கள். அச்சுதனது அடியார்கள் அல்லலுறுார்கள், அவதியுறாகள். உங்கள் ஓராண்டுத்தவத்தில் இன்னமும் நான்கு மாதங்கள் உள. அதையும் பூர்த்திசெய்து திரும்புங்கள். நமது இல்லறமும் இனிது ஈர்த்துச் செல்லும்."

"சரி! சர்வேச்வரனது சங்கல்பம்"

* * * *

திருவாலி திருநகர் குமுதவல்லியிடம் ஓடோடியும் வந்து விழுகிறான் ஓர் ஒற்றர் தலைவன்.

"அம்மணி! சோழப்படை ஐயனைச் சிறைப் படுத்தி விட்டது நேற்று நள்ளிரவில். காழிச் சீராம விண்ணகரத்தில் சோழனது பாசறை பொருத்தியிருக்கின்றனர். இன்று காலை"

"பதறுதே! கவலை வேண்டாம். மாதவன் மாயையின் மாட்சி! அழாதே! மனந்தேறு. நாளைக்கு மறுநாள் நம் மன்னவர் பொருட்பொதியுடன் நாடு திரும்புவர். போ, அனைவரையும் அமைதியுடனிருக்கச் செய். இராணியின் ஆணை இது. செல்!"

" * * * *

குமுதவல்லி—!"

"ஹ? நீல மகராஜாவா?"

"ஆம் தேவி! அவனே தான். ஆதிநாதன் அருள் புரிந்த அடியார்க்கு அடியேன் நான். சீரும் சிறப்பும் செல்வமும் சேமமும் மழை பொழிந்த மாதவன் மெய்யடிமை நான். சிறை மீண்டேன், என்னைச் சிறையிட்ட சோழ மன்னவன் அடி பணிந்ததைக் கண்டு பிரமித்துப் போனேன். சோகம் தவிர்த்த சீமந்தினி! உனது வாக்கு பொய்யாகவில்லை. எனது சேவையும் இறைவனுக்கு உகந்தது போலும்!—"

"என்ன நேர்ந்தது"?

"என்ன நேர்ந்ததா? என்ன நேரவில்லை? இங்கிருந்து வெளியே வந்தபொழுது, என்னை சூழ்ச்சியால் சந்தடியின்றி சிறை பிடித்து சீர்காழிக்கு அழைத்துச் சென்றார்கள் சோழப் படையினர். சிறையில் தவித்தேன். பரமனுக்குப் பணி செய்ததன் பலனே என்று பதறினேன்; "கேசவா! மாதவா!" என்று கதறினேன். மெய்ம்றந்து மூர்ச்சையானேன். "எழுந்திரு, காஞ்சியில் வேகவதி துறையில் ஓர் புளியமரத்தினடியில் புதையல் உண்டு, அதை எடுத்து உன் இடுக்கணைப் போக்கிக் கொள்" என்ற குரலைக்கேட்டு திடுக்கிட்டு எழுந்தேன் பகுதிப் பணத்தைக் காஞ்சியில் தருவேன் என்று உறுதி கூறி காவலர்களை அங்கு அழைத்துச் சென்றேன், யதேச்சையாய் அங்கு வந்திருந்த சோழ மன்னவன் எனதுகனவுக் கூற்றைப் பரிகசித்து எள்ளி நகையாடினான். அவனையும் அழைத்துச் சென்றேன் புளியமரத்தடியே. புதையலைக் கண்டெடுத்தேன். பகுதிப் பணத்தை பொன் நாணயத்தில் பகிர்ந்து கொடுத்தேன். பரிகசித்தவன் பரமனது பக்தனானான். பெருமாட்டியே! உனது பெருமையைப் புரிந்து கொண்டேன். ஏராளமாக பொருள் கொண்டு வந்திருக்கிறேன். எனது சேவையைத் தொடர்ந்து செய்வேன்."

"ஆம்! எல்லாம் திருநாரணன் திருவிளையாடல், இன்னமும் நான்கு மாதங்கள்—"

முடிந்ததும் நமது திருமணம், இனிமை ஈர்க்கும் இல்லறம்.

* * * *

இரண்டு மாதஞ் சென்றபின் ஓர்நாள் பூந்தோட்டத்தில் குமுதவல்லி குமுத மலர் மாலை தொடுத்துக் கொண்டிருந்த வேளை ஓர் தாதி விரைந்து வந்தாள்.

"அம்மணி! போனமாதம் நமது மன்னவர் அரசைத் துறந்து வெளியேறியது உங்களுக்குத் தெரிந்ததுதானே?

"ஆம், அவர் செய்தது சரியே. பொக்கிஷம் அனைத்தும் காலியாயிற்று. மேலும் மக்களை துன்புறுத்த இசையாது அரசை அமைச்சரிடம் ஒப்படைத்து வெளியேறினார். இப்பொழுது என்ன அதற்கு?

"ஒன்றுமில்லை. ஆனல் இவர் இப்பொழுது காட்டில் திரிந்து வழிப்பறி கொள்ளைக்காரக் கும்பலுக்குத் தலைவராய் விளங்குகிறார் என்று வதந்தி வந்திருக்கிறது. ஆனல் ஏழைகளை இக்கூட்டம் பாதிப்பதில்லையென்றும் அபாரச் செல்வம் வைத்திருப்பவர்களும் கொள்ளை லாபமடிக்கும் அநியாய வியாபாரிகளும் இரையாகிறார்களென்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

"ஆனால் அவர் இன்னமும் பணியாற்றி வருகிறாரல்லவா?"

"ஆமாம் தாயே! கோயில் திருப்பணிகளும் தினமும் ஆயிரம் பெயர்களுக்கு அன்னதானமும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

"சரி, அவர் செய்த பிரதிக்ஞை வருஷத்தில் இன்னம் நான்கே தினங்கள் மிச்சம். இன்றிரவு அவரைப் பார்க்கப் புறப்படுவோம். எவரும் இதை அறியலாகாது."

"அப்படியே அம்மணி"

இருளடைந்த காட்டில் ஓர் தனி காலடிப் பாதை. குமுதவல்லியும் தோழியும் ஓர் அற்புதமான காட்சியைக்கண்டு அப்படியே மெய்மறந்து நின்று விடுகிறார்கள். மணக் கோலத்துடன் இரு தம்பதிகள் உல்லாசமாகக் காட்சியளிக்கின்றனர். தீவட்டி வெளிச்சத்தைக்காட்டிலும் அவர்கள் ஆநந்தமாக நின்ற இடம் ஓர் தூய ஜகஜ்ஜோதியாய் கண்ணைப்பறித்து பிரகாசிக்கின்றது! சூழ்ந்து நிற்கும் மரங்களும் செடிகளும் பழங்களையும் பூக்களையும் கொத்துக் கொத்தாய்க்கொண்டு இயற்கை மகிழ்ச்சியைப் புதிது புதிதாக படம் பிடிக்கின்றது.

"என்ன இது! இப்பெட்டியைத் தூக்க முடியவில்லையே, மந்திரம் போட்டுவிட்டனையா"?

ஆலி நகர் அரசன் குரல் இது. இப்பொழுது வழிப்பறி கள்வர் தலைவனாகி பிரமித்து நின்று விடுகிறான். பெட்டியில் திருமணத் தம்பதிகளது கல்யாண பொன் மணி ஆபரணங்கள் பத்தி பத்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றுகிறாள் குமுதவல்லியும் தோழியும். சற்றும் வியாகூலமில்லை, விசனமில்லை, வெஞ்சினமுமில்லை, வேடிக்கையைக் கண்டு களிப்பது போன்று மணமகனும் மணமகளும் மணங்கமழும் மணமாலைகளுடனும் மஞ்சளாடைகளுடனும் முகம் மலர்ந்து மிளிர்கின்றனர்!

மறுபடியும், மறுபடியும் பெட்டியைத் தூக்கப் பெரும் பிரயாசைப் படுகிறான், கள்வர் தலைவன் ஆலி நகர் அரசனாகவிருந்தவன். பெட்டி பாராங்கல்லாய் பெயர்க்க முடியாது பதிந்துபோய்விட்டது!

"இது என்ன மாயம்? நிச்சயமாக நீ ஒரு மந்திரவாதி. மந்திரம் போட்டுவிட்டாய், பெட்டியைத் தூக்கமுடியவில்லை. அந்த மந்திரத்தைச் சொல்" என்று அதட்டி உரைத்து வழிப்பறி முதல்வன் மணாளனை நெருங்குகிறான். காதை வளைத்துக் காட்டுகிறான். மாப்பிள்ளை மந்தஹாசத்துடன் முன் வரவே சந்திரன் புதிதாக அற்புதமான ஓர் பேரொளி கொண்டு பிரகாசிக்கிறான். மலர்கள் தூவுகின்றன. மான்களும் மாமிச பக்ஷிணிகளும் வந்து குவிந்து தலை தூக்கி நோக்குகின்றன. 'கம்' என்று எங்கும் ஓர் திவ்விய வாசனை, தேவாலயங்களில் தரிசனம் போன்று ஓர் தூய உணர்ச்சி, மனித சுபாவம் மெய் மறக்க, நீலன் செவியில் மணமகன் மெதுவாக முணுமுணுக்க, மந்திரம் கேட்டவன அப்படியே கல்லாய்ச் சமைந்து போனான். மெய்சிலிர்க்க, கண்ணில் நீர்பெருக, மனங்கரைந்து வழிய, பேரின்பக் கடல் பின்னையும் பொங்கிப் பொங்கி பரவ தவஞ் சித்திபெற்ற முத்தி நிலையில் தளிர்த்துத் திளைத்துத் துள்ளினான் ஆலிநகர் அரசு துறந்தோன்!

இப்புனிதப் பேரின்பத்தை யுணர்ந்து பகிர்ந்துகொண்ட குமுதமலர் கோமளாங்கி கல்லாய்ச் சமைந்துபோன கள்வர் கோமானைக் குலுக்கினாள்.

"ஐயனே! இவ்வுலகுக்கு வாருங்கள்! எழுந்திருங்கள்! லட்சாதி லட்சம் பெறுமான பேரழகு பொன்மணி அணிகளைப் பாருங்கள்! நானே உங்களது பிரதிக்ஞை ஆண்டு முடிவாகிறதை நினைந்து கொள்ளுங்கள். அப்படியென்றால் நமது திருமணமும்—"

நீலன் உணர்வு பெற்றான். முன்நிற்கும் மங்கையைக் காண்கிறான். பெட்டியிலுள்ள நகைகளைக் காண்கிறான். தன் மீதுள்ள இலச்சினையைப் பார்க்கிறான், கண்ணை மூடுகிறான். மனத்தே தான் கண்ட தம்பதிகளைத் திரும்பக் காண்கிறான், வாய் முணுமுணுக்கிறது.

"என்ன சொல்கிறீர்கள்?"

"குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்படு
துயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு
பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதாயினு
மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்!"

இதைக் கேட்ட குமுதவல்லியின தோழி மெய் சிலிர்த்துக் குதித்து நின்று நோக்கினாள்.

"ஆம்! இவர் வானுற உயர்ந்திட்டார், என்னை மணக்கும் உயர்வினர் இவர். திருவஷ்டாக்ஷர மந்திரத்தை நன்குணர்ந்து பெரும் பொருளை பொன் பாக்களில் பொறிக்கவிருக்கிறார்" என்று சொல்லிவிட்டு "மன்னவா—"

"மங்கை மன்னன், திருமங்கை மன்னன்" என்று அழையுங்கள், நன்றாய் விழித்துக் கொள்வார். என்று குறுக்கிட்டாள் தோழி. "வாருங்கள் திரும்பலாம். அரசைத்திரும்ப ஏற்று திருமணம் முடிக்கலாம். இன்னமும் ஆலயத் திருப்பணி...

"ஆம்! ஸ்ரீ ரங்கன் கோயிலில் மதிள் சுவர் எழுப்பியாக வேண்டும். இப்பெட்டிப் பொருள் போதும், மிகுதியுமாகும்" என்று குமுதவல்லியைக் கைப்பிடித்து பெருஞ் செல்வப்புனித பெட்டியையும் பூப் பொறிப்பது போன்று பெயர்த்தெடுத்துக் கொண்டு நகர் திரும்பலாயினர். எவரும் அங்கு நின்ற வண்டியிலேறி மறைந்த திவ்விய தம்பதிகளைக் கவனிக்கவில்லை!

* * * *

கார்த்திகை புனித மாதத்தில் தோன்றிய திருமங்கை மன்னனுக்கும் குமுதவல்லிக்கும் இன்றும் மிக மிகசம்பிரமமாக திருவாலி திரு நகரியில் திருக்கல்யாணம் பிரும்மோற்சவமாகத் திகழ்ந்து துலங்குகின்றது.

நம்மாழ்வார் நான்கு வேதங்களையும் தமிழ் செய்தார். அவ்வேதத்து ஆறங்கங்களையும், "பெரிய திருமொழி" "திருக்குறுந்தாண்டகம்", திரு நெடுந்தாண்டகம்", திரு எழுகூற்றிருக்கை" "சிறிய திருமடல்". பெரிய திருமடல்" என்ற தமிழ் திவ்வியப் பிரபந்தகளாக ஆக்கியளித்த இம்மாகவி தமிழ்த் தேவருக்கு தினமு மன்றோ திருவிழாக் கொண்டாட வேண்டும் என்கிறார்கள் தமிழ்க் கவிவாணர்களும் திருவாலித் திருநகர் திருமக்களும்!



உத்தரப் பிரதேசத்தில் பயிராகும் சாத்துக்குடி பம்பளீஸ் அளவுக்கு பெருக்கிறது.

விவசாயமும் விவகாரமும்

கே. ஸ்ரீநிவாஸன்

விவசாயத்தைப் பற்றி என்னை சிந்தனை செய்யும்படி தூண்டிய அம்சம் ஏதாவது உண்டா என்று சமீபத்தில் யோசித்துப் பார்த்தேன். விவசாயத்திற்கும் எனக்கும் மிகவும் நெருங்கிய உறவு உண்டு என்று புலப்பட்டது. ஏனென்றால் நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் தஞ்சை ஜில்லாவில் ஒரு கிராமத்தில். சிறு பையனாக இருந்த பொழுது பரம்படி சட்டத்தில் ஏறி ஜோராக பிரயாணம் செய்ய ஆசைப்பட்டதுண்டு. ஆனால் என் தகப்பனார் எனக்கு அனுமதி கொடுத்ததில்லை. "முட்டாள்! சட்டத்தின் மேல் நின்று ஓட்டுவது கடினம். தலைகுப்புற விழுந்தால் சட்டம் உன்னை சேற்றில் அமுக்கிவிடும்" என்பார். இதற்கு அடுத்த அறிமுகம் புதிதாக கட்டி புரட்டப்பட்ட வயல்களிலிருந்து நத்தாஞ்சோழி பொறுக்குவதில் உண்டாயிற்று. வயல்களில் அறுவடை ஆகும்பொழுது களத்திற்கு அப்பாவுக்கு கூஜாவில் காப்பி கொண்டு போவது ஒரு இன்ப மயமான விஷயம். ஏனென்றால் களத்துமேட்டில் வைக்கோல்போரின் உச்சியில் உட்கார்ந்து கொண்டு மேற்பார்வை பார்ப்பதாக வியாஜம் வைத்துக்கொண்டு தாழங்குடையின் உதவியால் ரகசியமாக கடலையை படிக் கணக்கில் சாப்பிட முடியும். இதில் எங்கள் பண்ணையாள் என்னுடன் கூட்டு. "கடலையா, அப்பா அடிப்பாரே" என்றால் "ஏது, எதுக்காக அடிக்கிறதாம். அது கிடக்கட்டும் சீனு நீ சும்மா சாப்பிடு" என்பான் வயிற்றுப்பயல் என்ற அந்தப் பண்ணையாள். அது பட்டிணம் முதல் கிராமம் வரை ஜாதியின் பெயரால் வெறுப்புக்கொள்ளாத காலம்; அரசியலின் பெயரால் மக்களை பரஸ்பர பாதையில் குழிப்பாய்ச்சாத காலம்.

ஆனால் விவசாயம் என்பது ஜீவன மார்க்கத்தில் ஒன்று. அதையே நம்பி வாழ்பவர்களுக்கு அகவிலை நன்றாக இருந்தால் தான் பிழைக்க வழி உண்டு என்று எனக்குத் தெரியவந்தது. 1930-ல். ஒரு தமிழ் சஞ்சிகையைப் புரட்டிக்கொண்டே வந்தபொழுது ஒரு ஹாஸ்யச் சித்திரம் என்னைக் கவர்ந்தது. அதைத் தீட்டியவர் காலஞ்சென்ற ஸ்ரீ ஸி. வி. மார்கன் என்று நினைக்கிறேன். இடுப்பில் நான்கு முழம்

நன்ருக பயிர் செய்தால் ஒவ்வொரு சோளக் கொண்டையும் ஒரு முழ நீளம்கூட வளரும்.

துண்டு மட்டுமே கட்டிய விவசாயி-மிராசுதாராகவும் இருக்கலாம் - தண்டாயுதபாணியின் கோயிலுக்கு முன் நிற்கிருர். அந்த சித்திரத்துக்கு விளக்கம்; "ஐயனே, 10 ஏக்கர் வைத்து உழுது நான் அறையில் இன்று 4 முழம் துண்டுடன் நிற்கிறேன். எத்தனே நூறு ஏக்கர்கள் பயிரிட்டாயோ நீ; வெறும் கோவணத்துடன் நிற்கிருய்?" இதன் அர்த்தம் எனக்கு அப்போது விளங்கவில்லே, ஏதோ புரியாத ஒரு விஷயம் எனக்கு வேதனேயைக் கொடுத்தது, அப்பாவைக் கேட்டேன். சில நிமிஷங்கள் அந்த சித்திரத்தையே கவனித்துப் பார்த்தார். அவர் கண்களில் நீர் துளிர்த்தது. "இது உனக்கு ஒன்றும் புரியாதுடா. மற்ற பக்கங்களேப் பார்" என்று அந்த சித்திரத்தையே கிழித்து தன்னிடம் வைத்துக் கொண்டார், ஆனுலும் அந்தச் சித்திரம் என் மனக் கண்முன் நின்று கொண்டேயிருந்தது. அப்பாவிற்கு அடுத்த உற்றவர் ஆசான்தானே? அவரை அந்த படத்திற்கு அர்த்தம் என்னவென்று கேட்டேன் "நாமெல்லாம் உழுது பயிரிட்டு அதைக்கொண்டு சாப்பிடுபவர்களப்பா. இப்பொழுது நெல் மூட்டை ஒன்றரை ரூபாய் விற்கிறது. நெல்லே விற்று உனக்கு துணிமணி வாங்க முடியுமா? அல்லது வருடாந்திர சாமான்கள் வீட்டிற்கு வாங்க முடியுமா? என்ன செய்ய முடியும்? இந்த நிலேமையில் சர்க்கார் கிஸ்திக்காக கதவைப்பிடுங்கி, அரைக்கும் கல் இயந்திரத்தை ஜப்தி செய்கிருர்கள். இந்த மாதிரி கஷ்டப்பட்ட ஒரு விவசாயி, தான் பார்ப்பது தண்டாயுதபாணி என்றுகூட தெரிந்து கொள்ளாமல் மற்ருெரு விவசாயிக்கு அனுதாபம் காட்டுகிறதாக இந்த சித்திரம் சொல்கிறது" என்ருர். அதற்குப் பிறகு ஒன்ருென்ருக அவர் சொன்னது எனக்கு நிலேமையை நன்கு விளக்கிற்று.

1930-ல் உண்டான விலே வீழ்ச்சி விவசாயிகளே குழி தோண்டிப் புதைத்தது. அவர்கள் குடும்பத்தில் இருந்த நகை நட்டுகள் கை மாறின. பல்லாயிரம் குடும்பங்களில் ஒருவேளே சாப்பாடு பெரும்பாடாயிற்று என்று தெரிந்தது. அது முதல் விவசாயம், விவசாயி என்ருல் என் ரத்தத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம் என்று ஆயிற்று. 1930-ம் வருஷத்து வீழ்ச்சிதான் என் போன்ற பலரை வடக்கேயும் தெற்கேயும் நாட்டை விட்டும் விரட்டியிருக்க வேண்டும்.

எதற்காக இந்த பலமான பீடிகை என்ருல் இந்த மாதம் முதல் உலக விவசாய சந்தை டில்லியில் கூடுகிறது. உலக நாடுகளில் எந்தெந்த விவசாய முறைகளே அநுஷ்டிக்கிருர்கள், உலகம் தோன்றியது முதல் எப்படி விவசாயம் நாகரீகத்திற்கு அடிகோலிற்று; எப்படி படிப்படியாக விவசாயம் முன்னேறிற்று, இன்று விவசாயத் துறையில் உலகப்போக்கு என்ன என்பதை எல்லாம் கண்காட்சி மூலம் விளக்கப் போகிருர்கள். இந்தச் சட்டத்தில் இந்திய விவசாயத்தைப் பற்றிய சில சிந்தனேகளே நாம் ஆராய்வதில் பலன் உண்டு என்று எண்ணி இதை எழுதலானேன்.

சீனுவுக்கு அடுத்தபடியாக மிகவும் பிராசீன விவசாய நாடு இந்தியா. இந்திய விவசாயம் 2,000 வருஷங்களுக்கு மேற்பட்டது. அதாவது இந்திய மண் இந்தியர்களுக்கு இவ்வளவு காலமும் அலுக்காது சலிக்காது சோறு போட்டு வந்திருக்கிறது. மண் அலுக்குமா என்று விவசாயி கேட்கமாட்டான், பட்டணத்தில் நெல்லுக்காய்ச்சி மரத்தைப் பற்றிப் பேசும் தர்க்க சாஸ்திரி கேட்டான், மண் அலுக்கும். அலுத்துமிருக்கிறது. அமெரிக்காவில் ஓஹலாமா (Okhalama) என்ற மாகாணத்தை இடைவிடாது பயிர் செய்து மண்ணிலிருந்து பயனேப் பெற்று பிரதிப் பயனுக அதற்கு ஊட்டம் கொடுக்காமல் கொள்ளேக்கார விவசாய முறையை அனுஷ்டித்ததன் பயனுக அந்த மாகாணம் பூராவும் மண் பசை உலர்ந்து அது ஒட்டாத புழுதி

யாகி மக்கள் அம்மாகாணத்தைவிட்டு ஓடும் நிலை வந்தது. அந்தமாதிரி பெருவாரியாக இந்தியாவில் எந்தப் பிரதேசமும் ஜனங்களை விரட்டவில்லை என்பது நம் பெரியோர்கள் செய்த புண்ணியந்தான்.



பப்பாளி பெரிதும் வட இந்தியாவில் விரும்பப்படும் பழம்.

இந்தியாவில் இன்று நம்பர் ஒன்றுப் பிரச்னை உணவுப்பிரச்னை. நாம் 100 கலம் விளைவிக்கிறோம் என்று வைத்துக் கொண்டால் 112 கலத்திற்கு தேவை இருக்கிறது. ஏட்டில் பார்த்தால் சுலபமாக இருக்கிறது. ஆனால் நடை முதலில் இந்தப் பற்றுக்குறையை நீக்கத்தான் மத்திய சர்க்கார் முதல் மாகாண சர்க்கார்கள் வரை, கஜகர்ணம் போடுகிறார்கள். இதுவரை அவர்கள் பிரயத்தனம் வெற்றி பெறவில்லை. இந்தக் கட்டத்தில் ஒருகேள்வி எழுகிறது. ஏன் இவ்வளவு சாமான்யமான பற்றுக்குறையை நம்மால் ஈடுசெய்ய முடியவில்லை?

தெருத் திண்ணை வேதாந்திகள் சொல்வார்கள்: "என்ன சார் ரயிலில் போனால் இரு புறங்களிலும் காடு கரம்பைகள். இவைகளில் பண்ணை செய்தால் நாம் இருமடங்கு மாசூலை அடையலாம்" என்று. ஒரு விதத்தில் ஏராள காடு கரம்பைகள் இருப்பது உண்மையே. ஆனால் அவைகளை பயிர்செய்வது அவ்வளவு சுலபமல்ல முதல் முதலில் பாசன வசதிகள் வேண்டும். இவை கிடைத்து விடுகின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். புதிதாக விவசாயம் செய்ய கிடைக்கக்கூடிய நிலம் நல்ல மண் உள்ளதாக இருக்க வேண்டும். சுக்கான் மேட்டிலும் களர் நிலத்திலும் கோரைகூட முளைக்காது. முக்கால்வாசி தரிசு நிலங்கள் சுண்ணும்பு பூமிகள், அவைகளில் விவசாயம் செய்வது நடக்காத காரியம். இதற்கு அடுத்த படியாக சதுப்பு நிலங்கள் ஒரு பெரிய கேள்விக் குறியாக இருக்கின்றன. பூமியை சில அடி தோண்டு முன்னரே தண்ணீர் வந்தால் அந்த நிலம் சாகுபடிக்கு லாயக்காகாது. இம்மாதிரி நிலங்கள் சரியான தண்ணீர் வடிகால் இல்லாத இடங்களில் உள்ளன. உத்தரப் பிரதேசம். பஞ்சாப் போன்ற மாகாணங்களில் அதிகத் தண்ணீர் மண்டிய நிலங்கள் சர்க்கார்களுக்கு ஒரு பெரிய பிரச்னையாக இருக்கின்றன. உத்தரப் பிரதேசத்தில் ஏராளமான நிலம் ஸ்ரீ வினோபா பாவேக்கு தானம் கொடுக்கப்பட்டதல்லவா? அவைகளை தானம் கொடுத்தவர்கள் பாக்கியசாலிகள்; கெட்டிக்காரர்களும் கூட. ஏனென்றால் அவர்கள் தானம் கொடுத்த தினம் முதல் அவைகளுக்குத் தீர்வை கொடுக்கும் பளு அவர்களை விட்டு நீங்கி விட்டது. இன்று அந்த நிலங்களை கழுத்தில் கட்டிக்கொண்டு திண்டாடுபவர்கள் மாகாண சர்க்கார். ஏனென்றால் அந்த நிலங்களை தக்ஷிணை வைத்துக் கொடுத்தால் கூட வேண்டாம் என்று ஓடுகிறார்கள்- நிலத்தை நம்பி வாழும் நிலமில்லா உழைப்பாளிகள் கூட. ஏன்? ஏனென்றால் அந்த நிலங்களில் பெரும்பாலானவை சுண்ணும்பு சத்து அதிகரித்த மண் கலந்தவை. அவைகளில் ஒன்றும் பயிராகாது.

நான் எழுதியதற்கு அர்த்தம் இந்தியாவில் எங்கேயும் சாகுபடியாக்கப் படாத ஆனால் சாகுபடிக்கேற்ற நிலமேயில்லை என்று அர்த்தம் இல்லை. அப்படியானால் இப்பொழுது உருவாக்கப்படும் நீர்த்தேக்கங்கள் அவ்வளவும் வியர்த்தம் என்று அல்லவா அர்த்தம்? பக்ரா-நங்கல், தாமோதர், ஹிராகுத், துங்கபத்திரா முதலிய நதிகளில்



கேழ்வரகு விளைந்தால் மனிதனுக்கு உணவு. விளையாவிட்டால் மாடுகளுக்கு தீவனம்.

அணைக்கட்டுகள் கட்டுவதற்கு அர்த்தம் உண்டு. இங்கு பல லக்ஷம் ஏக்கர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும். ஆனால் புது நிலத்தைத் திருத்தி அவைகளை நன்ருக விளையும்படி செய்வதற்கு எல்லையற்ற உழைப்பும் காலமும் வேண்டும். இந்திய ஜனத்தொகை தினம் தினம் அதிகரிக்கும்பொழுது எப்படி பத்து வருடங்கள் சும்மா இருக்க முடியும்?

பல மாகாணங்களில் பூமிக்கடியில் ஆழக் கிணறுகளைத் தோண்டி அவைகளுடன் மின்சாரத்தால் இயங்கும் இயந்திரங்களைப் பொருத்தி சாகுபடிக்கு ஏற்பாடு செய்திருக்கிருர்கள். TUBE WELLS என்று சொல்லப்படும் இக்கிணறுகள் பல்லாயிரம் ஏக்ராக்களுக்கு பாசன வசதியளிக்க வல்லவை. ஆனால் இங்கும் ஒரு குறை உள்ளது. இக்கிணறுகளைக் கட்டிய சர்க்கார் கிணறு ஒன்றுக்கு ஒரு மைல் பக்கா கால்வாய்தான் கட்டிக் கொடுப்பார்கள். அவைகளிலிருந்து வாய்க்கால்கள் கொண்டு போவது சமூக அபிவிருத்தி இலாக்காக்களின் பொறுப்பு. "சிரமதானம்" என்று சொல்லப்படும், சமூக உழைப்பு மூலம் இந்த வாய்க்கால்கள் வெட்டப்பட வேண்டும். அவைகள் வெட்டப்படாததால் பல பிராந்தியங்களில் இந்தக்கிணறுகள் நிர்வாகக் குறைக்கு எடுத்துக் காட்டாக சும்மா இருக்கின்றன.

விவசாயிக்கு விவசாயத்தை விட்டால் வேறு பிழைக்கும் மார்க்கம் கிடையாது. ஆகையால் அவனுக்கு முன்னல் நின்று ஐந்தாண்டு திட்டங்களைப் பற்றி நாள் கணக்கில் பேசத்தேவையில்லை. சர்க்கார்கள் உணவு உற்பத்தியை அதிகரிக்க செலவு செய்யும் கோடிகளில் நான்கில் ஒரு பங்கு சரியான முறையில் செய்யப்பட்டால் எல்லோருக்கும் நன்மை உண்டு. ஆனல் இச்செலவுகள் பெரும்பாலும் தண்டச்செலவுகள். சமூக அபிவிருத்தி திட்டங்கள் ஒரு மகத்தான வாய்ப்பு. இவைகளை பரிபாலிக்கும் அதிகாரிகளுக்கு தாங்கள் வாங்கும் சம்பளம் செரிக்கவேண்டும் என்ற எண்ணம் கொஞ்சமாவது இருந்தால் அவர்கள் மாதத்தில் தங்கள் இலாக்காக்களில் உள்ள கிராமங்களுக்கு ஒரு முறையாவது போகவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள தேவைகளைக் கண்டறிந்து அவைகளை பூர்த்தி செய்தால் போதும், இப்படி வெகு சில இடங்களில்தான் நடக்கிறது. காவேரி நூறுகஜ தூரத்தில் ஓடும் ஒரு பெரிய கிராமத்தருகே தண்ணீர் குழாய்கட்டி திருகிவிட்டால் தண்ணீர் கொட்டும்படி செய்திருப்பதை தஞ்சை ஜில்லாவில் சில இடங்களில் பார்த்தேன். பட்டணத்தார்களைவிட கிராமத்தார்கள் ஆரோக்கியமாக இருந்ததற்குக் காரணம் காலார நடந்து, காவேரி போன்ற நதிகளில் அமிழ்ந்து ஸ்னனம் செய்து, கிணற்றிலிருந்து தண்ணீர் சேந்தியதால்தான். கிராமங்களில் தண்ணீர் ஏறிப்பாயாத நிலங்களில் தண்ணீர் பாய வைக்க சமூக மின்சார பம்புகள் தேவையே அல்லாது நாசூக்காக "குழாயைத் திறந்தால் பார் கொட்டுது வாட்டர்" என்று சொல்லக் கூடிய நாகரீகம் அல்ல.

இன்று கோவாபரேடிவ் என்ற பதமே நிஷித்தமாகி வருகிறது. கோவாபரேடிவ் பண்ணை என்பதை மறந்து நல்ல விதை, உரம், ஏர், மண் வெட்டி முதலியவைகளை மிகவும் மலிவான விலைக்கு விவசாயிகளுக்குக்

கொடுக்க கோவாபரேடிவ்கள் ஏற்பாடு செய்தால் அவைகளுக்கும் பயன் உண்டு, விவசாயத்திற்கும் பலன் உண்டு. ஆடுதுறையில் அபூர்வ விதைகள் கிடைக்கிறது என்று சொன்னால் ஆலங்குடியில் அமோக விளைச்சல் தானகவே உண்டாகிவிடுமா என்ன? பல்வேறு கிராமங்களுக்கும் வாரத்திற்கு ஒரு நாள் அல்லது 10 நாட்களுக்கு ஒருநாள் விவசாய சாதனங்களை ஏற்றிச் சென்று அங்கங்கு வேண்டியவைகளை சப்ளை செய்ய விசேஷமாக செய்யப்பட்ட லாரிகளை கோவாபரேடிவ்கள் ஏற்பாடு செய்வது கஷ்டமா? STAFF CAR என்ற அலுவலகத்திற்கென்று ஒவ்வொரு இலாக்காவிலும் பல கார்களை டில்லியில் வைத்திருக்கிறார்கள். நாட்டு வேலைகளைத் தவிர குடும்பங்களை சினிமாவுக்கு அழைத்துச் செல்வது வாரக் கடைசியில் உல்லாச மீன் பிடிப்பது போன்ற வேலைகளுக்கு கார்கள் வைத்துக் கொள்ள சர்க்கார்களில் வாய்ப்பு இருக்கும் பொழுது விவசாயத்திற்கு அரியசேவை செய்ய லாரிகள் வாங்குவது பெரிய காரியம் அல்ல.

இன்று நிலத்தில் நெல் போட்டால் நல்லதா கரும்பு போட்டால் நல்லதா என்பதைப் பற்றி பட்டணங்களில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்களில் கோட்டு சராய்போட்ட ஆராய்ச்சியாளர்கள் பிரமாதமாக விளாசுகிறார்கள்.

ஆராய்ச்சியும் விஞ்ஞானமும் தேசத்திற்குத் தேவைதான். ஆனால் அவைகளைப்பற்றி பட்டணங்களில் பேசி அவைகளைப்பற்றி கலர் சினிமாப்படம் அங்கு காட்டுவதில் யாருக்குப் புண்ணியம்? ஆராய்ச்சியின் பலன் நடைமுறையில் வரவேண்டும் என்றால் விவசாயத்துறையில் சம்பளம் வாங்குபவர்களை நாட்டுப்புறங்களுக்குச் சென்று அவைகளைப் பற்றி எடுத்துரைக்கச் சொல்லவேண்டும்.

கரும்பு நல்லதா அல்லது கடுகு நல்லதா என்பது உழுபவனுக்குத் தெரியும். கரும்பு நல்லது என்று ஒரு வருஷம் பூராவும் சும்மா இருப்பதா, அல்லது நான்கு மாதங்களில் நெல் சாகுபடி செய்து பலன் அடைவதா என்ற பிரச்னை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இதை இந்தக் கட்டத்திலேயே விட்டுவைப்பது நல்லது.

இன்னும் ஒரு சிறிய விஷயம். விவசாயத்தைப்பற்றி பேசும்பொழுது நம் கலப்பையை இகழ்ந்து, "ஹூம் இம்மாதிரி கலப்பையை வைத்துக்கொண்டு விவசாயம் செய்தால் உருப்பட்டாற் போலதான்" என்று அபிப்பிராயத்தை தாராளமாக அள்ளி விடுவது சகஜமாகி விட்டது. எல்லா இடங்களுக்குமே இயந்திர உழுதல் சாத்தியம் இல்லை. தவிர இந்தியாவின் பலபாகங்களில் மண் வெகுகாலம் உழைத்துக் களைத்து விட்டது. இந்த மண்ணுக்கு புஷ்டி உண்டாக்க உரம் தேவை; மண்ணும் மேலே உள்ளதாக இருக்க வேண்டும். ஆழ உழுததால் தானகவே பூமிக்கு சத்து வந்து விடாது.

உரம் போடுவதைப் பற்றியும் பலத்த கண்டனம் சிற்சமயம் காதில் விழுகிறது. "நம் குடியானவர்கள் ஏதாவது உப்புப் போட்டால்தானே சார்" என்று எளிதாக சொல்லிவிடலாம். ஆனால் குடியானவனுக்குத் தெரியும் உப்புப்போட இன்னும் என்ன உபசாதனங்கள் தேவையென்று. வயலுக்கு உப்புப் போடுவதுடன் நிறைய தழைகள் தேவை. முன்னாளில் வேலிக்காலிலும் புறம்போக்குகளிலும் தழைதரும் செடிகளையும் மரங்களையும் வைத்துப் பயிராக்குவது வழக்கம். இப்பொழுதுதான் பொதுக் காரியத்தில் அக்கறை என்பதே பாழ்த்து விட்டதே. "இந்த நிலம் அய்யருடையதா அல்லது ஐயாவுவின் நிலமா" என்பதில் தானே கவனம் செல்கிறது. சமூக அபிவிருத்தி திட்ட அதிகாரிகள் பைல்கள் வளர்ப்பதை சிலகாலம் நிறுத்தி தழைமரங்கள், செடிகள் வளர்ப்பதில் ஈடுபட்டால் நிறைய நன்மை பயக்கும்.

மற்ற நாடுகளுக்கும் நமக்கும் ஒரு விதத்தில் வித்தியாசம். நம் கிராமங்கள் சமூகவாழ்வை அடிப்படையாகக் கொண்டவை. இதை பிரிட்டிஷ் காலத்தில் மறக்க வைத்தார்கள். மறுபடியும் கிராமங்களில் பஞ்சாயத்து முறை அசல் ஒத்துழைப்பு மூலம் உண்டானல் கிராமங்களுக்கு சுயநலம் இல்லாமல் உழைப்பவர்கள் தோன்றுவார்கள். இந்த அடிப்படை என்று உருவாகிறதோ அன்று நாட்டுக்கு நல்லது. அன்றுதான் சர்க்கார் ஒதுக்கும் சமூக அபிவிருத்தி தனமும் நல்லபடி பயன்படும். அதுவரை பயனடைபவர்கள் ஜீப்பில் உல்லாசமாகச் சென்று எந்த ஊரில் எந்த காப்பி ஹோட்டல் நல்லது என்று பரீக்ஷை செய்யும் அதிகார வர்க்க பெருச்சாளிகள்தான்.



எப்பொழுதும் அகில இந்தியக் கண்காட்சிகளில் அதிக சிரத்தை காட்டாத சென்னை இந்தத் தடவை மாகாணப் பிரிவில் கோவில்போல ஸ்டாலை அமைத்து நமது கலாச்சாரத்தை பிரமாதமாகப் பரப்பி விட்டது

உலக விவசாயக் கண்காட்சி

கே. ஸ்ரீநிவாஸன்

விவசாயக் கண்காட்சி என்று சேர்த்துச் சொல்லும்பொழுதே ஏதோ அசம்பாவிதம் என்று தோன்றுகிறது. விவசாயத்தைப் பரந்த வெளிகளிலும் மலைச் சரிவுகளிலும் இயற்கையாகக் காடுகளிலும் பார்க்கிறோம். இதை எப்படி கண்காட்சியில் வைப்பது? இந்தக் கேள்விக்கு விடை புது தில்லியில் டிசம்பர் மாதம் முதல் துவங்கிய கண்காட்சியில் கிடைக்கிறது.

புது தில்லியில் சென்ற 10 வருஷங்களாக கட்டிடங்கள் கட்டப்படும் வேகத்தில் பாதசாரிகள் நடக்க நடைபாதை கூட மிஞ்சாது என்று எனக்குப் பலதடவை தோன்றியிருக்கிறது. பஞ்சாபிகளுக்கு ஒன்று தங்கம் அல்லது நிலம் மிகவும் பிடித்த விஷயம். பணத்தை மூட்டைகட்டி வைப்பதோ அல்லது பூமிக்கடியில் புதைப்பதோ இவர்களுக்குத் தெரியாது. மண்மேல் உள்ள இவர்கள் ஆசைதான் டில்லி பெரிய சாக்கடையாவதற்குக் காரணம். ஏனென்றால் அவர்களுடையது என்று நிலம் கிடைத்து விட்டால் சுகாதாரத்தைப்பற்றி அவர்களுக்கு அக்கரை இல்லை. இந்தமாதிரி நிலைமையில் ஒருபரந்த வெளியை நிரந்தரக் கண்காட்சி பூமியாக்கியது மத்திய சர்க்காருக்குப் பஞ்சாபிகளிடம் உள்ள பயத்தைக் குறித்துக் காட்டியது என்று நினைக்கிறேன்.

புதுதில்லி கண்காட்சிமைதானம் 5லக்ஷம் சதுர அடிகளுக்குமேல் பரப்பு உள்ளது. ஆகவே இடத்திற்குப் பஞ்சம் இல்லை. நடந்து பார்ப்பதுதான் சாத்தியமில்லை. ஏதோ எழும்பூரிலிருந்து மாம்பலத்திற்கு நடப்பது போன்ற உணர்ச்சியேற்படுகிறது. கண்காட்சியை பார்க்கவந்த சென்னை தம்பதிகள் அவ்வளவு உற்சாகமாக நடக்கவில்லை, “இவ்வளவு மெதுவாக நடந்தால் இதைச்சுற்றிப்பார்க்க ஒருவாரம்

உலக விவசாயச் சந்தையின் முகப்புத் துவாரம்.

ஆகும்” என்றார் நண்பர். “உங்களுக்கென்ன? அக்கோடிக்கு இக்கோடி கட்டியிழுத்து இதுதான் கண்காட்சி என்கிறீர்கள். நான் இந்தப் புல்லாந் தரையிலேயே உட்கார்ந்து கொள்கிறேன். நீங்கள் எங்கே வேண்டுமோ அங்கே போய்வாருங்கள்,” என்று சொல்லிவிட்டு ஒரு சிமிட்டு பெஞ்சியில் உட்கார்ந்துவிட்டாள் மனைவி.

இது வெறும் கதையல்ல. இம்மாதிரி பல நூறு தம்பதிகள் சொல்லிக்கொண்டே தான் செல்கிறார்கள், அதற்காக அவர்கள் கண்காட்சியைப் பார்க்காமல் போய் விடவில்லை. ஏன் என்றால் கொடுத்த காசுக்கு நன்றாக சுற்றிப் பார்க்கவேண்டுமென்பது இயல்பு தானே!

நிரந்தர கண்காட்சியானதால் அங்கு கட்டப்பட்ட கட்டிடங்கள் எல்லாம் நிரந்தரமாக இருப்பவை. கண்காட்சிக்கு உள்ள நான்கு வாயிற்படிகளுக்கு வளைவுகளும் நிரந்தரமானவை. ஒரே ஒரு வித்தியாசம் தான். தொழில் கண்காட்சிக்கு வாயிற்படியில் சுழல் சக்கரமும் சுத்தி தாங்கிய தொழிலாளியும் சின்னமாக இருந்தால் இப்பொழுது ஏரும் அரிவாள் பிடித்த குடியானவனும் தட்டுக் கூடை சுமக்கும் அவன் மனைவியும் சின்னமாக இருக்கிறார்கள்.

கண்காட்சியை ஆறுபாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள்; அந்நிய நாடுகள் பகுதி! தேசீயப் பகுதி! மாகாணப் பகுதி! குடிசைத்தொழில் பகுதி! கடைத்தெருப் பகுதி! உல்லாச வேடிக்கைப் பகுதி. அந்நியநாட்டுப் பகுதி எல்லாவற்றையும் விட பெரியதாக இருப்பது ஏன் என்று சொல்லத் தேவையில்லை. கண்காட்சியின் முக்கிய நோக்கம் இந்திய விவசாயிகளுக்கு மற்ற மாகாணங்களிலும் அந்நிய நாடுகளிலும் கையாளப்படும் முறைகளைப்பார்த்துத்தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் அளிப்பது; இந்நாட்டிலும் மற்ற நாடுகளிலும் உண்டான அபிவிருத்திகளை எடுத்துக் காட்டுவது, விவசாய சாதனங்களின் முன்னேற்றத்தை தெளிவாக்குவது; இந்தியா உணவுத்துறையில் எவ்வளவு தூரம் முன்னேற வேண்டும் என்பதையும் காட்டுவதாகும்.

அந்நிய நாட்டு விவசாயம் என்றவுடன் நம் கண்முன் என்ன வருகிறது? அமெரிக்கா, ரஷ்யா, சீனா இம்மூன்று நாடுகளும் மிகவும் பெரியவை. பெரும்போக்கான விவசாயத்தைப்பற்றி நினைக்கும் பொழுது இந்த “ராக்ஷஸர்”களைப் பற்றித்தானே ஜனங்கள் நினைப்பார்கள்? எப்போதும் நல்லதைச் சொல்லிவிட்டுப் பிறகு சுமார் சமாசாரங்களை சொல்வதுதான் முறை. ஆனால் இங்கு இந்த முறையை மாற்றிச் சொல்வதற்குத் தகுந்த முகாந்திரங்கள் இருக்கின்றன. ஆகவே முதலில் சீனாவின் கண்காட்சியைப்பற்றிச் சொல்கிறேன்.

வங்காள கிராமங்களில் செய்யப்படும் கிராமிய பொம்மைகள்.

நம்மிடம் சென்ற இருமாதங்களாகக் கொண்டிருக்கும் "நெருங்கிய உறவு" காரணமாக சீனா இந்தக் கண்காட்சியில் பங்கெடுத்துக் கொள்ளாது என்றே நினைத்தார்கள். இது காரணமாகவே கண்காட்சி ஆரம்பிக்க சில தினங்கள் வரை சீனாவைப் பற்றிய தகவலே கிடையாது. இந்தக் கண்காட்சி மைதானத்தில் சென்ற தொழிற்காட்சியில் சீனா ஒரு பிரும்மாண்ட கட்டிடத்தைக் கட்டியது. அப்பொழுது இந்தியாவும் சீனாவும் "பாயி பாயிகள்" (அண்ணன் தம்பிகள்) அக் கட்டிடத்துக்கு முகப்பு சீனாவில் உள்ள பிராசீன கட்டிடங்களை ஒத்திருந்தது. இவ்வளவு பெரிய கட்டிடத்தை சும்மா விட்டுவிடுவதாவது என்று சீனாவுக்குத் தோன்றியிருக்கவேண்டும். கடைசி தருணத்தில் அடித்துப் பிடித்துக் கொண்டு அவர்கள் இக் கட்டிடத்தை நிரப்பி விட்டார்கள்.

"நிரப்பிவிட்டார்கள்" என்று சொல்லுவதற்குக் காரணம் உண்டு. பழைய கதையைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்களே. தகப்பனாருக்கு இரு பையன்கள் உண்டு. அவர்களில் யார் சூடிகை என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று தகப்பனார் எண்ணினார். இருவரிடமும் தலைக்கு ஐந்து ரூபாய்களைக் கொடுத்து இருகாலி வீடுகளை நன்றாக அலங்கரிக்கச் சொன்னார். "வீடு நிறைந்திருக்க வேண்டும்" என்பது ஒரு ஷரத்து. பெரியவன் புத்தி மந்தம் உள்ளவன். வீடுதானே நிரம்ப வேண்டும் என்று அப்பா சொன்னார்? வீடு நிறைய வைக்கோலை வாங்கி கடாவடி விட்டான். சிறியவன் மாவிலைகள் கொண்டுவந்து தோரணம் கட்டி,வீட்டைப் பெருக்கி கோலம் போட்டு, ஊதுபத்திகள் விளக்குகள் ஏற்றி பாக்கு பழங்களைக் கொண்டு தகப்பனாரை வரவேற்றான். இந்தக் கதையை மனதில் வைத்துக்கொண்டு கண்காட்சியை சுலபமாக அறிந்து கொண்டுவிடலாம். ஏனென்றால் சீனாதான் பெரியவன். அமெரிக்கா சிறிய பிள்ளை.

கண்காட்சியில் குடிசைத் தொழில்கள் என்ற பிரிவை மனதில் வைத்துக்கொண்டு பட்டணங்களில் உண்டாக்கும் பல இயந்திரப் பொருள்களை கொண்டுவந்து தங்கள் ஸ்டால் பூராவும் நிரப்பியிருக்கிறார்கள். தையல் மெஷினும் வண்ணான் உபயோகிக்கும் "ஸ்த்திரி" பெட்டியும் தானாகவே இயங்கும் மின்சாரத் தறிகளும் குடிசைத் தொழிலின் கீழ் வருகின்றன என்று நம்பமுடியவில்லை. இவைகளையெல்லாம் "கம்யூன்" என்ற பொது விடுதிகளில் உள்ளவர்கள் தயாரித்தது என்று அவர்களுடைய சுவரொட்டிகள் பீத்துகின்றன. "கம்யூன்" என்ற விடுதிகள் பெரியஜெயிலான சீனாவில் உள்ள சின்னஞ் சிறிய காராக்கிரகங்கள். இவைகளைப் பற்றி உலகம் பூராவும் சர்ச்சை நடக்கிறது. இந்தக் "கம்யூன்" களில் வசிப்பவர்கள் முகம் ஒன்றைக்கூட ஒருபுகைப் படம் மூலம் காட்டவில்லை. ஏனோ?

மற்றொரு ருசிகரமான விஷயம் ஒன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சீனா விவசாயத்தில் முன்னேறியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சீனக்குடியானவர்கள் பிராசீன காலத்திலிருந்தே மிகவும் உயர்ந்த ரக பண்ணையில் ஈடுபட்டவர்கள். கம்யூனிஸச் சர்க்கார் வந்த பிறகு தன் சுதந்திரத்திலும் உடைமையிலும் ஆர்வம் உள்ள இவனை அடிமையாக்கிவிட்டார்கள். ஆனாலும் விவசாயத் துறையில் கம்யூனிஸ்ட்களின் திட்டம் காரணமாக பலவித விவசாயப் பொருள்களின் உற்பத்தி பெருகியதுடன் நிலமும் உயர்ந்தது. ஆனால் உலக விவசாயக் கண்காட்சியில் அவர்களுடைய சிலபொருள்கள் வியர்த்த பிரசாரத்திற்கென்று வைக்கப்பட்டவை. நிலக்கடலை எங்கேயாவது பட்டை அவரைக்காய் அளவுக்கு விளைந்ததாக கேள்வியாவதுபட்டிருக்கிறீர்களா? விரல் வீங்கலாம் என்றாலும் அது உத்திரம் அளவுக்கு வீங்க முடியுமா? அரிசி, பருப்பு, பட்டாணி, கடலைகள்முதலியவைகளை பெரிய கண்ணாடி ஜாடிகளில் வைத்து மூடியிருக்கிறார்கள், இவைகளில் ஒன்றில்தான் பிருமாண்ட கடலை வைக்கப்பட்டிருந்தது. பஞ்சாபிலிருந்து கண்காட்சியை சுற்றிப் பார்த்துவந்த கிஸான்களின் தலைவர் அந்த ஜாடியை சுட்டிக்காண்பித்து "இது உண்மையில்விளைந்த கடலையாக இருக்கமுடியாது"



ஹுமாயூன் மசூதி டாணியில் கட்டப்பட்டுள்ள அமெரிக்கப் "பவிலியனின்" முகப்பு

என்று தன் சகாக்களிடம் சொன்னார். சீனப் பிரிவில் உள்ள சீன அலுவலக அதிகாரிகள் எல்லோரும் நன்றாக ஹிந்தி பேசுபவர்கள். இந்தியாவை ஒருநாள் பிடித்து ஆளக் கனவு காண்பவர்கள் இந்தியாவில்பேசப்படும் பொது பாஷையை தங்கள் ஜனங்கள் கற்றுக் கொள்ளச் செய்வதில் ஆச்சரியம் என்ன? சீன ஊழியர் ஒருவர் "இது நிஜம் கடலைகள்தான்" என்றார். அப்படியானால் ஒரு கடலையை எடுத்துக் காட்டுங்கள் என்றார். "கண்காட்சியில் வைத்திருக்கும் சாமான்களை எடுக்கக்கூடாது" என்றார் அந்த சீனர். "அப்படியானால் இந்தக் கடலைகள் விளைந்தவை அல்ல" என்றார் பஞ்சாயத்து நியாயம் அறிந்த அந்தக் கிஸான் தலைவர். இந்த சம்பவத்திற்குப் பிறகு டென்னிஸ் பந்து அளவு உள்ள முட்டைகளை சீனாவில் கோழிகள் இடும் முட்டைகள் என்று எப்படி அவர்கள் நம்புவார்கள்? (நான் ஒரு முட்டையை ரகசியமாக கையில் எடுத்தேன். அது கனமே இல்லாமல் மேஜை டென்னிஸ் பந்தைப்போல் இருந்தது.)

சீனப் பிரிவைப்போல் அல்லாமல் ரஷ்யப் பிரிவில் விவசாயப் பொருள்களை நம்பக்கூடிய முறையில் புள்ளி விவரங்களுடன் வைத்திருக்கிறார்கள், ஆனால் எதற்காக இவர்கள் "ஸ்புட்னிக்"கின் மாடலை அவர்கள் பகுதியின் முகப்பில் வைத்திருக்கிறார்கள் என்று விளங்கவில்லை. ருஷ்யா "ஸ்பேஸ்" என்ற சூன்ய பிரதேசமூலம் தங்கள் விஞ்ஞான பாணங்களை மற்ற கிரகங்களுக்கு அனுப்புவதில் ஈடு இணையில்லாதவர்கள் என்று விஞ்ஞான உலகம் ஒப்புக்கொண்டு விட்டது. ஆனால் இதற்கும் விவசாயத்திற்கும் என்ன சம்பந்தம்? இதேபோல் அவர்கள் மோட்டார் சைக்கிள்களையும் மற்ற மின்சாரத்தால் இயங்கும் இயந்திரங்களையும் கண்காட்சியில் எதற்காக வைத்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் ருஷ்யாவின் இயந்திர விவசாயப் பகுதியில் இந்திய விவசாயிகள் சுலபமாகக் கையாளக்கூடிய கருவிகளை காட்டியிருப்பது சிலாகிக்க வேண்டிய விஷயம்.

சாதாரணமாக அமெரிக்கர்கள் இந்தியாவின் மனப்போக்கை அறிய சிரமப்படுகிறார்கள். மகோன்னத நாகரீகமடைந்த இந்நாட்டுக்கும் நமக்கும் ஏராள வித்தியாசம் உள்ளது என்பது வாஸ்தவம், ஆனால் இந்தக் கண்காட்சியில் அமெரிக்கர்கள் எல்லோரையும் மிஞ்சிவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். விவசாயக் கண்காட்சியின் நோக்கங்களை கிட்டத்தட்ட பூராவும் பூர்த்தி செய்பவர்கள் அமெரிக்கர்கள்தான்.

எடுத்த எடுப்பிலேயே அமெரிக்கப் பிரிவு மக்களின் கவனத்தைக்கவருகிறது. டில்லியில் உள்ள ஹுமாயூன் மசூதியின் மேல் உள்ள சிகரம்போல் பல பாதி உருண்டையளவு உள்ள குடை போன்றவைகளை அழகாக ஆகாயத்தில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

சோவியத் பவிலியனின் முகப்பு.

அமெரிக்க "பவிலியனுக்குள்" செல்லும் பாதையே மிக அழகாக அமைந்திருக்கிறது. பளிங்குக் கற்கள் கொண்ட தளவரிசைகளில் விசாலமாக சுவரொட்டிகளைப் போன்ற போர்டுகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இருபுறங்களிலும் தண்ணீர், தடாகங்களிலிருந்து தண்ணீர்க் குழாய்கள் மூலம் திவலையிட்டுப் பீச்சுகிறது.

அமெரிக்கப் "பவிலியன்" பூராவும் கருப்புத் துணி உள்ள பின்னணித் திரைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. எதை ஜனங்கள் பார்க்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதை நல்ல பலமான விளக்குகளால் விளக்கிக் காட்டுகிறார்கள். அமெரிக்காவில் சர்வ சகஜமாக காணப்படும் கிராம வெளிகளை, பெரிய மனிதர் வீட்டுக் கொலுவில் காட்சி அமைப்பார்களே அதைப்போல அமைத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த மாடலிலிருந்து இந்தியர்கள் என்ன தெரிந்துகொள்ளலாமென்றால் கிராமாந்திரங்களுக்கும் பட்டணங்களுக்கும் வாழ்க்கை வசதிகளில் வித்தியாசம் இல்லை என்பது. கிராமங்களிலும் கார்களும் டெலிபோன்களும் மின்சார இயந்திரங்களும் உள்ளன. நாட்டுப்புறத்தில் அழகிய வீடுகள் வயல்களுக்கும் புல் சரிவுகளுக்கும் மத்தியில் அங்கங்கு காணப்படுவது அழகாக இருக்கிறது.

அமெரிக்காவில் உரம் முதலியவைகளை எந்தெந்த விகிதாசாரத்தில் எந்தெந்த பயிர்களுக்குப் போடுகிறார்கள் என்பதை தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். குடியானவர்களோ அல்லது எளியவர்களாக தோன்றுபவர்களோ இந்தப்புறம் வந்தால் ஒலி பெருக்கி மூலம் இந்த உரம் முதலியவைகளைப்பற்றி ஹிந்தியில் சுருக்கமாக விளக்குகிறார்கள்.

அமெரிக்காவில் கோவாபரேடிவ்கள் விவசாயிகளின் முதுகெலும்பு. இவைகளைத்தான் குடியரசின் அடிப்படை என்று சொல்கிறார்கள். இந்தக் கோவாபரேடிவ்கள் ஒத்துழைப்பின் சாராம்சம் நல்ல விதை, உரம் முதலியவைகளை சப்ளை செய்வதுதான். தேவையுள்ளவர்களுக்கு நிதி கொடுத்து உதவுவது. மாசூலை பத்திரமாக சேமித்து வைப்பது, மாசூலை விற்பனை செய்வது முதலியவை கோவாபரேடிவ்களின் வேலை. கோவாப

உங்களுக்குத் தெரியுமா?

1. விவசாயத் துறையில் இந்தியாவில் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் தலை சிறந்தது உத்திரப் பிரதேசம்.

2. இந்தியாவின் சர்க்கரை உற்பத்தியில் பெரும்பங்கு இந்த மாகாணத்தைச் சேர்ந்தது.

3. பழங்களை உற்பத்தி செய்வதுடன் அவைகளை வெகுகாலம் உபயோகப்படும்படி செய்ய இந்த மாகாண பழ பாதுகாப்பு இலாகா உதவுகிறது.

விவசாயத் துறையில் உத்தரப் பிரதேசத்தின் முன்னேற்றத்தையும், கரும்பு உற்பத்திக்கு விவசாயிக்கு அளிக்கப்படும் வசதிகளையும், பழ உற்பத்தி முறைகளையும் தெரிந்துகொள்ள:

உலக விவசாய சந்தையில்

உத்தரப் பிரதேச கண்காட்சி சாலைக்கு

விஜயம் செய்யுங்கள்

எங்கள் கண்காட்சி சாலையில்....

1. மலிந்த சுய பழ ரசங்களை அருந்துங்கள்
2. குழந்தைகளுக்கு குளிர்ந்த பால் வாங்கிக் கொடுங்கள்
3. உலகப் பிரசித்திபெற்ற குமான் புலிகள் உள்ள கார்பெட் தேசீய பார்க்கு டில்லியிலிருந்து 150 மைல்களுக்குள் உள்ளது. இதற்கு செல்லவும், அங்கே தங்கவும் உத்தரப் பிரதேச கண்காட்சி சாலையில் ஸ்பெஷல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ரேடிவ்களை இயக்குவது விவசாயிகள். அவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஜனநாயகத்தின் அஸ்திவாரம். ஏனென்றால் விவசாயிகளுக்குப் பாதகமாக எதுவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது இவர்களின் வேலைகளில் ஒன்று. எந்த அரசியல் கட்சியும் கோவாபரெடிவ்களின் மத்திய ஸ்தாபனத்தை தங்கள் பக்கத்தில் வைத்துக்கொள்ள ஆசைப்படுவதில் ஆச்சரியம் என்ன?

அமெரிக்காவின் விவசாயத்தைப் பிடித்ததொரு பெரிய அதிர்ஷ்டம் என்ன என்றால் சோளம், கேழ்வரகு, கம்பு போன்றவைகளையும் கடலைக்கொட்டை, கடலைமாவு முதலியவைகளையும் கொண்டு செய்யப்பட்ட பண்டங்களை வெகு அழகான பல கலர் கொண்ட வர்ண அட்டைப் பெட்டிகளின் பல ரூபங்களில் அடைக்கிறார்கள். இந்தப்பெட்டிகளில் ஒன்று அதிக கொழுப்பு இல்லாத பால் தயாரிக்க தாவரப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்பட்டமாவு. அமெரிக்காவில் எருமை மாட்டை விரட்டிக்கொண்டு காலையில் ஜனங்கள் ஓடாமலிருப்பது இம்மா.திரி அசல் பாலுக்கு நகல் கண்டுபிடித்து விட்டதால்தான். நாக்கு நீண்ட இந்தியர்களுக்கு இம்மாதிரி வஸ்துக்கள் பிடிக்காது. ஏன், பால் பவுடரைக்கொண்டு செய்யப்பட்டாலே அது நிஷித்தமாகி விடுகிறதே? "என்ன ஸார் பம்பாய். சுத்தப் பால்காப்பி என்பது எங்கு ஸார் இந்த ஜவாட ஊரில் கிடைக்கிறது?" என்று நாக்கை சப்புக்கொட்டிக்கொண்டே நண்பர்கள் சகஜமாக பேசிக்கொள்வதுண்டு டில்லியில்.

மொத்தத்தில் அமெரிக்கர்களின் வாழ்க்கையை அருமையாகச் சித்தரிப்பது அமெரிக்கப் பவிலியன். அமெரிக்கக் குடியானவர்கள் வீட்டில் அடுப்பங்கரையில் கட்டை, கரி, அடுப்பு கிடையாது, தட்டு அலம்புவது முதல் மற்ற அடுப்பங்கரை வேலைகளைச் செய்ய தானாகவே இயங்கும் இயந்திரங்கள் இருக்கின்றன என்பதே அமெரிக்க வாழ்க்கை மோஸ்தருக்கு பலத்த பிரசாரம் அல்லவா? கம்யூனிஸ்ட்களைப்போல பச்சைப் பிரசாரம் செய்யாமல் கம்யூனிஸ்ட்களுக்கு மறைமுகமான சவுக்கடி அங்கணத்திற்கு அங்கணம் இருக்கிறது. வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்ன? உணவு. அதற்குப் பிறகு குடும்பம். பிறகு நண்பு, கடைசியில் சுதந்திரம். உணவும் உடையும் மட்டும் இருந்தால் மனிதனின் வாழ்க்கை பூர்த்தியாகி விடுவதில்லை என்பதை அருமையாக அறிவுறுத்தியிருப்பதன் பெருமை அமெரிக்க அதிகாரியான ஸ்ரீ ஆர்தர் குட்பிரண்டை (ARTHUR GOOD FRIEND) சாரும்.

கண்காட்சியில் எனக்கு மிகவும் உற்சாகம் அளித்த பகுதியில் இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழு கையில் காசு பையில் சாமான் என்ற முறையில் வருவது. மிளகு, முந்திரிப் பருப்பு விளைச்சல் சணல், புகையிலை, கரும்பு, தேங்காய் முதலியவைகளை எப்படி உற்பத்தி செய்வது என்பதுபற்றி அருமையான விளக்கப் படங்களும் அச்சிடப்பட்ட இலவசப் பிரசுரங்களும் கண்காட்சியைப் பார்க்கும் ஆயிரம் பேர்களுக்கு ஒருவருக்காவது பயன் பட்டால் கூட தேசத்துக்கு நல்லது. தேங்காய்கள் வைத்திருக்கும் பகுதியில் ஒரு சிறிய விதைக்கோட்டை அளவுக்கு ஒரு தேங்காயைப் பார்த்ததுமே இந்த எழுத்து வேலையை விட்டுவிட்டு தென்னஞ்சோலை உண்டாக்க வேண்டும் என்று தோன்றிற்று. பிறகுதான் தென்னைகள் வைக்க நிலம் வேண்டும் என்ற ஞானோதயம் உண்டாகி பையில் உள்ள பேனாவை வலது கை செல்லமாகத் தட்டிக் கொடுத்தது.

சாதாரணமாக அந்தமான் தீவுவகை தென்னையை இந்தியாவில் கேரளத்தில் காணலாம். கப்பம் தேங்காய் அந்தமான் காய்க்குத் தம்பி. இம்மாதிரி மரங்களை தஞ்சை ஜில்லாவிலும் பயிர் செய்யலாம். அம்முறைகளை இந்தக் கண்காட்சி மூலம் தெரிந்து கொள்ளலாம். கொட்டாங்கச்சியிலிருந்து பலவித பொருள்களைத் தயாரிக்கலாம், அவைகளை வெந்நீர் அடுப்புக்கு போடவேண்டாம் என்றும் இன்னும் ஊன்றி நடக்கும் குச்சிகள் நாற்காலிகள் முதலியவைகளை தென்னை மரத்திலிருந்து செய்யலாம் என்றும் தெரிந்து கொண்டேன்.

மண்ணில்லாமல் பயிர் செய்ய முடியுமா? முடியாது என்றுதான் நூற்றில் தொண்ணூற்றொன்பது பேர்கள் சொல்வார்கள். ஆனால் இது சாத்தியம். சட்டியில் மெல்லிய வைக்கோலைப்போட்டு அடிப்பாகம் தண்ணீரில் இருக்கும்படி வைத்து அதிலிருந்து கத்தரிக்காய்கூட உண்டாக்கிக்கொள்ளலாம். சென்னையில் கறிகாய் விற்கும் விலையைப் பார்த்தால் இம்மாதிரி விவசாயம் செய்து நடுத்தரக் குடும்பங்கள் வருஷம் பூராவும் கத்தரிக்காய் சாப்பிட்டால்கூடத் தேவலை என்று தோன்றுகிறது என்று சென்னையிலிருந்து வந்த நண்பர் சொன்னார்.

இந்தியாவில் நம் கணக்குப் பிரகாரமே லக்ஷம் டன் தான்யங்கள் வருடா வருடம் உற்பத்தியாகின்றன. தலா 12 அவுன்ஸ் கொடுத்தால் இதை கோடி ஜனங்கள் சாப்பிடலாம். பின் எப்படி பற்றாக்குறை என்று கேட்பவர்களில் நம் ராஜாஜியும் ஒருவர். இந்தக்கேள்விக்கு எந்த மத்திய உணவு மந்திரி பதில் சொல்லுகிறாரோ அவர் பெரிய ஆள் என்று மதிக்கவேண்டும். வாசகர்களுக்கு ஒரு வார்த்தை. கண்காட்சி பார்க்க வருபவர்கள் ஏராள கம்பிளிகளுடன் வருவது நல்லது. சென்ற சில தினங்களாக குளிர் உள் நடுக்கல் எடுக்கச் செய்து விட்டது. பிப்ரவரிவரை இது அதிகரிக்குமேயல்லாது குறையாது. ✶

தொடர் கதை

இன்பமே இங்கே வா!

தி. சேஷாத்திரி...

பாம்பும் தாலியும்

பந்தலடி கிராமத்தில் ஒரு விசேஷ நிகழ்ச்சி வருஷா வருஷம் நடக்கிற வழக்கம் உண்டு. அதாவது, அந்த ஊரிலுள்ள சிறு குளத்திற்கு நர்மதைக் குளம் என்று பெயர். எப்பொழுது அது ஆரம்பித்தது என்று யாருக்கும் தெரியாது. பராபரியாக, பல நூறு வருஷங்களுக்கு முன் அங்கே ஒரு யோகினி வந்து தங்கியிருந்ததாகச் சொல்வார்கள். அவள் நர்மதை நதிக் கரையில் தவம் செய்தவளாம். அவள் வரும்போது ஒரு சிறிய செம்பில் நர்மதை நதியின் நீரை கொண்டு வந்திருந்தாளாம். அதைத் தெளித்து அநேகருக்கு நல்ல நன்மைகள் உண்டாயிற்று. கடைசியாக எஞ்சிய நீரை அவள் அந்தத் திருக்குளத்தில் ஊற்றி விட்டாள். அதனால்தான் அதற்கு அந்தப் பெயர் வந்தது, அதில் பயபக்தியுடன் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு இகம், பரம் இரண்டிலும் நன்மை உண்டு என்று நம்பினர் எல்லோரும்.

மாசி மகத்தன்று எல்லோரும் அந்தக் குளத்தில் ஸ்நானம் செய்வார்கள். அன்று ஸ்நானம் செய்தால் தனிப்பெருமை என்று நம்பினார்கள். மீதி நாட்களில் எங்கே முழுகினாலும் அன்று அங்கேதான் ஸ்நானம் செய்வார்கள். அதன் கரையில் ஒரு பிள்ளையார் கோவிலும் கட்டப்பட்டது. பிள்ளையார் கோவில், குளத்தின் பெருமையை அதிகரிக்கச் செய்யக் கட்டப்பட்டது என்பவர் பலர். இல்லை, கோவில் முன்னமேயே இருந்தது என்பாரும் உண்டு. எதுவாயிருந்தாலும் அந்த ஊரில் மாசிமக ஸ்நான விழாச் சிறப்பாக நடந்தது. அதற்குத்தான் இந்த வருஷம் துரைசாமிக்கு அழைப்பு வந்து அவனும் வந்திருந்தான்.

அது அந்த ஊர் வழக்கம். ஊரிலிருந்து எந்தக் காரணத்துக்காவது வெளியூர் போயிருந்தாலும் அன்று வந்து விடுவார்கள். உற்றார் உறவினரையும் அழைப்பார்கள். உண்மையில் மாசிமகத்தின விழா புனிதத் தன்மை, இகபர நன்மைகள், கொண்டாட்டம், எல்லாம் இணைந்த ஒரு ஊர்ப்பொது நிகழ்ச்சியாக மாறி பல வருஷங்கள் ஆன காரணத்தால் வலுவும் உரமும், அழகும் நன்மையும், இன்பமும் இனிமையும் கொண்டதாக ஆகி விட்டிருந்தது. நிற்க,

துரைசாமி ஆரத்தி எடுத்த பிறகு உள்ளே போனான். சட்டையைக் கழற்றி மாட்டினான். அப்படியே ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டான். அடுத்த வீட்டிலிருந்து அவன் மாமா, அத்தை அவர்கள் குழந்தைகள் எல்லோரும் இங்கேயே வந்து விட்டனர். எங்கே, நாம்

முதலில் அங்கே வரவில்லை என்று கோபித்துக்கொள்வார்களோ என்று சற்று அச்சம் கொண்டிருந்தான் துரைசாமி. அவர்கள் இங்கேயே வந்ததைப் பார்த்தவுடன அவனுக்கு அச்சம் நீங்கி ஆனந்தம் ஏற்பட்டது.

அந்த இரு வீட்டுக்கும் இடையே சரளமான உறவு ஏற்பட்டு வலுவடைந்திருந்தது. தவிரவும் இந்தத்தடவை யார்வீட்டில் விருந்து என்பது பற்றியும் ஏற்கனவே பேசியும் முடிவாயிருந்தது.

துரைசாமியின் அத்தை சொன்னாள்: "அக்கா! நாகரத்தினம் என் பெண்தானே!"

'ஆமாம், அதற்கென்ன சந்தேகம்!'

'அப்படியானால் மகப் பண்டிகை யார் வீட்டில்!'

சம்பந்தி அம்மாள் பேசவில்லை. ஒரு சிரிப்புச் சிரித்துக்கொண்டு இருந்து விட்டாள். இருந்தாலும் பிரச்னை தீரவில்லை. எது சரி என்ற பேச்சு புருஷர்கள்வரை சென்றது. நாட்டாண்மைக்காரர் சொல்வது தான் நியாயம் என்று சொல்லிவிட்டார் பெண்ணைப் பெற்றவர்.

நாட்டாண்மைக்காரர் நடு நிலைமையாகச் சொன்னார். "முதல் பண்டிகை உங்கள் வீட்டில் நடப்பதுதான் சரி." ஒரு கேவல் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். அவர் மனைவி தான்.

"அடி அசடே! என்னடி இப்படி ஒரு ஆசையா!" சம்பந்தி பார்த்தார். அவருக்கும் சங்கடமாகவே அவர்சொன்னார். அண்ணாச்சி! ஒன்று செய்யலாம். அண்ணி மனதுக்கும் ஒத்துப்போகவும். நீங்க எல்லோரும் நம்ப வீட்டிலேயே இருந்துடுங்க. விருந்தெல்லாம் அண்ணி விருப்பப்படியே நடக்கட்டும் சரி தானே! என்றார். எல்லோரும் ஒப்புக் கொண்டு விட்டனர். அப்பொழுதே அவன் நாகரத்தினத்திடமும் சொல்லி விட்டான் நீயும் நான் சொல்கிறபடி எல்லாம் செய்ய வெண்டும் என்று.

ஆகவே வீடே கோலாகலப்பட்டது. மறு நாள் காலையில் துரைசாமியின் தகப்பனும், தாயும் வருவதாக இருந்தது. துரைசாமியை நன்றாகப் பரிகாசம் செய்வதில் எல்லோரும் ஈடுபட்டனர்.

"தம்பி! ரத்தினத்துக்கு வயிற்றில் புண்ணடா! வலிக்கிறதாம்?"

"ஏன் அவ்வளவு சத்தம் போட்டால்...?"

உள்ளிருந்து விசிக்கும் சத்தம் கேட்டது.

"போடா துரை! நியாயமாகத்தான் சொல்லுகிறேன். தாம்பாளம் வயிற்றில் வெட்டிவிட்டது."

துரைசாமி அக்கறை காட்டவில்லை. எல்லோருக்கும் வருத்தந்தான். சிறு பையன் தானே என்று சமாதானம் செய்துகொண்டனர்.

துரைசாமிக்குக் காபி பலகாரம் கொடுக்கப்பட்டது. அது சாப்பிடுவதற்கே முழுகிக் குளித்துவிட்டு வந்து விடுகிறேன் என்றான். ஆனால், அத்தை தடுத்து காப்பி பலகாரத்தைச் சாப்பிட்டு விட்டுப் பிறகு போகலாம் என்று சொல்லிவிட்டாள்.

அவன் சாப்பிடும்போது அத்தை உள்ளே போய், ரத்தினம் எதிர் உள்ளே போய்க் கொஞ்சம் நெய் எடுத்து வா என்று கிண்ணத்தைக் கையில் கொடுத்தாள்.

அவள் கருத்துப் புரிந்துகொண்டாள் நாகரெத்தினம். அவளுக்கும் ஆசைதான். இருந்தாலும் வெட்கம் பிடுங்கித் தின்றது. ஊஞ்சல் பக்கமாகப் போய் அதைத் தாண்டி எதிரே உள்ள உக்கிராண அறைக்குச்செல்ல வேண்டும்.

அவள் ஊஞ்சல் தாண்டும்வரை அவன் சும்மா இருந்தான். அவள் தாண்டியவுடன் அவன் கையை நீட்டினான். அத்தை செய்திருந்த ஏற்பாடு, கூடத்தில் ஒருவரும் இல்லை. அவன் இடது கையில் அவள் பின்னல் மாட்டிக்கொண்டது. இழுக்கும் முயற்சியில் ஊஞ்சல் ஆட ஆரம்பித்தது. எக்கச் சக்கமான நிலை. நாகரத்தினத்துக்கு அழுகையே வந்துவிட்டது. எப்படியோ விடுவித்துக் கொண்டு திரும்பவும் அத்தையிடமே ஓடினாள். உள்ளே நடந்த குசு குசுப் பேச்சிலிருந்து அவள் அழுகிறாள் என்றும், அத்தை சிரித்துக்கொண்டே சமாதானப் படுத்துகிறாள் என்றும் தெரிய வந்தது.

துரைசாமியும் அவளைத் தொந்தரவு செய்வதில்லை என்று நிச்சயம் செய்துகொண்டான்.

காப்பி சாப்பிட்டு விட்டுத் தூங்கிய அவன் பன்னிரெண்டு மணிக்குத்தான் எழுந்தான். நாகரெத்தினம் போட்ட படுக்கையல்லவா! நன்றாகத் தூக்கம் வருகிறது! என்று பரிகாசம் செய்து எழுப்பிவிட்டாள் அத்தை. எழுந்தவுடன் நாகரெத்தினம், 'வெந்நீர் தயார் அத்தை! என்று சொல்வதைக் கேட்டான். ஒரு துள்ளுத் துள்ளி எழுந்து 'நான் குளத்தில்தான் குளிப்பேன்! என்று சொல்லி விட்டு கையில் சோப்புப்பெட்டி துண்டு இவற்றுடன் குளத்துக்குப் புறப்படத் தயாரானான். 'நாளைக்குத்தான் அந்தக் குளத்தில் குளிக்க வேண்டுமே' என்று நாகரத்தினம் முனகினாள். யாரும் அதை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. மாமாவின் பையனும் பிடிவாதம் செய்யவே அவனை அழைத்துப் போகவா என்று கேட்டான். 'சரி' என்று அத்தை சொன்னாள். அவனையும் அழைத்துக்கொண்டு கிளம்பினான்.

அவரவர்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தனர். சம்பந்தியும் சம்பந்தியும் வாயிலின் காற்றுப் பந்தலில் விசுப்பலகையின் மீதமர்ந்து ஆரம்பத்திலேயே வெயில் காட்டும் கொடுமை, வயல் வெளி வேலையின் நிலைமை ஆகியவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். நாகரத்தினம் இருப்புக் கொள்ளாமல் அங்கும் இங்கும் போய்க் கொண்டும் வந்துகொண்டும் இருந்தாள்.

திடீர் என்று வாசலில் வந்து, 'அப்பா' என்றாள்.

"என்ன அம்மா" என்றனர் சொந்தத் தந்தை, வளர்ப்புத் தந்தை இருவரும். அவள் சும்மா நின்றாள்.

'சொல்லம்மா?"

"ஒன்றுமில்லை அப்பா! வேட்டி...!" முதலில் புரியவில்லை. பிறகு தந்தை கேட்டார், 'துரைக்கு எந்த வேட்டி?' என்று கேட்கிறாயா?" இரண்டு வேட்டி வாங்கி வந்திருக்கிறேன். ஒன்றை இன்று கொடு. நாளைக்கு இன்னொன்றைக் கொடுக்கலாம்!'

ஒரு குதி குதித்துக்கொண்டு உள்ளே போனாள்.

ரேழி உள்ளேதான் அவனுக்கென்று அறை ஒழித்து வைக்கப்பட்டிருந்தது. அதற்குள்ளே சென்று அடைந்து கொண்டாள். சுவரில் ஒரு பெரிய கண்ணாடி மாட்டப்பட்டிருந்தது. அதற்கெதிரே ஒரு மேஜையை இழுத்துப் போட்டாள். அதன் மேல் ஸ்நோ. பவுடர், சீப்பு. தலைக்குத் தடவும் எண்ணெய்ப் புட்டி எல்லாவற்றையும் வரிசையாக எடுத்து வைத்தாள். பிறகு ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டாள். நல்ல ஜரிகைக்கரை போட்ட குண்டஞ்சி வேட்டியைக் கையில் எடுத்தாள். தன்மேல் சாத்தி வைத்துப் பார்த்தாள். 'அப்பா பச்சைக்கரை வாங்கி வந்திருக்கிறாரே! அது நல்லாயிருக்குமா?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்,

அதற்குள் மற்றொரு கேள்வி எழுந்தது. வேட்டியை யார் அவருக்கு எடுத்துத் தருவார்கள்?

நான்?

ஐயோடா! முடியாது, முடியாது. முடியவே முடியாது. அவள் கற்பனை செய்து பார்த்தாள். அப்படியே நாற்காலியின் முதுகில் வேட்டியை மடித்தபடி போட்டுவிட்டு முகத்தை மூடிக் கொண்டாள்,

'அத்தான், நீங்களே எல்லாம் செய்து கொள்ளுங்கள்!'

"அத்தான் கோபமா!"

"அத்தான் நான் பட்டிக் காடுதானே! என் ஏற்பாடு பிடிக்கிறதா உங்களுக்கு" இப்படியாக அவள் தனக்குத்தானே பேசிக் கொண்டு கனவுலகத்தில், கற்பனை நகரில் திரிந்து கொண்டிருந்தாள். அதே சமயம் வாசலில் அடுத்த வீட்டுப் பையன் அலறிக் கொண்டு ஓடி வரும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஐயோ, ஐயோ, பாவி, பாவி! என்னடா இது! என்ற சத்தமும் ஓட்ட ஆரவாரமும் கேட்டது. வாசலில் வந்தாள் நாகரத்தினம். உள்ளே வந்த பையன் அக்கா! அண்ணனைப் பாம்பு கடித்து விட்டது! என்றான். ஒரே கூட்டமாகப் பெண்கள் அவர்கள் வீட்டு வாசலில் கூடி விட்டனர்.

சம்பந்திகள் இருவரும் முதலில் ஓடினர். எதிரே காலில் கட்டுடன் நொண்டி நொண்டித் தள்ளாடி வந்து கொண்டிருந்தான் துரைசாமி. மாமாவைக் கண்டவுடன் மாமா! பாம்பு! என்று சொன்னவன் கீழே விழுந்து விட்டான். தோளில் போட்டுக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்த அவர் அவனை ரேழி உள்ளே படுக்கையின்மேல் கிடத்தினர். எப்படிக் கடித்தது, ஏன்? என்று கேட்கவே நேரமில்லை. வண்டியைக் கட்டிக்கொண்டு ஓடினார் பெண்ணின் தந்தை. அருகே ஊரில் லோகல் பண்டு டாக்டர் இருந்தார். அவரை அழைக்கவே அவர் பறந்து சென்றார்.

நாகரத்தினம் தவித்துப்போய் விட்டாள். இந்த அறையை இதற்குத்தானா நான் ஜோடித்தேன். அத்தான், என்ன நினைத்திருக்கிறீர்கள்! என்று அவள் இதயத்தோடு இதயமாக அலறிக்கொண்டிருந்தாள். படுக்கையை விட்டு நகரவில்லை.

சுமார் ஒருமணி நேரம் கழித்து டாக்டர் வந்தார். அவர் பார்த்தவுடன் அவர்கள் எல்லோரையுமே பாராட்டாமல் அவரால் இருக்க முடியவில்லை.

"பையன் கெட்டிக்காரன், ஸார். மேலே கட்டி விட்டான் ஐயா. புண்ணையும் அகலப் படுத்தி விட்டான்" இஞ்செக்ஷனைக் கொடுத்தார். ரத்தத்தை வெளியேற்றினர். அசதியாக இருப்பான்; எழுந்திருந்து விடுவான். பயமில்லை. விஷம் அதிகமில்லை!' என்று சொல்லிவிட்டு அவர் போகும்போது மணி நான்கு. அன்று ஒருவரும் மத்தியானச் சோறு சாப்பிடவேயில்லை.

மாலை ஆறு மணிக்குக் கண் விழித்தான் துரைசாமி. அப்பொழுது அருகே இருந்தவள் நாகரத்தினம்தான். நீர் நிறைந்த கண்கள் இரண்டு தன் முகத்துக்கெதிரே குனிந்திருப்பதைப் பார்த்தான். தன் நிலை நினைவுக்கு வரச் சற்று நேரம் ஆயிற்று.

'நாகரத்தினம்!'

'அத்தான்!'

'அழாதே, நான் பிழைத்து விட்டேன்!'

நாகரத்தினம் திடீர் என்று தாலியை எடுத்து அவன் கையால் தொடவைத்துக் கண்ணில் ஒத்திக் கொண்டாள்.

பிறகு எல்லோரும் வந்தார்கள். எட்டு மணிக்கு அவன் எழுந்து உட்கார்ந்து விட்டான்.

எல்லோர் வயிற்றிலும் பால் வார்த்து விட்டான். நாகரத்தினத்தின் தாலி பாக்கியம் என்று சொல்லாதவர்கள் அந்த ஊரிலேயே இல்லை.

துரைசாமிக்கும் அது உண்மை என்றே பட்டது.

பாம்பு எப்படிக் கடித்தது என்று தெரிய வந்தபோது எல்லோருக்கும் ஆச்சரியமே ஏற்பட்டது. ஏன் என்றால் சாதாரணமாக அங்கே பாம்பு காணப்பட்டதேயில்லை.

அவன் பிள்ளையார் கோவில் வழியாகக் குளத்துக்குப் போக விரும்பினான். கோயில் வாசல் தாண்டியவுடன் உள்ளே வெளி ஒன்று இருக்கிறது. சுமார் ஐம்பது அடிகள் தாண்டியவுடன் முப்பது படிகள் கொண்ட படிக்கட்டு ஒன்று வரும். அவற்றின் மேல்

ஏறிச் சென்றால் ஒரு மண்டபம் வரும். மண்டபம் தாண்டியதும் பிள்ளையார் கோயில் அதைச் சுற்றி அப்படியே பின் புறமாகக் குளத்துக்குப் போக முடியும்,

படிகளில் ஏறிய துரைசாமி மேற்படியில் கற்களின் இடுக்கில் செடிகள் முளைத்திருப்பதைப் பார்த்தான். அதைக் குனிந்து அவன் பறிக்க முயன்ற அதே சமயம் படிக்கட்டின் கீழே வந்துகொண்டிருந்தபையன், அண்ணா! பாம்பு என்றான். அவன் திரும்பிப் பார்ப்பதற்குள் பாம்பு அவன் குதிகாலில் கடித்துவிட்டு தான் வெளியேறிவந்த பொந்துக்குள்ளேயே திரும்பி விட்டது.

இதைக் கேட்டவுடன் நாட்டாண்மைக்காரர் சொன்னார்; சரி இந்தப் படிக்கட்டைப் பொந்தடைத்துப்பழுது பார்த்துவிட வேண்டியது தான் என்றார். அவர் தானே அதைச் செய்துவிடுவதாகவும் வாக்களித்துவிட்டார். துரைசாமியின் மாமனார் உடனே குருக்களை அழைத்து நாளைக்கு நம்முடைய செலவில் அபிஷேகம் நடத்தி வைத்துவிடும் என்று சொல்லி உடனே ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களையும் கொடுத்துவிட்டார்.

"உங்கள் ஊர்ப் பிள்ளையார் பொல்லாதவர். என் மூலமாக, பாம்பைக் காட்டிப் பயமுறுத்தி தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டாரே" என்றான் துரைசாமி.

நாகரத்தினம் அவன் வாயைப் பொத்தி 'அப்படிச் சொல்லாதீர்கள். எனக்கு உங்களை உயிருடன் கொடுத்தாரே' என்றாள். அவள் கண்களில் நீர்த் துளிகள் தளும்பியது.

* * *

துரைசாமிக்கு அது எல்லாம் இப்பொழுது நினைவுக்கு வந்தது. பிறந்த நாளும் அதற்கு அடுத்த மகநாளும் அந்த வருஷம் சேர்ந்து வந்தன. அன்று முதல் துரைசாமி பிறந்த நாள் என்றால் மிகவும் முக்கியமான நாளாகிவிட்டது. அவள் கொண்டாடி வருகிறாள் பேதை. அவளை அழவிட்டோமே என்று துரைசாமி உள்ளம் அவனையே குறை கூறிற்று.

இழையக்குழைய, 'ரத்தினம்' என்று அழைத்தான்.

அவள் கோபத்தை மறந்து திரும்பினாள்.

"அத்தான்–எங்கேயாவது போகிறீர்களா?"

இல்லை சாப்பிட்டு விட்டே போகிறேன். இன்று எங்கேயும் போகவில்லை. மாலையில் சேர்ந்தே போகலாம். கோவிலுக்குப் போவோமா? சினிமாவுக்குப் போவோமா?

ரஜனி, சினிமா என்றாள்.

நாகரத்தினம் கோவில் என்றாள்.

துரைசாமி "முதல் ஷோ சினிமா; அதற்கு முதலில் கோவில்" என்றான்.

படம் பக்த ஹனுமான் என்றதனால் நாக ரத்தினமும் சரி என்றாள்,

தெய்வம் தொழுவாள்

எப்படியோ நேரம் தெரியாமலேயே ஓடிவிட்டது. நாகரத்தினம் குங்கு மப்பொட்டை இட்டுக்கொண்டு நிமிர்ந் தாள். கடிகாரத்தில் மணி ஐந்தரை ஆகி விட்டது. ரஜனியும் தயாராகிவிட்டாள். பெண்ணைப் பார்த்தாள் தாய்! ஏனோ அவ ளுக்குத் தன்னையுமறியாமல் குழப்பம் குமிழி யிடுவது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. பெண் தந்தையையும் பையன் தாயையும் ஜாடையில் பின்பற்றிப் பிறந்திருந்தனர். அப்படி இருந்தால் அது அதிர்ஷ்டம் என் பார்கள். எப்படியாவது நன்றாக இருந்தால் சரி! என்று நினைத்த நாகரத்தினம், அம்பிகே! என்று சொல்லிக்கொண்டாள்.

புது நிக்கரும் புதுச் சொக்காயும் பூண்டு அறைக்குள்ளிருந்து ஓடிவரும் அமுதலிங்கத் தைப் பார்த்த நாகரத்தினம் அவனைத் திருஷ்டி கழித்து உச்சியில் முத்தமிட்டாள். கண்ணு! அப்பா தயாராயிருக்கிறாரா பார் என்றாள்.

அவனும் மாடிப்படி ஏறினான். வாசலில் 'சர்' என்று கார் வந்து நின்றது,

நாகரத்தினக்குச் சொரக் என்றது.

"யார் காரடி, ரஜனி!"

"சத்தம் கேட்டால் தெரியவில்லையா?", தம் பியப்பா கார் தான்!

"அவரும் வந்திருக்கிறாரா?"

அவள் பயந்ததற்குக் காரணம் உண்டு. தம்பியப்பா ஒரு புத்தகக் கம்பெனிக்கு உரி மையாளர். செட்டி நாட்டுப் பணக்கார இளைஞர், எழுத்தாளர்களுக்குள்ளேயே அவர் துரைசாமிக்குத்தான் ஆயிரக் கணக் கில் கொடுத்ததாகச் சொல்வார்கள், நூற்றுக் கணக்குக்கு மேல் அவர் யாருக்குமே கொடுத் ததில்லையாம். அப்பொழுதும் அவருக்கு ஆயிரக் கணக்கில்தான் வரும்படி, இவருக்கு ஆயிரக் கணக்கில் கொடுக்கிறபோதும் அவருக்கு மிச்சம் ஆயிரக் கணக்கில் தான். அநேகமாக துரைசாமி எழுதும் கதைகளையும், நாவல்களையும் முதல் முதல் புத்தகமாக அவர்தான் வெளியிட்டு வந்தார். அவர் வந்தார் என்றால் துரைசாமி இன்னம் சில மணிகளுக்கு வீட்டில் இருக்க மாட்டார் என்பது உறுதி.

தம்பியப்பா வரும்போதே 'நாகரத்தின அண்ணி!' என்று கூப்பிட்டுக் கொண்டே வருவார். முதலில் எல்லாம் நாகரத்தினத் துக்கு அந்தக் கூப்பாடு இனிமையாய்த்தான் இருந்தது. நாளாக நாளாக அதுவே வெறுப் புக்கு உரியதாக மாறிவிட்டது. தம்பியப்பா நடத்தையிலும் அவளுக்கு நம்பிக்கையில் லாமல் போய்விடப் பல காரணங்கள் பரா பரியாகக் காதில் விழுந்து விட்டன.

ரஜனி, அவரைக் காணோம் அம்மா' என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தாள்.

அதற்குள் சிரித்துக் கொண்டே துரை சாமியும் தன் மகனை அழைத்துக்கொண்டு இறங்கி வந்தார். நாகரத்தினம் ஒரு கணம் தன் கணவன் முகத்தையும் உதட்டில் விளை யாடும் விஷமப் புன்னகையையும் பார்த் தாள். அவளுக்குப் பழைய ஞாபகங்கள் எல்லாம் வந்தன. இப்படிப் பார்த்து இன்று டன் ஐந்து ஆறு வருஷங்கள் ஆகி விட்டன. மீண்டும் வாழ்வு பழையபடி திரும்புமா? வெளிக்குப் பசுமையாகக் காண்பித்து உள்ளே உளுத்து நிற்கும் இந்த வாழ்க்கையில் இன்று தோன்றிய இந்தத் தளிர் வளருமா? இளையாகுமா? உள்ளே இருந்த பலவீனத்தை மறைய வைத்து வளம்பெற்று வளருமா? அல்லது நாளையே கருகிவிடுமா?

"ரத்தினம், கார் நமக்குத்தான் வந்திருக் கிறது"

நமக்கா? அவள் வாயைப் பிளந்தபடி சற்று நேரம் நின்று விட்டாள். மற்ற நேரமாயி ருந்தால், வாயை மூடு ஈ புகுந்து விடும்! என்றிருப்பார் துரைசாமி. பரிகாசம் செய் திருப்பார் இன்று அதெல்லாம் ஒன்றும் சொல்லவில்லை. நம்பிக்கையில்லையா உனக்கு வா போவோம்!

'கோவிலுக்கா, காரிலா?

'ஆமாம், ஆமாம். மணி ஐந்து. ஆறரை மணிவரை கோயில். நேராக அங்கிருந்து பக்த ஹனுமான் படம்... ஏன்? அப்படி யோசிக்கிறாய்?

இல்லை... கோவிலுக்கு...

நடந்து போவதுதான் நல்லது என்று சொல்லப் போகிறாய் இல்லையா? அதுதானே நாகரத்தினம். இப்படி வந்த ஆனந்தத்தை எந்தக் கொள்கைக்காகவும் தட்டி விடத் தயாராயில்லை. மனைவிக்கு இந்த இன்பந் தான் இன்பம், புனித இன்பம், சுவர்க்க இன்பம் "இல்லை இல்லை. ஒன்றும் சொல்லா தீர்கள் கிளம்புங்கள் இதோ வந்து விட்டேன்"

காரில் முன்னால் காரோட்டி பக்கத்தில் அமுதலிங்கம் அமர்ந்து கொண்டான். பின்

ஞல் தாய் தந்தை பெண் மூவரும் அமர்ந்து கொண்டனர்.

ஒருமுறை கணவனைப் பெருமையுடன் பார்த்தாள் நாகரத்தினம். அதே சமயம் அவரும் அவளைப் பார்த்தார். அகன்ற நெற்றியில் உள்ள வட்டமான குங்குமப் பொட்டும், நடுவே வகிடு எடுத்து இழைய வாரி முடித்திருந்த அவள் தலைமயிரும், தாலி, நகைகள், மூக்குப்பொட்டு, வயிரத்தோடுகள் இவைகள் அழகுதந்த அவள் முகமும், கழுத்தும் அவரை ஒரு நிமிஷம் பரவசப் படுத்தின.

ஒருகணம் எண்ணினர் உலகத்தில் எவ்வளவோ சக்திகளை நாம் பார்க்கிறோம். நாம் பாராமல் நமக்குத் தெரிய முடியாமல் எவ்வளவோ சக்திகள் இருக்க முடியும். இருக்கின்றன. அவைகளில் நல்ல சக்திகளும் இருக்கலாம், கெட்ட சக்திகளும் இருக்கலாம். காரண காரிய அமைப்பு என்கிற முறையில் சோதனைக்கும் தர்க்கத்துக்கும் உட்பட்டு வராது என்பதால் மட்டும் அவை இல்லை என்று சொல்ல முடியாது. இதோ நான் இவ்வளவு பெருமையுடன் வாழ்வதற்கு இவள் களங்கமற்ற கணவன்பக்தி ஏன் காரணமாக இருக்கக்கூடாது? என் திறமையைவிட அவள் தெய்வபக்தியின் ஆற்றலே பெரிதாயிருக்கலாமல்லவா?

அவர் அவள் காதருகில் பறந்து வந்திருந்த ஒரு தலைமயிர்க் கற்றையை எடுத்து அவள் காதுக்கு மேல் மயிர்க் குழலுக்குள் சொருகினர். அவள் இடது கையால் தடுத்தாள். அவர் அவள் காதுக்குள் சொன்னர்.

“காதண்டையிலுள்ள மயிர் பறந்தால்தான் அழகு என்று நினைத்தேன். அப்படியும் எழுதுகிறேன், ஆனல் இன்று தெரிந்து கொள்கிறேன். அமுங்கிப் படிய வாரப்பட்டிருந்தாலும் தலை அழகாகத்தான் இருக்கிறது?”

அவள் பதிலே சொல்லவில்லை, வேண்டும் என்றும் சொல்லவில்லை. ‘வேண்டாம், போதுமே’ என்றும் சொல்லவில்லை.

நல்ல அகல ஜரிகைக் கரை போட்ட அவள் புடவைத் தலைப்பு அவர் துடைமேல் விழுந்திருந்தது. அதை எடுத்து அவள்மேல் போர்த்தியவாறே அவர் ‘இது எப்பொழுது வாங்கினது?’ என்று கேட்டார்.

நாகரத்தினம் காரோட்டியைக் கவனித்தாள். அவன் கல்லுப் பிள்ளையார் மாதிரித் தன் வேலையைப்பார்த்துக்கொண்டிருந்தான், காரோட்டிகள் இம்மாதிரி ரகசியங்களுக்கெல்லாம் பழக்கப்பட்டவர்கள். அதுவும் தம்பியப்பாவின் காரோட்டிக்கு இது மிகவும் பழகிப்போன அனுபவம். அவனுக்குக் கூட துரைசாமியின் அன்புப் பேச்சுப் பிடித்திருந்தது. கணவன் — மனைவி பேச்சல்லவா! அதன் புனிதத் தன்மை மாசுபடாததாயிற்றே!

அவள் பதில் சொல்லாமலேயே கேட்டாள். “அர்ச்சனைக்கு சாமான்?”

“வாங்குவோம். கோவில் வாசலிலேயே” என்ருன் காரோட்டி.

“ஆமாம் ரத்தினம்—அர்ச்சனை யார் பேருக்கு?”

“ஏன் உங்கள் பேருக்குத்தான்!”

“என் பேருக்கா, உண்மைப் பேருக்கா?...”

“புனை பெயருக்கா!” என்ருன். அமுதலிங்கம் எல்லோரும் சிரித்தனர்.

எல்லோருடைய பேருக்குமே ஒவ்வொரு அரச்சனை என்ருர் துரைசாமி.

அன்று கோயிலில் நடந்ததைக் கண்டு திகைத்துவிட்டாள் நாகரத்தினம். கார் வாசலில் நின்றதுதான் தாமதம், வழுக்கைத் தலையும், பானைத் தொந்தியும் உடைய ஒருவர் தாமே ஓடிவந்தார். அவர் கோவிலின் பேஷ்காரர். கதவு திறப்பதற்கும் மேளக்காரர் டும் டும் என்று தவுலைத் தட்டுவதற்கும் நேரம் சரியாக இருந்தது. நாயனக்காரர் பிப்பீ! என்று ஊத ஆரம்பித்துவிட்டார் ஓடிவந்த பட்டர் துரைசாமிக்குப் பரிவட்டத்தைக் கட்டினர். கழுத்திலே பெரிய மாலையைப் போட்டார்.

எல்லோரும் உள்ளே கர்ப்பக் கிரஹத்துக்குச் சென்றனர்.

அங்கே கோயிலின் தர்மகர்த்தாக்கள் இருவர் நின்றிருந்தனர். முக்கிய பட்டர் அர்ச்சனைக்குரிய சாதனங்களைத் தட்டில் ஏந்தித் தயாராக நின்றிருந்தார். மேளச் சத்தம் ஓய்ந்தவுடன் முக்கிய தருமகர்த்தாவும் கோவில் நிர்வாக அதிகாரியும் அவர்களை அம்மன் சந்நிதிக்கு மிக அருகே அழைத்துச் சென்றனர். அந்த ஊரில் அம்மனைத்தான் முதலில் தரிசிக்கிற வழக்கம்.

அம்மனுக்கு அன்று விசேஷ அலங்காரங்கள் நடந்திருந்தன. முத்துச் சொருக்கு அணிந்து அம்பாள் அரசர்க்கரசியாகத் திகழ்ந்தாள். வயிரப் பொட்டு, முத்து மூக்குத்தி, ரத்தினகண்டி, நீலக்கல் பதித்த பதக்கத்தை நடுவே கொண்ட கோமேதகம் வைரம் முதலியவை இழைத்த மாலைகள், இடையிலே பட்டாடை, காலிலே பாதசரம், கொலுசு, தண்டை, சிலம்பு இவற்றையெல்

லாம் பார்த்ததும் நாகரத்தினம் மெய்மறந்து விட்டாள்.

அவளும் கோவிலுக்கு வந்திருக்கிறாள். அவள் ஒரு முறையாவது இவ்வளவு அருகே வந்து இப்படி உள்ளம் குளிரத் தரிசித்த தில்லை.

அவள் வேண்டிக் கொண்டாள்.

"அம்பிகே! அவரை சுகமாகவை. என்னிடம் அவர் எப்படி நடந்து கொண்டாலும், உன்னிடம் எப்படி நடந்து கொண்டாலும் அவருடைய நன்மைக்குக் குந்தகம் வரக் கூடாது. இதுதான் அம்மா நான் உன்னைக் கேட்பது!" அவள் கண்களில் நீர் வந்தது, உடல் புளகமடைந்தது மெய் மறந்து நின்ற அவளை ஒரு கணம் துரைசாமி பார்த்தார். பட்டர் ஆயிரத்தெட்டுப் பெயர்களையும் ஒலிப்பிழையின்றி நல்ல இனிய உரத்த குரலில் சொல்லி அர்ச்சனை செய்தார். உண்மையில் ஸம்ஸ்கிருத ஒலிக்கு ஒரு அசாதாரண ஆற்றல் இருப்பதை அவர் உணர்ந்தார். நாயன்மார்கள், சிறந்த பக்தர்கள் எல்லோரும் பல்லாண்டுகளாக, பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக நின்று தரிசித்த இடம் அது. உள்ளம் இன்பத்தில் முழுக, உடல் மயிர் பொடித்து நிற்கத் தன்னை மறந்து நெக்குருகி நின்று ஆடிப்பாடி சுவர்க்க இன்பம் அனுபவித்த இடம். எண்ணங்கள் அழியாதவை, ஒலிக்கு நின்று இலங்கும் தன்மை உண்டு என்பது உண்மையானால், உயிருள்ள உடலின் படத்தை எழுதி உயிர்போன பிறகும் காப்பாற்றி வைக்க முடியுமானால், உடல் நீங்கிய ஒலியும் ஏன் உயிருடன் இருக்க முடியாது? அங்கே அந்த நாயன்மார்கள், பக்தர்கள், சாதுக்கள், பெரியோர்கள், அடியார்கள் எண்ணிய எண்ணங்கள், புனிதக் கூவல்கள், பவித்திரத் துதிகள், தந்நலமற்ற வேண்டுகோள்கள் எல்லாம் அங்கே சுற்றிக் கொண்டுதானே இருக்க வேண்டும். துரைசாமி ஒரு கணம் அவற்றை எல்லாம் உணர்ந்தார். மனிதத் தெய்வத்தின் எதிரே இருந்து அதன் உணர்ச்சிக்கே துதிபாடி நின்று வழக்கம் கொண்டிருந்த அவர் இன்று தெய்வத்தின் எதிரே மனிதனாக நின்றார் உணர்ச்சிகளுக்கும் உயிர்தரும் தத்துவத்தை ஒரு கணம் உணர முடிந்தது அவரால்.

மனைவியின் உணர்ச்சி ஆற்றலின் தூண்டுதலா, அர்ச்சனைச் சொற்களின் மந்திர ஆற்றலா? சந்நிதானத்தின் சூழ்நிலையா அல்லது அந்த இடத்தில் கண்ணுக்குத் தெரியாமல் காதுக்குக் கேட்காமல் சுற்றிச் சுழன்று கொண்டிருந்த ஒளிக்களின் மாயமா? தெரியாது.

அர்ச்சனை நின்றது. மாலை போட்டனர். மீண்டும் அடுத்த ஸ்வாமி ஸந்நிதியிலும் அப்படியே. வாசலில் எல்லோரும் வந்து அவரைக் கொண்டு வரும்போது மணி சரியாக ஆறேமுக்கால்.

அப்பொழுதே தன் நிலைக்கு வந்த ரத்தினம், வீட்டுக்கே போகலாம் என்றாள். பட்டர் கொடுத்த தேங்காய் பழம் முதலிய பிரசாதங்களைக் கையில் வாங்கிக் கொண்டே "வேண்டாம் அம்மா, சினிமாவுக்கே போவோம்! என்றான் அமுதம். துரைசாமிக்கே அவர்கள் எதிரில் சினிமாவுக்கே போவோம் என்று சொல்வது சங்கீதத்தில் அபஸ்வரம் சேருவது போல் இருக்குமோ என்று தோன்றிற்று.

'முதலில் வீட்டுக்கு விடு' என்று சொல்லி விட்டு அவர் கோயில் அதிகாரியிடம் விடை பெற்றுக் கொண்டார்.

குழந்தைகள் பேசவில்லை. அமுதம் மட்டும் பரிதாபமாகப் பார்த்தான் ரஜனி அம்மாவுடன் பழகியவள். பேசாமல் இருந்து விட்டாள். நாகரத்தினத்துக்கு அதில்தான் விருப்பம்.

ஆனால் கார் வீட்டுக்கு வந்தவுடன் எல்லோரும் காரோட்டி உள்பட அதிசயப் படும்படி துரைசாமி ஒரு உத்தரவு போட்டார்.

(தொடரும்)



பிற்பகல் நேரம்.

இடைகழித் திண்ணையில் சிந்தனையிலாழ்ந்திருந்த ராமபத்திரன் யோசனையிலிருந்து மீண்டவராக, "அடியே" என்று ஒருகுரல் கொடுத்தார்.

சானம்மாள் வந்து நின்றாள்.

படுத்திருந்தவர் எழுந்து உட்கார்ந்து இப்படி உட்கார். உன் கிட்டக் கொஞ்சம் பேசணும்," என்று அதிர்ந்த குரலில் அவர் ஆக்ஞாபித்ததும் சானம்மாள் கலவரத்துடன் "ஏன் என்ன சங்கதி?" என்று வினவினாள்.

"சங்கதி சொல்லத்தான் உன்னை உட்காரச் சொல்லுகிறேன்," பதிலுக்கு உறுமினார் ராமபத்திரன்.

கணவன் என்ன கேட்பாரோ என்ற பீதியுடன் திண்ணையில் அமர்ந்தாள் சானம்மாள்.

"உன் மாட்டுப்பெண் என்ன செய்கிறாள்?"

"கொல்லைப்பக்கம் இட்லிக்கு அரைக்கிறாள், ஏன்?

"சரி, அரைக்கட்டும், அவள் நம்மகத்துக்கு வந்து எத்தனை மாசமாச்சு?"

"ஆனி மாசம் வந்தாள், ஐப்பசி மாசம் இது. ஆனி ஒண்ணு. ஆடி இரண்டு.

"சரி நிறுத்து, ஐந்து மாசமாச்சு. இப்போ நான் கேட்கிற கேள்விக்குப் பளிச்சென்று பதில் சொல்லு. உன் பிள்ளையும், மாட்டுப் பெண்ணும் உலகத்தாரைப்போல சௌஜன்யமாக இருக்கிறார்களோ" சானம்மாள் திடுக்கிட்டு விழித்தாள்!

"என்னடி முழிக்கிறாய்? ஒருத்தருக்கொருத்தர் எதிர்ப்படும்போது, அவன் கிழக்கில் திரும்பிக் கொண்டு போனால் அவள் மேற்கில் திரும்பிக்கொண்டு போகிறாளே— நீ புக்ககம் வந்த புதிதில் இப்படித்தான் இருந்தோமா?

சானம்மாள் முகத்தில் கிலி படர்ந்தது.

இதென்ன அவதி! என்ற சங்கடத்துடன், "சொல்றதைப் புரியறாப்போல சொன்னால் என்ன?"

"ஓகோ, இன்னும் விளக்கமாகச் சொல்லணுமா?, சொல்லுகிறேன். நீ சாந்தியாகி குடித்தனத்துக்கு வந்தாய் பார்—,"

"ஆமாம்,"

"அப்பொழுதெல்லாம், குட்டி போட்ட பூனைமாதிரி எந்த சாக்கிட்டாவது நொடிக்கொருதரம் சமையலறைக்கு வருவேன். என் தங்கைகள் கேலி செய்வார்களே —தீர்த்தம் மன்னிகையால் கொடுத்தால்தான் அமிர்தமாக இருக்கும்னு-நினைவிருக்கிறதா-மறந்து போச்சாடி."

"நினைவில்லாமலென்ன. நீங்கள் கிணற்றங்கரைக்குக் குளிக்க வருகிற சமயம் பார்த்து நான் ஜலத்திற்கு வருவேன், அதிலொரு சந்தோஷம்-திருப்தி. அப்பவெல்லாம்...

"உண்டா, இல்லையா, அந்த மாதிரி மோகாவேசம் துளியாவது இருக்கிறதா உன்பிள்ளை மாட்டுப் பெண்ணுக்குள்ளே?"

நீங்கள் சொல்லித்தானே தெரிந்தது.?

"வீட்டில் இருந்துகொண்டு என்ன செய்கிறாய் நீ? சின்னம் சிறிசுகள் அதது மனசு

ஒத்து இருக்கிறதா? என்பதை நாம் கவனிக்க வேண்டாமோ? ஆனால் உன்னைச் சொல்லியும் குற்றமில்லை! உன் பெண்ணாக இருந்து புருஷனுடைய அரவணைப்பு இல்லாதிருந்தால், அது நீ பார்க்காமலே உன் கண்ணில் படும்.. இவள் ஊரான் பெற்ற பெண் தானே?"

"வீண்பழி சுமத்தி பாவத்தையேன் மூட்டை கட்டுகிறீர்கள். வயசுவந்த ஒரு குமரியும், குமரனும், கீரியும் பாம்புமாக இருப்பார்களா என்று நான் பார்த்தேன்? நீங்கள் சொல்வதே சரியென்று ஒப்பி உங்கள் கட்சியையே ஆதரிக்கிறேன். 'பெண்ணாயிருந்தால் நீ பார்க்காமல் அதுவாக உன் கண்ணில்படும்', என்கிறீர்கள். வாஸ்தவம்.

பிள்ளை மாட்டுப் பெண் பேசிப் புழங்குவதை நாம் கவனிக்கத் தொடங்கினால் "கிழவிக்கு என்ன அசூயை பார்! வாலிப வயதில் இவள் இருக்கவில்லையோ புருஷனுடன்... இப்பொழுது நம்மைக் கண்டு காய்கிறாளே—என்று நம்பிள்ளை சொல்லுவான்—மாட்டுப் பெண்ணிடம்" அவள் வரைக்கும்கூட போகவேண்டாம் நாம். பிள்ளையே போதும் தூற்ற! உண்டா, இல்லையா—நீங்கள் இப்போ பளிச்சென்று பதில் சொல்லுங்களேன் பார்ப்போம்.

கோபத்தை மறந்து இடிஇடியென்று சிரித்தார் ராமபத்திரன்.

"ஹோ! ரொம்ப மிரட்டறேளே என்னவோ? யார் கண்டார்கள் இவர்களுக்குள் உள்ள தூர்த்தரைத் தனமெல்லாம்? இப்பதானே தெரிகிறது! இனிமே கவனித்து கேட்கிறேன் அவளை.

"ஆமாம். கவனித்து ஆற அமர விவரமாகக் கேள். அவள் நேராகப் பதில் சொல்லாவிட்டால் நான் அவளைக் கேட்கிறேன். சிறிசுகள், நோய், நொடியா? கிழம், கட்டையா? அழகு, அந்தஸ்து இல்லையா? பரஸ்பரம் ஆசையில்லாமல்போக என்ன காரணம் என்பது தெரியணும். தெரிந்து தேகக் கோளாறு ஏதாவது இருந்தால் இப்பவே கவனிக்கவேண்டுமே."

"அது சரி, இந்த நிமிஷத்திலிருந்து வேவு பார்க்கவேண்டியது தான் அவர்களை..."

"எனக்கொரு சந்தேகம் சிலநாளாக. நம் இஷ்டத்துக்கு விரோதமாக படிப்பும் பாட்டும் இல்லாத ஒரு பட்டிக்காட்டு மிருகத்தை நம் கழுத்தில் கட்டிவிட்டார்களே என்ற குரோதத்தில் உன் பிள்ளை இப்படியிருக்கிறானோ என்று கூடத் தோன்றுகிறது."

"இச்—ஆமாம்னு! அந்தக் குறைதான் இருக்கணும்! அட அசட்டுப் பிள்ளையே! படிப்பும், பாட்டும் இல்லையே தவிர, என்ன பதவிசு, அடக்கம், சுறுசுறுப்பு, மனுஷியாளிடம் ஒட்டுதல் என்கிறேன்."

"ஒட்டுதல் இருக்கவேண்டிய இடத்தில் காணுமே! மற்றவரிடம் இருந்து என்ன பலன்?"

"அது இவ்வளவுநாள் வெளியில் தெரியவில்லையே. இனிமேல் அதை ஆராயணும்! நல்ல பிள்ளை இவன்! என்ன குறை அவளுக்கு, தெரியலையே எனக்கு?" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் சானம்மாள்; ஆத்திரத்துடன் விடுவிடென்று உள்ளே போனாள்.

2

அங்கே கரி அடுப்பை மூட்டி காபிக்கு ஜலம் வைத்திருந்தாள் கீதா.

மாட்டுப்பெண்ணின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள் சானம்மா!

அமைதியான தோற்றம். சாந்தம் குடிகொண்ட கண்கள். இனிய பேச்சு. அடங்கிய குரல், உள்ளத்து உணர்வைச் சற்றும் பிரதிபலித்துக் காட்டாத குளிர்ந்த, மலர்ந்த முகம்.

"அம்மா! காப்பியா, டீ போடட்டுமா?" என்று கேட்ட பதவிசு, இனிமையை உணர்ந்து 'அட' இப்படிப்பட்ட அமிர்த குணம் படைத்த பெண்ணை அசட்டை செய்கிறானா அந்தப் பாவி? என்று பெற்ற மகனை நினைத்துப் பொருமினாள் சானம்மாள்.

மாமியார் சட்டென்று பதில் சொல்லாததிலிருந்து திரும்பிப் பார்த்தாள் கீதா.

சானம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்! மெல்ல எழுந்து அருகில் வந்து "ஏனம்மா வருத்தப்படுகிறீர்கள்?" என்று பரிவுதோன்ற வினவியதும் சட்டெனத் தோன்றிய உணர்ச்சிப் பெருக்கில் கீதாவின் முகவாய் பற்றி, "கீதா, உன்னை ரொம்ப புத்திசாலின்னு நினைச்சேன்..."

"தப்பாக ஏதாவது செய்திருந்தால் தெரியாத்தனமாகச் செய்திருப்பேன். ஏனடி இப்படிச் செய்தாய் என்று என்னை அதட்டிக் கேட்க உங்களுக்கு பாத்தியமில்லையா அம்மா?" என்றாள் கீதா.

"கேட்கிறேன், உள்ளதைச் சொல்லுவையோ கீதா?"

"அதில் சந்தேகம்வேறு உங்களுக்கு?,"

"சொல்லு! துரை உன் கிட்ட பிரியமாக இருக்கிறுரு கீதா. வெட்கப்படாமல் சொல்லணும்."

குப்பென்று உடம்பிலுள்ள ரத்தம் முழுவதும் முகத்திற்கு பாய்ந்து விட்டதுபோலச் சிவந்தது கீதாவின் முகம். தரையைப் பார்த்துக்கொண்டு நின்ற கீதாவின் கண்கள் இரண்டொரு நீர்முத்துக்களை உதிர்த்தன.

உடனே, மறுவினுடியே-சிரித்துக்கொண்டு தலை நிமிர்ந்தாள் கீதா!" அம்மா! உள்ளதைக் கேட்கிறீர்கள். நானும் பொய் சொல்லாமல் சொல்வதானுல் அவருக்கு என்மீது... வெறுப்பும், வேண்டாமையும்தான் என்பது தெரிகிறது.

அதனுல் என்ன? எப்போதும் இருட்டாகவே இருக்குமா? வெளிச்சம் உண்டாகித் தீரணும். அதுவரையில் இப்படியே இருக்க வேண்டியதுதான்...

"எத்தனை நாளாக இப்படி இருக்கிறுன்?"

"எப்போதும்தான்!" என்று சொல்லும் போது உடல் குன்றியது; உள்ளம் வெதும்பியது கீதாவுக்கு!

"வந்த நாளிலிருந்தா?"

ஆமாம் என்பது போலத் தலையசைத்தாள் கீதா.

சானம்மாள் மேலே அதை எப்படிக் கேட்பது என்று திணறியதை உணர்ந்த கீதா

"அம்மா கேட்கலாமா கூடாதா என்று திக்கு முக்காடுகிறீர்களே! நானே சொல்லுகிறேன். வந்த தினத்தன்று நீங்கள் கொடுத்த பால் பழத்தோடு உள்ளே போனதும்,

"கீதா எனக்கு தாம்பத்ய வாழ்வில் துளிக் கூட விருப்பம் இல்லை. என் விருப்பத்துக்கு மாருக என்னை பலவந்தப்படுத்தி இந்த பாபத்துக்கு என்னை ஆளாக்கியிருக்கிருள். உன்னைக்கண்டு இரக்கப்படுகிறேன். பரிதாபப்படுகிறேன். வேறென்ன செய்ய முடியும்? உனக்கு இஷ்டமிருந்தால் வெளித் தாழ்வாரத்தில் படுத்துக்கொள். அறைக்கதவு திறந்திருக்கும்; ஒரு பயமும் கிடையாது. உனக்கு இஷ்டமில்லாவிட்டால் அம்மாவுடன் கீழேயே படுத்துக்கொள்ளலாம்" என்ருர் என்னை நிமிர்ந்துகூடப் பாராமல். அதைக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்துவிடவில்லை அம்மா! ஏனென்கிறீர்களா? பந்தலில் மாலை மாற்றிக்கொண்டோம் பாருங்கள் அப்பவே, அவர் முகத்தில், கண்களில் நான் இதைப் பார்த்துவிட்டேன்.

எதிர்பார்த்த செய்தியைத்தானே சொன்ஞர்? பதிலும் என்னிடம் தயாராக இருந்தது சொல்லிவிட்டேன். 'நம் வேற்றுமை இப்பொழுதைக்கு மாடியோடு இருக்கட்டும் என்பது என் கருத்து. நீங்கள் கீழே போய்விடச் சொன்னல் நான் ஆட்சேபிக்கமாட்டேன்' என்றேன்.

"கீதா இந்த அறையில் உனக்கு இடமில்லையே தவிர, இந்த வீட்டில் உன் இஷ்டப்படி எங்கு வேண்டுமானலும் நீ படுக்கலாம். அது உன் இஷ்டம்" என்ருர்.

'சரி' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தேன். அன்றிலிருந்து இன்று வரையில் தாழ்வாரத்தில் தான் படுக்கிறேன்' என்ருள் கீதா, திடமான குரலில்.

"அப்படியா சொன்னன்? வரட்டும் அவன் இன்றைக்கு" என்று கறுவினள் சானம்மாள் சீற்றத்துடன்.

கீதா பதறிப்போய் "அம்மா! உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டம்மா? இப்படியே விட்டுவிடுங்கள். அவர் மனம் தானுகக் கனிகிறபோது கனியட்டும். இருக்கிற அமைதிக்கும் ஆபத்து வந்துவிடும்!" என்ருள் கசிந்துருகிய குரலில்.

சானம்மாள் உள்ளம் பதறியது. ஆத்திரம் பொங்கியவளாக அம்மாவுக்குப் பிடித்திருந்தது பெண்ணை; பண்ணிக்கொள்ளடா என்று சொன்னேன், வாஸ்தவம். 'நீ மாட்டேன்' என்று இன்று இருக்கிற மாதிரி அன்று தைரியமாக மறுப்பதுதானே? தாலியை உன் கழுத்தில் கட்டியது அவனு, நானு? எப்போ மனம் பொருந்தித் தாலி கட்டினுயோ அப்போ அவளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதானே? அப்போது புத்தி எங்கே போச்சாம்?

வயிற்றுக்குச் சோறு தின்கிருனு? இல்லை, வைக்கோல் தின்கிருனு என்பது தெரியணும் எனக்கு இப்போ. நெஞ்சிலே ஈரமில்லாத இப்படிப்பட்ட கிராதகனுக்கா இந்த வயிற்றில் பத்து மாதம் இடம் கொடுத்து பெற்று வளர்த்தேன்?

பெண் பாவம் பொல்லாதது என்கிற பயம் லவலேசமும் இல்லாமல், இவன் அறிவு அத்துவானமாகப் போகவா பதினயிர ரூபாயைச் செலவு செய்து படிக்க வைத்தேன்? அடதெய்வமே!, என்று அழுகையும் ஆத்திரமுமாக வெறி பிடித்தவள் போல அடித்தொண்டையில் பிளிறினள் சானம்மாள்.

கீதா வெலவெலத்துப் போனள்!

கைகால் பதற, உள்ளம் துடிக்க மாமியாரின் கைகளைப் பற்றிக்கொண்டு, "அம்மா என் முகத்துக்காகப் பாருங்கள் அம்மா! அவரை நீங்கள் ஒன்றுமே கேட்க வேண்டாம். கால மாறுதலில் அவருக்கே என்மீது கருணை பிறக்கும். என்வாழ்வு மலரும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன் அம்மா." என்று உருகி அழுதாள் கீதா. மூண்டெழுந்த வீராவேசத்தில் தன்னை மறந்திருந்த சானம்மாள், கீதாவின் இரங்கத்தக்க வேண்டுதலில் சட்டென தணிந்து வந்தாள்!

யோசனை புரண்டு கொடுத்தது!

"நிஜம்தான் கீதா! பொறுத்தார் பூமி ஆள்வார் என்பார்கள். இன்னும் கொஞ்ச காலம் பொறுத்துப் பார்ப்போம் கவலைப் படாதே கீதா. உன் பொறுமைக்கு உவமை கூற..."

ஏதேதோ கூறி இரங்கிக் கொண்டிருந்தாள் சானம்மாள். சோகமும், நிம்மதியும் கலந்த ஒரு விசித்திர வேதனையில் உணர் விழந்து பதுமையாக நின்ருள் கீதா!

(३)

சானம்மாள் உள்ளே வந்ததும் எழுந்து வெளியே சென்ற ராமபத்திரன், தமது மகனுடன் மற்றொரு நபரையும் அழைத்துக் கொண்டு வந்தார்!

புதிதாக யாரோ வந்திருக்கிருர்களே என்று எட்டிப் பார்த்தாள் சானம்மாள்.

SISTA'S-SG-75-TAM

சிறிதளவு

*டினோபால்

வெள்ளைத் துணிகளை — அதிவெண்மையாக்குகிறது

* டினோபால், ஜே. ஆர். கெய்கி. எஸ். ஏ. பாஸல். ஸ்விட்ஸர்லாந்து, அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்



தயாரிப்பவர்கள்: ஸுஹ்ரூட் கெய்கி பிரைவேட் லிமிடெட், வாடி. வாடி, பரோடா

ஏக விநியோகஸ்தர்கள்: ஸுஹ்ரூட் கெய்கி டிரேடிங் பிரைவேட் லிமிடெட், பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்-1

"சானம்மா! நம்மை செம்மையாக ஏமாற்றி விட்டார்கள் நம் சம்பந்திகள்!" என்று ஆரம்பித்தார் ராமபத்திரன்!

"யாரைச் சொல்லுகிறீர்கள்?" என்ற வியப்புரையுடன் சானம்மாள் அருகில் வந்தாள்!

"நம்ம பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணியிருக்கிறோமே-அந்த சம்பந்தியைத்தான்! உன் மாட்டுப்பெண் இருக்கிறாள் பார்! அவள் எட்டாவது தான் படித்திருக்கிறாள்—சாதாரணமாகத்தான் பாடுவாள் என்று தானே சொன்னார்கள்?"

"ஆமாம்."

"அத்தனையும் பொய்! அவள் எம். ஏ.! அதோடு நல்ல பாடகி! இதோ இவர்- நம் மாட்டுப் பெண்ணுக்கு ஒன்றுவிட்ட தமையன்! ஏ. ஐ. ஆரில் உத்யோகம். இவர் மூலமாக 'குட்டு' வெளிப்பட்டுவிட்டது?

சொல்லச் சொல்ல பிடிவாதமாக எம். ஏ. வரை படித்து, ரேடியோவிலும் பாடிக் கொண்டு பெயரும், புகழுமாக இருந்த குழந்தைக்கு அதுவும் இந்த நாளில் 'நான் நீ' என்று முந்திக்கொண்டு வரன் வரவேண்டியிருக்க, வந்து பார்த்த வரன்களெல்லாம் இவ்வளவு படித்த பெண் வேண்டாம் என்று போக ஆரம்பித்தார்களாம். ஒன்று இரண்டல்ல, ஏழெட்டு வரன்கள்!

இதனால் பாவம் அந்தக் குழந்தைக்கு தாயார் தகப்பனாரிடமிருந்து கிடைத்த ஆசீர்வாதம் கொஞ்ச நஞ்சமில்லையாம்! அப்புறம் கலியாணம் ஆனால் போதும் என்கிற தவிப்பில், உபாயமான படிப்பு—சுமாராகப் பாடுவாள் என்று உண்மையை மறைத்துச் சொல்லி அவர்கள் ஏமாற்றி ஏமாந்த ஏமாளிகள் நாம்!

ஆச்சா! இன்னும்கேள்! 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலி கட்டு' என்கிற கதையாக கலியாணம் ஆகவேண்டுமே என்று பொய் சொன்னார்கள். 'சரி அப்புறம் நம்மகத்துக்கு வந்த பிறகு—படிக்காத பெண்டாட்டியாக வந்து வாய்த்தாளே நமக்கு என்று புகையப்புகைய இருந்தானே புருஷன்; அவனிடம் நிஜத்தைச் சொல்லி அவன் மனசைக் குளிரச் செய்தாளோ அந்தப் பெண்?"

"ஹே! பொய் சொல்லி ஏமாற்றிய புளுகுணிகள் உறவே வேண்டாம் என்று நீங்கள் அறவே உறவை அறுத்துவிட்டால், அப்போ என்ன செய்கிறதாம் நாங்கள்?" என்று வெடிகுண்டாக வெடித்தார் ஏ. ஐ. ஆர். காரர்!

அங்கு எழுந்த சிரிப்பொலியில் கூடமே அதிர்ந்தது! சமையலறை நிலைப்படியில் நின்ற கீதாவின் காதுகளில் அமுததாரையெனப் பாய்ந்தது துரையின் சிரிப்பொலி!

சிரிப்பு அடங்கியபின் சாவதானமாக "ஒரு விதமாக, இருதரப்பாரும் சோதனையிலிருந்து வெற்றியோடு மீண்டு விட்டோம்! தீபாவளிக்காக நேரில் அழைத்துவிட்டு வரச்சொல்லி அனுப்பினார் சித்தப்பா. ஆபீசில் மாப்பிள்ளையைப் பார்த்தேன்! அரைசல் புரைசலாக - சங்கதி எட்டியது காதுக்கு! அதை மாப்பிள்ளையிடம் பக்குவமாகச் சொல்லி வந்த காரியம் ஜயமாகி தீபாவளிக்கு அழைக்கவும் அழைத்து விட்டேன்! நாங்கள் செய்த தவறுக்கு எங்களை க்ஷமித்து பெரிய மனது பண்ணி எல்லோரும் புறப்பட்டு வந்து தீபாவளிப் பண்டிகையைக் குதூகலமாகக் கொண்டாடணும்" என்று பணிவும் அன்புமாகக் கேட்டுக் கொண்டார் கீதாவின் தமையன்!

அதே சமயம் கீதாவின் கண்களும்--துரையின் கண்களும் சந்தித்து உறவாடிய நயன பாஷையை வருணிக்க வார்த்தையேது?

அண்ணாமலைத் தீபம்

எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

அண்ணாமலை தீபத்துக்கு இன்னும் பதினைந்து நாட்கள்கூட இல்லை. இப்போதே ஊரில் கூட்டம் கூட ஆரம்பித்து விட்டது.

கார்த்திகைத் திருநாளுக்குப் பத்து நாட்களுக்கு முன் இருந்தே உற்சவம். நாளுக்கு ஒரு வாகனம்; தேர்த்திருவிழா. ரிஷபவாகனத்தன்று அலங்காரங்களும், வாணவேடிக்கைகளும், விளக்கு ஒளியுமாக எள் போட்டால் கீழே விழமுடியாத கூட்டத்தில் சுவாமி புறப்பாடு.

கோவிலுக்கு முன் மண்டபத்தில் கடைகள் வந்து குவியத் தொடங்கிவிட்டன. படங்கள், சொப்புகள், சங்கு சோழிசாமான்கள் மணி மாலைகள், வண்ணக் குங்குமங்கள், ஒவ்வொன்றுக்கும் வகைவகையாக இருபுறமும் கடைகள். முன்வாயில் பெரிய கதவில் குழந்தைகள் உலுக்கும் மணியின் சப்தம். நடையில் பூக்கடையின் மணமும் ஈரச்சாரலும் கலந்து நிறைந்த காற்று.

மாலைநேரம் வெய்யில் சுருங்கிவிட்டது. திருவண்ணாமலையை விட்டு நான் வேலைக்காக வெளியூர் போய் இருபது ஆண்டுகளாகிவிட்டன. இப்போது மறுபடியும் சொந்த ஊருக்கு வரும் வாய்ப்பு எனக்குக்கிடைத்திருக்கிறது. சிறியதும் பெரியதுமாய் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. நினைவில் பிடிபடாமல் வழுக்கிக் கொண்டு ஓடும் அவைகளின் இடையே நெஞ்சில் நிலைத்து நிற்பது நண்பன் சுந்தரத்தின் ஞாபகம் தான்.

கோவில் பிரகாரத்தில் நாயனம் வாசிக்கும் ஒலி கேட்டது. நினைவில் சுந்தரத்தின் ஞாபகம் எழுந்தது. சிவகங்கைத்தீர்த்தத்தில் கால்களைக் கழுவிக்கொண்டு படியில் உட்கார்ந்தேன். செக்கர் வானத்தில் கரிய உருவத்தில் நெடிதுயர்ந்து நின்ற மலை. கார்த்திகைத் திருநாளன்று உச்சியில் பெரிய தொட்டியில் எண்ணை நிறைத்து துணி முடித்திரியிட்டுத் தீபம் ஏற்றுவார்கள்.

“வான்ஆகி, மண்ஆகி, வளிஆகி, ஒளிஆகி” என்று திருவாதவூரர் இறைவன் உருவத்தைப்பாடிய தலங்களில், திருவண்ணாமலை பெருமான் ஒளி வடிவமாய் நின்றதலம். மலையின் முடியில் ஒளிப்பிழம்பு விளங்குவது முப்பது மைல்களுக்கப்பால் போளூர் வரைக்கும் தெரியும். அந்த நாட்களில் தீபம் நான்கு மாதங்கள் வரைக்கும் நின்று எரியும்.

கார்த்திகை தீபத்தின் நினைவோடு சுந்தரத்தின் நினைவும் கலந்து வந்தது. சுந்தரம் என் பள்ளித்தோழன். அவன் தந்தை அருணாசலம் நாகசுரமும் கையுமாக ஊர்வலத்தில் வாசித்துக்கொண்டு வரும்போது நூற்றுக்கால் மண்டபத்துக்கு எதிரே இருந்த திறந்த மாடிக் கைப்பிடிச் சுவரில் நானும் அவனும் உட்கார்ந்து கொண்டு மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தது இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

கோவில் நாகசுரம் வழிவழியாக வந்த தொழில். அருணாசலம், பரம்பரையாக வந்த அந்த சொத்தை சுந்தரத்துக்கும் விட்டு வைக்கத் திர்மானித்திருந்தார், சிறுவயதி

லிருந்தே அவனும் நாயனம் எடுத்து வாசிப்பான். தாளம் தவருமல், சுருதி கோணுமல், இயல்பாக வாசிக்கும் ஞானம் அவனிடமும் இயற்கையாகவே இருந்தது.

தந்தையின் முதிர்ந்த அனுபவமும், வாசிப்பின் மெருகும் இன்னும் அவனுக்கு வரவில்லை. ஆனால் அதற்கு வேண்டிய திறமை அவனிடம் அந்த வயதிலேயே இருந்தது. தந்தையோடு கலியாணங்களில் வாசிப்பதற்குப் போவான். வீட்டில் அவருடன் உட்கார்ந்து வாசித்துப் பழகுவான்.

பள்ளிப்படிப்பை நிறுத்திய பிறகு அவனுடன் தொடர்ந்து பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆனாலும் சமயம் கிடைத்த போது அவர்கள் வீட்டுக்குப் போவேன். அப்படிப்போன சமயங்களில் அபூர்வமான இசையை அனுபவிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததும் உண்டு. பொழுது போக்காக இருவரும் நடந்து வருவோம், இதே கோயில் பிரகாரத்தில், சிவகங்கை தீர்த்தக் கரையில், உட்கார்ந்து இருவரும் பேசிக் கொண்டிருப்போம். குழந்தைகளும் பெரியவர்களுமாகப் பிரகாரத்தில் உட்கார்ந்து மனதுக்கு இனிய பண்ணில் திருவாசகம் பாடுவது எங்கள் காதில் விழும்.

"சீதப்புனல் ஆடி, சிற்றம்பலம்பாடி,
வேதப்பொருள்பாடி, அப்பொருள் ஆமாபாடி
சோதித்திறம்பாடி, சூழ்கொன்றைத்தார்பாடி,
ஆதித்திறம்பாடி, அந்தம் ஆமாபாடி."

என்ற அடிகள் காதில் விழும்போது இசையின் இனிமையில் தெய்வத்திருவுருவைக் காண்பேன். கலைகளில் இசை தெய்வீகமானது என்பது என் கருத்து. அதனால்தான் அதன் வசப்படும்போது மற்ற தீய எண்ணங்கள் மனத்தை அண்டுவதில்லை. இறைவனைத் துதிபாடும்போது ஏற்படும் நிறைவு அதனால் தான் மற்ற செயல்களில் கிடைப்பதில்லை. சுந்தரத்தின் கலையும் சாசுவதமாக, சிறப்பாக இருக்க ஈசுவரார்ப்பணமாக இருக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதை அவனிடம் நான் சொன்னபோது அவன் சொன்ன பதில் என்னைத் திடுக்கிட வைத்தது.

"நாதசுரம் வாசிப்பதில் எனக்கு ஒரு பிரமை இருப்பது என்னவோ உண்மை. ஆனால் தெய்வவழிபாட்டுக்கு அது ஒரு சாதனம் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை."

சுந்தரம் என்னைவிட வயதில் சிறிது மூத்தவன். வயது வந்த இளைஞன். அவனை மறுத்துப்பேச எனக்கு விருப்பமில்லை. பக்தியும் வழிபாடும் பகுத்தறிவுக்குப் புறம்பானது என்ற அவன் கொள்கை என்னைத் தடுமாறச் செய்தது. நேரில் அவனோடு வாதாட மனமில்லாமல் அவன் தந்தையிடம் சொல்லிவைத்தேன்.

நான் சொல்ல வந்ததை அவர் எதிர்பார்த்திருப்பார் போலத்தோன்றியது. நிதானமான குரலில் "தாவுலே குந்து தம்பி! நானும் கவனிச்சுக்கிட்டுதான் வாரேன். ஒன் கூடப் படிச்சப்போ இந்தப்பேச்சல்லாம் கெடையாது. இது இப்பத்துப் பழக்கம். கூட்டம் கூடிப் பேசுறானுகல்ல!" என்றார்.

நான் மேலே பேசவில்லை. அவர் அதை எளிதாக எடுத்துக்கொண்டது போலத்தான் எனக்குப்பட்டது. தலைமுறை தலைமுறையாகக் கோவிலில் நாகசுரம் வாசித்து வந்த அவர்கள்தொழில்? இறைவன் புகழைப் பண்ணில் இசைத்து வழிபட்டு வந்த அவர்கள் வழக்கம்?

நான் பயந்தது நடந்துவிட்டது. ஒரு மாதம் கழிந்திருக்கலாம். அன்று ஆனித்திருமஞ்சனம். முதல் நாளிலிருந்து பெரியவருக்குச் சளியும் சீதமுமாகப் பிடித்துக்கொண்டு மூச்சு வாங்கியது. எழுந்திருக்கவே முடியவில்லை. நானும் இருக்கும்போதுதான் மகனைக் கூப்பிட்டுச்சொன்னார். "கோவிலிலே இன்னைக்கு சாமி புறப்பாடு. மொதமொத அதுலே தனியா வாத்தியம் எடுத்து வாசி. நல்ல புள்ளையா நல்லா இருப்பே! நான் அப்பாலே வாரேன்!" என்றார். நான் சுந்தரத்தையே வெறித்துப்பார்த்தேன். அவன் முகத்தில் ஒரு அலட்சியபாவம். கேலிச்சிரிப்போடு அவன் எழுந்து வெளியே போய்விட்டான். அன்று வீடு திரும்பவே இல்லை.

பெரியவருக்குத் தலைகுனிவாகப் போனது மட்டுமில்லை; மகனின் நடத்தையும் போக்கும் அவர் மனதை முள்ளாக உறுத்தி இருக்க வேண்டும். தெய்வக் குற்றம் நெஞ்சில் சுமையாக நின்று வருத்தி இருக்கவேண்டும்.

அவரை அடிக்கடி வெளியே பார்க்க முடியவில்லை. கோவிலுக்கு மட்டும் வாசிக்கவரும் போது தென்படுவார். சுந்தரத்தைப்பற்றி யாராவது கேட்டால் "அப்படி எனக்கு ஒரு புள்ளை இருக்குதுங்களா?" என்று கேட்டு விட்டு நழுவிவிடுவார். பெற்ற பிள்ளையைச் சரிவர வளர்க்காமல் விட்டு விட்ட குறையும், ஏமாற்றமும் அந்தக்கம்மிய குரலில் நிறைந்து ஒலிக்கும்.

வேலை தேடி நான் வெளியூருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். அவரே எனக்குச்சொல்லி அனுப்பினர். அவர் வீட்டுக்குப் போனேன், நடையில் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். நான் அருகில் முக்காலியில் உட்கார்ந்தேன்.

"வேலைக்காக அசலூரு போறதாகச்சொன்னாங்களே?" என்று கேட்டார்.

சிரித்தபடி "ஆமாம், சுந்தரத்தைப்போல எனக்கு உள்ளூரில் ஜோலி இல்லை பாருங்கள்." என்றேன்.

"சும்மா கேலியாட்டம் பண்ணுதே தம்பி! சோதாப்பயல்! மல்லாக்கொட்டை வியாவா ரம் கூட இதெவிட எவ்வளவோ மேல்!"

"அப்படிச் சொல்லாதீங்க! சுந்தரம் பெரிய வித்துவானுக இருப்பான். நல்ல பெயரும் நிறைய செல்வமும் சம்பாதிப்பான். தைரிய மாக இருங்கள்.'' என்றேன்.

"எனக்கு நம்ப கப்படலே தம்பி! இனிமே அது வளைஞ்சு வராது. விடு! அதுக்காவத் தான் கூப்பிட் டேன். நீ கவனிச் சுக்க! எனக்கு இன்னும் எத்தனை நாள் கெடுவோ?''

அவர் என்னையே பார்த் தார். விழிகளில் நீர் நிறைந்து பள பளத்தது.

"பத்தாதத்துக்கு இது வேறே!'' என்று கட்டை

விரலை உதட்டில் வைத்துக் காட்டினர். நான் தலையைக் குனிந்துகொண்டேன். ராஜாஜி அவர்களின் மது விலக்குச்சட்டம் சேலத்திலிருந்து வட ஆற்காட்டுக்கும் விரி வடையாத நாள் அது.

"போய்வா! பாப்பம். அருணாசலேசுவரன் தான் அவன் கண்ணைத் தொறக்கணும். என்று வழியனுப்பினர்.

அதற்குப்பிறகு நான் அவரைப்பார்க்க வில்லை. அதுமட்டுமல்ல, சுந்தரத்தையும் அப்புறம் நான் பார்க்கவில்லை. இருபது ஆண்டுகளாக நான்தான் பிறந்த மண்ணையே மிதிக்க வில்லையே?

நினைவுக் குவியல்களை உதறிக்கொண்டு எழுந்தேன். பொழுது சாய்ந்து விட்டது. படியேறி மேலே வந்தபோது மதிலுக்கு அப் பால் ரமண மகரிஷி ஆசிரமத்துக்குச் செல் லும் சாலை வளைந்து வளைந்து செல்வது புலப் பட்டது. அங்கும் இப்போது கலையாத அமைதிதான்! இருபது ஆண்டுகளில் எத் தனை வித்தியாசம்?

கோவில்மணி முழங்கியது. படித்துறையை அடுத்த மண்டபத்திலிருந்து மெல்லமெல்லாக ஒலித்துக் கொண்டிருந்த நாகசுர இசை சட் டென்று நின்று விட்டது. மணியோசையைத் தவிர வேறு எந்த ஒலியுமே இல்லை.

எதிர்பாராதை ஒன்றைச் சந்திக்கப்போவது போன்ற விநோதமான ஆவல் என் மனத் துள் படர்ந்தது. எழுந்து சன்னிதியை நோக்கி நடந்தேன்.

மண்டபத்தைக் கடந்து சென்றவன் சட் டென்று நின்றேன். நாகசுரத்தை உறையில் போட்டுக்கொண்டு எழுந்த மனிதரின் மேல் என பார்வை விழுந்தது. கால்கள் வேரோடி நின்றன.

"சுந்தரம்!"

அவன் நான் நின்ற திசையை நோக்கித் திரும்பினன். நான் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். மேலே பேசமுடியாமல் துக்கம் என் தொண்டையை அடைத்தது.

"மணியா?"

"உகும்."

"எங்கேயப்பா? இப்படி ..இத்தனை நாளைக் கப்புறம் .."

நான் அவன் தோளைப்பிடித்துக் கொண் டேன். இருவரும் உட்கார்ந்தோம். உணர்ச்சி மிகுதியினல் இருவருக்குமே பேச முடியாமல் இருந்தது.

"அப்பா எங்கே?"

"அவரு காலம் முடிஞ்சு ரொம்ப வருஷ மாச்சே! உனக்குத்தெரியாதா!"

"ஊகும்."

விவரிக்க இயலாத வியாகூலம் என் மனதில் நிறைந்தது. "கேட்பதா,வேண்டாமா?" என்ற தயக்கத்தை என்னால் வெல்ல முடியவில்லை. இருந்தும் சமாளித்துக்கொண்டு கேட்டேன்.

"நீ... சுந்தரம்!...நீ ஏன் இப்படி ஆகி விட் டாய்? இப்படி எத்தனை நாளாய்?..."

அவன் விரல்கள் என் முதுகை வருடின. அவன் சிரிப்பில் ஆழம் காண முடியாத அமைதி குடி கொண்டிருந்ததைப் போலத் தோன்றியது.

"எனக்கு என்ன குறைச்சல் மணி?"

"ஒன்றும் இல்லை: அருணாசலேசுவரர் உன் கண்ணைத்திறக்கணும் என்று உன் அப்பா சொல்லிக்கொண்டு இருந்தார்; எனக்குத் தெரியும். நீ இப்படி ஆகி விடுவாய் என்று நான் நினைத்ததுகூட இல்லையே?"

அவன் என் கைகளைப் பிடித்துக்கொண் டான். அந்தப் பிடியில் அவன் புரையோடி நின்ற உணர்ச்சிகளின் துடிதுடிப்பை ஓரளவு நான் தெரிந்து கொள்ள முடிந்தது.

"நான் நல்லா இருக்கேன் மணி! இப்போத் தான் என்கண் திறந்திருக்கு. பெரியவர் சொன்னது, வேண்டிக்கொண்டது, பலிச்சுப் போச்சு!"

உனக்குத் தெரியும். நான் எப்படி இருந் தேன் என்று. அவர் பேச்சு அப்போது எனக்கு ஒரு பொருட்டில்லை. எனக்கு அவர் கொள்கைகளிலே நம்பிக்கை இல்லை; பிடிப் பும் இல்லை. வெளியே பார்வைக்குத் தென் படும் பொருள்களின் அழகில் மனசு மயங் கிப்போயிருந்த காலம் அது.

செத்துப்போவதற்கு முன்னல் அவர் என் மடியில் தலையை வச்சுக்கிட்டு விசித்து விசித்து அழுதார். என்னென்ன நெனைச் சாரோ தெரியாது. இயல்பாக இல்லாத நம் பிக்கையைத் தன்னலே தூண்டி வளர்க்க முடியாதுன்னு நெனைச்சாரோ என்னவோ? ஆனல் ஒரே ஒரு சத்தியம் மட்டும் கேட்டார். "கையடிச்சுக்கொடு! கள்ளு சாராயம் நீ கையாலே தொடப்படாது." என்றார். நான் மனம் நெகிழ்ந்து போனேன். தலை குனிவா இருந்தது. குறுகிப்போய் உட்கார்ந்திருந் தேன். அவருக்கப்புறம் என்னெப்பற்றி அத் தனை விசாரப்பட வேறு யார் இருக்கப் போறாங்க?

கையடிச்சுக்கொடுத்தேன். 'பொய் சத்தி யம் இல்லையப்பா இது. சாக்கிரதை! அண்ணா மலையப்பன் நெருப்பு. தவறிடக்கூடாது.' என்றார். அதுதான் அவர் கடைசிப்பேச்சு.

ஒரு வருஷம் ரொம்ப கட்டுப்பாடாய் இருந் தேன். அன்று நாயுடுமங்கலத்துலே ஒரு கலியாணம். நான் வாசிக்கப் போயிருந்தேன். நல்ல கூட்டம். தெரிஞ்சவங்க, பழகினவங்க கூடி இருந்தப்போ அப்பனுக்குக் கொடுத்த வாக்கு மறந்துபோச்சு. தவறிட்டேன்.

சாயங்காலம் ஜட்காவண்டி யிலே ஊருக்கு வந்தவங்க ளோடே நானும் வந்தேன். வேடிக்கை பார்க்க வந்த கூட் டம் அது. அன்றைக்கு பதினாறு கால் மண்டபத்துக்கு முன் னாலே வீதியிலே சொக்கப்பனை.

நாலு ஆள் உசரத்துக்குப் பனை ஓலையும் காய்ஞ்ச மூங்கிலு மாச் சேர்த்துக்கட்டி இருந்தது. சுற்றிலும் வேடிக்கை பார்க்க கூட்டம். எனக்கு சரியான நிலை இல்லை.

நெருப்பு படபடன்று எரிஞ் சுது. உசரமான தீக்கொழுந்து. நாலுபக்கமும் அதன் நாக்குகள். படார் படார்னு காஞ்ச ஓலை வெடித்தது. 'உய் உய்து' காற் றின் சீற்றம். ஓலை பிடுங்கப் பாய்ஞ்ச சிறு பசங்க, பெரிய வங்க, கூட்டத்திலே நானும் சேர்ந்து ஓடினேன். வெளையாட் டுக்காகத்தான். மனசில் நிலை யில்லாத கிருகிருப்பு. செய்கை புரிபடலை.

சடார்னு பொறிபறந்தது. "ஐயோ"ண்ணு மொகத்தை மூடிக்கிட்டு உட்கார்ந்தேன். அவ்வளவுதான் தெரியும்."

சுந்தரம் நிறுத்தினான். பழைய ஞாபகங்கள் அவன் நினைவில் குவிந்திருக்க வேண்டும். கார்த்தி கைக்குப் பதினைந்து நாட்கள் கூட இல்லை.

இருட்டின் திரை விழத்தொடங்கி விட்டது. மங்கும் ஒளியில் அவன் உருவம் எல்லைக்கோட் டில் அழிந்தும் அழியாமலும்தெரிந்தது.

"நான் சொன்னபடி எனக்கு இப்போது தான் கண் திறந்திருக்கிறது. இருட்டிலே போகிறவன் விளக்கைத் தேடுவது போல வெளியில் எல்லாம் இருட்டாகிப் போனப் புறம்தான் என்னால் மனசுக்குள் வெளிச் சத்தைத்தேட முடியுது. பக்தின்னும் நம்பிக் கையின்னும் சொல்லுவதெல்லாம் என்ன? மனசு கஷ்டப்பட்டு தடுமாறும்போது ஒரு துணையாய் சாதகமாய் ஒரு சக்தியை நம்பி அதன் மேலே பாரத்தைப் போட்டுட்டு இருக் கிறதுதானே? எனக்கு இப்போ அது புரிஞ் சிட்டது. ஊர்வலத்துக்கு முன்னால் வீதியிலே வாசிக்க முடியாதுன்னவன் நான். இப்போ எனக்கு அதுக்கு யோக்கியதை இல்லை. ஆனா லும் நெதம் கொஞ்ச நேரம் இங்கே வந்து வாசிச்சுட்டுப் போனாதான் என் மனசுக்கு இதமா இருக்குது."

வரப்போகும் கார்த்திகைத் திருநாளன்று ஊர் முழுதும் விளக்குவரிசை எல்லோருக்கும் பார்க்குமிடமெல்லாம் ஒளிமயமாகத் தெரி யும்; சுந்தரத்தைத் தவிர.

எனக்குக் குமுறிக்கொண்டு வந்தது. "ஜோதி மயமாய் ஆண்டவன் இருக்கும் இடத்திலே உனக்கு ஒளி கிடைக்காமல் போய்விட்டதே! கார்த்திகை தீபத்தில் ஊரெல்லாம் ஒளி வெள்ளமாகக் கிடக்கும் போது உன்னைமட்டும் இருள்சூழ்ந்து விட் டதே சுந்தரம்!" என்று மறுகினேன்.

அவன் சிரித்துக்கொண்டான்.

"ஆண்டவன் இருக்கும் இடம் நம்ம மனசு தான் மணி! அவரை வெளியே தேடவேண் டிய தாவா இல்லே. என் மனசிலே இப்போ ஒளி இருக்கு, அது எனக்குத்தெரியுது. அது போதும். வெளியே ஒரு நாளைக்குக் கார்த் திகை வெளிச்சம்; என்னைப் பொறுத்தமட் டும் என்னைக்குமே கார்த்திகைதான்!"

ஆடாத விழிகளிலிருந்து நீர் உடைப் பெடுத்துக் கொண்டது. பக்குவமடைந்த உள்ளத்தோடு பொருந்திப்போன உயிரின் ஊறலுக்கு வேறு ஏது அடையாளம்?

கோவில் விளக்குகள் ஒளிர்ந்தன. சுந்த ரத்தின் வாழ்க்கையிலும் ஒளி பிறந்து விட்டதைப் போலத்தான் எனக்குத் தோன் றியது. ★

காட்சி எங்கே?

ரா. வேங்கடசாமி

சென்ற இதழ் தொடர்ச்சி

காட்சி 10

[ஓட்டல் பின்னணி பாத்திரங்களின் ஓசை... சர்வர்களின் கூச்சல்... பிறகு எல்லாமே சற்று ஓய்கிறது]

லலிதா: (குரோதமாக) ஆரம்ப முதல் நானும் பார்க்கிறேன் நீங்கள் என்ன விஷயம் என்னிடம் பேச வந்தீர்கள் என்பதையே சொல்லாமல் என்னைப்பற்றியே கேள்விகள் கேட்டுக் கொண்டு இருக்கிறீர்களே... இது உங்களுக்கு நன்றாக இருக்கிறதா?

சங்க: (சிரித்துக்கொண்டு) சாப்பாடு முடிந்தது... இனி பேசுவோமே... சாப்பிட்ட பிறகு தான் நான் வந்த விஷயத்தைப் பற்றியே சொல்ல வேண்டும் என்றிருந்தேன்...

லலிதா: சரி...ஆரம்பியுங்கள்...நான் வீட்டுக்குத் திரும்ப வேண்டுமல்லவா?

சங்க: இதோ ஆரம்பித்துவிட்டேன்... திருவாளர் பரந்தாமன் இருக்கிறாரே அவர்தான்... உனது... இப்போதைய விரோதி...

லலிதா: ஆமாம் சொல்லுங்கள்... (அவசரமாக)

சங்க; அவருடைய பூர்வோத்திரத்தை யெல்லாம் விசாரித்துக்கொண்டு வந்திருக்கிறேன்... திடீரென முன்னுக்கு வந்தபேராம் அவர்... "பழிவாங்கு" என்னும் பெயருள்ள ஒரு புத்தகத்தை எழுதி இருக்கிறாராம்... அதற்குப் பிறகு சினிமாவில் வசனம் எழுத சான்ஸ் கிடைத்தவுடன் மடமட வென்று புகழேணியில் ஏறி விட்டாராம்... அவருக்கு ஒரு காதலி இருந்தாளாம்... அவளைத்தான் யாரென்று கண்டு பிடிக்க முடியவில்லை... சினிமா வட்டாரத்தில் யாருக்கும் அவளைப்பற்றித் தெரியவில்லை... வெளியூர் பெண் என்று மட்டும் தகவல்...! சினிமா நடிகை வாசவியின் சிநேகிதம் அவருக்கு சமீபத்தில் ஏற்பட்டது தானாம்... அதன் பயனாக இருவருக்கும் விரைவில் திருமணம் நடக்கப்போகிறதாம்... அவரிடம் உள்ள ஒரே ஒரு கெட்ட பழக்கம் குடி தான். அதற்கு பர்மிட் வைத்திருக்கிறார். அந்த மாஜிக் காதலியின் தகவல் எதுவுமே தெரியாததால்தான்... நான் நீ சொன்ன விஷயங்களை யெல்லாம் அவசியம் கவனித்துப்பார்க்க வேண்டியிருக்கிறது...

லலிதா: என் சந்தேகம்... இப்போது முழுக்க முழுக்க ஊர்ஜிதமாகி விட்டது. வாசவியை மணந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையினால்தான்... அவருடைய முதற்காதலியைத் தீர்த்து விட்டிருக்கிறார்.

சங்க: அதற்குப் போதிய சாட்சியங்கள் தான் இல்லை. அவர் இல்லாத போது மீண்டுமொரு தடவை அவர் குடியிருக்கும் வீட்டில் புகுந்து நன்றாகத் தேடியாகிவிட்டது. ஒரு சிறு தடயமாவது அகப்பட வேண்டுமே...

லலிதா; (பரபரப்புடன்) உங்களிடம் சொல்ல மறந்துவிட்டேன்... நீங்கள் என் வீட்டுக்கு வருவதற்கு சற்று முன்... பரந்தாமன் என்னைத்தேடிக் கொண்டு வந்திருந்தார்...

சங்க: (வியப்போடு) அடே... உம்... எதற்காக வந்தார்?

லலிதா: நான் வீணாக அவர் விவகாரத்தில் தலையிட்டு அலட்டிக் கொள்கிறேனாம்... அதனால் அவர் போகும் பாதையிலிருந்து விலகி இருக்க வேண்டுமாம்! இல்லையென்றால் இரண்டாவது கொலைக்கும் அவர் தயாராகி விடுவாராம்!

சங்க: (திடுக்கிட்டு) அப்படியேவா சொன்னார்?

லலிதா: ஆமாம் என்கிறேன்...

சங்க: சரி...சரி... இனி அவரை அவசியம் கண்காணிக்க வேண்டும்... எதற்கும் நீ மிகவும்

ஜாக்கிரதையாக இரு லலிதா... இப்போது தான் எனக்கு அவர் விவகாரம் புரிய ஆரம் பித்திருக்கிறது... சரி... வீட்டுக்குப்போ வோமா?

லலிதா: உம்...

(நாற்காலிகளின் இடம் மாறுதல் கார் புறப் படும் சப்தம்)

காட்சி 11

[டைப் மிஷின்கள் ஓசை]

கோவிந்தன்: அம்மா!

லலிதா: என்ன கோவிந்தா? இன்னும் 'பைல்கள்' டைப் ஆகவே இல்லையே...

கோவிந்தன்: நான் அதுக்கு வர்லே அம்மா... மானேஜர் உங்களே வரச்சொன்னூர்...

லலிதா: என்ன விஷயம் கோவிந்தா?

கோவிந்தன்: ஒரு போலீஸ்காரன் உங்களைத் தேடிகிட்டு வந்திருக்கான்... அவ்வளவுதான் எனக்குத் தெரியும்...

லலிதா: சரி நீ போ... நான் பின்னால் வருகிறேன்... (தனக்குள்) [எதற்காக போலீஸ் காரன் வந்திருப்பான்? ஏதாவது தடயம் கிடைத்து என்னை சாட்சிக்காக வரவழைத் திருப்பார்களா? அதற்கு சாயங்காலம் வரை பொறுத்திருக்கலாமே! இப்போது ஆபீஸ் நேரத்தில் வந்து "டிஸ்டர்ப்" செய்ய என்ன காரணம் இருக்கும்? ஏதோ முக்கியமான விஷயமாகத்தான் இருக்கவேண்டும். மானே ஜர் அனுமதி கொடுத்தால் போகலாம்]

(நாற்காலியை பின்னால் தள்ளும் சப்தம்...

டைப் சப்தம் நின்று விடுகிறது)

—கதவு கிரீச்சிடுகிறது—

மானேஜர்: வாருங்கள் மிஸ் லலிதா... இதோ வந்திருக்கும் கான்ஸ்டேபிள் 1003, உங்களைக் கையோடு அழைத்துப்போக காத்திருக்கிறார்... போலீஸ் சூப்ரெண்டு, கூடுமானல் உங்களுக்கு இரண்டு நாள் லீவ் கொடுத்தனுப்பச் சொல்லி இருக்கிறார்... என்ன காரணம் தெரியுமா?

லலிதா: மானேஜர் சார்... போலீஸ் ஸ்டேஷனில் வேலை இருக்கும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்... ஆனல் இரண்டு நாள் லீவ் எடுப்பதற்கு என்ன காரணம் இருக்க முடியும் என்றுதான் தெரியவில்லை...

மானேஜர்: (வியப்போடு) உங்களுக்கே தெரிய வில்லையா? சரி... லீவ் எடுத்துக்கொண்டு போய்தான் பாருங்கள்... முக்கியமான விஷயம் இல்லாமல், லீவ் எடுத்துக்கொண்டு வரச்சொல்லி இருக்கமாட்டார்... உங்கள் தாய்... தந்தைக்கு சொல்லி அனுப்பட்டுமா?

லலிதா: (சிரித்துக்கொண்டு) அதற்கெல்லாம் அவசியமில்லை சார்... கான்ஸ்டேபிளோடு போய் வருகிறேன்.

மானேஜர்: சரி... போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் வந்து, என்னிடம் எல்லாம் சொல்லுங் கள்... என்னவென்றே என்னல் யூகிக்க முடிய வில்லை...

லலிதா: சரி சார்... வருகிறேன்... போகலாமா 1003?

1003: காத்துக் கொண்டிருக்கிறேன்...

(போகிறார்கள்)

காட்சி 12

[கலவரமான இசை]

சப் இன்ஸ் சங்கரன்: லலிதா... சூப்ரெண்டு திடுதிப் பென்று ஸ்டேஷனில் வந்து உட்கார்ந்து கொண்டு உன்னை அழைத்துவரச் சொன்னூர்... அவர் அறையிலே, பரந்தாமன் நெடு நேரமாக உட்கார்ந்து பேசிக் கொண்டி ருக்கிறார்... என்ன பேசுகிறார் என்று நான் கேட்க முடியவில்லை... இன்ஸ்பெக்டர் வேறு உடன் இருக்கிறார்... உன் வரவுக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்... வா, உன்னை அங்கே அழைத்துப் போகிறேன்...

லலிதா: (தயக்கமாக) ஒரு சின்ன சந்தேகம்... லீவ் எதற்காக எடுக்கச் சொல்லி இருக்கிறார் கள்?

சங்க: எனக்கும் அதுதான் தெரிய வில்லை... தெரிந்தால் உன்னிடம் சொல்லி இருக்கமாட் டேனு? உள்ளே போனல் தெரிகிறது... எதற்கும் நீ பயப்படாமல் இரு... பரந்தாமன் ஏதோ குறும்பு செய்கிறார் என்று மட்டும் என்னல் யூகிக்க முடிகிறது.

லலிதா: (திகிலோடு) நீங்களே இப்படிச் சொல் வதால்தான் எனக்கு பயமாக இருக்கிறது...

[கான்ஸ்டேபிள் 1003 வருகிறான்]

1003: சார் மிஸ் லலிதாவை சூப்ரெண்டு அழைத்துக்கொண்டு வரச் சொல்கிறார்.

லலிதா: நீங்களும், வாருங்கள் சப் இன்ஸ் பெக்டர் சார்.

சங்க: இதோ...

காட்சி 13

[கலவரமான சூழ்நிலை ஏற்ப இசை லேசாக கேட்கிறது]

லலிதா: [மகிழ்ச்சியாக இருப்பதுபோல் காட்டிக்கொண்டு] குட் மானிங் மிஸ்டர் பரந் தாமன்...

பரந்: வாருங்கள் மிஸ் லலிதா... இதோ இருக் கும் போலீஸ் சூப்ரெண்டு மிஸ்டர் ராகவன்

உங்களிடம் ஏதோ பேச வேண்டும் என்று உங்களை அழைத்திருக்கிறார்.

லலிதா: (வெடுக்கென்று) நீங்கள் இருக்கும் போது அழைக்காமலா இருப்பார்... குட் மானிங் சார்.

சூப் ராகவன்: குட் மானிங் மிஸ் லலிதா... இப்படி உட்காருங்கள்... நீங்களும் உட்காருங்கள் மிஸ்டர் சங்கரன்...

சங்க: இல்லை சார்... நான் நிற்கிறேன்...

ராகவன்: மிஸ் லலிதா... உங்களை நான் இங்கு அழைத்த காரணம், உங்களுக்குத் தெரிந்திருக்காது என்றே நினைக்கிறேன்...

லலிதா: சொன்னால் தெரிந்து கொள்கிறேன்...

ராகவன்: இதோ இருக்கும் மிஸ்டர் பரந்தாமனை நீங்கள் அனாவசியமாக மனக்குழப்பத்திற்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறீர்களாம்... அவர் என்னிடம் "கம்ப்ளெண்டு" கொடுத்திருக்கிறார்.

லலிதா: (கேலியாக) அப்படிச் செய்வதாக எனக்குத் தெரியவில்லை! அவராக என்னைக் கண்டு பயப்படுகிறார் என்று நினைக்கிறேன்...

ராகவன்: பயப்படுகிறாரா... இல்லை பயமுறுத்தப்படுகிறார்?

லலிதா: நான் பெண்தான்... பேயல்ல அவரை பயமுறுத்துவதற்கு!

ராகவன்: அவர் ஒரு பெண்ணைக் கொன்றுவிட்டார், என்று நீங்கள் போலீசுக்குப் போன் செய்தீர்களாமே!

லலிதா: உண்மைதான்... கொடுத்தேன்!

ராகவன்: ஏன் மிஸ் லலிதா, உம்மால் தகுந்த சாட்சியங்களுடன் அதை நிரூபிக்க முடியவில்லையே.

லலிதா: சாட்சிகளைத் தேடிக்கொண்டு இருக்கிறேன்.

சங்க: அது உண்மைதான் சார்...

ராகவன்: தேடுங்கள்... பரந்தாமன் இல்லாத நேரத்தில் வீட்டுக்காரர் அருணாசலத்தின் உதவியோடு அவர் வீட்டுக்குள் புகுந்து, ஒரு ஜதைக் கம்மல்களை எடுத்துக்கொண்டு வந்தீர்கள் அல்லவா?

லலிதா: ஆம்!... அவை சாட்சியங்களாக அமையும் என்று நம்பினேன்.

ராகவன்: (கேலியாக) ஆனால் அவை உங்களையே திருடியதாக நினைக்க வைத்துவிட்டன...

லலிதா: அதற்கு என் மீது எப்படிக் குற்றம் சாட்ட முடியும்?

ராகவன்: (கண்டிப்பாக) நன்றாகச்சொல்லலாம்! ஆதாரமில்லாத விஷயத்திற்காக வீண் ஆடம்பரம் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

லலிதா: இல்லை... (சோர்வான குரல்)

ராகவன்: (கொஞ்சம் கோபமாக) உங்களால் மறுக்க முடியாது மிஸ் லலிதா... இதோ ஆங்கிலத்தில் டைப் செய்யப்பட்டுள்ள இக் கடிதத்தைப் பாருங்கள்... கடிதத்தில் உள்ள வார்த்தைகளின் தமிழ் அர்த்தம் என்ன? சொல்லுங்கள் பார்ப்போம்...

[காகிதத்தின் சலசலப்பு]

லலிதா: நீங்கள் செய்த கொலைக்கு, நான் இருக்கிறேன் கண்ணால் கண்ட சாட்சி... சட்டத்திலிருந்து தப்பினாலும்... என்னிடமிருந்து தப்பமுடியாது, என்று இருக்கிறது.

ராகவன்: கடிதத்தின் அடியில் யார் பெயர் டைப் செய்யப்பட்டிருக்கிறது, படித்துப் பாருங்கள்!

லலிதா: என் பெயர்தான்...

ராகவன்: இதோ பாருங்கள்... இந்த டைப் ரைட்டிங் மிஷினில்தான் அக்கடிதமும், விலாசமிட்ட கவரும் டைப் செய்யப்பட்டிருக்கிறது. காலைத்தபாலில் அவருக்கு இக்கடிதம் வந்ததாம். இந்த மிஷின் யாருடையது தெரியுமா?... நன்றாகப் பாருங்கள்!

லலிதா: (கலவரத்தோடு) ஏன் என்னுடைய வீட்டில் இருந்ததுதான்... இதை யார் இங்கு கொண்டு வந்தது?

ராகவன்: அதிர்ச்சியடையாதீர்கள் மிஸ் லலிதா! நாங்கள்தான் இதை உங்கள் வீட்டிலிருந்து எடுத்து வந்தோம்... டைப் செய்யப்பட்டதோ உங்கள் மிஷினில்... உங்கள் பெயரும் கீழே இருக்கிறது... கடிதமோ பரந்தாமனுக்கு எழுதப்பட்டிருக்கிறது... அவருக்கு எதிராக உள்ளவர், இப்போது நீங்கள்தானே? அதனால் இக் கடிதத்தை நீங்கள்தான் அவருக்கு நேற்றைய தபாலில் அனுப்பியிருக்கிறீர்கள் என்கிறேன்... நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

லலிதா: (திடுக்கிட்டபடி உரத்த குரலில்) பொய்! பொய்... இந்த மாதிரி வேலையைச் செய்ய நான் பைத்தியக்காரி அல்ல!

ராகவன்: யார் மெஷினில் அடிக்கப்பட்டு இருக்கிறது...

லலிதா: நான் இல்லாத நேரத்தில் அவர் புகுந்து அடித்திருக்கலாம்... கடிதத்தில் என் கையெழுத்து இல்லை!

ராகவன்: நீங்கள் சொல்லும் காரணங்கள் இந்த சூழ் நிலைக்கு கொஞ்சமும் பொருத்தமானதாக இல்லை மிஸ் லலிதா!

லலிதா: கடிதத்தை நான் அனுப்பவில்லை...

ராகவன்: நீங்கள் அனுப்பியதாக இல்லையென்றால் வேறு யார் அனுப்பியது? பரந்தாமனுக்கு விரோதிகள் இல்லையென்பது பிரசித்தம். அதனால் இப்போது உங்கள் ஸ்திர புத்தியை

நான் சந்தேகப்படும் அளவுக்கு நிலையைக் கொண்டுவந்து விட்டீர்கள்...

லலிதா: (அலறியபடி) யார் மீது வேண்டுமானாலும் நான் ஆணையிட்டுக் கூறுகிறேன்... இக்கடிதத்தை நான் டைப்செய்யவும் இல்லை... அவருக்குத் தபாலில் அனுப்பவும் இல்லை...

ராகவன்: (தணிவாக) அனுப்ப வில்லை என்று வைத்துக் கொண்டால்கூட, நீங்கள் மிஸ்டர் பரந்தாமனை ஒரு பெண்ணைக் கொலை செய்தவர் என்று குற்றஞ் சாட்டுவது உண்மைதானே?

லலிதா: (லேசாக) கொலையை நான் பார்த்ததால் குற்றஞ் சாட்டினேன்...

ராகவன்: அது உண்மையாக இருக்கும்போது கடித விஷயம் மட்டும் பொய்யாக இருக்குமா? அதனால் நீங்கள் வீணாக ஒரு மனிதரைக் கொலைகாரன் என்று பல வழிகளில் பயமுறுத்துவது ஊர்ஜிதமாகி விட்டது. உங்களுக்கும் அவருக்கும் விரோதம் எதுவும் கிடையாது. நீங்கள் பார்த்ததாக சொன்ன கொலைக்கு உங்களை விட்டால் வேறு தடயமும் கிடையாது... பின் ஏன் நீங்கள் இம்மாதிரி ஆபத்தான காரியமொன்றில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்றுதான் எனக்குப்புரிய வில்லை?

லலிதா: மீண்டும் மீண்டும் சொல்கிறேன்... கொலையை நான் நேரில் பார்த்தேன்...

ராகவன்: (கண்டிப்பாக) நடுவில் பேசாதீர்கள்... உங்கள் விஷயமாக நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். பரந்தாமன் மிகவும் பெருந்தன்மையுடன் உங்களுக்கு இவ்வளவு தூரம் இடம் கொடுத்திருக்கிறார்... என் கவனத்திற்கு வந்த பிறகு நானும் நன்றாக ஆராய்ந்தேன்... என்னால் அதற்குப்பிறகும் பேசாமல் இருக்க முடியவில்லை... நான் அவசரப்பட்டு ஒன்றும் செய்யவில்லை உங்களைப்பற்றி நன்றாக விசாரித்து விட்டுத்தான் இந்த நடவடிக்கை எடுக்கிறேன்... மேனாடுகளில்கூட சமீபத்தில் இப்படி இரண்டொரு வழக்குகள் தீர்க்கப் பட்டனவாம்!... உம்... என்ன முடிவுக்கு வந்திருக்கிறேன் என்று கேட்க விரும்புகிறீர்களா? உங்களை இரண்டு நாட்களுக்கு டாக்டரிடம் ஆப்ஸர்வேஷனுக்கு அனுப்பப்போகிறேன்...

லலிதா: (திடுக்கிட்டு...அழும் குரலில்) என்ன பரிசோதனைக்கா? எனக்கென்ன பைத்தியமென்று முடிவு கட்டி விட்டீர்களா? சார் எனக்கு பைத்தியம் இல்லை... ஒன்றுமில்லை சார்... இப்படி அநியாயமாக ஒரு முடிவுக்கும் வரவேண்டாம்... சார்...

சங்க: (பயந்தவாறு) சார்... என்ன இது விசித்திரமாக இருக்கிறதே!

ராகவன்: (கண்டிப்பாக) மிஸ்டர் சங்கரன் மைண்ட் யுவர் ஓன் பிசினெஸ்... எனக்கு எல்லாம் தெரியும்... மிஸ் லலிதாவை, டாக்டர் ஜோசப்பினிடம் அழைத்துப்போங்கள். நான் ஏற்கனவே அவரிடம் போனில் சொல்லி இருக்கிறேன்... இரண்டு நாளைக்கு ஆப்ஸர்வேஷன் நடக்கட்டும்.

லலிதா: (அழுதபடி) சார் வேண்டுமானால் நான் மிஸ்டர் பரந்தாமனை கொலைகாரன் என்று சொல்வதை நிறுத்திக் கொள்ளுகிறேன்... என்னைப் பைத்தியம் என்று மட்டும் முடிவு கட்டாதீர்கள்... அவர் மிகவும் புத்திசாலித்தனமாக என்னைப் பழிவாங்கி விட்டார் என்பதை ஒப்புக்கொண்டு அவரது திறமைக்கு தலை வணங்குகிறேன்...!

ராகவன்: நோ...நோ... இவ்வளவுக்குப் பிறகு நான் வேறெந்த முடிவுக்கும் வரத் தயாராக இல்லை... மிஸ்டர் சங்கரன்... மிஸ் லலிதாவை அழைத்துப் போங்கள்...

சங்க: சார்... இதில் எங்கோ சிறிய தவறு நடந்திருக்கிறது... சிறிது பொறுத்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்...

ராகவன்: (கோபத்தோடு) மிஸ்டர் சங்கரன்... நீங்கள் ஒரு சபார்டினேட்... நான் சொன்னதைச் செய்யுங்கள்... இல்லாவிடில் உம்மீதும் நடவடிக்கை எடுக்க நேரிடும்!

சங்க: சரி சார்...

பரந்தாமன்: நானும் போய் வருகிறேன் சார்... உங்களின் அன்புக்கும், எனக்காக உடனே நீங்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கும் மிகவும் நன்றி...

ராகவன்: அதெல்லாம் ஒன்றுமில்லை... போய் வாருங்கள் மிஸ்டர் பரந்தாமன்... இது என் கடமை! உங்கள் திருமணத்திற்கு அவசியம் எனக்கு அழைப்பு அனுப்புங்கள்...

பரந்தாமன்: கட்டாயம்... பருப்பு இல்லாமல் கல்யாணமா?

லலிதா: (அழுதபடி) சார்...சார்...

ராகவன்: மிஸ்டர் சங்கரன் இன்னுமா... இங்கு நிற்கிறீர்கள்?

(போகிறார்கள்)

காட்சி 14

[பரபரப்பான சூழ் நிலையை விளக்க இசை]

1003: குட் மானிங் சார்...

சங்க: என்னப்பா 1003? ஊருக்குப் போய் விட்டு வந்து விட்டாயா? இரண்டு நாள் லீவ் முடிந்து விட்டது போலிருக்குதே?

1003: முடிந்து விட்டது சார்! இப்போது ஒரு முக்கியமான விஷயமாகத்தான் உங்களிடம் வந்திருக்கிறேன்...

சங்க: (ஆவலுடன்) அதுதான் இவ்வளவு காலையில் வந்திருக்கிறாயா? சொல்... என்ன

1003: இங்கிருந்து பன்னிரெண்டாவது மைல் தூரத்தில் ஒரு சிறு பாலம் இருக்கிறதல்லவா?

சங்க: ஆமாம் சொல்லு... தண்ணீர் இல்லாத ஆற்றின் மீது கட்டப்பட்டிருக்கும் பாலந் தானே? அதற்கென்ன இப்போது?

1003: அப்பாலத்திற்கடியில் ஒரு இளம் பெண்ணின் பிணம் கிடக்கிறது என்று எனக்கு நேற்று இரவு பன்னிரெண்டு மணிக்குத் தகவல் கிடைத்து நேரில் போய்ப் பார்த்தேன்...

சங்க: நீட்டி முழக்கிக்கொண்டு இருக்காதே... (பரபரப்புடன்) சட்டென்று விஷயத்தைச் சொல்லிமுடி...

1003: இளம் பெண்ணின் பிரேதம்தான் சார்... அதிக உயரமில்லை... நல்ல சிகப்பான நிறம்... முகம் அடையாளமே தெரியாதபடி அலங்கோலமாகி விட்டிருக்கிறது. இறந்து நான் கைந்து நாள் இருக்கும் போலிருக்கிறது... நாற்றம் அருகில் போக முடியவில்லை... மேலே துணியோ... நகையோ... எதுவும் கிடையாது... பார்த்தால் பெரிய இடத்துப் பெண்போலத் தெரிகிறது... என் அருகில் இருந்த பெண் ஒருத்தி, இறந்து கிடப்பவள் சர்ப்பவதியாக இருக்கக்கூடும் என்று கூறினாள்...

சங்க: (ஆவல் நிறைந்த குரலில்) சரி...சரி... அதை என்ன செய்தாய்?

1003: அலட்சியமாக விட்டு விட்டு வருவேனா? ஒரு இடத்தில் பத்திரமாக எடுத்துவைத்து மூடிவிட்டு உங்களிடம் தகவல் கொடுக்க நேராக ஓடோடி வருகிறேன். சாட்சிக்கு, என்னை அழைத்துப்போன முன்சீப்பும் இருக்கிறார்...

சங்க: சரி...சரி... நீ இன்னும் இரண்டு கான்ஸ்டேபிள்களையும், ஏட்டையும் அழைத்துக் கொண்டு போய் அங்கேயே இரு... நான் இன்ஸ்பெக்டரையும், சூப்ரென்டையும் பார்த்துவிட்டு வருகிறேன்... எனக்கு ஒரு சின்ன வேலையும் பாக்கி இருக்கிறது...

1003: பார்த்துவிட்டு வாருங்கள்... நான் அதே இடத்தில் காத்துக் கொண்டிருக்கிறேன்...

(போகிறான்)

காட்சி 15

[கூச்சல்...சிரிப்பு...அழுகை...பைத்தியக்காரர்கள் இருக்குமிடம்... என்பதற்கு அறிகுறி...]

லலிதா: டாக்டர்... நான் இங்கு வந்து இரண்டு நாளாயிற்று... இன்னும் ஒரு நாள் இங்கிருந்தால் எனக்கு உண்மையாகவே பைத்தியம் பிடித்து விடும்...

டாக்டர் ஜோசப்: (சிரித்துக்கொண்டு) அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது மிஸ் லலிதா... என் கம்பௌண்டர் சொன்னது போல... நீங்கள் தொடர்ந்து இங்கிருந்தால்... உங்கள் அழகு எங்களையெல்லாம் பைத்தியமாக்கி விடும்... அதனால் உங்களை இன்று இங்கிருந்து அனுப்பிவிடுகிறேன்... போலீஸ் சூப்ரெண்டுக்குக்கூட ரிபோர்ட் நேற்றே அனுப்பி விட்டேன்...

லலிதா: நீங்கள் என்னைப் பரிசோதித்தீர்களே டாக்டர், என் மனம் குழம்பி பைத்தியம் பிடித்த நிலையிலா இருக்கிறது?

ஜோசப்: உங்களுக்கு யாரோ விரோதிகள் இருக்கிறார்கள் போலிருக்கிறது... அதனால் தான் இம்மாதிரி சங்கடங்கள்... உங்கள் மனநிலை நன்றாக இருக்கிறது...

லலிதா: 'நான் எந்த சூழ்நிலையில் இங்கு வந்தேன் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா?

ஜோசப்: சப்இன்ஸ்பெக்டர் சங்கர் சொன்னார்... தவறு செய்து விட்டவர்கள் எப்போதுமே, தமது பாதையின் குறுக்கே வருபவர்களை அகற்ற முயல்வது சகஜந்தானே மிஸ் லலிதா? பரந்தாமன் அப்படித்தான் செய்திருக்கிறார்! நானும், அவர் போக்குக்கு உடன் படும் டாக்டராக இருந்தால்... நீங்கள் இங்கிருந்து வெளியேறவே முடியாது!

லலிதா: உங்கள் ஒத்துழைப்புக்கு மிகவும் நன்றி டாக்டர்... சூப்ரெண்டுக்குத் தகவல் அனுப்பி விடுங்கள்..., நான் வீட்டுக்குப் போகிறேன்.

ஜோசப்: நீங்கள் போய் வாருங்கள்... மிஸ் லலிதா... ... யாரையாவது துணைக்கு அனுப்பட்டுமா?

லலிதா: யாரும் வேண்டாம்... நானே போய் விடுவேன்... வரட்டுமா?

ஜோசப்: செய்யுங்கள் மிஸ் லலிதா!

(கதவின் சப்தம்)

காட்சி 16

[கதவு தட்டப்படும் சப்தம்]

லலிதா: யாரது?

சங்க: நான்தான் லலிதா... கதவைத்திற! ஒரு முக்கியமான விஷயம்!

(கதவு திறக்கப்படுகிறது)

சங்க: டாக்டரின் வீட்டிற்குப் போயிருந்தேன் இப்போதுதான் போகிறாய்... என்றார்... அதற்குள் என்ன அவசரம்... நான் வந்து அழைத்து வரமாட்டேனா?... அவசரமான ஒரு காரியம் இருக்கிறது... அதனால் ஓடி வந்தேன்...

லலிதா: வந்து சில விநாடிகள்தான் ஆகின்றன... உங்கள் சூப்ரெண்டுக்குத் திருப்திதானே இப்போது?

சங்க: அவர் என்ன செய்வார் லலிதா... எல்லாம் திருவாளர் பரந்தாமனின் வேலை... சில நாட்கள் ஏமாற்றி விட்ட அவர்... இனி ஏமாற்ற முடியாது...

லலிதா: சரி... இப்போது நீங்கள் வந்த விஷயம் சொல்லுங்கள்?

சங்க: இதோ... இந்தக் கடிதத்தைப் பார்...

(அவள் கையில் கொடுக்கிறார்)

லலிதா: கடிதம் உங்களுக்கல்லவா வந்திருக்கிறது!

சங்க: ஆமாம்... படியேன்...

லலிதா: (உரக்கப் படிக்கிறாள்) அன்புள்ள சங்கரனுக்கு அம்மா ஆசிர்வாதம் செய்து எழுதியது. க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பதில். உன்னிடமிருந்து ஏன் கடிதத்தையே காணோம்? உடம்பிற்கு ஒன்றுமில்லையே? இல்லை வேலை அதிகமா? நிற்க, உன் அத்தை காமாட்சி நேற்று இங்கு வந்திருந்தாள்! விசேஷம் இல்லாமல் அவள் வரும் வழக்கம் கிடையாதே! அவளுடைய மகள் மாலதி... அவள்தான் உனக்கு மனைவியாகப் போகிறவள் வழக்கம்போல், ஊர் சுற்றக் கிளம்பியாயிற்றாம்... இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் வெளியில் தங்காதவள்... இத்தடவை ஐந்து தினங்களுக்கு மேலாகியும் திரும்பக் காணோமாம்! காமாட்சியிடம் கோபித்துக்கொண்டு போயிருக்கிறாளாம்!

அவளைப்பற்றி எந்த விதமான தகவலும் தெரியாததால், நான் உள்பட எல்லோரும் கவலையாக இருக்கிறோம். அவளைப்பற்றிய விபரமும்... அவள் ஏன் சென்னைக்கு அடிக்கடி வருகிறாள் என்பதையும் நீ விவரமாக எனக்கு எழுது!

அவள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும்*விலாசத்தில் தான் தங்குவாளாம்! அங்கு போய் விபரம் அறிந்து எனக்கு உடனே கடிதம் எழுது.

உன் அத்தை, இந்த ஆடி போய், ஆவணியில் திருமணம் வைத்துக் கொள்ள விருப்பப் படுவதால், மாலதியை பத்திரமாக ஊருக்குத் திருப்பி அனுப்பு.

* ராமதிலகம் இப்படிக்கு
வேடீஸ் ஹாஸ்டல் உன் அன்பான அம்மா"
வெங்கடசாமி நாயடு தெரு
சென்னை 13

லலிதா: (கோபமாக) உங்கள் முறைப் பெண்ணைத்தேடி அனுப்பும்படி, உங்கள் அம்மா எழுதி இருக்கும் கடிதத்தை என்னை எதற்காகப் படிக்கச் சொன்னீர்கள்?

சங்க: எல்லாம் காரணத்தோடுதான்... அந்தப் பெண் மாலதியை, கொடுத்திருக்கும் விலாசத்தில் போய் தேடிக்கண்டு பிடித்து, ஊருக்கு அனுப்பி விடுவது உன் வேலை... ஏனெனில் எனக்கு இப்போது அதைவிட பெரிய வேலை ஒன்று காத்திருக்கிறது. பன்னிரெண்டு மைல் தூரத்திற்கப்பால் கிடக்கும் ஒரு பிணத்தைப் பார்த்து விட்டு வர வேண்டும்!

லலிதா: அதை பார்த்து விட்டு மாலதியின் விவகாரத்தைக் கவனியுங்களேன்... உங்கள் குடும்ப விவகாரத்தில் தலையிட நான் யார்?

சங்க: எனக்கு வேண்டியவள் என்று வைத்துக் கொள்ளேன்... அவளைப்பற்றி உனக்கு பின்னால் நிறையச் சொல்கிறேன்... இப்போது எனக்காக, நான் சொன்ன வேலையைச் செய்தால், நான் மிகவும் நன்றி உள்ளவனாக இருப்பேன்...

லலிதா: ஆகட்டும்... அதோடு ஒரு கோரிக்கை... திருவாளர் பரந்தாமனுக்கு நாளைக்குத் திருமணமாம்... பத்திரிகையில் வந்திருக்கிறது. ...வீணாக ஒரு பெண்ணின் வாழ்க்கை நாசமாவதா?

சங்க: (அலட்சியமாக) அவர் எங்கே போய் விடப்போகிறார்... நானும் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன்... பார்ப்போம்... உம்... வந்து மாலதி என்னைப்பார்க்க விருப்பப் பட்டால் நான் அதற்கு இப்பொழுது விருப்பப் படவில்லை என்று சொல்லிவிடு!

லலிதா: சரி... சொல்லி விடுகிறேன்...

சங்க: மிக்க நன்றி லலிதா... நான் வருகிறேன் ஏற்கனவே நேரமாகி விட்டது...

காட்சி 17

[பெண்களின் இரைச்சல் கேட்கிறது]

ராமதிலகம்: நான்தான் ராமதிலகம்... லேடீஸ் ஹாஸ்டல் வார்டன்... நீங்கள் யார்?

லலிதா: என் பெயர் லலிதா. மாலதி என்ற பெண்ணைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறேன்... அவள் வீட்டிலிருந்து கடிதம் வந்திருக்கிறது...

ராம: மாலதியா... ஆமாம்... அவள் இங்கு வந்திருந்தாள்... ஆனால் வந்தவுடன் போய் விட்டாளே... நான்கைந்து தினங்கள் ஆகி யிருக்கும்...

லலிதா: எங்கு போகிறேன் என்றாள்?

ராம: என்னிடம் ஊருக்கென்றுதான் சொன்னாள். வேறு எங்கு போயிருப்பாள்?

லலிதா: (கவலையாக) ஊருக்கென்றால், இக் கடிதம் வந்தே இருக்காதே...

ராம: ஆச்சரியந்தான்! என்னமோ அம்மா... சமீபகாலத்தில் அவள் விஷயங்கள் எல்லாமே மர்மமாகவேதான் இருந்தன. என்னிடம் உயிருக்கு உயிராகப்பழகிக்கூட, என்னிடம் எல்லாவற்றையும் மறைத்து வந்திருக்கிறாள் போலிருக்கிறது. எங்கோ போனாள்... வந் தாள்... அடிக்கடி அழுதாள்... நான் என்ன கேட்டாலும் பதில் சொல்லாமல் ஏமாற்றிக் கொண்டே இருந்தாள். நான் அதற்கெல்லாம் அப்போது முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவளே சொல்லாத போது எனக்கு மட்டும் என்ன அக்கரை என்று இருந்து விட்டேன். இப்போதுதான் தெரிகிறது அவள் ஏதோ சிக்கலில் சிக்கிக் கொண்டிருக்கிறாள் என்று!

லலிதா: அவள் அடிக்கடி இங்கு வருவாளோ?

ராம: ஆமாம்! இரண்டில்... மூன்றில் வருவாள்... என்னோடுதான் தங்குவாள்... ஆனால் வரும்போதெல்லாம் கவலையோடுதான் இருப்பாள்...

லலிதா: வீட்டில் ஏதாவது ரகசி என்று சொன்னாளோ?

ராம: இல்லையே!

லலிதா: காதல் விவகாரமாக இருக்குமோ?

ராம: நான் அப்படித்தான் யூகித்தேன்... நாளடைவில் வெளியாகாமல் போய்விடுமா என்றுதான் இருந்து விட்டேன்... இல்லா விட்டால் எப்படியாவது தெரிந்து கொண்டி ருப்பேனே...

லலிதா: போகட்டும்... அவளது உடமைகள் இங்கு ஏதாவது இருக்கின்றனவா? அதி லிருந்து அவளைப்பற்றி ஏதாவது தெரிகிறதா என்று பார்ப்போம்...

ராம: அவளுடைய பெட்டி இங்கேதான் இருக் கிறது. அதில் அவளது துணி மணிகள்தான் இருக்கின்றன. வேண்டுமானால் பார்க் கிறீர்களா?

லலிதா: காட்டுங்கள்... பார்க்கலாம்...

(பெட்டியைத் திறக்கிறார்கள்)

ராம: பார்த்தீர்களா... எல்லாம் சேலைகளும் ரவிக்கைகளுந்தான்...

லலிதா: (வியப்பாக) அதோ... அந்தப் புத்த கத்தைக் கொடுங்கள் இப்படி!... அடே... இது எப்படி இங்கு வந்தது?... அய்யோ... அவளா இவள்? இப்புத்தகம் ஒரு பெரிய கதையை சொல்கிறதே எனக்கு... ராம திலகம்... இப்புத்தகத்தை மட்டும் நான் எடுத்துக் கொண்டு போகிறேன்... பிறகு நானே கொண்டு வந்து தந்து விடுகிறேன்... உங்கள் உதவிக்கு மிக்க நன்றி...

ராம: யாராவது வந்து கேட்டால்... (இழுக்கிறாள்)

லலிதா: போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சங்கர் அனுப்பி நான் வந்தேன் என்று சொல்லுங் கள... போதும்...

ராம: (அதிசயமாக) அப்படியா?... சரி... போய் வாருங்கள்... அவளைப்பற்றித் தகவல் தெரிந்தால் சொல்லுங்கள்...

லலிதா: கட்டாயம் சொல்லுகிறேன்... வரு கிறேன்.

(கதவின் சப்தம்)

ராம: போய் வாருங்கள்...

காட்சி 18

[சோக கீதம் இசைக்கிறது]

சூப்ரெண்டு ராகவன்: (வியப்புடன்) நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்... மிஸடர் சங்கர். என்னால் நம்ப முடிய வில்லையே...

சங்க: (வருத்தம் தோய்ந்த குரலில்) நம்பித் தான் சார் ஆக வேண்டும்... நாம் ஆஸ்பத் திரிக்கு அனுப்பிவிட்டு வந்த பிணம், என் அத்தை மகள் மாலதியினுடையதுதான்... அவளது வலதுகை பெருவிரலுக்கு மேல் உள்ள மச்சத்தை நான் நன்றாக அறிவேன்...

ராகவன்: (வியப்பாகவே) அவள் எப்படி அய்யா இங்கு வந்தாள்...?

சங்க: எனக்கும் காரணம் தெரியவில்லை... சென்னைக்கு வந்திருக்கிறாள்... தேடி அனுப்பு என்று இன்றுதான் எனக்கும் கடிதம் வந்தது... நான் கண்டுபிடிக்கும் போது... அவள் பிணமாக அல்லவா இருக்கிறாள்...

ராகவன்: ஏன் மிஸ்டர் சங்கர், அதிகமாக நகைகள் போட்டுக் கொண்டிருந்தாளோ?

சங்க: அதெல்லாம் ஒன்றுமில்லை சார்... கர்ப்ப வதி என்று சொன்னார்கள் அல்லவா? கள்ளக் காதல் விவகார மாகத்தான் இருக்கும்...

ராகவன்: (நம்பிக்கையோடு) ஓகோ... இருக்க லாம்... நீங்கள் போய் ஆகவேண்டியதைக் கவனித்து ஊருக்குத் தகவல் அனுப்புங்கள்... நானும் இன்ஸ்பெக்டரிடம் சொல்லி, அவள் எப்படிப் பிணமானாள் என்பதைக் கவனிக்கச் சொல்கிறேன்...

சங்க: (சந்தேகமாக) கொலைகாரன் யாரென்று என்னால் யூகிக்க முடிகிறதுசார்...ஆனால் அதை நிரூபிக்க போதுமான சாட்சியம்தான் இல்லை...

ராகவன்: (உறுதியாக) என்ன பேசுகிறீர்கள் சங்கர்... பிணம் இருக்கிறது... கொலைகாரனை யும் யூகிக்க முடிகிறது... முயற்சி செய்யுங் கள்... சாட்சி கிடைக்காமல் போகாது...

சங்க: முயற்சிக்கிறேன் சார்... வருகிறேன்...

காட்சி 19

[பயங்கரமான இசை... சூழ்நிலையை பரபரப்பாக்குகிறது]

லலிதா: (பயமடைந்த குரலில்) ஓ! மிஸ்டர் பரந்தாமனா? வாருங்கள்... வாருங்கள் உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்...

பரந்தாமன்: ஏது வரவேற்பு பலமாக இருக்கிறதே...எதற்காக என்னை எதிர்பார்த்தீர்கள்?

லலிதா: (ஏளனமாக) டாக்டர் ஜோசப், எனக்குப் பைத்தியம் இல்லை என்று சொல்லி விட்டார் தெரியுமா?... என்னைப் பைத்தியக்காரியாக்கி தப்பித்துக் கொள்ளலாம் என்ற உங்கள் ஆசையில் மண் விழுந்து விட்டது பார்த்தீர்களா? இதைச் சொல்லத்தான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்...

பரந்தாமன்: (வஞ்சகமாக) போகட்டும்... இனிமேலாவது என் வழிக்கு வந்து தொந்தரவு செய்யாமல் இருப்பீர்கள் அல்லவா?

லலிதா: (கம்பீரமாக) உங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டுமானால், உங்களை சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டுத்தான் நான் ஓய்வேன்...

பரந்தாமன்: (உயர்ந்தகுரலில்) என்ன...? இன்னமும் உன் திமிர் அடங்கவில்லையா...? உன்னையும் அந்தப்பெண் போன வழிக்கே அனுப்பி விடுகிறேன்... என்ன செய்வாய் பார்ப்போம்...

லலிதா: (ஏளனமாக) ஓ... யெஸ்... தாராளமாக அனுப்புங்கள்... ஒரு கொலையை கண்ணால் பார்த்து விட்ட நான், கொலையாளியை சிறைக்கு அனுப்பாமல் இருந்ததற்காக, எனக்கும் கொலையேதான் பரிசாகக் கிடைக்கட்டுமே...

பரந்தாமன்: (எகத்தாளமாக) இந்த மாதிரிப் பேச்சினால் எல்லாம் நான் ஏமாந்து விடமாட்டேன் பெண்ணே... உயிரை விடத் தயாராகிக் கொள்... இதோ எனது பெரிய கைக்குட்டை... (உதறுகிறான்) இது உன் கழுத்தில் விழுந்தால் நீ தீர்ந்தாய்! பிறகு இன்னொரு கொலைக்கும் சாட்சி இருக்காது... ஹ ஹ ஹா ... (பேய்ச்சிரிப்பு)

[நாற்காலியை பின்னுக்குத் தள்ளும் சப்தம்... பயங்கரமான பின்னணி இசை]

[இந்த நேரத்தில் கதவு "படால்" என்ற சப்தத்துடன் திறக்கப்படுகிறது]

சங்க: பொறுங்கள் மிஸ்டர் பரந்தாமன்... முதற் கொலைக்கே இன்னும் நீங்கள் பதில் சொல்லவில்லை... அதற்குள் இரண்டாவது கொலைக்கு தயாராகி விட்டீர்களே... கொண்டு வாருங்கள், அந்தக் கைக்குட்டையை... உங்களை இப்போது என் அத்தை மகள் மாலதியைக்கொலை செய்த குற்றத்திற்காக கைது செய்கிறேன்...

பரந்தாமன்: (திடுக்கிட்ட குரலில்) பொறுங்கள் சப் இன்ஸ்பெக்டர் என்னை அரெஸ்ட் செய்ய வாரண்ட் எங்கே?... நான் கொலை செய்தேன் என்பதற்கு சாட்சி எங்கே?

சங்க: அதற்கெல்லாம் போகாதீர்கள்! லலிதாவின் கண்களே சாட்சி... பிணமும் கிடைத்து விட்டது. இனி என்ன வேண்டும் உங்களுக்கு?

பரந்தாமன்: மாலதி என்ற பெண் என் காதலி அல்ல!

லலிதா: (சிரித்தபடி) அவ்வளவு சுலபத்தில் நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாது மிஸ்டர் பரந்தாமன்... அவள் உங்கள் காதலிதான்! இதோ இருக்கிறது சாட்சி... சப் இன்ஸ்பெக்டர் சார்... அதோ அந்த மேஜையின் மீதுள்ள "பழிவாங்கு" என்ற இவர் புத்தகத்தை எடுத்துப் பாருங்கள்..., அதற்குள் இவர் கைப்பட என்னவோ எழுதி இருக்கிறார்... (நடக்கும் சப்தம்)

சங்க: "என் அருமைக் காதலி மாலதிக்கு, பரந்தாமன் பரிவுடன் அளிக்கும் காணிக்கை— பரந்தாமன்"... அடேயப்பா... இந்த சாட்சி போதாதா? அப்பா 1003... அய்யாவின் கைகளில் விலங்கை மாட்டி ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போ... வருகிறேன்

பரந்தாமன்: சப் இன்ஸ்பெக்டர்! இது நியாயமல்ல...

லலிதா: அய்யா எழுத்தாளரே! நியாய அனியாயத்தைப்பற்றி தாங்கள் பேசாதீர்கள்...

பரந்தாமன்: உங்கள் எல்லோரையும் கோர்ட்டில் கவனித்துக் கொள்கிறேன்.

சங்க: (சிரித்துக் கொண்டே) எங்கே வேண்டுமானாலும் கவனித்துக் கொள்ளுங்கள்... இப்போது இந்த இடத்தை விட்டுப் போங்கள் போதும்...

(போகிறார்கள்)

லலிதா: (வருத்தமாக) சப் இன்ஸ்பெக்டர் சார்... உங்கள் எதிர்கால மனைவியை இழந்து வாடும் உங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்!

சங்க: (சிரித்தபடி) நன்றாகச் சொன்னாய் போ! நான் தான் தகுந்த முயற்சியின் பேரில் எதிர்கால மனைவியைக் கண்டுபிடித்து விட்டேனே! மாலதியின் மரணத்தை வெளிப்படுத்தியவளிடம் எனது எதிர்காலத்தை ஒப்படைத்து விட்டேன்.

லலிதா: (மகிழ்ச்சியுடன்) மிகவும் நன்றி. சாட்சிக்கு தக்க சன்மானம் கிடைத்து விட்டதே. போய் கேசை கவனித்துவிட்டு வாருங்கள். பிறகு பேசிக் கொள்ளலாம்.

சங்க: உத்தரவு... உத்தரவு... மனைவியாகப் போகும் மங்கை நல்லாளின் பேச்சைக் கேட்காமல் இருக்கமுடியுமா?... போய் வருகிறேன்.

(போகிறான்)

(திரை விழுகிறது)



விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

பெனிஸிலின் அபாயம்

அளவுக்கு மீறிப் பெனிஸிலினையும், சல்பா மருந்துகளையும் பயன்படுத்துவது தீங்கானது என்ற மேனாட்டு அறிஞரது கருத்துக்களை அவ்வப்போது இப்பகுதியில் குறிப்பிட்டிருக்கிறேன். பார்லிமெண்ட் அங்கத்தினர் ஒருவருக்கு பெனிஸிலினை ஊசி மூலம் செலுத்திய சிறிது நேரத்துக்குள் சாவு நேர்ந்த செய்தியை நீங்கள் படித்திருப்பீர்கள். இது மிக்க அருமையாக நேருவது என்றாலும் இந்த அபாயமும் இம்மருந்தினால் ஏற்படுவதொன்று. பெனிஸிலினால் ஏற்படும் வேறொரு அபாயத்தையும் அமெரிக்க மருத்துவக் கழகம் எடுத்துக் காட்டியிருக்கிறது. மிக அருமையாகத் தோன்றும் நோய் ஒன்றுண்டு. இது தோன்றினால் வாந்தி, கட்டுப்படுத்த முடியாத பேதி, கடுமையான வயிற்று நோவு முதலியன ஏற்படும். இது ஒரு வகைக் கிருமியினால் தோன்றுகிறது. சாதாரணமாக இக்கிருமி வயிற்றையோ, சிறுகுடலையோ அடைந்தால் அங்கே எப்போதும் இருந்துகொண்டு நமக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிர்கள் இக்கிருமியை அழித்துவிடுகின்றன. அதனால்தான் இது சாதாரணமாகத் தோன்றுவதில்லை. ஆனால் பெனிஸிலினையொத்த மருந்துகளை வேறு நோய்களில் சிகிச்சைக்காகப் பயன்படுத்தினால் இம்மருந்துகள் நோய்க் கிருமிகளுடன், நமக்கு நன்மை தரும் நுண்ணுயிர்களையும் அழித்து விடுகின்றன. இந்த நிலையில் நமது சிறு குடலை மேற்கூறிய தீய கிருமிகள் அடைந்தால் அவை தடையின்றி வளர்ந்து நோயை விளைவிக்கின்றன. இந்நோய்க்கு மருந்தில்லை. இது கண்டவர் பிழைப்பதும் இல்லை. பெனிஸிலின் மருந்துகள் சிகிச்சை செய்த பல நோயாளிகளுக்கு அமெரிக்க ஆஸ்பத்திரிகளில் இந்நோய் கண்டு அவர்கள் இறந்துவிட்டார்கள். "பெனிஸிலின் மருந்துகளைத் தாறுமாறாகப் பயன்படுத்தியதன் விளைவாகப் பல நோய்க் கிருமிகள் இவற்றை எதிர்த்துப் போராடும் வன்மை பெற்றுவிட்டன. இதன் விளைவாக இந்நோய்கள் வருங்காலத்தில் விளைவிக்கும் உயிர்ச்சேதம் கடந்த உலகப் போரின் விளைவாக நேர்ந்த சேதத்தைவிட அதிகமாக இருக்கலாம். சரிவரப் பயன்படுத்துவதால் இம் மருந்துகளால் நேரத்தக்க நன்மையை விடக் கண்டபடி பயன்படுத்துவதால் நேரும் தீமை பன்மடங்கு அதிகமாக இருக்கும் என்பதை ஒவ்வொரு மருத்துவரும் உணர வேண்டும்" என்று பிரபல ஆங்கில டாக்டர் ஒருவர் கூறுகிறார். நன்மையும், தீமையும் ஒன்றாகவே நேரும் என்பது இயற்கை நியதி போலும்.

பாசை அறுவடை

"குளத்திலே விளையும் பாசையை அறுவடை செய்வதற்கு மலிவான முறையொன்றைக் கண்டு பிடிப்பவருக்குப் பரிசு கொடுக்கிறோம்" என்று அமெரிக்க அர

சாங்கம் விளம்பரம் செய்யவிருக்கிறது! தானாகச் செழித்து வளரும் பாசையைச் செலவு அதிகமில்லாமல் அறுவடை செய்யும் முறையை இதுவரை எவரும் வகுக்க இயலவில்லை. இதை யாராவது செய்தால் உலகின் உணவுப் பிரச்னையைத் தீர்க்கப் பேருதவி புரிந்ததற்காக அவருக்கு விசேஷ நோபெல் பரிசொன்றை அளிக்கலாம்! மனிதருக்கும், கால்நடைகளுக்கும் ஏற்ற உணவுச் சத்து பாசையில் மலிந்துள்ளது. பாசையிலிருந்து விடமின் சத்துக்களை மலிவாகப் பெறலாம். இது நல்ல உரமாகப் பயன்படும். பல வேறு ரசாயனப்பொருள்களை இதிலிருந்து தயாரிக்கலாம். கழிவு நீர்த் தேக்கங்களில் உள்ள அழுக்குப் பொருள்களைத் தீங்கற்றவைகளாக மாற்றி, அந்நீரைப் பாகனத்துக்கும், பருகவும்கூடப் பயன்படுத்துவதற்கு இப்போதே பாசை வகைகளை அவற்றில் வளர்க்கிறார்கள். இந்தப் பாசையையும் பயன்படுத்த முடிந்தால் கழிவுநீர், வற்றாதசெல்வத்தைத் தரும் பொருளாக மாறிவிடும். சுமார் 35 மைல் நீளமுள்ள சதுரமான நீர்த் தேக்கத்தில் வளரும் பாசையிலிருந்து உலக மக்கள் அனைவர்க்கும் தேவையான புரதச் சத்தையும், விடமின் சத்துக்களையும் பெற்றுவிடலாம் என்று ஓர் அறிஞர் கணக்கிடுகிறார்.

வருங்கால வேளாண்மை

எஃகும், சிமெண்டும், எந்திரங்களும் செய்யப் பெரிய தொழிற்சாலைகளும், இவற்றை நிறுவி நடத்த வல்ல பெரிய கம்பெனிகளும் தேவையாகும். வருங்காலத்தில் வேளாண்மையும் மூலதனம் மிகுந்த பெரிய கம்பெனிகள் மட்டுமே நடத்த வல்ல பெருந் தொழிலாக இருக்கும் என்று அமெரிக்க அரசாங்க இலாகா அதிகாரியான மெர்டன் பார்ஸன்ஸ் என்பவர் கூறுகிறார். இப்போதே அந்நாட்டில் சிறு நிலச் சொந்தக்காரர்கள் அருமை. பண்ணைகள் சில நூறு ஏக்கர் பரப்புள்ளவை. 1975-ம் ஆண்டுக்குள் பண்ணைகளின் பரப்பு சில ஆயிரம் ஏக்கராவாக இருக்கும். பண்ணைகளின் எண்ணிக்கையும் வேளாண்மையில் ஈடுபட்டிருப்போரது எண்ணிக்கையும் குறையும். ஆனால் வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி மட்டும் இன்னும் அரைப்பங்கு கூடுதலாக வழியுண்டு. ஒவ்வொரு பண்ணையிலும் அதற்கே உரித்தான சில பொருள்கள் மட்டும் விளையும். இதில் அதிக பட்ச மகசூலைப் பெறுவதும், விளையும் பொருள்களை மிகப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதும் நிர்வாகிகளின் பெரு நோக்கங்களாக இருக்கும், விஞ்ஞான முடிவுகளைப் பயன்படுத்தியும், தொழில் முன்னேற்றத்தின் விளைவுகளைக்கொண்டும் இது சாத்தியமாகும். இன்னும் பதினைந்து ஆண்டுகளில் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களது எண்ணிக்கை சுமார் மூன்றில் ஒரு பங்கு குறையலாம். ஆனால் நபர் ஒருவரது சராசரி உற்பத்தி மட்டும் இரு மடங்காகும். வேளாண்மையில் முதலீடு செய்வதிலும், அதன் நிர்வாகத்திலும் புரட்சிகரமான மாறுதல்கள் நேரலாம். இவையனைத்தும் அவ்வறிஞர் கூறுபவை. இக்காலத்திலே தெரியும் போக்கைக்கொண்டு அவர் இவ்வளவையும் கூறுகிறார்.

கோழிக்குச் சாந்த மருந்து

உணர்ச்சிகள் வரம்பு மீறிப் போய் நோயாளிக்குத் தீங்கு நேரும் போலிருந்தால் 'சாந்த மருந்து' (Tranquiliser) என்ற வகை மருந்துகளில் ஒன்றைக் கொடுக்கிறார்கள். இது மன நெருக்கடியைக் குறைத்து நோயாளியை ஓரளவு சாந்தப்படுத்துகிறது. நம் நாட்டு மருந்துச் சரக்கான சர்ப்பகந்தித் தழையிலிருந்து எடுக்கும் மருந்தான 'ரெஸர்பீன்' என்னும் பொருள் ரத்த அழுத்தத்தைக் குறைக்கக் கைகண்டதாக விளங்குகிறது. அத்துடன் இதை மேற் கூறியவாறு சாந்த மருந்தாகவும் பயன்படுத்துகிறார்கள். மனிதர்களுக்கு மட்டு மல்லாது கோழிகளுக்குக் கூட இது நன்மை பயக்கும் என்று அண்மையில் நடந்த சோதனைகளில் தெளிவாகியது. கோழி உலகில்கூடக் கவலை, பயம், நெருக்கடி முதலிய பல தொல்லைகள் நேரலாம்! இத்தகைய நிலையில் அவற்றின் வாழ்க்கை முறை சீர்கெடுகிறது. இதனால் அவை சரியாக உணவு கொள்வதில்லை. மற்றக் கோழிகளுடன் சண்டை யிடுதல் முதலிய தொல்லைகளும் நேருகின்றன. இதனால் எல்லாம் அவை முட்டையிடுவது தடைபடுகிறது. ஆனால் அவற்றின் உணவோடு மிகக் குறைவான அளவு ரெஸர்பீன் மருந்தைக் கலந்துவிட்டால் அவை சாந்த மடைகின்றன. ஓசை, இடமாற்றம், இடநெருக்கடி, குளிர், உஷ்ணம் முதலிய தொல்லைகளை அவை திறமையுடன் சமாளிக்கின்றன. அவை இடும் முட்டைகளின் எண்ணிக்கையும், தரமும் கூடுகிறது. அவை நோய்களை எதிர்க்கும் திறமையையும் அதிகமாக்கு

தந்திகள் டெலிபோன் மூலம் துரிதமாக பட்டுவாடா செய்யப்படுகிறது

தந்திகளை விலாசதாரரின் டெலிபோன் நெம்பருக்கு* விலாசமிட்டு அனுப்புங்கள்.

பானர்ஜீ
**டெ. நெ. 31670*
புது டில்லி

தந்தி ஆபீசிற்கு இத் தந்தி கிடைத்தவுடன் தந்தியின் செய்தியை டெலிபோன்மூலம் அவருக்கு அறிவிக்கப்படும். தந்தி சேவகர் மூலம் பட்டுவாடா செய்ய ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கலாம்.

இது உங்களுக்கு மலிவானதும் கூட—டெ. நெ. 31670 என்பது ஒரு வார்த்தையாக கணக்கிடப்படும்.

இந்த வசதி உள்ளூர் டெலிபோன் சர்விஸ் உள்ள இடங்களில் கிடைக்கும்.

தந்திச் செய்தியின் ஒரு நகல் அதே தினம் முதல் தபாலில் பட்டுவாடாவில் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் தந்தியை டெலிபோன் மூலம் பெறுங்கள்

தந்தி அனுப்புபவர் 'உங்கள் டெலிபோன் நெம்பரை குறிப்பிடா விட்டாலும்' சில நகரங்களில் உங்கள் தந்திகளை நீங்கள் அடையலாம். தந்தி ஆபீசில் உங்கள் டெலிபோன் நெம்பரை ரிஜிஸ்டர் செய்துகொள்ளுங்கள். பிறகு உங்களுக்கான எல்லா தந்திகளும் டெலிபோன் மூலம் அறிவிக்கப்படும். தந்திச் செய்தியின் நகல் ஒன்றும் உடன் அனுப்பிவைக்கப்படும். ஆக்ரா, அஹமதாபாத், அலஹாபாத், அமிர்தசரஸ், பெங்களூர், பம்பாய், கல்கத்தா, கோயம்புத்தூர், டில்லி, இந்தூர், கான்பூர், சென்னை, நாகபுரி, புதுடில்லி, சேலம் மற்றும் செகந்திராபாத் முதலிய இடங்களில் இவ் வசதி கிடைக்கும்.

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் மற்றும் தந்தி இலாகா

DA-59/192

கிறது. உணவைக் காலால் கிளறி வீணுக்காமல் அவை அமைதியுடன் தீனி தின்கின்றன. இதனுல் உணவுச் சேதம் குறைகிறது.

செவ்வாய் கிரகத்தின் சாதனைகள்

செவ்வாய்க் கிரகத்தில் விரிவான கால்வாய்களை வெட்டி அங்கே வாழ்வோர் அங்கிருக்கும் நீரைத் திறமையுடன் பாசனத்துக்குப் பயன்படுத்துகிறுர்கள் என்று ஒரு காலத்தில் கூறி வந்தார்கள். அவ்வாறு இல்லை என்றும், அவை அங்கே நடக்கும் ஏதோவொரு இயற்கை விளைவு என்றும், அங்கே பாசையைப் போன்றதொரு எளிய தாவரத்தைத் தவிர வேறு எவ்வித உயிரும் இல்லையென்றும் இப்போது பொதுவாகக் கூறுகிறுர்கள். இப்போது ரஷ்ய விஞ்ஞானிகள் செவ்வாயைப் பற்றி வேறொரு புதுக் கருத்தை வெளியிட்டிருக்கிறுர்கள். செவ்வாய்க் கிரகம் பூமிக்கு முன்னரே தோன்றிவிட்டது என்றும், 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் அங்கே எல்லாவித உயிர்களும் வாழ ஏற்ற சூழ்நிலை இருந்தது என்றும், அப்போது நம்மைவிட அறிவுத்திறன் வாய்ந்த மனிதர்கள் அங்கே வாழ்ந்தார்கள் என்றும், அவர்கள் விஞ்ஞானத்திலும், தொழிலிலும் பெரு முன்னேற்றம் அடைந்திருந்தார்கள் என்றும் கூறுகிறுர்கள். நமது சந்திரனைப்போல் செவ்வாயை இரு சந்திரன்கள் சுற்றி வருகின்றன. ஆனுல் அவை மிகச் சிறியவை. அதனுல் அவை செயற்கைச் சந்திரன்கள் என்றும், செவ்வாய்க்கிரக வாசிகள் அவற்றை வானத்திலே அனுப்பிச் செவ்வாயைச் சுற்றிவரச் செய்தார்கள் என்றும் கூறுகிறுர்கள். கிரகத்தைச் சுற்றியிருந்த காற்றில் பெரும்பகுதி காலப் போக்கில் மறைந்துவிட்டது. அதனுல் அங்கே வாழ்ந்த உயிர்கள் மறைந்தன. இக்கருத்தில் பெரும்பகுதி ஊகமே எனினும் இது நமது கற்பனையைத் தூண்டும் வகையில் உள்ளதல்லவா? நம்மைவிடக் கற்பனையிலும் அறிவிலும் திறன் பெற்ற உயிர்கள் ஒரு காலத்தில் மற்றக் கிரகங்களில் இருக்கவில்லை என்று எப்படி நாம் கூற முடியும்?

காரைக்குடிக் கழகத்தின் வெற்றி

'கால்ஷியம் கார்பைடு' என்னும் பொருள் பலவேறு ரசாயனத் தொழில்களுக்கு மூலமாக இருப்பது. இதில் முதல்தரமானதை இதுவரை நாம் நம் நாட்டில் உற்பத்தி செய்ததில்லை. படிக வடிவான சுண்ணும்புக் கல்லிலிருந்து இதைத் தயாரிக்கும் முறை யொன்றைக் காரைக்குடி மின்சார ரசாயன ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்திருக்கிறது. சுண்ணும்புக் கல், கரி, பெட்ரோலியத்திலிருந்து கிடைக்கும் கல்கரி ஆகிய மூன்றையும் கலந்து மின்சார அடுப்புக்குள் வைத்து அப்பொருள்களின் வழியே மின்சார வில் (Arc) ஏற்படுமாறு செய்தால் உயர்தரக் கால்ஷியம் கார்பைடு கிடைக்கும். இப்பொருளிலிருந்து அஸிடிலீன் என்னும் வாயுவைப் பெறலாம். இது உலோகங்களைச் சூட்டில் பிணைக்க ஏராளமாகப் பயன்படுகிறது. பல மருந்துகள், வாசனைப் பொருள்கள், பிளாஸ்டிக்குகள் ஆகியவற்றை இதைக் கொண்டு தொடங்கித் தயாரிக்கலாம். ஆகையால் இவ்வாயு மிக முக்கியமான ரசாயன மூலப் பொருள்.

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு ரூ.	நயா பைசா	மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.	நயா பைசா
ஒரு வருஷம் (தீபாவளி மலர் உள்பட)	7	50	9	00
தனிப் பிரதி	0	50	0	62

விதிவழியே...

தெலுங்கு
மதுராந்தகம் இராஜாராம்
தமிழாக்கம்
இளம்பாரதி.



கல்லூரியின் சுற்றுச் சுவரைக் கடந்து சாலைக்கு வந்தான் சந்திரமௌளி. எங்கே செல்வதென்று அவனுக்குத் தடுமாற்றம். பட்டணத்தில் எங்கு போனாலும் நேரம் கழிந்து விடும். ஆனால் நேரத்தை எப்படிக் கழிப்பதென்பது சந்திரமௌளிக்கு ஒரு பிரச்சனையல்ல. ஏதாவதொரு புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்தானானால் மணிக்கணக்கில் நேரம் உருண்டுவிடும்.

ஆனால் அன்று அப்படிப் படிக்க முடியாதபடி வார்த்தைக்கு வார்த்தை இழுபறியாயிருந்தது. நினைவடுத்து நினைவாக பின்னல் வேலை நடந்து கொண்டிருந்தது. சிந்திக்கத் தெரிந்திருந்த சந்திரமௌளிக்கு ஒரு சில விஷயங்களில் மட்டும் சிந்தித்து வகைபடுத்தும் திறன் இல்லாதிருந்தது. எங்கே செல்ல வேண்டும்? எப்போது சாப்பிட வேண்டும்? எவ்வெப்போது எந்தெந்த ஆடைகளை உடுத்த வேண்டும்? எப்போது தூங்கவேண்டும்? — ஊஹூம் ... என்ன முனைந்தாலும் அவனுக்கு இத் திட்டங்கள் உருப்படியாவதில்லை. அவனோடு வேலைபார்த்த துணை விரிவுரையாளனைக்கூடக் கேட்டான் —“இதற்கு ஏதாவது விமோசனம் கிடைக்குமா?” என்று. கேட்டு இன்னும் அரை மணி நேரம்கூடக் கழியவில்லை. அந்த நண்பன் கூறிய மறுமொழி விசித்திரமாக நினைவில் சுழன்று கொண்டிருந்தது...

“அன்பா சந்திரமௌளி! அந்தரத்திலிருந்து கீழே இறக்கி ஒரு க்ஷணமாவது உன்னை நிலத்தில் நடக்கவைக்க ஒரே ஒருவழிதான்

தென்படுகிறது. காதலிசைத்து வாழாவிடினும் வீடமைத்து வாழ நீ ஒரு பெண்ணின் கழுத்தில் மூன்றுமுடிச்சுக்களைப் போட்டுத்தானாக வேண்டும். அவள் புத்திசாலியாக இருந்தால் உனக்காக அட்டவணை ஒன்று போட்டுத் தருவாள். அதன்படி நீ நடந்தால் அவள் உன்னை நிஜ உலகுக்கு அழைத்து வருவாள். ஆனால் நீயாக ஒருத்தியைத் தேடிப்பெற முடியுமா என்பதே என் சந்தேகம். நீயாக முயன்று உனக்கேற்றவளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் திறனும் உனக்கில்லை. இந்த நிலையில் என்ன செய்ய வேண்டுமென்று எனக்கெதுவும் தோன்றவில்லை. பத்திரிகை எதிலேனும் விளம்பரம் செய்தால் நன்றாயிருக்கும் "கலியுக ரிஷ்யசிருங்கரை வரித்துக்கொள்ள ஒரு அபரசாந்தா தேவி தேவை" என்று.

நண்பரின் இப் பேச்சை நினைத்தபொழுது உதட்டோரம் சற்றே நகையரும்பி அது மெல்ல மெல்ல கன்னம் வரைக்கும் பரவிற்று. வரப் போகின்றவளைப்பற்றி ஒரு கனவு மயக்கம். அவள் நளினமானவளாக இருந்தால் இந்த உலகையே மறக்கச் செய்வாள். அடங்காப் பிடாரியாக இருந்தாலோ தன் தனி உலகத்தையே பறித்துக் கொள்வாள். சுழிமாறி தனக்கு இரண்டாம் வகை மனைவி கிடைத்தால்? சந்திரமௌளியின் கன்னத்துச் சிறு நகையெல்லாம் சிதறி ஒழிந்தன. சாக்ரடீசுக்கு வாய்த்தாளே ஒருத்தி அதைப் போல தனக்கு வருபவள் கழுத்தைச் சுற்றிக் கொண்டால்?

சந்திரமௌளி சாலை ஓரமாக நடந்து கொண்டிருந்தான். அவன் கண்ணெதிரில் கார்கள் பறந்தன. ரிக்ஷாக்கள் ஓடின, மனிதர்கள் ஊர்ந்தனர். இவையனைத்தும் அவன் கண்களில் தட்டுப்பட்டனவே அன்றி எவையும் கருத்தைத் தொடவில்லை, இதைத்தான் தியானநிலை என்பார்களோ?

படிப்பது நல்லதுதான்!...சிந்திப்பதும் நல்லதுதான்! ஆனால் எதற்கும் ஓர் எல்லை வேண்டும். இழுப்பு அதிகமானால் வீணையில் தந்திகள் பாழாவதில்லையா? சந்திரமௌளியின் விஷயத்திலும் இதுதான் நடந்தது. விபரீத அளவில் மூளைக்குவேலை கொடுத்ததால் நம்மில் ஒருவனாக இல்லாமல் மூன்றாண்டுகளாக விலகி இருந்தான். ஓராண்டு கீழ்ப்பாக்கத்திலும், இரண்டாண்டுகள் விசாகப் பட்டினத்திலும் இருந்துவிட்டு மீண்டும் மனிதனாக மாற்றப்பட்டு இந்த உலகிடைக் கலந்து கொண்டான்.

இவையெல்லாம் நடந்து முடிந்து இரண்டாண்டுகளாகி விட்டன.

அப்பொழுதிலிருந்து சந்திர மௌளிக்கு ஓரே கவலை. தான் தனியன்; தனக்காகக் கவலைப்படுவோர் இங்கு எவரும் இல்லை. தாய் அவனது சிறு வயதிலேயே இறந்து விட்டாள். துன்பங்கள் பலவகையிலும் ஏற்று அவனைப் படிக்க வைத்த தந்தையோ பலன் உருப்பெறுவதைக் காணாமலேயே இறந்து விட்டார். ஆனர்சு பரீட்சை எழுதி விட்டு அவன் தன் சொந்த கிராமத்திற்குச் சென்றிருந்தபோதுதான் பைத்தியம் பிடித்தது.

அதனால் அவனது உடல்நிலை கெட்டது. படிப்பில் முன்பிருந்த கவனம் குறைந்தது. சிந்தனை செய்வதை அப்போதைக்கப்போது தடுத்து நிறுத்த முனைந்தான். இரவில் நன்றாகத் தூங்குவதற்காக ஏதோ மருந்துகளைத் தேடுவதில்கூட முயற்சி நடந்தது. ஆனாலும் என்ன செய்தும் தெளிவு ஏற்படவில்லை; எந்த நேரம் என்ன நேரும் என்று சொல்ல முடியவில்லை.

"இந்தாங்கய்யா, உங்களைத்தானே! பழைய சாவடித் தெருவுக்கு எப்படிப் போகணும்னு சொல்றீங்களா?"

"பழய சாவடித் தெருவுக்கா?" தலையைச் சொறிந்து கொண்டே அந்த கிராமத்துக்காரரை உன்னிப்பாகக் கவனித்தான் சந்திர மௌளி. பார்த்தவாறே அருகிலேயே சென்றான். "உங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே!"

அந்த மனிதரும் சந்திர மௌளியைப் போலவே பார்த்தபடி, "எனக்குக்கூட உங்களை எங்கேயோ பார்த்ததாக நினைவு!" என்றார்.

"அப்படியா! வியப்பாகத்தான் இருக்கிறது. போகட்டும்— ஊர், பேர் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றான் சந்திர மௌளி.

"ஊர் புதுக்கோட்டை. பெயர் வெங்கட நரசய்யா."

புதுக்கோட்டையில் முனிசீப் தானே நீங்கள்!"

"ஆமாம், என்னை எப்படி அடையாளம் தெரிந்து கொண்டீர்கள்?"

வியப்பில் மூழ்கிப்போனார் கிராமத்துக்காரர்.

"நான் மட்டுமில்லை— நீங்களும் என்னைப் புரிந்து கொள்வீர்கள். நான் உங்களைச் சந்திக்க வேண்டுமென்று நெடுநாட்களாகக் காத்திருக்கிறேன். சந்தித்து என் நன்றியைத் தெரிவிக்க வேண்டுமென்று எண்ணம். ஆனால் தாமதமாகி விட்டது. அதற்காக என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும். மன்னித்து விட்டு இந்த ஒரு பொழுதாவது என் விருந்தினராக இருக்கவேண்டும் .."

"நானா! உங்கள் விருந்தாளியாகவா?" வெங்கட நரசய்யாவுக்கு மூளை குழம்பிற்று.

"இப்படி நடு ரோட்டில் நின்று பேசுவானேன்? போவோம், வாருங்கள். சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்"

அறைக்குப் போனதும் சந்திரமௌளி தானே கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து வெங்கட நரசய்யாவை கை, கால் கழுவிக் கொள்ளச் சொன்னான். பக்கத்து வீட்டு இளைஞன் ஒருவனை அனுப்பி ஓட்டலிலிருந்து சிற்றுண்டி வரவழைத்தான் விருந்தாளி அதைச் சாப்பிட்டு முடிப்பதற்குள் தெரு மூலையிலிருந்த கடையிலிருந்து வெற்றிலை, பாக்கு வாங்கி வந்தான்.

இந்த உபசாரங்களை வெங்கட நரசய்யாவால் மறுக்க முடியவில்லை. அந்த மனிதரை இன்னும் சிந்தனையிலேயே நிறுத்தி வைத்தபடி அவன் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தான்.

"நான் யாரென்று உங்களுக்கு இன்னும் தெரியவில்லை அல்லவா?" என்றான்.

"தெரியலீங்க!" என்றார் வெங்கடநரசய்யா, வெட்கம் இழைந்தபடி.

"அப்படியானல் நானே சொல்கிறேன். உங்கள் ஊருக்கருகில் ரயில் ஓடுகிறதா?"

இந்த முறை வெங்கட நரசய்யாவின் தலை கவிழ்ந்தது. சந்திரமௌளியைத் தாழ்ந்து நோக்கியபடியே, "ஆமாம், அதற்கென்ன?" என்றார் அவர்.

"ஐந்தாண்டுகளுக்கு முன்னால் அந்த ரயில் பாதையில் ஒரு சம்பவம் நிகழ்ந்ததே..."

"உண்மைதான்! தண்டவாளத்தில் கல் வைக்கப்பட்டிருந்தது, ரயில் நின்றது, அதற்கான விசாரணை நடந்தது.

"அந்த வேலையைச் செய்தவன், அப்போது அந்த வட்டாரத்தில் சுற்றிக் கொண்டிருந்த ஒரு பைத்தியக்காரன்..."

வெங்கட நரசய்யாவின் முகம் 'குப், குப்' என்று வியர்த்துக் கொட்டிற்று. அவருடைய விழிகள் கோழிக் கண்களைப்போல மேலேறிச் சொருகிக் கொண்டன.

"அந்தப் பைத்தியக்காரன் நான் தான்! என்ன!"

அச்சத்தால் வெங்கட நரசய்யாவுக்கு இரத்த ஓட்டம் சுண்டி இழுத்தது. திக்குத் தெரியாதபடி அந்த மனிதர் எங்கேனும் தலை தெறிக்க ஓடி விடுவாரோ என்று தோன்றிற்று சந்திர மௌளிக்கு!

"பயப்படாதீர்கள்! நான் இப்போது பைத்தியக்காரனில்லை. உங்கள் தயவால் இப்போது சௌகரியமாகவே நடமாடிக் கொண்டிருக்கிறேன்."

"என் தயவினலா!! நான் என்ன செய்தேன்?"

"போலீஸ் காரர்கள் விசாரிக்க வந்தார்கள். அந்த வேலை செய்தவன் யாரென்று உங்கள் மூலமாக அவர்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆனல் எந்த முயற்சி எடுத்தும் அவர்கள் கைக்கு நான் அகப்படவில்லை. பின்னர் உங்களுடைய யுக்தியினால்தான் அவர்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போனார்கள்..."

"ஆனல் அது எப்படி உதவியாகும்?"

"விதி வழியில் எத்தனையோ விசித்திரங்கள்! ஒரொரு சமயம் அபகாரமே உபகாரமாக மாறிவிடுகின்றது. பைத்தியக்காரனை தண்டிக்க சட்டம் ஒப்புக்கொள்வதில்லை. அப்படியே என்னை விட்டிருந்தால் நான் இன்னும் அதே நிலையில்தான் இருந்திருப்பேன். மாறாக, அரசாங்கமே தனது சொந்தச் செலவில் எனக்கு சிகிச்சை செய்ய வேண்டிய அவசியம் வந்து விட்டது."

விபரம் விளங்கிற்றே யொழிய வெங்கட நரசய்யா பிரமிப்பிலிருந்து மீளவில்லை. வெளியில் இருள் பரவிற்று. தெருவில் மின்சார விளக்குகள் மின்னிட்டன.

நேரம் கழிந்து கொண்டிருந்தது. ஆனல் வெங்கட நரசய்யாவின் நிலையோ அதே நிலைதான்; ஆடாமல் ,அசையாமல் நாற்காலியோடு ஐக்யமாகி விட்டிருந்தார்.

எட்டு மணிக்கு ஓட்டலிலிருந்து எடுப்புச் சாதம் வந்து சேர்ந்தது,

சாப்பாட்டுக்குப் பின் சந்திர மௌளி விருந்தினரை மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றான். முல்லை மலரொத்த வெண்ணிலா. அருகிருந்த பூங்காவிலிருந்து வசந்த மணம் வீசிக்கொண்டிருந்தது. பஞ்சு பறந்து கொண்டிருந்த மேகத்தைப் பாாத்தபடி சுற்றுச் சுவரில் சாய்ந்து கொண்டார்கள் சந்திர மௌளியும் வெங்கட நரசய்யாவும்.

"வேற்றாளாக நினைக்காவிட்டால் உங்களை ஒரு விஷயம் கேட்கலாமென நினைக்கிறேன்" என்று தொடங்கினான் சந்திர மௌளி.

வெங்கட நரசய்யாவுக்கு உலுக்கி விட்டாற் போலிருந்தது. சந்திர மௌளியின் முகத்தில் ஏதோ அலசி ஆராய்ந்து, அப்படியும் ஏதும் விபரம் உணர முடியாமல் போகவே, தன்னிலைக்கு வந்து, "என்ன தம்பி! சந்தேகம் எதற்கு?" என்றார்.

"வந்ததிலிருந்து உங்களைக் கவனிக்கிறேன், நீங்கள் எதையோ தீவிரமாய் சிந்தித்தபடி இருக்கிறீர்கள். மனதை விட்டகலாத ஒன்று மனத்தை அரித்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்..."

வெங்கட நரசய்யா நெட்டுயிர்த்துக் கொண்டார்.

"என்னுடைய வேதனையை ஒருவர் ஆற்றவோ, தேற்றவோ முடியாது, தம்பி! ஆனாலும் எதற்கோ தெரியவில்லை. தம்பியைப் போன்ற உன்னிடம் சொல்ல வேண்டும் என்று மட்டும் தோன்றுகிறது. எனக்குச் சொத்திருக்கிறது; வீடிருக்கிறது. எல்லாம் நானே சம்பாதித்தது! பேச்சுக்கு எதிர்ப் பேச்சில்லாமல் கிராமத்தில் கௌரவமாகத் தான் பிழைத்து வருகிறேன். இருந்தும் என்ன பயன்? நான் நிம்மதியாய்க் கண்ணை மூடமட்டும் ஆண்டவன் என் தலையில் எழுதவில்லை. ஒன்றிரண்டு கவலைகள் என்னைப் பிய்த்துத் தின்கின்றன..."

"சொல்லுங்கள்..." சாவதானமாகப் பேசியபடி அருகில் நெருங்கி உட்கார்ந்தான் சந்திரமௌளி.

எனக்கு ஒரே மகன்! என் வம்சத்தை வளர்க்க வந்தவன் அவன். என் ஆசைக் கனவுகள் அனைத்தும் அவன் மீதே வைத்திருந்தேன் ஆனால் அவனோ துளசித் தோட்டத்தில் எருக்கம் பூவானான். அவனுக்குப் படிப்பு வரவில்லை. வீட்டில் நிலைக்காமல் சுற்றித் திரிந்தான். ஊர் வம்பெல்லாம் என் வீட்டு வாசலுக்கே வந்தன. மூன்றாண்டுகளுக்கு முன்னால், கைக்குக் கிடைத்த பணத்தோடு ஊர் மறந்து, பெயர் மறைந்து பராரியானான்..."

"உங்களால் தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லையா?"

"ஒரு முறையா, ஒரு வகையா? பத்திரிகைகளில் கூட விளம்பரப் படுத்திவிட்டோம். எவ்வளவு முயன்றும் அவனைப்பற்றிய விபரம் ஏதும் தெரிய வில்லை. அவன் கதை அப்படி முடிய, இனி இரண்டாவது என் பெண்ணைப் பற்றிய சிந்தனை! அவள் மனிதக் கூட்டத்தில் பிறந்திருக்க வேண்டியவள் அல்ல— தப்பிப் பிறந்தவள் என்பதே என் அபிப்பிராயம், இல்லாவிட்டால் இந்தச் சின்ன வயதிலேயே இவ்வளவு சாமர்த்தியம், விவேகம் வந்து சேருமா, சொல்லு! இந்த வருஷமே அவளுக்குக் கல்யாணமாக வேண்டியது. வரன்களும் வந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனால் என்ன கிரகச்சாரமோ, எந்த சம்பந்தம் வந்தாலும் ஏதாவது அவலட்சணம் முளைத்துக் கொண்டே இருக்கிறது. ஒரு பையனைப் பார்த்தேன். படித்தவன் தான். கொஞ்ச நஞ்சம் சொத்தும் உண்டு. அழகானவனும்கூட. ஆனால் நடத்தை சரியில்லை என்று தெரிய வந்தது. இன்னொருவன் பெண் பார்க்க வந்தபோது பதினைந்து நிமிஷங்களுக்குள்ளாக இரண்டு பாக்கெட் சிகரெட் குடித்துத் தீர்த்து விட்டான். மற்றொருவன் நவ நாகரிக ஆடை அணிந்தபடியிருந்தான். ஆனால் பேச்சுக்குப் பேச்சு கோபம்தான்..."

"நீங்கள் இப்படி தீவிரமாக சல்லடை போட்டு அரித்தால் உங்களுக்கேற்ற மருமகன் கிடைப்பானா என்பது சந்தேகந் தான்,"

முறுவலித்தபடி தன் எண்ணத்தை வெளியிட்டான் சந்திர மௌளி.

"என்ன செய்வது தம்பி! பாசம் பொல்லாதது. அந்தப் பெண்ணை நான் அவ்வளவு அன்போடு வளர்த்து வருகிறேன். அவள் உடலில் ஈ ஒட்டினால் கூட என் நெஞ்சில் கீறல் விழுந்து விடும். அவளை உயிராகப் பாவிக்கும் மருமகன் தான் தேவை! அப்படிப் பட்டவன் கிடைக்கவே மாட்டான் என்கிறாயா?"

சந்திர மௌளியும் சிந்தனையில் விழுந்தான். இரவெல்லாம் சிந்தித்தான் விடியும் நேரத்தில் ஒரு முடிவுக்கு வந்தான். அந்த முடிவுக்குத் தக்கபடியே வெங்கட நரசய்யா அவனைத் தமது கிராமத்திற்குக் கூப்பிட்டார். அந்த கிராமத்துக்காரர் அவனைத் தன் மருமகனாக்கிக்கொள்ள வேண்டுமென்பதே அந்தக் கிழவரின் எண்ணம். சந்திர மௌளியும் பெண்ணைப் பார்த்தான். உடலில் ஒட்டிக்கொண்ட வெட்கத்தோடு அவள் அவனை நிதானமாக தன் நீண்ட விழிகளால் நோக்கினாள். சந்திர மௌளி தன் நெஞ்சிருந்த இடத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். ஆனதெல்லாம் ஆயிற்று— அவன் நெஞ்சந்தான் அங்கே இல்லை!

"அம்மாடியோ, நெஞ்சம் பறிப்பதென்றால் இதுதானா!"— அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

* * * *

சிரஞ்சீவி சந்திர மௌளிக்கும் சௌபாக்கியவதி இலட்சுமிக்கும் எவ்விதத் தடையுமில்லாமல் திருமணம் நடந்தேறியது. வெகு விரைவிலேயே ஒருவரை விட்டு ஒருவர் நீங்க முடியாத "சிக்கலில்" அகப்பட்டுக் கொண்டார்கள்.

இந்த சிக்கல் வெங்கட நரசய்யாவை பாதித்தது. பட்டணத்தில் குடித்தனம் புகுந்த தன் மகளைக்காண வாரம் ஒரு முறையேனும் கிராமத்திலிருந்து போய்க்கொண்டிருந்தார். அங்கே ஓரிரண்டு நாட்கள் தங்குவதும், மறுபடியும் கிராமத்தில் காரியங்கள் என்ன ஆகுமோ என்று விழுந்தடித்துக் கொண்டு ஓடுவதும் வழக்கம். ஓர் இடத்தில் நிலையாகத் தங்குவதில்லை.

"இந்த வயசான காலத்தில் இப்படி அலைவது நன்றாயில்லை. கிருஷ்ணா-ராமா என்று இங்கேயே இருந்து விடுங்கள். அவ்வளவு அவசரமென்று நேர்ந்தால் நானே மாதத்திற்கு ஓரிரு தடவை கிராமத்திற்குப் போய் வருகிறேன்." என்று மருமகன் சொல்லியும் தீர்த்துவிட்டான். ஆனால் உடம்பில் எழுந்து நடமாடும் தெம்பு இருக்கும் மட்டும் தன்

மருமகன் பேச்சைக் கேட்க அவர் தயாராக இல்லை.

நல்லதொரு மருமகன் கிடைத்ததும் வெங்கட நரசய்யாவுக்குச் சிந்தனை வேறு பக்கமாகத் திரும்பியது. அவருள் எழுந்த தாகமொன்று தன் மகனைக்காண வேண்டு மென்று நோக்கம் கொண்டது. ஏதேனும் ஒருசக்தி அவனைத் தேடிப் பிடித்து அவர் முன் நிறுத்தி விடாதா? அதுவும் கடைசியில் ஆட்டம் கண்டுவிட்டது.

ஒருநாள் தன் மகளையும் மருமகனையும் அருகில் உட்காரவைத்துக்கொண்டு, அப்போதுதான் முதன் முதலாக அறிமுகமானவர்களிடம் பேசுவதுபோல், "எனக்கொரு பிள்ளை இருக்கிறான் தம்பி! அவனுக்காக எதிர்பார்த்து எதிர்பார்த்து என் கண்கள் பூத்துப்போய் விட்டன. இருக்கிறானே போனானே, அதுகூடத் தெரியவில்லை. எனக்குக் கொள்ளி வைக்காதவன் இருந்தென்ன போயென்ன, எல்லாம் ஒன்றுதான். எனக்கு மருமகனானாலும் மகனானாலும் நீ தானப்பா, தம்பி! இலட்சுமி கண் கலங்காமல் நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும்" என்றபடி கிழவர் 'பொலபொல' வென்று கண்ணீர் உகுத்தார்.

* * *

வெங்கடநரசய்யா இறந்தபின் இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின் ஓர் இரவு, வீட்டு மொட்டை மாடியில்,

வெண்ணிலா முல்லை மலராகப் பூத்திருந்தது. பாயில் பக்க வாட்டத்தில் படுத்திருந்த இலட்சுமி நிலவுக்குள் முயலைத் தேடுவதில் முனைந்திருந்தாள். சந்திரமௌளி சுற்றுச்சுவரில் சாய்ந்தபடி நகரத்து எழிலைப் பருகிக் கொண்டிருந்தான்.

இருந்திருந்து இலட்சுமியே தொடங்கினாள்...

"என்னங்க, உங்களை ஒன்று கேட்கட்டுமா?"

"கேளேன்! சந்தேகம் எதற்கு?"

"தம்பதிகளுக்குள் இரகசியமே இருக்கக் கூடாதென்பார்கள்..."

"இல்லையா பின்னே! எதற்காக இருக்கணும் இரகசியம்? அப்படி ஏதாவது இருந்தால் அந்தத் தாம்பத்யம் பாழ் குழியே!"

"அப்படியெல்லாம் பேசாதீர்கள்! அப்பா போனதிலிருந்து சொல்ல வேண்டுமென்ற எண்ணந்தான். வேளை வரவில்லை..."

"இப்போதாவது சொல்லேன். எந்த இரகசியமானாலும் பரவாயில்லை" என்று சந்திரமௌளி பாயில் வந்து உட்கார்ந்தான்.

"ஒண்ணுமில்லை... அன்றைக்கு நடந்தது.."

"என்றைக்கு?"

"ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னால்... தண்டவாளத்தில் கல் வைத்திருந்ததால் ரயில் நின்று விடவில்லையா?"

"ஆமாம், இப்போ அந்த விவகாரம் எதற்காக?"

"அங்கே கல்லைத் தூக்கிப் போட்டது நீங்களென்றுதான் எல்லோரும் நினைத்துக்

கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அதை நீங்கள் செய்யவில்லை...''

"நானில்லையா? அதெப்படி உனக்குத் தெரியும் இலட்சுமி?''

"எனக்கு மட்டுமில்லை; இது வேறு சிலருக்கும் தெரியும். ஆனால் அப்பா மீதிருந்த பயத்தால் யாரும் எதுவும் வெளியில் சொல்லவில்லை. அந்தப் போலீசாராவது கொஞ்சம் சிந்தித்துப் பார்த்திருக்கலாம். பைத்தியக்காரன் எந்தக் காரியத்தையும் செய்யத் துணிவான் என்று அவர்கள் முடிவு செய்தார்களேயொழிய அந்தக்கல்லை இரண்டு மூன்று மனிதர்களின் துணையில்லாமல் தனி மனிதனால் தூக்க முடியாதென்று மட்டும் நினைத்துப் பார்க்கவில்லை. அவர்களெல்லாம் விசாரிக்க வருவதற்கு முன்னாலேயே அந்தப் பழியை யார்மேல் தூக்கிப் போடலாமென்று நிச்சயித்து விட்டார். திக்குத் தெரியாமல் அனாதையாக அலைந்து கொண்டிருந்த நீங்கள் அந்தச் சமயத்தில் அவருடைய கண்களில் தட்டுப்பட்டீர்கள்...''

"என்மேல் உன் அப்பாவுக்கு ஏன் இந்தப் பகையோ?''

"பகையில்லை. குற்றவாளியைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணந்தான்!''

"குற்றவாளி யாரோ?''

"எவரானால் என்ன? அவர்களுக்கெல்லாம் தலைவன் என் அண்ணன்தான்! வழிப்பறிக் கொள்ளை, தண்டவாளங்களில் கற்களைப் போடுதல், பச்சை மரங்களை வெட்டி எறிதல்—இவையெல்லாம் அவனுக்கொரு விளையாட்டு!''

சந்திரமௌளி ஐந்து நிமிடங்கள் ஏதும் பேசவில்லை. தம்பித்துப் போனான். பிறகு சமாளித்துக் கொண்டு, "பெற்ற மகன் மீது தந்தைக்கு அவ்வளவு பாசம் இருந்ததில் வியப்பு எதுவும் இல்லை, இலட்சுமி! அப்படி வளர்ந்த மகன் அவருக்காகாமல்—கொள்ளி வைக்கக்கூட உதவாமல் போய்விட்டானே! விதி வழி மிகத் தொலைவு!'' என்றான் சந்திரமௌளி பாயில் மெல்லச் சாய்ந்தபடி.

இப்பொழுதே அவன் ஈரலை உஷாராகக் கவனிக்கவும்

அது அவனுடைய ஆரோக்யத்தை
ஆயுள் முழுவதும் கவனித்துக்கொள்ளும்

உடம்பில் மிகச் சிறந்த ஆராய்ச்சி சாலையாக விளங்குவது ஈரல். காலப் போக்கில் இதனுடைய வேலைகளில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. தாய்ப் பாலுக்கடுத்தபடியாக வேறு உணவை மாறி உட்கொள்ளும் போது ஈரலுக்கேற்படும் சிரமம் மிக அதிகம். பல் முளைக்கும் வேளையில் ஏற்படும் மாறுதல்கள், சீராகவும், சரியாகவும் இல்லாத உணவு முதலியவற்றால் குழந்தையின் ஈரல் கோளாறடையலாம். இதனால் சிக்கல்கள் பல தோன்றும்.

ஜம்மியின் லிவர்க்யூர் கோளாறுகள் ஏற்படாது பாதுகாப்பதுடன், குழந்தைகளின் வளர்ச்சிக்கு டானிக்காகவும் உதவுகிறது.

ஜம்மியின் லிவர்க்யூர்

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டி கோளாறுகளுக்கு...

அவனுடைய ஈரலைப்பரீட்சியுங்கள் ஜம்மியின் டாக்டர் உங்களுருக்கு அருகே உள்ள டவுனுக்குப் பிரதி மாதமும் விஜயம் செய்கிறார். சுற்றுப் பிரயாணத் திட்டத்துக்கு எழுதவும்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்

J.V.5a

சென்னை-4 — கும்பகோணம் — திருச்சிராப்பள்ளி

தொடர் கதை

வஜ்ர வீணை

கே. சுந்தராம்பாள்

அத்தியாயம் 5

அன்று அந்த பிரும்மாண்டமான கொட்டகைப் பந்தல் ஜன சமுத்திரத்தினுல் நிரம்பி வழிந்தது. சங்கத்தலைவர், காரியதரிசிகள், முக்யமாகப் பங்கு கொள்ளும் அங்கத்தினர் யாவர் மனமும் சந்தோஷத்துடன் கூடிய திருப்தியினுல் நிரம்பி நின்றது. டிக்கெட் செலவான வேகமே அவர்களை அசரச்செய்து விட்டது. இவ் வருஷத்துடன் கட்டடநிதி நிகழ்ச்சிக்குப் முற்றுப்புள்ளி வைத்து விடலாம் என்ற ஆனந்தநிலை அனைவர் முகத்திலும் பிரதி பலித்தன. நிகழ்ச்சி ஆரம்பமாக இன்னும் அரைமணி அவகாசமிருந்தது. வழக்கம் போல் லெக்ஷ்மி திரையின் இடைவெளியின் வழியாகக் கூட்டத்தை ஆராய்ந்தாள். முதல் வரிசையில் நடுசோபாவில் அவள் பார்வை விழுந்தது. அவ்வளவுதான் பார்வை நிலைக் குத்தி நின்று விட்டது. உடம்பு கிடுகிடென்று ஆடத் தொடங்கிவிட்டது. ஒரே ஓட்டமாக கிரீன் ரூமிற்குச் சென்றுள். கண்ணுடியின் முன் நின்று தனது அலங்காரங்களை சரிசெய்து கொண்டிருந்த கலாவிடம்:

கலா! அவர்...அவ்ர்...மேலே பேச்சு வெளி வராமல் தொண்டையிலே நிற்க வைத்தது ஆனந்த மிகுதி.

என்ன? நிஜமாகவா? எங்கே?

முன் வரிசையில்...

கலா, மேகலா, லெக்ஷ்மி மூவரும் வந்து திரையின் இடைவெளி வழியாக நோக்கும் பொழுது,

சசியும் பாமினியும் ஒரே சோபாவில் நன்ருக உடுத்தி, ரதியும் மன்மதனும் என்று எண்ணும்படி உட்கார்ந்திருந்தார்கள். அவ்விடம் வந்த சங்கத்தலைவர்,

''ஹலோ பாமினி, இதென்ன எங்களுக்கெல்லாம் சொல்லாமல் கொள்ளாமல்'' என்று கடைக்கண்ணுல் சசியைச் சுட்டிக் காட்டினுர்.

''உங்களுக்கெல்லாம் சொல்லாமல் ஒரு விஷயம் நடக்குமா? சொல்ல வேண்டிய சமயம் இனிமேல்தான்'' என்ருள் பாமினி.

அச்சா! சங்கக் கட்டிடத்தில் வைத்து ஜாம் ஜாமென்று செய்து விடுவோம். உன் அம்மா செலக்ஷணு? அல்லது...

அம்மாவை மீறி நான் நடந்ததுண்டா?

உன் அம்மா சாமான்யமானவரா? சரியான ஜோடியாகத்தான் தேர்ந்தெடுத்திருக்கிருள். சரி. உன் அம்மா உடம்பு எப்படி இருக்கிறது?

பரவாயில்லை... என்றவள் ஏதோ நினைத்துக் கொண்டவள்போல், இவர்தான் தமிழ்ச் சங்கத்தின் தலைவர். சசி கையெடுத்துக் கும்பிட்டான். இவர் சசிதரன் என்று தலைவரிடம் கூறினுள்.

''மிஸ்டர் சசிதரன்! இவளின் அம்மா இச் சங்கத்தின் உபதலைவர். இன்று அவர் வராமலிருப்பது மிக்க குறைபாடு'' என்று சொல்லும் பொழுது யாரோ அவரை அழைக்கவே அவர் விடைப் பெற்றுக் கொண்டார்.

பெரிய மனித வட்டாரத்தைச் சேர்ந்தவளான காத்யாயனி யாவராலும் நன்கு போற்றப்பட்டவள். அதனுல் பெரிய மனித கோஷ்டியிலிருந்த சில பெண்மணிகள் பாமினியினிடம் வந்து தம்பதிகளுக்கு தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். பாமினியின் நிலைமை மிக்க சங்கடமாக ஆகி விட்டது. சசிக்கு இவைகள் புரிந்து விட்டால் என்ன செய்வானே என்ற பயம் ஒருபுறம்.

சசியின் கவனமெல்லாம், முன்னுல் தொங்கும் நீல வெல்வெட் படுதாவில் ஜரிகை வேலையினுல் வாணியின் உருவமும் வீணுவிகார் என்ற எழுத்திலுமே என்றிருந்தது ''வீணுவிகார்'' என்று அவன் வாய்விட்டுச் சொன்ன

தைக் கேட்டபிறகே சற்று நிம்மதியடைந்தாள் பாமினி.

காலரி வட்டாரத்திலும் கலகலவென பேச்சுக் கிளம்பியது.

“அடி சீதா! கவனிச்சியா காத்தியாயனி பெண்ணை.”

“நன்னா இரண்டு கண்ணாலேயும் பார்த்தேன். சரியான ஜோடி தேடிப் பிடித்து விட்டார். காத்தியாயினியோ கொக்கோன்னாளாம்” என்றாள் சீதா ராமசாமி.

“உரச்ச தைரியசாலி. இல்லேன்னா துணிஞ்சு பொண்ணுக்கு இரண்டாங் கல்யாணம் பண்ணுவாளா? மாட்டுங்கா மகாராணியில்லே” என்றாள் காமாக்ஷிகங்காதரன்.

“பாரேன் அடுத்த வருஷம் அவளே சங்கத்து தலைமைப் பதவிக்கு வந்துடுவா” என்றாள் சுகுணா சுந்தரேசன்.

“வந்தா என்னவாம். அதற்குத் தகுந்த சாமார்த்தியமில்லையா? படிப்பில்லையா? ஏண்டி கல்யாணமாகவே பண்ணுவேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாளே பண்ணலையா?” என்றாள் மீனாக்ஷி கிருஷ்ணன்.

“நன்னா நடக்கும். அவ என்ன பயந்தவளா? அடுத்த மாசம் என்று கேள்வி” என்றாள் வசுமதி ஸ்ரீனிவாசன்.

வழக்கம் போல் காலரிப்பக்கம் கண்ணோட்டம் விட்டுச் சுற்றிவந்த அதுல்யத்தின் காதில் இந்தப் பேச்சுக்கள் ஸ்பஷ்டமாக விழுந்தன. காத்யாயனி என்ற பெயர் அவர் சிந்தையில் சிறிது கலக்கத்தை உண்டாக்கியது. அவர் நின்ற இடத்திற்கு அவர் வந்ததும், கலா அவர் பக்கத்திலிருக்கும் பெண்... “மனைவியாக இருக்க முடியாது” எனப் பதட்டமில்லாமல் சொன்னாள்.

“சபாஷ், கலா!” என்று அவள் அருகில் வந்து அவள் மோவாயைப்பற்றி நிமிர்த்தி, கலா! நீ ஒரு மகாவீரனாகப் பிறக்க வேண்டியவள். உன் மனோ திடத்தை நினைக்கும்பொழுது என் உடல் சிலுக்கிறது. இந்த மாபெருங் கூட்டத்தார் அவர்களை தம்பதிகளெனப் பேசிக் கொள்ளுகிறார்கள். உன்மீது ஏற்பட்ட கோபவெறியில் மற்றொரு பெண்ணை மணக்க மாட்டாரென்பது என்ன நிச்சயம்? எதை நிச்சயமாகச் சொல்லுகிறாய்.

"சித்தப்பா! உங்களிடம் நான் எப்படி விளக்கம் கூற முடியும்? எங்கள் அன்பு சத்தியமானால் அவர் என்னையன்றி பிற மாதரைத் தீண்ட முடியாது. அப்படி நேர்ந்திருக்குமானால் அது அவர் தன் சுய உணர்வுடன் செய்த செய்கையாகாது. இது என்திட நம்பிக்கை"

"மகளே! உன் சாமார்த்தியத்தை மெச்சுகிறேன். இவ்விடம் வந்து அவனைப் பார்த்த மாத்திரத்தில் அப்பா சசி! என்று அலறிக்கொண்டு அவனை ஆவி சேர்த்தணைக்க வேண்டுமென்று என் உள்ளம் துடிக்கிறது. உடலெல்லாம் பதறுகிறது. இடம் காலத்தைப் பொறுத்து நான் அமைதியை வருவிக்கிறேன். அப்படியிருக்க உன் மனம் என்னபாடு படுமென்பதை நான் புரிந்து கொள்ளாதவனா? இந்த நிலைமையில் உன்னால் நடனமாட முடியுமா? நான் காரியதரிசியினிடம் சொல்லி அவனை உள்ளே அழைத்து வரச் சொல்லட்டுமா? அவன் உடல் நலம் நன்றாகவே இருப்பதாகத் தெரிகிறது. என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

"வேண்டாம் சித்தப்பா வேண்டாம். அவர் சுய உணர்வு இல்லாமலிருந்தாலும் இப்பொழுது நம்மைப்புரிந்து கொள்ளமாட்டார். கலவரம் தான் மிஞ்சும். அல்லது வேண்டுமென்றே, நான் நடனமாடுவதைத் தெரிந்தே, தனது புது மனைவியுடன் வந்து என்னை புண்படுத்த வேண்டுமென்று நிலைமையிலிருந்தாலும் கலவரம் ஏற்படும். கொட்டகையை பார்த்தீர்களா? சிறிய கலவரம் தோன்றினாலும் எந்த இடத்தில் முடியும் என்று சொல்ல முடியாது. இந்த இடத்தில் அவரைக் கண்டுவிட்டேன். அதனால் நான் இன்று நடனமாடி இவர்களை மகிழ்விப்பது எனது மாபெருங் கடமை சித்தப்பா. அவர் எப்படியிருந்தாலும் நான் நடனமாட ஆரம்பித்துவிட்டால் சுற்றுப்புற விஷயமே என் கவனத்திற்கு வராது. லெக்ஷ்மி! ஜாக்கிரதை. பதட்டப்படாமல் அவர் பக்கம் திரும்பாமல் பாடவேண்டும் புரிந்ததா?

"புரிந்தது கலா! நான் கலவரப்படாமல் பாடுவேன் கவலைப்படாதே. இச்சங்கத்தாருக்கு நாம் மிகவும் கடமைப் பட்டவர்கள் என்ற நினைப்புடன் பாடுவேன்" என்றாள் லெக்ஷ்மி.

இவ்வளவிலும் வாயைத் திறக்காமல் சிலைபோல் நின்றுகொண்டிருந்த மேகலா மனதில் பூகம்பமே உண்டாகியிருந்தது. பாமினி சசியின் மீது வைத்த கண்ணைத் திருப்பாமல் நின்றார். ஒவ்வொருவராக வந்து சசியின் கையைக் குலுக்குவதும் பாமினி சிரித்துப் பேசுவதும் அத்தாயின் வயிற்றை அக்கினிக் குழம்பாக மாற்றிற்று. ஐயோ! தெய்வமே! என் கதிதான் இவ்விதமாயிற்று.

என் செல்வம், என் கண்மணி, கலாவின் கதியும் இவ்விதமா முடிய வேண்டும். அந்தத்தாயின் உள்ளக்கொதிப்பை எடுத்துக் கூறப் பதங்கள் உண்டா? அத்துல்யம் வந்ததோ கலாவும் அவரும் பேசினதோ ஒன்றையுமே அவள் அறியவில்லை. உள்ளே செல்லத்திரும்பிய அத்துல்யம் மேகலாவின் நிலைமையைக்கண்டு பதறிப்போய் விட்டார். கண்களிலிருந்து அருவி போல் வழிந்து கொண்டிருந்த கண்ணீருடன் சிவப்பேறின முகத்தையும் கண்ட அத்துல்யத்தின் நெஞ்சை யாரோ முறுக்கிப்பிழிவது போலிருந்தது. அருகில் சென்று "மேகலா!" என்றார்.

திடுக்கிட்டுத் திரும்பியவள், "சுவாமி!" என்று மேலே பேச முடியாமல் விக்கி விக்கி அழுதாள்.

"ஸ் ஸ் ஸ் மேகலா அழாதே! கலாவிற்கு ஒரு குறைவும் வராது. நாழியாய் விட்டது நடன ஆரம்பத்திற்கு மணி அடிக்கப் போகிறார்கள். அதோ காரியதரிசி வருகிறார் வா போகலாம்" என்று கையைப்பற்றி கர கரவென இழுத்துச்சென்றார்.

"தலாங்" என்ற மிருதங்க ஓசை யெழுந்தது. தொடர்ந்து மேடையில் வாத்தியங்கள் ஒலிக்கத் தொடங்கின. பாமினியின் மனம் கட்டுக்கொள்ளாமல் தவித்தது. இதோ திரை தூக்கி விடுவார்கள். கலா மேடை மீது தோன்றுவாள். சசி அவளைப்பார்த்து அடையாளங்கண்டு கொண்டுவிட்டால்... ஆனந்த மிகுதியினால் கண்களை மூடினாள். திரை தூக்கப்படுகிறது! கூப்பியகரத்துடன் நிற்கிறாள் அழகே உருவான கலா! தலாங் என்று மிருதங்கம் ஒலிக்க ஜல் ஜல் என்ற சதங்கை ஒலி கிளம்புகிறது.

கலா! என்று அலறிய வண்ணம் சசி மேடையை நோக்கி ஓடுகிறான்.

சசி! என்று அழைத்த வண்ணம் மேடை மீது ஏற கைகொடுத்துத் தூக்குகிறாள். சட சட வென சபையில் கரகோஷம் கிளம்புகிறது. தேவி! என் லக்ஷ்யம் நிறைவேறி விட்டது என்று கண்ணைத் திறக்கிறாள். பாமினி பக்கத்தில் சசி உட்கார்ந்திருக்கிறான். உண்மையாகவே சபையோர் கரகோஷம் செய்தார்கள். நடன அலங்காரத்துடன் அழகே உருவான கலா சிரமேற் கைகூப்பி குதிகாலைத்தூக்கி முழங்காலை அகற்றி வைத்து கண்ணை இமைக்காமல் சிலைபோல் நின்று கொண்டிருந்தாள். சே! மனப்பிரமையா என மனதிற்குள் கூறிக்கொண்ட பாமினி சசியைத் திரும்பிப்பார்த்தாள். கலாவின் மீது வைத்தகண் வாங்காது உட்கார்ந்திருந்தான் சசி. அடுத்த கணம் என்ன நடக்குமோ? என்ற ஆவல் உள்ளத்தை பரபரக்கச் செய்ய நிலை கொள்ளாது உட்கார்ந்திருந்தாள் பாமினி.

"தலாங்" என்று மிருதங்கம் ஒலிக்க துள்ளிக் குதித்து சபை வணக்கம் செய்து குருவை வணங்கி நடராஜ விக்ரஹத்தை வணங்கி விட்டு அலாரிப்பு ஆடத்தொடங்கினாள். லெக்ஷ்மியின் குரலுடன் தக்ஷிணாமூர்த்தியின் சிஷ்யன் சுப்பராமனின் இனிய சாரீரமும் சேர்ந்து ஒலிக்க கலாவின் ஜதியும் சேர்ந்து சபையோரை மெய் மறக்கச் செய்தது. கலாவையும், சசியையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள் பாமினி.

அலாரிப்பு முடிந்து திரை விழுந்து, எல்லோரும் கரகோஷம் செய்யும் பொழுது சசியும் கைதட்டினான். "பாமினி! ரொம்ப நன்றாக நடனமாடுகிறாள் இல்லையா? என்று கேட்டான் சசி.

இக்கேள்வி கேட்டது பாமினிக்கு ஐயோ! என்று அலற வேண்டும் போலிருந்தது. அவள் கட்டின லக்ஷ்ய கோட்டை இடிந்து விழுந்து தரை மட்டமாகி விட்டது. அந்த மனப்பான்மையில் ஆமாம் நன்றாக ஆடுகிறாள் என்று ஜீவனில்லாமல் பதில் கூறினாள்.

சிறிது பொறுத்து, இவளை முன்பு எங்காவது பார்த்திருக்கிறீர்களா? என்றாள் பாமினி.

சற்று யோஜனை செய்து விட்டு, இல்லையே இவள் யார்? என்றான்.

"இவள் பெயர் கலா சசிசேகரன். தெற்கே வீணா விஹாரிலிருந்து வந்திருக்கிறாள்," என்றாள் அவன் முகத்தை உற்று நோக்கிய வண்ணம்.

வீணாவிகார்... கலா சசிசேகரன்... வீணா விகார்! கலா சசிசேகரன்... என்று நாலைந்து தடவை சொல்லிப் பார்த்துவிட்டுக் கண்களை மூடி சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

பாமினிக்கு மறுபக்கத்தில் உட்கார்ந்திருந்த டாக்டர் இதற்குமேல் வற்புறுத்தாதே என்று எச்சரித்தார்.

பிறகு வரிசையாக "ஜதிஸ்வரம், வர்ணம், சப்தம், பதம், தில்லானா" எல்லாம் ஆடி முடிந்தது. ஒவ்வொரு தடவை மேடைமீது தோன்றும்பொழுதும் வெவ்வேறு உடையில் தோன்றி பம்பரம்போல் சுழன்றாடி, அந்த அசைவு, முகம் இவைகளினால் பாவத்தைக் காட்டி, ஆஹா! அற்புதம்! என்ற கோஷங்கள் சபையிலிருந்து எழும் வண்ணம் ஆடினாள்.

கடைசியில் வாத்தியங்களினின்று மாயா மாளவ கௌளவ ராகம் எழுந்தது. தொடர்ந்து லெக்ஷ்மி ராகம் பாடத் தொடங்கினாள். சாய்ந்து உட்கார்ந்த சசி நிமிர்ந்து உட்கார்ந்தான். ராகம் முடிந்ததும் திரை தூக்கப்பட்டது. ராதையின் அலங்காரத்தில் நின்றாள் கலா.

"எங்கிருந்து வருகுவதோ—ஒலி
யாவர் செய்குவதோ—அடி தோழி"



என்ற பாட்டை சுப்பராமன் லெக்ஷ்மி இருவரும் சேர்ந்து பாட ஆரம்பித்தார்கள். இந்தப் பாட்டு சசிக்கு மிகவும் பிடித்தமானது. கச்சேரிகளில் இந்தப் பாட்டை பாடாமலிருக்கமாட்டாள். நிலவொளியில் சசியும் கலாவும் உட்கார்ந்து பேசும்பொழுதும் பௌர்ணமியில் ஏரியில் ஓடத்தில் போகும்பொழுதும், சதுரங்கம் விளையாடும்பொழுதும் இப்பாட்டை இருவரும் சேர்ந்து பாடிக்கொண்டேயிருப்பார்கள். அவர்கள் தனியே சந்தித்துக்கொள்ள விரும்பினால், விரும்புபவர் இப்பாட்டைப் பாட ஆரம்பிப்பார்கள் சில நிமிஷங்களில் இருவரும் தனியிடத்தில் நிற்பார்கள். அதனாலே எப்பொழுது நடனமாடினாலுமே கச்சேரி செய்தாலுமே தவறாமல் இந்தப் பாட்டை பாடிவந்தாள். முதலடியை ஐந்தாறு சங்கதிகள் போட்டு ஐந்தாறு விதமான பாவங்கள் காட்டிக்கொண்டிருந்தாள்.

அடுத்த அடி,

குன்றினின்றும் வருகுவதோ—மரக்
கொம்பினின்றும் வருகுவதோ—வெளி
மன்றினின்றும் வருகுவதோ—என்றன்
மதி மருண்டிடச் செய்குதடீ— இஃது
(எங்கிருந்து)

ஒரு தடவை பாடிவிட்டு மறுபடியம் ஆரம்பிக்கும்பொழுது சசியும் மெல்லிய குரலில் பாட ஆரம்பித்தான். பாமினியின் கூம்பியிருந்த முகம் பிரகாசமடைந்தது.

டாக்டர் அவ்விடம் வந்ததுமே, சங்கத் தலைவர், காரியதரிசிமுதலியவர்களுடன் தனித்துப் பேசினார். சசியின் விஷயத்தை ஒருவாறு கூறி, நடுவில் அவன் ஏதாவது புரிந்துகொண்டு எழுந்திருந்தானானால் சட்டென திரைவிட்டு ஜனங்களுக்கு ஏமாற்றமில்லாமலும், கலாட்டா ஏற்படாமலும் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்.

அடடா விஷயம் தெரியாமல் பாமினியிடம் அவ்விதம் பேசிவிட்டேனே என்ற வருத்தப்பட்ட தலைவர், ஏன் முதலிலேயே பாமினி என்னிடம் சொல்லியிருக்கலாமே என்றார்.

"ஐயோ! அப்பெண் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமம் கணக்கிலடங்காது. தியாகியாக மாறிவிட்டாள்" என்றார் டாக்டர்.

அதனால் சசி பாடத் தொடங்கினதுமே, முன் இரண்டு வரிசையிலிருந்தவர்களிடம் ஒரு மாதிரியாக விஷயத்தைச் சொல்லி அமைதியை நிலைநாட்டி விட்டார்கள். மற்ற இடங்களுக்கு சசியின் பாட்டு காதில் விழாது.

அடுத்த அடி சாரங்கா ராகத்தில் பாடினாள் அவனும் பாடினான்.

அலை யொலித்திடும் தெய்வ—யமுனை
யாற்றினின்றும் ஒலிப்பதுவோ—அன்றி
இலையொலிக்கும் பொழிலிடை—நின்றும்
எழுந்தோ-இஃதின்ன முதைப்போல்—
(எங்கி)

ஹிந்துஸ்தான் தோடி:

காட்டினின்றும் வருகுவதோ— நிலாக்
காற்றைக்கொண்டு தருகுவதோ—வெளி
நாட்டினின்றும் மித்தென்றல் கொணர்
வதோ
நாதமிஃதெனுயிரை யுருக்குதே (எங்கி)

ஹிந்தோளம் :

பறவையேது மொன்றுதுவோ—இங்கன்
பாடுமோ அமுதக்கனற்—பாட்டு
மறைவினின்றும் இன்னஜாதியர்
வாக்கியத்தின் இடையிதுவோ—அடி
(எங்கி)

நாட்டைக்குறிஞ்சி:

கண்ணனூதிடும் வேய்ங்குழல் தானடி
காதிலே யமுதுள்ளத்தில்—நஞ்சு
பண்ணன்னவன்மடி—பாவையர் வாட
பாடி யெய்திடும் அம்படி தோழி—(எங்கு)
இதைத் தொடர்ந்து,
காதலென்னும் தீவினிலே ராதே ராதே.
அன்று
கண்டெடுத்த பெண்மணியே ராதேராதே,
காதலெனும் சோலைதனில் ராதே ராதே
நின்ற
கற்பகமாம் பூந்தருவே ராதே ராதே,
மாதரசே செல்வப்பெண்ணே ராதே ராதே
வானவர்கள் இன்பவாழ்வே ராதே ராதே,

என்று கலாவும் சேர்ந்துபாடி ஆடலானாள். சசியும் சற்று உற்சாகமாகவே, கலாவைச் சுட்டிக்காட்டியவாறு பாடினான்.

அடுத்தாற்போல் ஆடின தில்லானாவிற்குக் கூட தாளம் போட்டு வந்தான். நடனம் முடிந்தது. இதுவரை அத்துல்யம் சசியைப் பார்க்க வராததைக்கண்ட பாமினியின் உள்ளம் மிக்க வருந்தியது. என்னையும் சசியையும் தவறாக எண்ணி விட்டார்கள். சசி மீதும் தன்மீதும் ஏற்பட்ட வெறுப்பை, மாற்ற வேண்டியது தனது கடமை என்ற உணர்ச்சியுடன் டாக்டரையும் கூட்டிக் கொண்டு சசியுடன் மேடைக்குள் சென்றாள் பாமினி.

இவர்களுடன் சங்கத்தலைவரும் காரியதரிசியும் சென்றார்கள். இவர்கள் மேடைக்குள் சென்ற சமயம் இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்து எங்கோ வெறும் வெளியைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தாள் கலா. கண்களிலிருந்த கண்ணீர் அருவி போல் கன்னத்தின் மீது வழிந்து கொண்டிருந்தது. லெக்ஷ்மி அவளை ஒட்டினாற்போல் நின்று கொண்டிருந்தாள். அத்துல்யம், மேகலா, தக்ஷிணாமூர்த்தி, மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தார்கள். "கலா! அவர் பாடினதை கவனித்தாயா" என்ற லெக்ஷ்மியின் குரலைக்கேட்டு மேடை ஓரமாகவே பாமினி முதலியவர்கள் நின்றுவிட்டார்கள்.

"ஆம் பாடினார்! ஆனால் என் பரிதாபத்திற்கல்ல" என்று சொல்லிவிட்டு, சித்தப்பா! என்று மேடையே கிடுகிடுக்க அழைத்தவாறு திரும்பினாள். சசியை முன்னால் நிறுத்தி பின்னால் மற்ற நால்வரும் நின்றுகொண்டிருந்தார்கள். அவனைப் பார்த்து "சசி!" என்று அலறியவாறு ஓடிச்சென்று அவள் அவன் கால்களைக் கட்டிக்கொண்டு கதறியழுதாள்.

"ஐயோ! நீ யார். என் காலை விடு. எனக்கு மனைவி இருக்கிறாள்" என்றான் சசி.

"அத்தான்! சசி! அத்தான், நான் உங்கள் மனைவி. நான்தான் உங்கள் முதல் மனைவி. என்னைப்பாருங்கள்.

"எனக்கு மனைவி யிருக்கிறாள்! பாமினி இங்கே எதற்காக என்னை அழைத்து வந்தாய்?" என்றான் சசி.

"சட்டென அவன் காலை விட்டு விட்டு பாமினியின் காலைப் பிடித்துக்கொண்டு, "சகோதரி! உன்னைப் போல் நானும் ஒரு பெண். உன்னைப்போல் நானும் அவர் மனைவி, ஆனால் உங்கள் வாழ்வில் நான் குறுக்கிடவில்லை. என்னை ..என்னை .. அன்புடன் கலா! என்று ஒரு முறை அழைத்தால் போதும். நான் என்ன குற்றம் புரிந்திருந்தாலும் என்னை மன்னித்துவிடச்சொல்" என்று கண்ணீர்வடிய அழுதவாறு கூறினாள்.

சட்டெனக் குனிந்து அவள் தோள்களைப் பற்றித்தூக்கி நிறுத்தி, "சகோதரி சற்றுப் பொறுமையாக நான் சொல்லப் போவதைக் கேள்"

"ஐயோ! எனக்கு ஒன்றுமே வேண்டாம். அவரின் மன்னிப்பு! மன்னிப்பு!" என்று அலறினாள். "ஐயோ கலா! அவர்... அவர் சுய உணர்வுடன் இல்லை! நான் அவர் மனைவி இல்லை; நான் அவர் மனைவியில்லை" அவர் என் அண்ணா!" என்று அந்தக்கட்டிடமே அதிரும்படி கத்தினாள் பாமினி.

"ஹா! என்ன!" என்ற சொல் அங்கு கூடியிருந்த எல்லோர் வாயினின்றும் ஏககாலத்தில் ஒலித்தன.

சட்டெனத்திரும்பி சசியை ஏற இறங்கப் பார்த்தாள். சசியும் அவளைப் பார்த்தபடி நின்றான். "சகோதரி! நீ சொல்வதுநிஜந்தானா? என்றாள் கலா! "அம்மா! குழந்தாய்! இன்று உன் கணவனை உயிருடன் காண்பது இப் புண்ணியவதியின் முயற்சியினால் என்பதைத் தெரிந்துகொள். வாழ்வை பணயம் வைத்த இக்குணவதியின் தியாகம் எப்படிப்பட்டது தெரியுமா? இன்று உன்னை உன் கணவன் நேரில் கண்டால் ஒரு சமயம் தன் சுய உணர்வைப் பெறுவானோ? என்ற ஆவலினால், யமனுடன் மன்றாடிக் கொண்டிருக்கும் பெற்ற தாயை வேலைக்காரி வசம் விட்டு விட்டு வந்திருக்கிறாள். எங்கே தெரியுமா? புனாவில் அவள் தாய் இச்சங்கத்தில் முக்ய பங்கு கொள்ளுபவளாதலினால், அவள் இஷ்ட

படி சங்கத்தார் உதவியளித்தார்கள். ஆனால் அவள் லக்ஷயம்முழுதும் நிறைவேறவில்லையே. முயற்சி சிறிது பலனை அளிக்கத்தான் செய்திருக்கிறது". என்று நிறுத்தினர் டாக்டர்,

"சகோதரி! என்னை மன்னித்துவிடு. நீயும் பெண்ணாதலால் என் உள்ளக் கொதிப்பை அறிந்து கொண்டு நிச்சயம் என்னை மன்னிப்பாய். சற்று விளங்கச்சொல்" என்று அவள் இரு கைகளையும் பிடித்துக்கொண்டாள்.

"கலா, பிறகு விவரித்துச் சொல்லுகிறேன். முக்யமாகத் தெரியவேண்டியதைக் கேள். சென்ற வருஷம் நடந்த ரயில் விபத்தின் பொழுது ஒரே வண்டியில் நான், என் அம்மா, உன் கணவர் மூவரும் வந்தோம். ரயில் விபத்தில் மண்டையில் பட்ட அடி அவர நினைவை மாற்றிவிட்டது. அந்த சமயம் அவர் யாரென்பது எனக்குத் தெரியாது. ஒன்று மட்டுமே சொல்லுவேன். நீ பாக்யசாலி. உங்கள் காதல் தெய்வ மணம் பொருந்தியது. எனக்கு மனைவியிருக்கிருள் என்று எப்பொழுதுமே சொல்லுகிறார். தன் சுய உணர்வில்லாத நிலைமையிலும் பிற மாதரைத் தீண்டவே விரும்பவில்லை. அவர் மயக்க நிலைமையிலிருக்கும் வரைதான் நான் தொட்டுப் பணி புரிந்தேன். கண் விழித்தபின் நான் அவரைத் தீண்ட அனுமதிக்கவேயில்லை. சங்கீத மேதையான அவர் இன்று வரை பாடவோ, படிக்கவோ அவர் விரும்பவில்லை. நான் முயற்சித்தும் பயனில்லை. இன்று "எங்கிருந்து வருகுவதோ" பாட்டு ஆரம்பமாகையில் அவர் முகத்தில் பிரகாசமான மாறுதலைக் கண்டேன். உடனே பாடவும் ஆரம்பித்துவிட்டார்.

"சகோதரி! இந்தப்பாட்டு எனது ஏழாவது வயது முதல் இருவரும் சேர்ந்து பாடுவோம். அவருக்கு மிகப் பிடித்தமான பாட்டு, இந்தப் பாட்டை பாடிக்கொண்டே வந்தால் "அன்பின் ஒலி அழைத்தோடி வந்துவிடும்" என்ற நம்பிக்கையிலேயே பாடிவந்தேன். அழைத்து வந்துவிட்டது. ஆனால்...ஆனால்" என்று விம்மினாள்.

"வருத்தப்படாதே கலா! அவர் நிச்சயம் குணமடைவார். எங்கள் டாக்டர் வேண்டிய முயிற்சி செய்து வருகிறார். இப்பொழுது நீயும் வந்துவிட்டாய். எல்லோருமாக முயற்சி செய்து பலவிதமாக நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி அவர் நினைவைத் திருப்பிவிடலாம். அவரை நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து உங்கள் இருவரையும் சேர்த்து வைப்பதுதான் எனது முதல் கடமையென்று சபதம் எடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே,

வெளியிலிருந்து ஒரு ஆள் வந்து காரியதரிசியின் காதில் ஏதோ கிசுகிசுத்தான்.

"சரி அவனை உடனே உள்ளே அனுப்பு" என்றார் காரியதரிசி.

"சரி அம்மாவின் உடம்பு கவலைக்கிடமாக இருக்கிறது, உடனே யாமினியையும் டாக்டரையும் வரச்சொல்லு என்று நர்ஸ் விமலா போன் பண்ணினாங்க" என்றான் உள்ளே வந்த ஆள்.

"புறப்படு பாமினி! இவரை இவ்விடம் விட்டுப்போனால் என்ன?" என்றார் டாக்டர்.

"இல்லை நான் பாமினியுடன் தான் வருவேன்" என்றான் சசி.

அதுவரை மேகலா, அத்துல்யம், லெக்ஷ்மி மூவரும் பிரமை பிடித்தவர்கள்போல் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு நீண்ட மூச்சு விட்டு விட்டு சசியின் அருகில் வந்தார் அத்துல்யம்.

"மாமா ஒரே ஒருவரம் யாசிக்கிறேன். அளிப்பீர்களா?" என்றாள் பாமினி அத்துல்யரைப் பார்த்து!

"என்னம்மா வேண்டும் சொல்லு. நீ இவ்வளவு செய்திருக்கும்பொழுது நான் உன் வேண்டுகோளை மறுத்தால் நான் மனித வர்க்கத்தில் சேர்ந்தவனாகமாட்டேன்" என்றார் அத்துல்யம்.

"நான் யார் தெரியுமா?"

"வெகு நாட்களுக்குப் பின் இப்பொழுது தானே பம்பாய் வந்திருக்கிறேன் அதனால்...

"தெரியாதல்லவா? நான் சொல்லுகிறேன். காதலில் ஏமாற்றமடைந்து, உள்ளத்தின் வெப்பம் வெறியாக மாறி, பழிக்குப்பழி. என்று துடித்து, உங்கள் வாழ்க்கையைப் பாழாக்கி, தன்னையும் மணந்தவன் மனதையும் இடிந்து மடியச் செய்த உங்கள மாமன் மகள் காத்தியாயனியின் அருந்தவப் புதல்வி நான்.

"அப்படியானால் மரணப் படுக்கையிலிருப்பது காத்யாயனியா?" என்றார் பதட்டத்துடன். ரத்தபாசம் பேச வைத்தது.

"ஆம்" என்று சொல்லும்பொழுதே வந்த ஆள், "டாக்டர் மறந்துவிட்டேனே நடனம் ஆட வந்தவங்க குடும்பத்தையும் காத்யாயனி அம்மா கூட்டிவரச்சொன்னார்களாம்" விமலா சொன்னாள்.

"மாமா! அம்மா எல்லா விஷயங்களையும் புரிந்து கொண்டுவிட்டாள். அவளது கடைசி கால விருப்பத்தை நிறைவேற்றுவீர்களா?" என்றாள்.

"குழந்தாய்! எனக்கு ஒருவர் மீதும் வருத்தமே கிடையாது. விதியின் சதியில் சிக்குண்டதற்கு யார்பொறுப்பாளியாக முடியும்? இதோ நாம் எல்லோருமே புறப்படுவோம்" சசியும் உன்னை விட்டு இருக்கமாட்டான் கலா அவனைவிட்டு இருக்கமாட்டாள்" என்று சொல்லிவிட்டு, "தக்ஷிணாமூர்த்தி! நீங்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

சிறிது நேரத்திற்கெல்லாம், பலவித உணர்ச்சியையுடைய மனிதர்களைச் சுமந்து கொண்டு புனா போகும் பாதையில் மனோவேகம், வாயுவேகமாக இரண்டு கார்கள் பறந்துகொண்டிருந்தன, (தொடரும்)

நர்ஸ் மீனா

வனமாலிகை

வாடிய ரோஜா மலரில் விழுந்த பனித் துளிகள் மாதிரி நர்ஸ் மீனாவின் முகத்திலும் வியர்வைத்துளிகள் துளிர்த்தன. மின்சார விசிறியும் அதில் தோல்வியுற்றது. மார்கழி மாதக் கடுங்குளிர்…அவள் உடம்பு அனலாகக் காய்ந்தது…உள்ளம் கொதித்தது …அவர்கள் மட்டும் ஆஸ்பத்திரிக்கு வராமலிருந்தால் இந்த அவல நிலைமை ஏற்பட்டிருக்காது.

சற்று நேரத்திற்கு முன் அவளிடம் காணப்பட்ட மகிழ்ச்சி சுட்ட கல்லில் விழுந்த நீர்த் துளி போல வற்றிவிட்டது.

“உங்கள் பெயரென்ன?” நர்ஸ் மீனா கடமைக்காகக் கேட்டாள்,

“வசந்தி!”

“உங்கள்…” அதற்குமேல் வார்த்தை வரவில்லை. உள்ளம் படபடத்தது.

“ராகவன்!”

இதைக் கேட்டதும் அவள் இதயத்தை இடி, மின்னல், புயல் எல்லாம் சொந்தமாக்கிக் கொண்டன.

வசந்தியை பிரசவ அறையினுள் அனுப்பிவிட்டு மீனா நாற்காலியில் வந்து விழுந்தாள்…

கோழி குப்பையைக் கிளறுவதுபோல அவள் நினைவு பழைய கதையைக் கிளறியது.

* * *

சீமான் வீட்டுத் தோட்டத்தில் செழித்து வளரும் மல்லிகைக் கொடிபோல, வார்த்தெடுத்த தங்கச் சிலைப் போல இருந்தாள் மீனா. அழகெனும் அமிர்தம் அவள் அவயவங்களில் பொங்கி வழிந்தது. இயற்கையன்னை அவளுக்கு அழகை வாரி வாரிக் கொடுத்திருக்கிறாள், பண்டைய தமிழ் மன்னர்களைப் போல!

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள் அவள். அவள் தந்தை வடநாட்டில் ஒரு கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அவள் வாழ்வின் சுவையை அடையும் பருவம்... மீனு கல்லூரியிலிருந்து மான் போலத்துள்ளி வீட்டிற்கு வந்தாள்.

"தந்தி" என்ற குரல் அவளைத் திகைக்க வைத்தது. தந்தியை வாங்கிப் பிரித்துப் படித்தாள்.

விதியின் கருநிழல் படர்ந்து விட்டது. மீனுவின் தந்தை மாரடைப்பால் பூலோக வாழ்வை முடித்துக் கொண்டார். மீனுவின் தாய் பார்வதியை விதவைக் கோலத்தில் நிறுத்தி விநோதம் பார்த்து விட்டது காலம். பார்வதியின் இதயம் வரண்ட களிமண் நிலமாகி விட்டது. அதில் வளரும் ரோஜாச் செடி ... மீனு! அவர்கள் வாழ்வில் துயர் மேகம் மூடியது.

காலம் காத்திருக்கவில்லை; ஓடியது!

மீனு கல்லூரிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள். வாழ்க்கை வண்டிக்குத் தீனி போட வழிபார்க்க வேண்டுமே?

மீனு நர்ஸ்வேலைக்குப் படித்தாள்.

அழகைப் பாதுகாக்கும் வேலி பணம். அந்தப் பாழாய்ப்போன பணம் அவளிடமில்லை. எனினும் பண்பு வேலியாக அமைந்தது. மின்சாரக் கம்பத்தை விட்டு நடந்தால் நிழல் நீளுவது போல அவர்கள் வாழ்வில் ஏழ்மை நீண்டது. அடுத்த கம்பம் வந்தால் ஏழ்மை குறையும். அடுத்த கம்பம் எது......? அலுவல்......

நீண்ட இரவுகள்; நிம்மதியற்ற பகற்பொழுதுகள்தான் வையகம் அவளுக்குப் பரிசளித்தது. துன்பத்தின் மத்தியில் அவள் வேதனையை அணைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

மீனுவுக்கு திருவனந்தபுரம் ஆஸ்பத்திரியில் வேலை கிடைத்து விட்டது. அவர்களது வாழ்க்கையில் குவிந்து கிடந்த வேதனைக் கற்கள் குறையத் தொடங்கின. அவர்கள் சாலையில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டார்கள்.

இரண்டு மாதங்கள் சென்றன...

பகல் நழுவி விழும் வேளை.

நர்ஸ் மீனு வீட்டினுள் காலடி எடுத்து வைத்தாள். புதுக்குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தாள். கம்பீரமான குரல்; களை பொருந்திய முகம். ஓரக்கண்ணுல் மீண்டும் அவனை ஒரு தடவைப் பார்த்து விட்டு சமையலறைக்குள் சென்றுள். அவள் உள்ளத்தில் பலவித எண்ணங்கள் குமிழியிட்டன.

"மீனு, அது அடுத்த வீட்டுக் கோமுவின் தம்பி ராகவன். எம். ஏ. படிக்க வந்திருக்கிருன்." என்றுள் பார்வதி. மீனுவின் இதயத்தில் இலேசாக அசைவு ஏற்பட்டது. அவள் இதழ்களில் புன்னகை ஒளிக்கோலம் காட்டி மறைந்தது. உள்ளம் இன்பத்தால் நிறைந்தது.

மீனு ..! எண்ணங்களின் மத்தியில் சுருண்டு விழுந்தாள். ராகவன் ! அவள் மனத்திரையில் இன்ப எண்ணங்கள் விளையாடிக் கொண்டிருந்தன.

"அத்தை, உங்கள் மகளுக்கு சம்பளம் எவ்வளவு?' ராகவனின் குரல் கணீரென்று ஒலித்தது.

"ஏதோ, எண்பது ரூபாய் கிடைக்கிறது"

"இவ்வளவுதானு?" அலட்சியமாகச் சொன்ஞன். ராகவனும் பார்வதியும் பேசிக் கொண்டிருப்பதை அடுத்த அறையில் இருந்து கேட்டுக்கொண்டிருந்தாள் மீனு.

காலதேவனின் காலடியில் பல மலர்கள் உதிர்ந்தன.

மீனுவின் இதயத்தில் ராகவன் 'ஜாம்' என்று உட்கார்ந்து கொண்டான். அவள் மனக்கதவு திறந்து கொண்டது.

இரண்டு ஆண்டுகள் பறந்து விட்டன!

மீனு ராகவன் திருமணம் முடிந்தது. அவர்கள் வாழ்வில் இன்பம் பொங்கிப் பாய்ந்தது. உதயசூரியனின் 'கதகதப்பும்' தென்றலின் இன்பமுமாக இருந்தது அவர்கள் இல்லறம்.

"மீனு, உன்னைப்போல ஒருபெண் கிடைக்க நான் என்ன தவம் செய்திருந்தேனே?"

ஆமாம்: உங்களை அடைந்த நான் புண்ணியம் செய்தவள்."

புதிய உலகத்தில் அவர்கள் நிறையப் பேசிக் கொண்டார்கள்.

ராகவன் இயற்கையாகவே படபடத்த சுபாவம் உடையவன். மீனு தன் பொறுமை அணிகலனுல் அவனைத் திருத்த முற்பட்டாள். நோயாளிகளுக்கு சேவை செய்வதை விட கணவனுக்கு சேவை செய்வதில் இன்பங் கண்டாள்.

மகளின் இன்ப வாழ்வைக் கண்டு தாய் பூரித்துப் போனுள். அவளுக்குப் 'பாட்டி' ஆகும் ஆசை பிடித்துக் கொண்டது. குடும்பம் குதூகலமாக இருக்க வேண்டுமாயின் குழந்தை வேண்டும். குழந்தை இல்லாத வீடும் நிலவு இல்லாத வானமும் ஒன்று,

மீனுவின் வயிறு அடைத்துக் கிடந்தது.

"அம்மைக்குக் குழந்தை வேண்டுமாம்!" என்றுள் மீனு.

"உனக்கு...!" அவள் கன்னம் சிவந்தது. உள்ளம் இனித்தது. உதட்டைப் பிதுக்கினுள்.

"கல்யாணமாகி ஒரு வருஷத்தில் குழந்தை பிறந்துவிட்டால் புது வாழ்வு இனிக்காது. இரண்டு மூன்று வருஷங்கள் போகட்டுமே, அதற்குள் என்ன அவசரம்?" என்றுன் ராகவன்.

"அதெல்லாம் நாம் நினைப்பதுபோல் நடப்பதில்லை. எல்லாம் ஆண்டவன் செயல்."

"ம்...?"

ஒருநாள் ..

பார்வதி கிணற்றடியில் விழுந்துவிட்டாள். தலையில் பலமான அடி...இரத்தம் பாய்ந்தது. நினைவு போய்விட்டது. பக்கத்து வீட்டுக்காரர்களைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு ராகவன் ஆஸ்பத்திரிக்குப் பறந்தான்.

அங்கே அவன் கண்ட காட்சி...சிலையாக நின்றுன்.

மீனு டாக்டரின் பக்கத்தில் நின்றுள். இருவர் தோள்களும் உரசிக் கொண்டன. படுக்கையில் கிடந்த ஒரு நோயாளிக்கு டாக்டர் ஊசி போட்டார். மீனு அதற்கு உதவி புரிந்தாள். இதைக்கண்ட ராகவன் திரும்பிவிட நினைத்தான். அவன் உள்ளத்தில் பொருமைத்தீ படர்ந்து எரிந்தது.

அவன் நிற்பதை மீனு பார்த்துவிட்டாள். அவள் உள்ளத்தில் ஆனந்தஅலைமோதியது. அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டது அவளுக்கு எப்படியோ யிருந்தது.

"நர்ஸ், கொஞ்சநேரம் நோயாளியின் பக்கத்தை விட்டு எங்கும் போகாதீர்கள். நினைவு வந்ததும் மருந்தைக் கொடுத்து விடுங்கள்" டாக்டரின் உத்தரவு இது.

மீனுவின் நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. உள்ளே கடமை, வெளியே கணவன் ..! சாவின் வாசலில் நிற்கும் ஜீவனைப் பார்ப்பதா? அல்லது கணவன பக்கத்தில் செல்லுவதா? அவள இதயத்தை ஒருவித பூச்சி அரிக்கத் தொடங்கியது. அவள் ராகவனின் முகத்தைப் பார்த்தாள். அனல் தகித்தது. அலுவல் சிறையை விட்டு வெளியே போக முடியாத கைதி அவள்.

நோயாளிக்குக் குறிப்பிட்ட நேரத்தில் மருந்து கொடுக்காவிட்டால் அவன் உயிருக்கு அவள் பதில் சொல்லியாகவேண்டும்!



"மீனா!"—ராகவனின் குரல் கனமாக ஒலித்தது. அவள் பதில் பேசவில்லை. சைகை காட்டி உட்காரச் சொன்னாள். அவளது அருவி நோக்கில் அவன் நஞ்சைக் கண்டான். அவள் நோயாளியையும் கணவனையும் மாறி மாறிப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் மல்கியது.

•

பத்து நிமிஷத்தில் நோயாளி கண்ணைத் திறந்தான். அவனுக்கு மருந்தைக் கொடுத்து விட்டு வேகமாக வெளியே வந்தாள் மீனா. ராகவனின் முகம் சினத்தால் சிவந்தது.

"இவ்வளவு நேரமும் என்னைக் காக்க வைத்து விட்டு உனக்கு அங்கே என்ன வேலை?"

"அந்த நோயாளி..." சிரித்தாள்.

"பல்லை யிளிக்காதே. என்னைவிட உனக்கு அந்த டாக்டர்தான் உயர்ந்தவனா?"

இது அவள் இதயத்தைத் தைத்தது.

"என்ன?"

மீனா அழத் தொடங்கிவிட்டாள்!

ராகவன் பார்வதியின் நிலையை எங்கோ பார்த்துச் சொல்லி முடித்தான். மீனா அவனுடன் வெளியே இறங்கி நடந்தாள். கணவனின் சீற்றம் கடமையை மறக்கச் செய்தது,

சந்தேகம் என்பது ஒரு எலும்புருக்கி நோய். அதற்கு ஆரம்பத்திலே சிகிச்சை செய்து கொள்ள வேண்டும். சிந்தனையைத் தவிர மருந்தில்லை. பரந்த மனம் அதற்கு மிக மிகத் தேவை.

நாட்கள் நகர்ந்தன!

இருவர் வாழ்விலும் பல மாற்றங்கள். அவளது சேவையை அவன் உதாசீனம் செய்தான். எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்தான்.

காலம் அவர்கள் வாழ்க்கையில் கண்ணாமூச்சி விளையாடக் கங்கணம் கட்டிவிட்டது.

ராகவனுக்கு பம்பாயில் உத்தியோகம் கிடைத்தது. வேலையை ஒப்புக் கொள்ளப் புறப்படும் போதுகூட அவளிடம் அவன் சரியாக முகங் கொடுத்துப் பேசவில்லை.

கொஞ்ச நாட்களாக அவன் வார்த்தைகளால் அவள் நெஞ்சில் நெருஞ்சிமுள்ளைக் கொட்டிக் குவித்தான். கனியுதிர் காவாக இருந்த அவள் வாழ்க்கைச் சோலை சூன்யம் பிடித்த பொட்டலாக மாறியது.

பார்வதி! பாவம் என்ன செய்வாள்? பெற்ற பெண்ணை நினைத்துப் பெற்ற வயிறு துடித்தது. தாயின் ஆயிரம் அன்பு வார்த்தைகள் கணவனின் ஒரு அன்பு வார்த்தைக்கு ஈடாமோ?

ராகவனுக்கு அவள் கடிதம் எழுதினாள். அவன் பதில் எழுதுவதில்லை.

ஒரு வருஷமாக அவள் கடிதம் எழுதியும் பயனற்றுப் போகவே அவள் கடிதம் எழுதுவதையும் நிறுத்திக் கொண்டாள். வேதனையை அனுபவித்து அவள் இதயமும் மரத்துப் போய் விட்டது. எதையும் தாங்கும் சக்திக்கு அவள் தன்னை தயார் செய்து கொண்டாள்.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு ராகவன் மறுமணம் செய்து கொண்டதாக மீனா அறிந்தாள். அறிந்தது முதல் சில நாட்கள் பித்துப் பிடித்தவள் மாதிரி உட்கார்ந்திருந்தாள். காலம் அதையும் மருந்து தடவிக் குறைத்து விட்டது. இந்த ஜன்மத்தில் இனி கணவனுடன் வாழ முடியாது, என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டாள் பெண்களின் குடும்ப வாழ்வு ஒரு புத்தகம்; ஆண்களுக்கு அது ஒரு அத்தியாயம்.

பார்வதி வேதனைக்குப் பலியானாள்!

அதன் பிறகு அவள் திருவனந்தபுரத்தில் இருக்க மனமின்றி நாகர்கோயிலுக்கு மாற்றம் வாங்கிக் கொண்டாள்.

காலம் ஓடியது .....

'குவா, குவா' என்ற குரல் பிரசவ அறையினுள் கேட்டது- மீனாவின் நினைவும் அற்று விழுந்தது!

"மீனா! வசந்திக்கு ஆண் குழந்தை பிறந்திறக்கிறது" என்றாள் நளினி. மீனாவின் இதயத்தில் இன்பம் .. ஏக்கம்... நிராசை... துன்பம் .. எல்லாம் புரண்டன. அவளுக்கும் ஆசை யிருந்தது! அதை இன்னொருத்தி பிடுங்கிக்கொண்ட பிறகு...

மீனாவுக்கு வசந்தியின் மேல் தன்னையறியாமலே பாசம் பிறந்தது.

ராகவனை எப்படியும் ஒரு முறை கண் குளிரப் பார்த்துவிட வேண்டும் என்று உள்ளுணர்வு கூறிற்று.

இரண்டு மூன்று நாட்களாக அவன் ஆஸ்பத்திரி பக்கமே வரவில்லை. யார் யாரோ வந்து போனார்கள். 'ஒருவேளை இது அவருடைய மனைவியாக இருக்குமோ?' என்ற ஐயம் மீனாவுக்கு எழுந்தது.

வசந்தியிடம் நேரில் கேட்கவும் துணிவில்லை,

இதயத்தில் தேங்கிக் கிடந்த கேள்விக் குறிகள் அனலாகி ஆசையைக் கொதிக்க வைத்தது. விவேகம் என்ற மூடியால் எத்தனை நாட்களுக்கு மூடி மறைக்க முடியும்?

"வசந்தி, உன் கணவர் வரவில்லையா?" என்று கேட்டாள் நர்ஸ் மீனா!

"இல்லை ஸிஸ்டர், அவர் அன்றிரவே பம்பாய்க்குப் போய்விட்டார். கம்பெனியில் ஏதோ அவசர வேலையாம், 'தந்தி' வந்ததும் போய்விட்டார்."

"அவரது சொந்த ஊர் எது?"

"தாமரைக்குளம்."

மீனா தன் உணர்ச்சியை அடக்க முடியாமல் திணறினாள். உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டாள்.

"உங்களுக்கு அவரைத்தெரியுமா ஸிஸ்டர்?"

"தெரியாது!"

மீனாவின் கண்கள் நீரால் நிறைந்தன. அவள் சொல்லாமல் எழுந்து நடந்தாள்.

மறுநாள் மீனா வேலைக்கு வருவதற்கு முன் வசந்தி ஆஸ்பத்திரியை விட்டுப் போய்விட்டாள்.

மீனாவின் இதயம் நைந்த துணி போலானது. கடல்மண் நீரை உறிஞ்சுவதுபோல அவள் இதயமும் துன்பத்தை உறிஞ்சி பழக்கப்பட்டுவிட்டது.

ஒரு மாதம் சென்றது.

வசந்திக்குப் பொழுது போகவில்லை. மூலையில் கிடந்த பெட்டியை எடுத்து சுத்தமாக வைப்பதற்காக அதனுள் இருந்த சாமான்களைக் கீழே தட்டினாள். பெட்டியின் அடியிலிருந்து ஒரு புகைப்படம் விழுந்தது. அதைத் துடைத்துப் பார்த்தாள் வசந்தி. ராகவன் பக்கத்தில் மணக் கோலத்தில் ஒரு பெண்...வசந்தியின் இதயத்தில் மின்னல் போல ஒரு ஒளிக்கீற்று...'மீனா!... அவள் வாய் முணு முணுத்தது. 'நர்ஸ் மீனா!'

ராகவன் வசந்தியிடம் தன் முதல் மனைவி இறந்து விட்டதாகச் சொல்லியிருந்தது அவளுக்கு நினைவு வந்தது. அவள் பெயர் மீனா என்று சொல்லியிருந்தான்.

"நர்ஸ் மீனா இருக்கிறார்களா?" ஆஸ்பத்திரியில் நளினியிடம் கேட்டாள் வசந்தி.

"அவள் 'பேவார்டில்' நிற்கிறாள்" என்றாள் நளினி.

மீனாவைக் கண்டதும் வசந்தி அணைகடந்த வெள்ளம்மாதிரி பாய்ந்தாள்... "அக்கா!"

"என்னை மன்னித்து விடுங்கள் அக்கா."

"என்ன வசந்தி, அக்காவா? என்ன விஷயம்"

வசந்தி தன்னிடமிருந்த புகைப்படத்தை அவளிடம் கொடுத்தாள். அதைப் பார்த்த மீனு மின்சாரத்தால் தாக்குண்ட நிலையடைந்தாள்.

"அக்கா, என்னை இனி ஏமாற்ற முடியாது. தயவுசெய்து என்னுடன் வாருங்கள். நாம் சேர்ந்து வாழலாம்."

"வசந்தி! எனக்கு இல்லற வாழ்க்கையில் ஆசை இல்லை. உங்கள் இன்ப வாழ்வில் நான் புகுந்து துன்பந்தர விரும்பவில்லை. ஆனந்தமாக உங்கள் வாழ்க்கையின் அமைதியை நான் குலைக்கவில்லை முடிந்தால் அவரை ஒருமுறை பார்த்தால் போதும்..." அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை.

"அக்கா, உங்கள் பொருளை நான் திருடிக் கொண்டேன். மனமிருந்தால் இடமுண்டு. நான் சுயநலக்காரியல்ல. எனக்காக நீங்கள் சுகத்தை இழந்தீர்கள்."

மீனு கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"வசந்தி. உன் கணவரை இன்னொருத்திக்கு பங்கு போட நினைக்கிறாயா?"

"அக்கா. அவர் எனக்கு மட்டுமல்ல, நம் இருவருக்கும் கணவர். உங்களுக்கு அவரிடமுள்ள உரிமையைவிட எனக்குக் குறைவாகத்தான் உண்டு" அவள் கண்களில் நீர் வடிந்தது.

"வசந்தி! ஒருவர் இரண்டு பெண்களுடன் வாழ முடியுமா?"

"ஏன் முடியாது? உங்கள் வாழ்க்கையில் எனக்கு இடம் கொடுத்து விட்டீர்கள். உலகத்தைப் பற்றி பயப்படாதீர்கள். அது மாயா ஜாலக் கண்ணாடி. நாம் அழுதால் சிரிக்கும். சிரித்தால் அழும். நாம் சேர்ந்து வாழ்வதில் என்ன தவறு இருக்கிறது!"

"வசந்தி!" மீனுவால் பேச முடியவில்லை. இனிய உணர்ச்சிகள் மோதின.

"நீ பெண் அல்ல; பெண் தெய்வம். உலகத்தில் எந்தப் பெண்ணும் செய்யாத மாபெரும் காரியத்தைச் செய்யத் துணிந்து விட்டாய்" மீனு தன்னையும் மீறிப் பேசினாள்.

மறுநாள் முதல் மீனு தன் ஜாகையை நர்ஸ் விடுதியிலிருந்து மாற்றிக் கொண்டாள். அவள் இப்போது வசந்தியின் அன்புப்பிடியில் சிக்கிய குழந்தை! ★

இன்றல்ல! நேற்றல்ல!

50 ஆண்டுகளாகப் புகழ்பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(Regd.)

தலைவலி, ஜலதோஷம், கைகால்வலி, ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து.

இது வீட்டில் இருந்தால் உங்கள் அருகே ஒரு டாக்டர் இருப்பது போலாகும்.

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ

(ஸ்தாபிதம்: 1909)

த. பெ. எண் 99 ... 214 & 251 மேலமாசிவீதி, மதுரை

திருச்சி, தஞ்சை இவ்விரு ஜில்லாக்களில் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

தபால் பை எண் 172 .... 213, மேலமாசி வீதி, மதுரை - 1.

தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

மணல் கழுவும் தொழிற்சாலை

கண்ணுடி செய்ய மணல் தேவை. ஆனுல் இயற்கையாகக் கிடைக்கும் மணலை அப்படியே அதற்கு உபயோகிக்க முடியாது. கழுவித்தான் உபயோகிக்கவேண்டும். ஏனெனில் சாதாரணமாக மணலோடு இரும்பும் வேறு சில பொருள்களும் கலந்திருக்கும். அவற்றைக் கழுவிச் சுத்தம் செய்தால்தான் கண்ணுடி செய்ய அந்த மணல் ஏற்றதாகும். கண்ணுடியும் சுத்தமானதாகவும் உயர் ரகமாகவும் இருக்கும்.

உத்தரப் பிரதேசத்தில் அலகாபாத், பந்தர் ஆகிய ஜில்லாக்களில் கண்ணுடி செய்ய ஏற்ற மணல் ஏராளமாகக் கிடைக்கிறது. அலகாபாத் ஜில்லாவில் உள்ள சங்கர்கர் (Shankar garh) என்ற இடத்தில் இந்த மணலைக் கழுவிச் சுத்தம் செய்வதற்கென ஒரு தொழிற்சாலையை உ. பி. அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. 16 மணி நேரத்தில் 40 டன் மணலைக் கழுவி கண்ணுடி செய்ய ஏற்ற மணலாக்கக் கூடியது இந்தத் தொழிற்சாலை. நம் தென்னுட்டில் சென்னைக்கு வடக்கே என்னூரிலும் வேறு பல இடங்களிலும் கண்ணுடி செய்வதற்கு ஏற்ற மணல் கிடைக்கிறது. இந்த மணலைக் கழுவி சுத்தம் செய்ய நம் சென்னை ராஜ்யத்திலேயே மணல் கழுவும் தொழிற்சாலைகளை நம் அரசாங்கம் அமைக்கலாம். இதன் மூலம் நம் தமிழ் நாட்டில் உள்ள கண்ணுடித் தொழிற்சாலைகளுக்கும் சுலபமாகவும் மணல் மலிவாகவும் கிடைக்கும். இதனுல் அவற்றின் உற்பத்திச் செலவு குறைந்து வேறு இடங்களிலிருந்து வரும் கண்ணுடிகளோடு போட்டி போடவும் வாய்ப்புக்கிட்டும்.

ரங்கூன் தென்னை

தென்னையில் சாதாரணமாக நான்கைந்து ஜாதிகளே நமக்குத்தெரியும். ஆனுல் உண்மையில் நம் நாட்டில் மட்டும் 13 ஜாதி தென்னைகள் உண்டு. இந்தியா சாதா. காப்பாடம், அந்தமான் பெரிது, லட்சத்தீவு சாதா, லட்சத்தீவு மத்திமம், லட்சத்தீவு சிறிது, கங்கா பவானி, பெரிகொப்பாரி, ரங்கூன் கொப்பாரி, அந்தமான் மஞ்சோலா, தரைத் தேங்காய், கோயித்தள்ளி, சூக்கி— என 13 ஜாதிகள். இவற்றில் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ள நான்கும் இளநீருக்காக மட்டும் பயன்படுபவையாகும். மற்ற ஒன்பதும் தேங்காய் கொடுக்கக்கூடியவை. நம் தமிழ் ஜில்லாக்களில் பெரும்பாலும் வளரும் ஜாதி இந்திய சாதா (Indian Common) எனப்படும். சராசரி வருடம் ஒன்றுக்கு 50-60 தேங்காயும் 140 கிராம் கொப்பரையுமே இவை கொடுக்கின்றன. ஆனுல் ஆந்திராவில் வெகுவாக வளரும் ரங்கூன் தென்னை 255-280 கிராம் கொப்பரை கொடுக்கிறது. ஆகையால் எண்ணெய்க்காக தென்னை வளர்ப்பவர்கள் இந்த ஜாதியை வளர்ப்பது லாபகரமாக இருக்கும். "இரங்கூன் கொப்பாரி" என இதை ஆந்திராவில் கூறுவர்.

உலகில் மனிதன் பயன் படுத்தும் பலவித சக்திகளில் 46% நிலக்கரியிலிருந்து, 36% கனிஜ எண்ணெய்களிலிருந்து (பெட்ரோல், மண் எண்ணெய், குருடாயில், டீசல் எண்ணெய் போன்றவை), 16% மரம், விறகு போன்றவைகளிலிருந்து 20% நீரோட்டத்திலிருந்து கிடைக்கிறது. மனிதனுக்குத் தேவையான சக்தியைத் தரும் இச் சாதனங்கள் உலகில் எல்லா பகுதிகளிலும் ஒரே விதமாகப் பரவி இல்லை. உதாரணமாக உலக மொத்த ஜனத்தொகையில் பாதிப்பேர் வாழும் ஆசியாவில் உலக மொத்த நிலக்கரியில் 22% தான் கிடைக்கிறது. ஆனுல் உலக ஜனத் தொகையில் பத்தில் ஒரு பங்குகூட வாழாத அமெரிக்காவிலோ உலக மொத்த நிலக்கரி உற்பத்தியில் 38% கிடைக்கிறது. இதனுல் உலகில் பல நாடுகளில் சக்தி சாதனங்களுக்கு பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இப்பஞ்சத்தை நீக்காதவரை அந் நாடுகள் முன்னேறுவது என்பது சாத்தியமல்ல. ஆகையால் வேறு புதுவிதமான சக்தி சாதனங்களை கண்டு பிடிப்பதில் விஞ்ஞானிகள் பலர் கருத்து செலுத்தி வருகின்றனர்.

பூமியிலிருந்து மின்சாரம்

பூமிக்குள் நீர் இருக்கிறது. வெப்பமும் இருக்கிறது. பூமிக்குள் சுரங்கம் வெட்டிக் கொண்டு உள்ளே போகப் போக இந்த வெப்பம் கூடுவதையும் காண்கிருேம். இந்த வெப்பத்தின் காரணமாக பூமி உள்ளே உள்ள நீர் ஆவியாகிறது. இந்த ஆவி பூமிக்குள் உள்ள காலியிடங்களில் நிரம்பி இருக்கிறது, எரிமலை உள்ள பகுதிகளில் இவ்விதம் பூமிக்குள் அதிகமாக் நீராவி

அடங்கி இருக்கிறது. அதை வெளிப்படுத்தி அதன் உதவியால் இயந்திரங்களை இயக்கி மின் சக்தி உற்பத்தி செய்யலாம் என விஞ்ஞானிகள் பலர் வெகு காலமாகவே கருதி வந்தனர். ஆனுல் இந்த முறையைக் கையாண்டு முதன் முதலாக மின்சாரம் உற்பத்தி செய்தவர்கள் இத்தாலியரே. லார்ட் ரெடோ என்னும் இத்தாலிய விஞ்ஞானி ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன் முதன் முதலாக இந்த பூகர்ப்ப மின்சாரத்தை உற்பத்தி செய்து காட்டினர். இதன் பிறகு 1958 நவம்பரில் நியூஸிலண்டின் வடதீவில் (North Island) உள்ள வைராக்கி என்னுமிடத்தில் இவ்விதமான இரண்டாவது மின்சார உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டது. இப்பொழுது இந்நிலையம் 1500 கிலோ வாட் மின்சாரமே உற்பத்தி செய்கிறதென்ருலும் 6500 கிலோ வாட். உற்பத்தி செய்ய ஏற்பாடாகி வருகிறது. புதிதாக மேலும் 27 துவாரங்கள்—ஒவ்வொரு துவாரமும் சுமார் 3000 அடி ஆழம்—இட்டு உற்பத்தி அளவை 69,000 கிலோ வாட்டாக்கவும் திட்டமிருக்கிறது. இது திட்டத்தின் முதலாவது பகுதி. இரண்டாவது பகுதியில் இந்த உற்பத்தியை 151400 கிலோ வாட்டாகவும், மூன்ருவது பகுதியில் 252600 கிலோ வாட்டாகவும் உயர்த்தவும் திட்டமிட்டிருக்கிருர்கள். உலகிலேயே இந்த வகை மின்சார உற்பத்திதான் மிக மலிவாகும். வறுமை மிகுந்த நம் நாடு இத்துறையில் கவனம் செலுத்துதல் நல்லது. நம் நாட்டில் இமயமலை, அஸ்ஸாம், பஞ்சாப், குஜராத், தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் இவ்விதமான மின் சக்தி நிலையங்கள் அமைக்க வாய்ப்பிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பூட் பாலிஷ்

பூட் பாலிஷ் தயாரிப்பது சுலபமானதும் லாபகரமானதுமான ஒரு தொழிலாகும். இதைத் தயாரிக்க பலவிதமான முறைகள் உண்டு. சுலபமான சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

கருப்பு பாலிஷ்

(முதல் முறை)

தேன்மெழுகு	12	அவுன்ஸ்
டர்பன்டைன்	16	,,
எண்ணெயில் கரையும் கருப்பு வர்ணம்	½	,,

நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றில் மற்ருெரு பாத்திரத்தை (Water bath) வைக்கவும். தேன்மெழுகை துண்டு செய்து அதிலிட்டு அடுப்பேற்றி உருக்கவும். அதேசமயம் டர்பன்டைன் எண்ணெயில் வர்ணத்தைக் கரைத்துக்கொள்ளவும். மெழுகு உருகியதும் அதில் வர்ணம் கரைந்த டர்பன்டைனை சிறிது சிறிதாக விட்டு கிளறிக்கொண்டே இருக்கவும். பூரா டர்பன்டைனையும் கலந்தானதும் அடுப்பை விட்டிறக்கிவிடவும். ஆறியவுடன் அது இறுகி கெட்டியாக பூட் பாலிஷ் ஆகி விடும். கெட்டியாக இறுகாது தளதள என இருந்தால் மேலும் சிறிது மெழுகை உருக்கிச் சேர்த்துக் கொள்ளவும்.

(இரண்டாவது முறை)

சலவை சோப்	10	ராத்தல்
பொட்டாஷியம் கார்பனேட்	2	"
டர்பன் டைன்	80	"
பாரபின் மெழுகு	40	"
கார்னுபா மெழுகு	20	"
நீரில் கரையும் கருப்பு வர்ணம்	1	"

மேலே கண்டவைகளில் கார்னுபா மெழுகு என்பது பாலிஷுக்கு பளபளப்புத் தருவதாகும்.

பாரபின், கார்னுபா இரண்டு மெழுகையும் ஜல பாத்திரத்தில் வைத்து உருக்கவும். அவை உருகி ஒன்ருகக் கலந்ததும் சிறிது சிறிதாக டர்பன்டைனை அவற்ருேடு சேர்த்துக் கலக்கிக் கொள்ளவும். மற்ருெரு பாத்திரத்தில் கொதிநீரில் சோப், பொட்டாஷியம் காரபனேட், வர்ணம் இவை மூன்றையும் கரைத்துக்கொள்ளவும். பிறகு இந்த சோப் நீரை சிறிது சிறிதாக மெழுகோடு சேர்த்துக் கிளறி பதம் வந்ததும் அடுப்பை விட்டு இறக்கி ஆறவிடவும். அது இறுகி பூட் பாலிஷாகிவிடும்.

கலர் பாலிஷ்

தேன் மெழுகு	... ½ அவுன்ஸ்
கார்னுபா மெழுகு	... 2 டிராம்
பொட்டாஷியம் கார்பனேட்	... 20 கிரெய்ன்
டர்பன்டைன்	... 14 டிராம்
தண்ணீர்	... 4 ,,
எண்ணெயில் கரையும் வர்ணம்	தேவையான அளவு

இரண்டு மெழுகையும் ஜல பாத்திரத்தில் தனித் தனியே உருக்கவும். தண்ணீரில் பொடாஷியம் கார்பனேட்டைக் கரைத்து அதில் முதலில் உருகிய தேன் மெழுகைக் கொட்டவும். டர்பன்டைன் எண்ணெயில் விருப்பமான வர்ணத்தைக் கரைத்து அதை சிறிது சிறிதாக முன் கூறிய கலவையில் சேர்த்துக் கிளறவும். எல்லாம் நன்ருக ஒன்று சேர்ந்ததும் ஆறவிடவும். அது இறுகி பூட் பாலிஷ் ஆகிவிடும்.

பெட்ரோல் கண்டுபிடிக்க புதியமுறை

உஸ்பெக் விஞ்ஞானக் கழகம் பூமிக்கடியில் எங்கெங்கே பெட்ரோல் இருக்கிறது எனக் கண்டறிய புதிய சுலபமான முறை ஒன்றை வகுத்திருக்கிறது. இப்பொழுது கையாளப்பட்டு வரும் முறை மிகக் கடினமானது. சிக்கலானது. செலவும் சிரமமும் மிகுந்தது. ஆனுல் உஸ்பெக் முறை சுலபமானது – செலவும் சிரமமும் குறைவானது.

பூமிக்கடியில் ஓடும் நீரூற்றுக்களின் நீரைச் சேகரம்செய்து இரசாயனக் கூறுபாடுசெய்து அதில் எவ்வளவு அயடின் அடங்கி இருக்கிறது, புரோமைடு எவ்வளவு அடங்கி இருக்கிறது என அறியவேண்டும். சாதாரணமாக பூமிக்கடியில் ஓடும் நீரூற்றுக்கள் எல்லாவற்றிலுமே புரோமைடு அயடின் இரண்டும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில்தான் அடங்கி இருக்கிறது. பெட்ரோலியம் ஆவி உள்ள பகுதிகளின் வழியாக வரும் நீரூற்றுக்களில் மட்டும் அயடின் அளவு அதிகமாகக் காணப்படுகிறது ஆகையால் அயிடின் சத்து வழக்கமானதைவிட அதிகமாக அடங்கியுள்ள நீரூற்றுக்களைத் தொடர்ந்தால் பெட்ரோல் உள்ள இடங்களை அது நமக்குக் காட்டிவிடும். பெட்ரோலும் பெட்ரோல் ஆவியும் சமுத்திர ஜீவ ஜந்துக்களிலிருந்து உற்பத்தியாகுபவை, ஆகையால் அவற்றில் அயடின் சத்து அதிகமாக அடங்கி உள்ளது.

நீங்கள் கேட்டவை

இருநூறு ரூபாய் மூலதனத்தில் ஏற்று நடத்தக்கூடிய சுலபமான சில சிறு தொழில்களைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

—ஏ. கிருஷ்ணசாமி,
சென்னை—1

இவ்விதமான தொழில்கள் பற்றிய விவரங்கள் அப்போதைக்கப்போது இப்பகுதியில் வெளியிடுகிறோம். தங்களுக்கு வசதியான ஏதாவதொன்றை தாங்கள் பெற்று நடத்தலாம். தங்களுக்கு ஏற்றதெனத் தோன்றும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொழில்பற்றி அதிகவிபரம் வேண்டுமெனின் அத்துறையில் நாங்கள் தங்களுக்கு உதவச் சித்தமாக இருக்கிறோம்.

சோப்பு செய்யும் முறையை அடுத்த் இதமான ஜனவரி இதழில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். மற்றும் எங்களுக்குத் தேவையான முகப்பூச்சுப் பவுடர், ஸ்நோ, வாஸலின் போன்றவைகளை தயாரிக்கும் முறைகளை பெண்கள் பகுதி அல்லது தொழில் துணுக்கில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

— டி. அமிர்த வள்ளி
— எம். லீலாவதி
— எம். தனலட்சுமி
— எ. அறிவுக்கொடி
மணச்சநல்லூர்,

சோப் செய்யும் முறைகள்பற்றி விரிவான விவரங்கள் வருகிற இதழ்களில் இப்பகுதியில் வெளியிடுகிறோம். பெண்களுக்குத் தேவையான அழகு சாதனங்கள் தயாரிப்பைப் பற்றிய குறிப்புகள் அப்போதைக்கப்போது பெண்கள் பகுதியில் சேர்க்கிறோம். வாஸலீன் தயாரிக்கும் முறை ஒன்றை இவ்விதழில் காணலாம்.

* * * *

இரண்டிமைப்பாகாகக் காய்ச்சுவது என்றால் என்ன? இரண்டிமைப்பாகு எப்படிக் காய்ச்சுவது என ஜனவரி இதழில் விளக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். பெண்கள் பகுதியில் பலகார வகைகள் மட்டுமே வெளியிடுகிறீர்கள். கத்திரி, வெண்டை இவ்விதம ஒவ்வொரு காய்கறியும் எவ்வெவ் விதங்களில் தயாரிக்கலாம் என்பதை வெளியிட்டால் பெண் உலகத்துக்கு மிக நன்மையாக இருக்கும்.

சாந்தாபாய்
திருச்சி

இரண்டிமைப் பாகு காய்ச்சுவது பற்றிய விவரங்கள் இவ்விதழில் சேர்த்திருக்கிறோம். காய்கறிபற்றி தாங்கள் தெரிவித்துள்ள பயனுள்ள கருத்தை நாங்களும் ஆமோதிக்கிறோம். கூடிய விரைவில் அவ்விதமான சமையல் குறிப்புகளை வெளியிட முயலுகிறோம். தங்கள் சிறந்த யோசனைக்கு மிகுந்த நன்றி.

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
GOKUL
SANTOL
TOILET POWDER
T.S.R'S
GOKUL
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

புதுமைப் பெண்

-பாலு-

"உடனே திருச்சி வா"—ரகு.

வந்திருந்த தந்தியைப் பன்முறை படித்த பின்னும் அந்த இரத்தினச் சுருக்கினுள் ஒளிந்துகொண்டிருந்த மர்மத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரே திகைப்பாக இருந்தது.

என் நண்பன் ரகுவை முதல் நாள் காலைதான் டம் டம் விமான நிலையம் சென்று வழியனுப்பி வந்திருந்தேன். கணக்குப்படி, அன்று சாயந்திரம் சேர்ந்திருப்பான் சென்னை. அங்கிருந்து மற்றொரு விமானத்தைப் பிடித்து எப்படியும் இரவு கழிவதற்குள் திருச்சியிலிருந்த அவன் வீட்டை அடைந்திருக்க வேண்டும். அப்படி அங்கு ஏதாவது நடந்து என் உதவி தேவைப்பட்டிருந்தாலும், தொலை தூரத்திலிருந்து அவ்வளவு சிக்கிரத்தில் கல்கத்தாவிற்குச் சேதி வர வழியில்லை.

சந்தேகம் கொண்டு தந்தியைத் திரும்பிப் பார்த்த எனக்குப் பகீரென்றது. பம்பாயிலிருந்து அடிக்கப்பட்டிருந்தது அத்தந்தி. கடைசியில்?...

ரகு என் பால்ய நண்பன். பத்து வருடங்களுக்கு முன் என் தந்தை திருச்சியில் உதவி கலெக்டராக இருந்தபொழுது, அவன் அப்பா அங்கு பெரிய இரும்பு வியாபாரியாக இருந்தார். திருவானைக்காவலில் பக்கத்துப் பக்கத்து வீடு. அப்பொழுது எனக்கு வயது பதினைந்து இருக்கும். என்னைவிட இரண்டு வயது சிறியவன் அவன்.

இரண்டு வருடங்களே நாங்கள் ஒன்றிப் பழகியிருந்தாலும், விண்டுப் பிரிக்க முடியாத அளவிற்கு எங்கள் உள்ளங்கள் ஒன்றை ஒன்று அந்தக் குறுகிய காலத்திற்குள் புரிந்துகொண்டுவிட்டன. எங்கள் நேசமே அக்கம் பக்கத்தவரின் பேச்சாக இருந்தது,

அப்பொழுது சுதந்திரப் போராட்டம் வெகு தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. சிறையிலிருந்து தப்பி வந்த தேசபக்தன் ஒருவனுக்குத் தஞ்சம் தந்த குற்றத்திற்காக என் தந்தையை தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கியிருப்பதாக அன்னிய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்ததும், போட்டிருந்த கோட்டைக் கழற்றி அதன் முகத்தில் வீசி எறிந்துவிட்டு, தயக்கத்தின் தாயகமாயிருந்த தமிழகத்தை மறந்து வீரர்களுக்குத் தஞ்சம் தந்த வங்காளத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டார் அவர்.

நீண்ட வருடங்களுக்குப் பிறகு கல்கத்தாவிலிருந்து யாத்திரை கிளம்பி திருச்சி வந்த நேரத்தில்தான் அவனைத் திரும்பச் சந்தித்தேன். முறைகெட்டு வேற்று நாட்டு வங்காளிப் பெண்ணை நான் மணந்துகொண்டது அவனுக்கு என்மேல் சொல்ல முடியாத கோபத்தை வளர்த்துவிட்டிருந்தது. அதன் காரணமாகவே அவன் என் திருமணத்திற்குக்கூட வரவில்லை.

முதலில் முகம் கொடுத்துப் பேசக்கூட மறுத்த அவன் பின் சபிதாவின் தூய தமிழையும், கள்ளங்கபடமற்று அவள் கை கொட்டிச் சிரித்துக் கலகலப்புடன் பழகிய விதத்தையும் கண்டு பழைய நண்பனுக மெல்ல மெல்ல மாறினுன். அங்கு பத்து நாட்களே நாங்கள் தங்கியிருந்தாலும், பத்து வருடங்கள் இடையே விட்டுப்போயிருந்த நட்பை இட்டு நிரப்பிக் கொண்டுவிட்டோம் வெகுதுரிதமாக.

எங்கள் விஜயத்தைத் திருப்பவே அவன் வந்து சென்றிருந்தான்.

நண்பனுடன் கூடிக் குலவும் மகிழ்ச்சி. ரகு ஓரிருவர் கண்ட வெற்றியைக் கண்ணுற்று, தானும் கொண்டுவந்திருந்த, எண்ணி எண்ணிச்சேர்த்துத் தந்தை விட்டுச்சென்றிருந்த பணத்தைப் பங்கு மார்க்கெட்டில்கொண்டு கொட்டிக் கூடை கூடையாக அள்ளப் போகிறேனென்று குறுக்கு வழியில் கிளம்பியதும் மறைந்துவிட்டது. இவனை எதற்காகப் பாவங்கள் நிறைந்த இப்பெரிய நகருக்கு வரவழைத்தேனென்று வேதனைப்பட்டேன்.

எப்படியோ பாதுகாத்து முதல் நாள் ஊருக்கு அனுப்பிவைத்து விட்டேன். இவன் எதற்காகப் பம்பாய் சென்ருன்? கல்கத்தாவிலிருந்து நேராகச் சென்னை செல்ல வேண்டியவன்தானே? அப்படித் தானே நான் டிக்கட் வாங்கித் தந்திருந்தேன்? இவன் எதற்காகப் பம்பாயிலிருந்து என்னைத் திருச்சி வரச்சொல்லித் தந்தி அடித்திருந்தான்?

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எல்லாம் குழப்பமாக இருந்தது. அவனை நேரில் காண்பதுதான் சரியென்று அடுத்த விமானத்தைப் பிடித்து சென்னை வந்து சேர்ந்தேன்.

எங்கள் விமானம் மீனம்பாக்கத்தை அடையுமுன் திருச்சி செல்லும் விமானம் சென்று விட்டிருந்தது. என்ன செய்வதென்று தெரியாது விழித்துக்கொண்டிருந்த எனக்குக் கல்கத்தாவிலிருந்து என்னுடன் கூட வந்த கல்யாண கோஷ்டியினர் அபயம் தந்தனர். அவர்களும் திருச்சிதான் செல்ல வேண்டியிருந்தது. "ஸ்பெஷல் பஸ்" ஒன்றைப் பிடித்துப் போய்ச் சேர்ந்தோம்,

ரகு அவன் பெற்றோருக்கு ஒரே பையன். கூடப்பிறந்தவர்களென்று ஒருவருமில்லை. இரண்டு உலக யுத்தங்கள் ஒரு இரும்பு வியாபாரிக்குத் தந்திருந்த திரண்ட செல்வத்தைத் தன் ஒரே மகனுக்குத் தந்து சென்றிருந்தார் அவன் தந்தை. இது நாள் வரை அவன் திருமணம் செய்து கொள்ளவில்லை. அதைப்பற்றி நாசூக்காக இரண்டொரு முறை பேச வாயெடுத்த நானும் அவன் சாதித்த மௌனம் கண்டு பேசாதிருந்துவிட்டேன்.

தில்லைநகரிலிருந்த அவன் மாளிகையை அடைந்தபொழுது காலை ஐந்து மணி இருக்கும். இன்னம் கருக்கல் இறங்கவில்லை. இரவு முழுதும் தூங்காது பஸ்ஸில் பிரயாணம் செய்தது பெருங்களைப்பைத் தந்திருந்தது. ரகுவின் மேலிருந்த பற்றுதலும், நண்பனுக்கு எப்படியாவது உதவ வேண்டுமென்றெழுந்த ஆர்வமும்தான் என்னை அப்படி சென்னையிலிருந்து உந்தித் தள்ளிக் கொண்டு வந்திருந்தது.

என்னைக் கண்ட அவன் அப்படியே கட்டித் தழுவிக்கொண்டான். "நீ நேற்று வராதது கண்டு எங்கே வராமல் இருந்துவிடுவாயோ என்று துடித்துப்போனேன்!" என்ருன் தழுதழுத்த குரலில்.

அவனை நான் உற்று நோக்கினேன். நாற்பத்தெட்டு மணி இடைவெளிக்குள் அவன் எப்படி மாறிப் போயிருந்தான்?

அவன் முகம் வெளிறி இரத்தம் செத்துக் கிடந்தது. கண்கள் நேராகப் பார்க்கக் கூசின. குரலில் வழக்கமான மிடுக்கிற்குப் பதில் என்றுமில்லா தடுமாற்றமும் சந்தேகமும் குடிகொண்டிருந்தன. கையும் காலும் நோயிலிருந்து அப்பொழுதுதான் வந்தவனை நினைப்பூட்டும் வகையில் நைந்து ஆடின.

"வா, எல்லாம் சொல்கிறேன்!" என்று என்னைத் தன் அறைக்கு இழுத்துச் சென்ருன் அவன்.

அவன் தன் மனக்கிலேசத்திற்குக் காரணம் பங்கு மார்க்கெட் அல்ல, தங்க விக்கிரகம் போன்ற ஒரு பெண்தான் என்று கூறியதும் 'கூத்தே!' என்று வந்த கோபம் மறைந்து சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. வெட்கத்துடன் தலைகுனிந்து உட்கார்ந்திருந்த அவனைப் பார்த்துக் கடகடவென்று நகைத்தேன்.

"அங்கே வந்திருந்தபோதே கூறியிருந்தால் என்ன?" என்று கேட்டேன், எரிச்சல் மேலிட. போட்டது போட்டபடி விட்டு ஓடி வந்திருந்தது எனக்கல்லவா தெரியும்?

அவன் கூறியது என்னை ஒரே சமயத்தில் வியப்பிலும், திகைப்பிலும் ஆழ்த்தியது. அவன் உள்ளங் கவர்ந்த கள்ளி செல்வி திருச்சியில்தான் இருந்தாள். ஓய்வு பெற்ற பேராசிரியர் ஒருவரின் செல்வ மகள். தாயற்ற பெண். அவன் சொன்ன விவரங்களிலிருந்தே அவள் ஒரு பேசும் பொற்சித்திரமாகத்தான் இருக்க வேண்டுமென்று யூகித்துவிட்டேன். அவள் அவனுக்கு வரைந்திருந்த கடிதங்களிலிருந்து அவன் மதிப்பிட முடியா பொற்சித்திரம் மட்டுமில்லை, மதிப்பை எதிர்க்கும் நுண் அறிவு படைத்த புதுமைப் பெண்ணென்றும் தெரிந்து கொண்டேன்.

ஒவ்வொரு கடிதத்திலும், ஏன் அக்கடிதங்களில் நின்ற ஒவ்வொரு வரியிலும், சொல்லிலும் அறிவு ஒளி வீசியது. அர்த்தமற்ற வார்த்தைகள் நேயங் கலந்து நெளியவில்லை. உணர்ச்சிகள் பெருகி, துயர் நிறைந்த வாழ்க்கைப் பாதையை வெள்ளி - வீதியாகக் காணும் இளமையின் அறியாமை இருக்கவில்லை. காதலைப் பெண்மைக்கு உயர்வு தரும் இலட்சியக் கண்களோடு நோக்கினாள், தாங்கள் அடைந்த அறிவை இருவருக்கும், இன்னம் பலருக்கும் தரும் ஓர் உயர்ந்த சேவையாகக் கருதினாள். காதலைக் கைத்தலம் பற்றுதல், கருவுருதல், கண்ணீர் சிந்துதலென்ற சொற்றொடர்களுக்குள் சிறை செய்யாமல், சிந்தித்தல், சிரித்தல், சீரழித்தலென்ற புதுமை எண்ணங்களுக்குள்ளடக்காமல் கடவுளின் தத்துவ விளக்கமாகக் கண்ணுற்றாள்.

அவளை நான் காணவிட்டாலும், இரண்டு கடிதங்கள் காணும் காலத்திற்குள் அவள் அவ்வளவு சீக்கிரத்தில் உயர்ந்து விட்டாள். ரகுவுக்கேற்ற மனையாட்டிதானென்று முடிவு கட்டினேன். அவளைக் காணத் துடித்தேன். ஆனால் அவன் அடுத்த கணமே வீசிய அணு குண்டு என்னை நிலைகுலைய வைத்து விட்டது. அவள் இன்று மறுக்கிறாளாம் அவனை மணக்க!

ஏன்? ஏன்?

அவனுக்குப் புரியவில்லை. காரணம் தெரியவில்லை. பத்து நாட்களுக்கு முன் பாணம் ஒன்றை வீசிவிட்டுப் பெற்றவருடன் பதுங்கி விட்டாள். அவளைத் தேடித்தான் வந்திருந்தான் கல்கத்தாவிற்கு, மூடனை என் கண்களை மூடிவிட்டுத் தேடியிருக்கிறான். கிடைக்கவில்லை. தன் சோகத்தை மறைக்கவே பங்கு மார்க்கெட்டில் விளையாடியிருக்கிறான். அவளைப் பற்றிய சேதியும் நான் கிளம்பியதும் ஒன்றாகச் சேர்ந்திருக்கின்றன. அவ்வளவுதான்.

தான் என்றுமே அவனைக் காதலித்ததில்லையென்றும், அவள் எழுதிய கடிதங்களெல்லாம் காதலைப்பற்றி அவள் கொண்ட கொள்கை விளக்கங்கள்தானென்றும், அக்கடிதங்களை அவன் திருப்பித்தர மறுத்தால் உயர்குலப் பெண்ணொருத்திக்காகக் கீழ்த்தரமாகக் கடிதம் எழுதிய குற்றத்திற்காகச் சட்டத்தின் பிடியில் ரகுநாதனைச் சிக்கவைத்து விடுவேனென்று ஆணவக்குரல் எழுப்பியிருந்தாள் அவள், தன் கடைசிக் கடிதத்தில்.

"இவ்வளவானபின் கடிதக் கட்டைத் தொலைத்து அவள் காதலுக்குக் கடைமுழுக்குப் போட்டு விடுவது தானே?" என்று நான் வினவியதும் அவன் என்னைக் கட்டிக் கொண்டு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதான். "அவளை நான் உண்மையாகவே காதலிக்கிறேன், நண்பா! அவள்



இல்லாது என்றால் வாழவே முடியாது; எனக்கு வாழ்வேகிடையாது!" என்று அவன் நெஞ்சு வெடித்துவிடும்போல் அலறியபொழுது நான் பட்டபாட்டை நட்பின் உயர்வு தெரிந்த உத்தம நண்பர்களால்தான் உணர முடியும்.

கடிதங்களைத் திருப்பித்தருவதற்குப் பதில், அவன் செல்வியைச் சந்திக்க முயன்றான். அவனைக்காண அவள் விரும்பவில்லை. சென்ற இடத்துக்கு அவனும் வந்துவிட்டது கண்டு அவள் பம்பாய் வந்திருக்கிறாள். அங்கும் விடாது தொடரவே வேறுவழியின்றி இருபத்து நான்குமணி இடைவெளி நோட்டீஸ் ஒன்று அவனுக்குக் கொடுத்துவிட்டு நிம்மதியாக வீட்டை நோக்கி வந்துவிட்டாள். எனவேதான் நான் வந்திருந்தேன்,

தான் அடைந்த அவமானத்தை வெளியே சொல்லிக்கொள்ள அவனுக்கு வெட்கம். அத்துடன் அந்த சாகசக்காரியைச் சந்தித்து அவள் . மனதை மாற்றிவிடலாமென்ற அசட்டு நம்பிக்கை வேறு. இரண்டும் உண்மையை உரிய காலத்தில் எனக்குச் சொல்லாமல் தடுத்து விட்டன.

இச் சிக்கலைத் தீர்த்து, இரு உள்ளங்களை எப்படிச் சேர்ப்பதென்றுதான் எனக்குப் புரியவில்லை. ஒருதலைப்பட்ட காதல் கீழ்த்தரமான காமம் என்று அவனுக்கு எவ்வளவோ முறைகள் எடுத்துச் சொல்லிய பின்னும், அவன் திரும்பத்திரும்ப செல்வி அவனை உண்மையிலேயே காதலிப்பதாகவும், அவளுடைய திடீர் மாற்றத்தின் காரணத்தை அறிந்து அவள் மனத்தை மாற்றுவது என் பொறுப்பென்றும் பரிதாபமாக வாதாடினான். ஒரு பெண்ணுக்கு மனிதனை இப்படி பித்தனாக்கிச் சீரழிக்கும் திறன் இருந்ததென்று நான் இதுவரை நினைக்கவேயில்லை.

எப்படியோ மனதைத் திடப்படுத்திக் கொண்டு புறப்பட்டேன். கிளம்பும்பொழுதே, வைரத்தை வைரத்தால் பொடிப்பதுதான் சரி என்ற திட்டத்துடனேயே புறப்பட்டேன். இருந்தாலும், எனக்குச் சில சந்தேகங்கள் இருந்தன. இருபதுக்குமதிகமான கடிதங்கள் எழுதும்வரை பேசாதிருந்துவிட்டு அவள் திடீரென்று திரும்ப என்ன நேர்ந்துவிட்டது? இதற்கு ரகுவால் பதில் சொல்ல முடியவில்லை. திணறினான்.

எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. எந்தக் கோணத்திலிருந்து தாக்கினால் என் கட்சிக்காரனின் நலன் அதிக பட்ச அளவிற்

குக் காக்கப்படுமோ அப்படி ஒரு வியூகம் அமைத்துக் கொண்டு போருக்குக் கிளம்பினேன். செல்லுமுன் ஒரு உறுதிமட்டும் ரகுவுக்குத் தர மறுத்துவிட்டேன். அவன் காதலுக்குத் தூது போகும் கிள்ளையாக இருக்க நான் சம்மதித்தாலும், அவள் ரகுவை விரும்பாத பட்சத்தில், மனிதன் மானத்தைக் காக்கக் கடைசியில் என்ன செய்வானே அதைத்தான் என்னால் செய்ய முடியு மென்று சந்தேமறத் தெரிவித்து விட்டேன்.

அவள் வீடு உறையூரில் இருந்தது. சிறிய வீடுதான். ஆனல், வெகு அழகாக வைக்கப் பட்டிருந்தது. காதல் ரசனையுடன் கலா ரசனையும் கொண்டவள்தான் போலிருக்கிற தென்று நினைத்துக் கொண்டேன்.

நான் சென்றபொழுது அவள் தந்தை வீட்டிலில்லை அவள் ஒருவள் மட்டுமே இருந்தாள். இளங்கோவின் கற்புக்கரசியும், சித்தலையின் நெறி நெருப்பும் ஒன்றுகிச் சுந்தர வடிவெடுத்துச் செல்வியாக என்முன் நின்று கொண்டிருந்தார்கள். அந்த சௌந்தர்ய தேவதையைக்கண்டு அப்படியே பிரமித்து நின்று விட்டேன்.

"வாருங்கள்!" என்று கரம் கூப்பி, செங்கனி இதழ்கள் விரித்து, முத்துப் பற்கள் மின்ன, மோகனப் புன்னகை ஒன்றைச் சிந்தி என்னை வரவேற்ருள் அந்தத் தளுக்குக் காரி. ஐயோ! இந்த ஆளைக்கொல்லும் அழகையா ரகு காதலித்தான்? அதிக அழகு அதிக ஆணவத்தின் இருப்பிடம், அழிவின் உறைவிடம் என்ற உண்மை ஏன் அவனுக்குத் தெரியாமல் போயிற்று? ஒன்றும் தெரியாதவன் நானென்று நினைத்துச் சிரிக்கும் அவளைச் சிரிக்க வைக்கிறேன்.

"உங்களை எனக்குத் தெரியும்! நீங்கள் மிஸ்டர் ரகுவின் நண்பர்! கடிதங்களைக் கொடுத்துவிட்டு, கடிதங்களைப் பெற வந்திருக்கிறீர்கள்!" என்ருள் அவள் அலட்சியமாக.

"அதுதான் இல்லை!" என்றேன் அழுத்தம் திருத்தமாக. புரியாது விழித்த அவள் நிலை எனக்கு உற்சாகத்தைத் தந்தது.

"உன்னுடன் சற்றுப் பேசவேண்டும்;" என்றேன் சமரசத்துக்கு இழுக்கும் சன்னக் குரலில்.

"நான் யாருடனும் பேசத்தயாராக இல்லை, கடிதங்கள் இல்லையென்ருல் இப்பொழுதே நீங்கள் இங்கிருந்து செல்லலாம் வெளியே!" என்ருள் அவள் வெடுக்கென்று.

"நான் போகத்தான் போகிறேன். ஆனல் ஒன்று மட்டும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். என் நண்பன் உன்னை மனதார காதலிக்கிருன். உன்னை வெறும் பெண்ணுக அல்லாது தன் தெய்வமாகத் தொழுகிருன் அவன். நீ இல்லையென்ருல் அவனுக்கு வாழ்வே இல்லை! அவன் உனக்கு என்ன கொடுமை இழைத்தான்? ஏன் அவனை இப்படிப் பித்தனுக்கிப் பின் பேயனுக்கியிருக்கிருய்? அவனை நீ ஏன் கண்டாய்? கண்டபின் ஏன் காதலை வளர்த்தாய்? பார்த்தபின் ஏன் அறுத்துக்கொண்டாய்? இதயத்திலே எழக்கூடாத ஆசைகளைக் கிளப்பிவிட்டு, குணம் கெட்டு இன்று வேடிக்கை பார்க்கும் நீயும் ஒரு பெண்ணு? நீ மானிடப்பேய்!" என்று அலறினேன் ஆத்திரம் மேலிட.

அவள் முகத்தில் சினத்தின் முன்னேடியான சிவப்புக் கோடுகள் சுருக்கிழுத்து நெளியவில்லை. நிச்சலனமாக இருந்தது. "சொல்லத்தான் வேண்டுமா?" என்று கேட்டாள். நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு விரக்தி ததும்பும் குரலில்.

"சொல்வது உன் கடமை!" என்றேன். குரூரமாகக் கொஞ்சமும் கருணையற்று.

அவள் நயனங்கள் தொலையாத தூரத்திற்கப்பால் புதைந்திருந்த எதையோ ஒன்றைத் தோண்டி எடுக்க முயன்றுகொண்டிருந்தன. அக்கண்களில் அசாதாரண ஒளி வீசியது. நாசியை நிமிர்த்தி உதடுகளை விரித்து "எனக்குத் திருமணத்தில் நம்பிக்கையில்லை!" என்று அவள் அச்சமின்றி அழுத்தம் திருத்தமாக உரைத்தது, என் புலன்களை அப்படியே நடுக்கிவிட்டது. செய்வதறியாது சில நிமிடங்கள் பிரமை பிடித்து நின்று விட்டேன்.

அவளுக்குத் திருமணத்தில் நம்பிக்கையில்லை! மஞ்சள் பூசித் திலகமிட்டு என்முன் நிற்கும் ஒரு குலப்பெண்ணிற்குத் திருமணத்தில் நம்பிக்கையில்லை. பெண்மைக்குப் பூரணத்வத்தைக் கொடுக்கும் புனித விழாவில் அவளுக்கு நம்பிக்கையில்லை.

பனி விலகிக் கொஞ்சம் கொஞ்சமாக உண்மை எனக்குப் புலப்பட ஆரம்பித்தது. உயர்வில் நம்பிக்கையற்று, உடலில் நெளிந்து வாழ விரும்பியவளை உன்னதத்திற்கு அழைத்திருக்கிருன் ரகு. உடைத்துக் கொண்டு விட்டாள். இதற்குத்தானு ஆண்டவன் அவளுக்கு இவ்வளவு அழகைத் தந்திருந்தான்? இப்படித் தன் மகள் சீரழிவதைக் கண்டு ஒரு தந்தை - வெட்கம், பேராசிரியத் தந்தை எப்படி வாளாவிருந்தார்? எங்கே அந்த மர்ம மனிதர்?

அவளே தொடர்ந்தாள்; "நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. ஆனல் நானும் ஒரு தமிழச்சி. தமிழ்த் தாயின் திருப்புதல்வி!" என்ருள் அவள் விம்மியவாறு. இப்படிப்பட்ட தமிழ்த் தாயின் தவப்புதல்விகள் பலரைத் திருச்சியில் எனக்குத் தெரியும் என்ருலும் கூறவில்லை.

"நான் அவரைக் காதலிக்கவில்லை!" என்ருள் அவள் நெஞ்சை நிமிர்த்தி.



"ஆனால் காதலைப்பற்றி மட்டும் வாரம் தவறாது என் நண்பனுக்கு எழுதிக் கொண்டிருந்தாய்?" என்றேன் ஏளனமாகச் சிரித்தவாறு.

அவளிடமிருந்து ஒரு பெருமூச்சுத்தான் பதிலாக வந்தது. "அதற்குள்ளென்ன காரணம்கூறினாலும் இந்த உலகம் ஏற்றுக்கொள்ளாதென்று எனக்குத் தெரியும்!" என்றாள் சோர்வு மேலிட. திடீரென்று அவள் தன்னை மறந்து உண்மையை உணர்ந்து பேசினாள்.

"அப்படித் தெரிந்த பின்னுமா மிரட்டினாய்?"

"மிரட்டினால் விலகிச் சென்றுவிடுவாரென்று நினைத்தேன்; என்னை மறந்துவிடுவாரென்று எண்ணினேன்..."

ஒவ்வொரு சொல்லையும் சீர் தூக்கி நிறுத்திச் சொன்ன அவள் குரல் திடீரென்று சூடு பிடித்தது, "என்னை அவர் மிரட்டுமளவிற்கு அக் கடிதங்களில் ஒன்றுமில்லை. கடிதங்களைக் காட்டி என் காதலைப் பெற்றுவிடலாமென்று அவர் நினைத்தால், அதில் நிச்சயம் ஏமாந்துதான் போவார்! சட்டமோ, நீதியோ, என்னைக் குற்றம் சொல்ல நண்பரே அக்கடிதத்தில் ஒன்றுமேயில்லை!" என்று சொல்லிவிட்டுத் தன்னைத் தானே தட்டிக் கொள்ளும் அட்டகாசச் சிரிப்பு சிரித்தாள்.

"அது எனக்குத் தெரியும்!" என்று கூறி அவள் குதூகலத்திற்கு முத்தாய்ப்பு வைத்து விட்டுச் சொல்லலுற்றேன். "இதோ பார்! இங்கு வருவதற்கு முன்பு, தூதில் தோற்று விட்டால் நண்பனை வருத்தியதற்கு வன்மம் தீர்த்துக்கொள்ளும் பொருட்டாவது உன்னைச் சந்தியில் இழுத்து சிரிக்கவைக்க நீ எழுதிய கடிதங்களைப் பயன்படுத்திக் கொள்ளுவதென்ற உறுதியோடுதான் கிளம்பினேன். ஆனால் இங்கு வந்து உன்னைக் கண்டு உரையாடியபின் என் வன்மம் வேண்டும் அளவிற்கு நீ உயர்ந்தவளல்ல என்று தெரிந்துகொண்டேன். எனவே ஒன்றை உனக்கு தெளிவாகச் சொல்லி விடுகிறேன். நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அக் கடிதங்கள் உன்னை வந்தடைவது உறுதி. ஆனால் அதற்கு மாறாக எனக்கு நீ ஒரு உதவி புரியவேண்டும். உன் திடீர் மாற்றத்திற்குக் காரணம் என்ன என்பதை மட்டும் சொல்லிவிடு. நீ என்ன கூறினாலும், அக் கடிதங்களை அவனுக்கு ஆசையினால் உந்தாது வெறும் பாடம் சொல்லித்தரும் வகையிலேயே எழுதியதாகக் கூறுவதை நான் நம்பமாட்டேன். எனக்கும் சிறிது உலக அனுபவம் இருக்கிறது, உன்னை விட. அது உண்மையில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். பிரிவு ஏற்பட்டதற்குக் காரணம் என் நண்பனாக இருந்திருக்கும் பட்சத்தில், அவன் தவற்றிற்குப் பிராயச்சித்தம் செய்வதோடு அத்தவற்றிற்கு என்ன தண்டனை தருகிறாயோ அதை அவன் ஏற்றுக் கொள்ளவும் சித்தமாயிருக்கிறான். அதைப் போலவே அவன் உன்மன மாற்றத்திற்குக் காரணம் இல்லை என்று மட்டும் தெரிந்து கொண்டால் நான் எவ்வளவு மகிழ்ச்சியடைவேன் தெரியுமா? அவனைப் பழைய ரகுவாக்க அதுவே எனக்குப் புதிய சக்தியைத் தரும்: அவன் மனிதனாக வாழ நீ உதவ வேண்டும். உள்ளத்தை மாற்றிவிட்டு உன்மத்தனாக வாழ அவனை விட்டுவிடாதே! சொல்ல நீ கடமைப் பட்டிருக்கிறாய்! சொல்லி எனக்கு உதவிபுரிவாய் என்று நினைக்கிறேன்!" என்று படபடப்புடன் என் மனத்தில் தோன்றியதை வார்த்தைகளாகக் கொட்டினேன்.

மெல்லக் கனைத்துச் சொல்ல ஆரம்பித்தாள். "ஆம்; கூற நான் கடமைப் பட்டவள்! சொல்வதில் தவறில்லை; சொல்கிறேன். அவரைக் காதலித்தது மெய்தான். அவரைத் தவிர வேறு ஒருவரை நான் மனதாலும் நினைத்ததில்லை. இந்த வாழ்வு உள்ள வரையில் என் உள்ளத்தில் மற்றவருக்கு இடம் கிடையாது. சலனமுற்றுத் திசை திரும்பி நான் ஓடுவதாக நீங்கள் நினைப்பது ரொம்பத் தப்பு.. உண்மையைக் கூற வேண்டுமானால் அவரை நான் வெறுக்கவில்லை. இன்னமும் நேசிக்கிறேன்—ஆம், முற்றிலும் மாறாக... இந்த உலகின் மேல் எழுந்த அருவருப்பே என் மாற்றத்திற்குக் காரணம். காதல் பொய்! வாழ்வு பொய்! எல்லாமே பொய்! காதல் பாவங்களின் முகத்துவாரம்! அழிவின் இருப்பிடம்! அது ஆலகால விஷம்!"

உணர்ச்சி உச்சாணிக் கிளையில் நின்று கிறீச்சிட்ட அவள் வார்த்தைகளைக் கேட்ட நான் சமைந்து போனேன். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற எழிற்சித்திரம் பேசும் பேச்சா இது? கடைசியில் உண்மையிலேயே அவள் ஒரு சோதிவீசும் சுடர்க் கொடிதானா?

பெரும் புதுமையாக இருந்தது. மணிமேகலா தெய்வமே முன் நிற்பதைப் போலிருந்தது.

"வாழ்வைத் துறந்து விட்டீர்களா?" என்று கேட்டேன் நடுக்கத்துடன், புதிதாக எழுந்த மரியாதை ஊடலாட.

"வாழ்வதற்கு என்ன இருக்கிறது?" என்று கேட்டாள் அவள் விரக்தி மேலிட

ஆணித்தரமான கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிப்போனேன். "பலன் இருக்கிறது இல்லை என்பதைப்பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. நம் பெரிய

வர்களெல்லாம் அப்படித்தான் வாழ்ந்திருக்கிறார்கள். அப்படித்தான் நாமும் வாழவேண்டும். அப்படி அவர்கள் வாழ்ந்ததால்தான் நம்மால் வாழமுடிகிறது. வாழ்வைப் பற்றிப் பேசவும் முடிகிறது" என்றேன் ஒருவாறு சமாளித்துக் கொண்டு.

"ஒருவர் தவறிவிட்டார் என்பதற்காக நாமும் தவற வேண்டுமா? நான் எல்லாவற்றையும் வெறுக்கிறேன்! எனக்குக் காதலில் மட்டுமில்லை, வாழ்க்கையிலேயே நம்பிக்கையில்லை!"

"உங்கள் அழகு வீணாவதா? ஒருவருக்கும் பயன்படாது போவதா?" என் உள்ளத்தில் வேரூன்றி, நாவில் நின்று துடித்துக் கொண்டிருந்ததை என்னால் வெட்டிக் கீழ்தள்ள முடியவில்லை, வார்த்தைகளாக வந்து விட்டன.

"அழகு! குதறி எறியப் பயன்படும் சதைக் கற்றைகள்! இந்த உடல் நரமாமிசம் புசிக்கும் அரக்கர்களான மனிதர்களுக்கு இரையாக வேண்டுமென்று விரும்புகிறீர்களா? முதலில் என் உள்ளம் இரையாகட்டும்! சதையில், எலும்பில், அசைவில், உருவில், உடையில் அழகென்று வடிவெடுத்தவன் அழியத்தான் வேண்டும். அழியத்தான் போகிறான்! அப்படிப்பட்ட அழிவில் பங்கு கொள்ள எனக்கு விருப்பமில்லை! ஒதுங்கி நின்று ஓலமிடும் சமூகத்தைக் கண்டு வேடிக்கை பார்க்கவே விரும்புகிறேன்" என்றாள் அவள் குரூரமாக. மெய் அறிவின் ஒருகோடி, உலக உய்வு என்றால், மற்றொரு கோடியான அழிவைத் துரிதப்படுத்தும் அகந்தையென்ற நிலையில் நின்று கொண்டிருந்தாள் அவள்.

என் வாதிடும் திறமை முழுவதும் விழலுக்கிறைத்த நீராவதற்குத்தான் பயன் பட்டது. அவள் உறுதியை இம்மியளவுகூட அசைக்க அதனால் முடியவில்லை. நண்பனுக்காக வாதிட வந்த இக்கட்டான நிலைமாறி, அவன் வாழ்விற்காக அவளிடமே போராட வேண்டிய விசித்திர நிலைக்கு வந்து விட்டேன் நான்.

"உலகம் காணாத புதுமையாக இருக்கட்டும்! இதுவே மக்களின் கண்களைத் திறக்கும் மருந்தாக இருக்கட்டும்!" என்றாள்.

அவள் கடைசியாகக் கூறிய வார்த்தைகள், ஆண்டவன் கோயில் மணி அடித்து ஓய்ந்த பின்னும் குதூகலம் தந்து இனிய மயக்கத்திலாழ்த்து வதைப்போல் வெகு நேரம் வரை ரீங்காரமிட்டுக் கிளுகிளுப்பைத் தந்து கொண்டிருந்தன.

தில்லை நகர் திரும்பி வந்த எனக்கென இன்னொரு வியப்பு காத்துக் கொண்டிருந்தது. அங்கே ஹாலில் உட்கார்ந்து ரகுவுடன் வெகு சுவாரசியமாக உரையாடிக் கொண்டிருந்தார் செல்வியின் தந்தை.

என்னைக் கண்டு அவர் பெரிதாக ஒரு கும்பிடு போட்டார். என் தொங்கிய முகம் தோற்று வந்ததைச் சொல்லியிருக்க வேண்டும். என்னைப்பற்றி ஆவேசத்துடன் உலுக்கினான் ரகு.

அவருக்குத் தன் மகள் போக்கு பிடிக்கவில்லை. செல்வி ரகுவை மணப்பதையே விரும்பினார். தன் தோழி ஒருத்தி வாழ்க்கையில் ஏமாந்து வாழ்வை வீணாக்கிக் கொண்டது அவளை அப்படி மாற்றி விட்டது. என் வருகையை எப்படியோ அறிந்த அவர் என்னைக் காண்பதற்காகவே வந்திருந்தார். நான் முன்னதாகவே சென்றுவிட்டேன்.

நாங்கள் எவ்வளவோ முயன்றும், செல்வியை இகவாழ்வைத் துறந்து துறவியாவதிலிருந்து தடுத்து நிறுத்த முடியவில்லை. இராமகிருஷ்ண மடத்திற்குத் தன் செல்வமனைத்தையும் எழுதிவைத்து விட்டுத் தானும் துறவுக்கோலம் பூண்டு விட்டாள் ரகு, அவளிடம் வெற்றி காணாத நான், ரகுவுடன் வாதிட்டு வெற்றி காண விரும்பவில்லை. அதுவே அவன் மனத்திற்குச் சாந்தியைத் தருமென்று விட்டுவிட்டேன்.

ஐந்து வருடங்கள் எப்படியோ உருண்டு, என் நினைவிலிருந்து ரகுவையும், செல்வியையும், நினைக்கக் கசந்தஅவர்கள் வாழ்வையும் முழுக்க அசற்றிவிட்டிருந்தேன். அந்தக் குறுகிய காலத்திற்குள் தினம்மாறி ஒருவரை ஒருவர் அடித்து எரிந்து கொள்ளும் வங்காள அரசியலில் எப்படியோ ஒரு பெரும் புள்ளியாகிவிட்டேன்.

சர்க்காரைக் கவிழ்க்கப் பெரிய இயக்கமொன்று நடத்திக் கொண்டிருக்கையில் ஒரு நாள் தொண்டனொருவன் என்னிடம் வந்து சேதி ஒன்று கூறினான். அதைக் கேட்ட நான் திடுக்கிட்டேன். கல்கத்தாவிற்குப் பக்கத்திலிருந்த ஜாதவ்பூர் என்ற சிறு கிராமத்தில் சந்நியாசி ஒருவனும், பெண் துறவி ஒருத்தியும் சண்டிதேவியின் சந்நிதியில் தகாத வாழ்வு நடத்தியதைக் கண்டு பிடித்துவிட்ட கிராம மக்கள் பெருங் கொதிப்படைந்திருப்பதாகவும், அதனால் அங்கிருந்து கல்கத்தாவிற்கு வரவேண்டிய 'ஜதா' வராதென்றும் அவன் அறிவித்தது என்னைப் பெரிய சிக்கலில் கொண்டு விட்டு விட்டது. என் ஜாதவ்பூர் தொண்டர்களை நம்பித்தான் அந்த இயக்கத்தையே உருட்டி விட்டிருந்தேன்.

எரிமலையெனக் குமுறினேன், "வெறும் முட்டாள்கள். சந்நியாசிகளைச் சுட்டுத் தள்ளி விட்டு வருவதற்கென்ன இங்கே?" என்று சீறினேன்.

"நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன்? அவர்கள் கேட்பதாக இல்லை. தலைவர் நீங்கள் வந்து சொன்னால் உபயோகமாக இருக்கும்!" என்றான் அவன் கைகட்டி, வாய் புதைத்து.

வேண்டா வெறுப்பாகக் காரில் ஏறிக் கொண்டு ஜாதவ்பூரை நோக்கிப் புறப்பட்டேன். ஊருக்கு வெளியே இருந்த காளி கோயிலின் முன் கிராமமே திரண்டிருந்தது. என்னைக் கண்ட மக்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர். நீதிதேவனே வந்துவிட்டதாக வான்பிளக்கக் கூவி. என் வருகைதந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

கோயிலுக்கெதிரேயிருந்த மண்டபமொன்றில் தூணுக்கு ஒருவராக அந்த இரு துறவிகளும் கட்டப்பட்டிருந்தனர். மக்களின் ஆத்திரம் இரத்தமாகவும், வெற்றிலைச் சாறாகவும் அவர்கள் உடலிலிருந்து வழிந்துகொண்டிருந்தது. நினைவற்றுத் தலைகள் தொங்கிப் போன நிலையிலிருந்த அவர்களைக்கண்ட எனக்குப் பீதியாகப் போய்விட்டது. இறந்துவிட்டார்களென்றே எண்ணிவிட்டேன்.

அவசரம் அவசரமாகத் தளைகளை அறுத்து அவர்களை விடுவித்துவிட்டு, ஆண் சந்நியாசியின் முகத்தைத் தூக்கிப் பார்த்த நான் வியப்புடன் கூச்சலிட்டேன். அவன் என் பழைய நண்பன் ரகு!

அவள்?... இம்முறை நான் ஏமாறவில்லை. அவள் செல்விதான்! தவறக் கூடாதென்று துறவு பூண்டுவிட்டுக் கடைசியில் தவறிவிட்டார்கள்.!

புத்திசாலிகளான வங்காளிகள் தலைவனுக்குத் தெரிந்தவர்கள் அவர்களென்று தெரிந்ததும் ஒன்றும் தெரியாதவர்கள் போல் மெல்ல நழுவினார்கள். "அவருக்கு இதில் சம்பந்தமில்லை. எல்லாம் என் தவறுதான்" என்று முகத்தை மூடிக்கொண்டு அழுதாள். அவள். அந்த இடைக்காலம், அந்தக் காலம் தந்த விரதம், நோன்பு, பட்டினி இவைகள் அவள் வனப்பை இன்னம் கூட்டியே இருந்தன. உருக்கி வார்த்த தங்கச் சிலையாக இருந்தாள். உடுத்தியிருந்த காவி வஸ்திரம் ஒன்றுதான் அவள் துறவி என்று சொல்லியது. அப் பதவியையும் துறந்திருந்தாள் இப்பொழுது.

தோல்வியும், ஏக்கமும் ரகுவைத்தான் நன்றாகப் பதம் பார்த்திருந்தன. எண்ணெய் காணாத கேசமும், கத்தி காணாத முகமும், ஒன்றையும் காணாத கண்களும் காண்பதற்கே பயங்கரமாக இருந்தன. ஒட்டி உலர்ந்த உடலும், அதில் ஒட்டிக் கொண்டிருந்த குச்சிக் கைகளும், கால்களும் அந்த பயங்கரத்திற்குப் பூரணத்துவம் தந்து கொண்டிருந்தன.

உலகப் பிரசித்திபெற்ற தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டு தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேலை செய்வதை உணருங்கள் . . . வேதனையைக் குறைக்கவும் கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது.

பெப்ஸ்

தொண்டை மற்றும் மார்பு உபாதைகளுக்குக் குணம் அளிக்கும் வில்லைகள்

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

PPY-56-TAM

சோல் ஏஜண்டுகள்:
தாதா அண்டு கம்பெனி
86, நைனியப்ப நாய்க் தெரு — சென்னை-3

"வாழ்வின் இன்னல்களுக்குத் துறவுகோல் துறவறம் ஒன்றுதான் என்று நம்பி அதை ஏற்றுக் கொண்டேன். ஆனால் ஐயகோ! அங்கு நான் கண்ட இழிமை? பாவங்களில் மக்கள் உழல்வது தெரிந்து அவர்கள் தொடர்ந்து பாவங்கள் புரிவதைச் சகித்துக் கொள்ளலாம், ஆனால் பவித்திரத் தன்மை அடைந்தவர்களென்று கூறிக்கொண்டு, பாவிகள்கூடச் செய்யக் கூசும் பயங்கரங்களைப் பலர் புரியக் கண்டேன், அந்தப் புனித உலகில். புலன்களைக் கட்டுப் படுத்தாதவர்கள், கட்டுப்படுத்த இயலாதவர்கள், கட்டுப் படுத்தத் தெரிந்தும் தவிப்பவர்கள் இப்படி இங்குபோல் அங்கும் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்! அவர்கள் கட்டுப்பாடான வாழ்க்கைக்குத் தேவையான துறவறத்தில் புகுந்து தங்களைக் கட்டுப்படுத்த எவ்வளவு வழிகளைக் கையாள்கிறார்கள்? உணர்ச்சிகளை மறக்கடிக்க, தன்னையே மறக்கடிக்கும் மதுவும், கஞ்சாவும், ஒரே இனப் புணர்ச்சியும், இன்னம் இயற்கைக்கு விரோதமான அவ்வளவும் கட்டுப்பாடென்ற பெயரின் கீழ உருமாறுவதை இக்கண்களால் கண்டேன். தன்னை அடக்கத் துறவு என்பதை மறந்து, தன்னை விளம்பரப்படுத்தவே அப்புனித வாழ்வென்று, எதை வெறுத்து வந்தார்களோ அதில் திரும்ப உழலும் சந்நியாசிகள் பலரையும் நான் அங்கு கண்டேன், ஐயகோ! உண்மையானவர்கள் ஓரிருவர் இருந்தது மெய்யே. ஆனால் அவர்கள் என்னைக் கண்டு ஓடிய ஓட்டம்! பெண் நச்சு நாகமென்று என்னை அவர்களிடையே ஏற்றுக் கொள்ளவே மறுத்தார்கள். பின் எப்படி ஏற்றம் காண்பேன்? ஏற்றுக் கொள்ள வேறு சிலர் இசைந்த போதிலும் தங்கள் இச்சைகளைத் தீர்க்க முதலில் இசைவு வேண்டினார்கள். என் பவித்திரம் பாழாகாது காக்க பல மூலிகைகள் இருப்பதாக உத்தாரம் கூறினார்கள்... நான் எப்படி வாழ்வேன்? தெவிட்டாத இன்பத்தை, அமைதியை, புனிதத்தைத் தேடிவந்த நான் தோற்று விட்டேன்! என் செய்வேன்? திகைத்தேன்; தடுமாறினேன்; அறிவுகேட்டு ஆண்டவனைத் தொழுதேன். அருணோதயம் எழும் காலை ஒன்றில் அறிவு உதயமாயிற்று. பெண்ணுக்குத் துறவறம் பொருந்தாது. பெண்மைக்கு விரோதமானது இவ்வாழ்வு. பெண்மைக்கு நிறைவு தருவதற்குப் பதில் சூனியத்தில் தள்ளிச் சிதைத்துவிடும் கோலம் அதென்று தெரிந்து கொண்டேன். அவள் ஒருவளாலேயே உலகுக்கு அளிக்க முடியும் கடமையான தாய்மைதான் சிறந்ததென்று தெளிவு பெற்றேன். பதைபதைக்கும் நெஞ்சத்துடன் என்னவரைத் தேடி அலைந்தேன். அப்பொழுதெல்லாம் என்னைக் காப்பாற்றியது இந்த உடைதான். நேற்று முன்தினம் நதியில் நீராடிக் கொண்டிருக்கையில் கூக்குரலொன்று கேட்டது. நீரில் விழுந்து தற்கொலை செய்து கொண்டுவிட்டார் ஒருவர் என்று அறிந்ததும் நெகிழ்ந்து நீந்தி அவரைக் காப்பாற்றினேன்! ... நாங்கள் இன்று வரை தவறவில்லை. தேவியின்முன் எங்கள் போலி வாழ்வை உதறிவிட்டுப் புதுவாழ்வு ஏற்றுக்கொள்வதென்று அருகிலிருந்த கிராமமான இங்கு வந்தோம். செய்த தவற்றிற்குத் தண்டனை தராத மக்கள், செய்யாத "தவறொன்றைக் கண்டுபிடித்துத் தண்டித்துவிட்டார்கள்!..." என்று கண்ணீர் வடித்தாள் அவள்.

அரசியலில் உரசியிருந்தாலும் என் உணர்ச்சிகள் இன்னம் மறத்துப்போகவில்லை. மறந்து போனவர்களைக் கண்டதால் எழுந்த மகிழ்ச்சியும், அவர்கள் மாறிவிட்டதால் உண்டான உற்சாகமும் கட்டளைகளாக உருவெடுத்தன. பத்தே நிமிடங்களில் அவர்கள் திருமணம் எல்லோரையும் இயக்கும் ஈசுவரியின் சந்நியின்முன் இனிது முடிந்தது.

கண்டாமணி ஒலிக்க, ஆசிவேண்டி என் பாதங்களில் விழுந்து எழுந்த அந்த விசித்திரத் தம்பதிகளைக்கண்ட என் நா தழதழத்தது. உணர்ச்சி வெள்ளம் என்னைத் தன்னுள் அழுத்திக்கொண்டது. பெருவாழ்வு வாழ ஆசி கூறுவதற்குப் பதில், கண்களில் நீர்மல்க 'தாயே' இப்பயங்கர புதுமைப் பரீட்சையிலிருந்து உலகைக் காப்பாற்று!' என்றே வேண்டிக்கொண்டேன், முன் நின்ற சக்தி தேவியைப் பார்த்து.

புதுமை புதுமையென்றலையும் இவ்வுலகம் இப்புதுமையில் இறங்காதென்றே நம்பலாம். அப்படி நுழைந்து விட்டால்?......

சிறுவர் பகுதி

எஸ். விசாலாட்சி

தெரிந்து கொள்ளுங்கள்

நம் நாட்டில் ஷஹிதன், பன்னு, பகனி, மஜ்காம் ஆகிய நான்கு இடங்களில் வைரச் சுரங்கங்கள உண்டு. இந்த நான்கு இடங் களும் மத்தியப் பிரதேசத்தின் வடக்குப் பகுதியில் உள்ளன.

ஆந்திராவின் தலைநகரான ஹைதரா பாத்தை ஸ்தாபித்தவர் குலிகுதுப் என்பவர். அவர் அங்கே பாதேர்கட்டி என்ற இடத்திற் குத் தெற்கே நான்கு கோபுரங்களை கட்டி யுள்ளார். இதற்குச் 'சார்மினர்' எனப்பெயர். குதுப் கட்டியதால் இதற்கு 'குதுப்மினர்' என மற்றொரு பெயரும் வழங்குகிறது.

ஆஸ்ட்ரேலியாவில் பூனை அளவு பெரியதி லிருந்து ஏழடி உயரம் வரை பல உருவில் மொத்தம் சுமார் முப்பது ஜாதிகள் கங்காரு வில் உண்டு.

இப்பொழுது சீன ஆக்கிரமிப்புக்கு உள் ளாகியுள்ள லடக் பகுதிக்கு வடக்கே உள்ள சீனமாகாணத்துக்கு சிகியாஸ் எனப் பெயர். இதைச் சீன துர்க்கிஸ்தானம் எனவும் கூறுவர். ஆதியில் நம் நாட்டின் பகுதியாக இருந்தது இது. பதினான்காவது நூற்றாண்டு வரை அங்கே இந்தியர்களே வாழ்ந்தார்கள் என்பதற்கு சரித்திர ஆதாரங்கள் உள்ளன.

படியுங்கள்! சிரியுங்கள்

உபாத்தியாயர்:– நீ பெரியவனானால் என்னவாக ஆக ஆசைப்படுகிறாய்?

மாணவன்:– ஒட்டைச்சிவிங்கியாக ஸார்!

உபாத்தியார்:– ஏன் அப்படி!

மாணவன்,– அப்பொழுது நீங்கள் என் குடுமி யைப் பிடித்து ஆட்டமுடியாதல்லவா?

* * * *

தகப்பனார்:– நேற்று நீ பள்ளிக்கூடம் போக வில்லையாமே!

பையன்:– உபாத்தியாயர் ஆஸ்பத்திரியில் மருந்து வாங்குவதைப் பார்த்தேன். அவ ருக்குத்தான் உடம்பு சரி இல்லையே. ஸ்கூ லுக்கு வரமாட்டாரே, நாம் போய் என்ன செய்வது என்று நான் போகவில்லை அப்பா!

* * * *

சோமு:– ராமு! உன் பையைக் கொஞ்சம் கொடேன். நான் ஊருக்குப் போய்விட்டுக் கொண்டுவந்து தந்து விடுகிறேன்.

ராமு:– அதில் என் பெயர் எழுதி இருக்கிறதே யாராவதுகேட்டால் என்ன சொல்லுவாய்?

சோமு:– அதனாலென்ன! ராமு என்றிருப் பதை ராமு அன்பளிப்பு என அதோடு எட்டு எழுத்து சேர்த்து எழுதிவிட்டால் போகிறது.

தீயணைக்கும் படையில் வேலை கேட்க வாலிபன் ஒருவன் போனான்.

தீயணைக்கும் படை அதிகாரி:— இப்பொழுது நீ நிற்கும் இடத்தில் திடீரெனப் தீப்பிடித்துக் கொண்டுவிட்டது என வைத்துக்கொள். அப்பொழுது என்ன செய்வாய்?

வாலிபன்:—அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் ஸார்! பள்ளிக்கூடத்தில்நடந்த எல்லா ஓட்டப் பந்தயங்களிலும் நான்தான் முதல் பிரைஸ் வாங்கி இருக்கிறேன்.

யார் சொல்லுவது சரி?

(1) பூமத்திய ரேகை என பூமியின்மேல் எதுவும் கோடு கிடையாது. அது ஒரு கற் பனைக் கோடு என்கிறாள் ராதா. இல்லை அது உண்மைக் கோடுதான் என்கிறாள் சீதா. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(2) இந்திய பாதுகாப்பு மந்திரி கிருஷ்ண மேனனுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு என்கிறான் ராமமூர்த்தி. மூன்று குழந்தை கள் உண்டு என்கிறான் கிருஷ்ணமூர்த்தி. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(3) மேற்குத் தொடர்ச்சிமலையில் புலிமலை (டைகா ஹில்ஸ்) என ஒரு பகுதி உண்டு. அங்கே புலிகள் ஏராளம் என்கிறான் நாக ராஜன், புலிமலை என இந்தியாவில் எதுவும் கிடையாது. ஆப்பிரிக்காவில் தானிருக்கிறது. புலி அங்குதான் ஏராளம் என்கிறான் தர்ம ராஜன். இவர்களில் யார் சொல்லுவது சரி?

(4) ஏப்ரல் முதல் தேதியிலிருந்து புதி தாகப் பிரியப்போகும் குஜராத் ராஜ்யத்தில் 12 ஜில்லாக்கள். மஹாராஷ்ட்ர ராஜ்யத் தில் 24 ஜில்லாக்கள் இருக்கும் என்கிறாள் ரமா. இல்லை குஜராத் ராஜ்யத்தில் 16, மஹாராஷ்ட்ர ராஜ்யத்தில் 20 ஜில்லாக்கள் இருக்கும் என்கிறாள் உமா. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(5) உலகில் வேறு எங்கும் சிங்கமே கிடை யாது. நம் நாட்டுக் காடுகளில் மட்டும்தான் உண்டு. அதுவும் எல்லாக் காடுகளிலுமாக மொத்தம் 120 சிங்கம்தான் உண்டு என்கி றான் பொம்மன். நம் நாட்டில் சிங்கமே கிடை யாது. ஆப்ரிக்காவில்தான் உண்டு என்கி றான் தம்மன். யார் சொல்லுவது சரி?

ஆத்ம தண்டனை

திருவனந்தபுரத்துக்குத் தெற்கே உள்ள பகுதிக்கு முன் காலத்தில் நாஞ்சில் நாடு எனப்பெயர். அங்கே முன்பு திருமாறன் என்ற பாண்டிய நாட்டுச் சிற்றரசன் ஒருவன்

ஆண்டுவந்தான். அவன் ஆட்சியில் திருட்டு பயம் என்பதே எங்கும் கிடையாது.

இப்படி ஆட்சி நடத்தி வந்த திருமாறன் நாட்டில், அதுவும் அவன் அரண்மனையி லேயே திருட்டு ஒன்று நடந்து விட்டது. ஆனால் திருடன் கையும் களவுமாக அகப் பட்டுக்கொண்டான். அவனுக்கு தானே தண் டனை அளிக்க அரசன் விரும்பவில்லை தன் அரச சபையை அதற்காக அழைத் தான்.

பிறகு சபையின் முன் வரிசையில் அமர்ந் திருந்த ராஜ புரோகிதரை நோக்கி "திருட னுக்கு என்ன தண்டனை விதிக்கலாம் என நீங்கள் கருதுகிறீர்கள்?" எனக் கேட்டான்.

புரோகிதர் தன் இருக்கை விட்டு எழுந்து நின்று மிகவும் பணிவாகக கூறினர்—

"அவனுக்கு தக்க தண்டனை ஆலடிப் பிள்ளையார் கோவிலை தினம் ஆயிரம் முறை வலம் வரவேண்டும் என்பதேயாகும். அவன் ஆயுள் உள்ளவரை தினம் இதுமாதிரி பிர தட்சணம் வரவேண்டும் இதுதான் அவ னுக்கு மிகச்சிறந்த தண்டனை"

அரசன் தன் பிரதான அமைச்சரின் கருத்தை அறிய விரும்பினன். அவர் சொன் னர்—

"அரசே! அவனுக்கு குறைந்தது பத்தாண் டாவது கடுங்காவல் தண்டனை விதிக்கவேண் டும். அப்பொழுதுதான் மறுமுறை இந்த குற் றத்தை திரும்பச்செய்ய அவன் துணியமாட் டான்.

அரசர் தன்னுடைய மற்ற அமைச்சர்கள், சேனபதி, சபையில் ஏனைய முக்கியஸ்தர்கள் ஒவ்வொருவரையும் அவரவர் கருத்தை அச்ச மின்றிதெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆனல் அவர்கள் எல்லோருடைய கருத்துக்க ளும் பிரதம அமைச்சரின் கருத்தையே ஆதரிப் பதாக இருந்தது. புரோகிதர் கருத்தை ஆமோ திப்பார் யாருமில்லை. அதனல் அரசன் திருட னுக்கு பத்தாண்டு கடுங்காவல் தண்டனை விதித்தான், சேவகர்கள் அவனைச் சிறைக் கூடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

திருமாறனுக்கு நெடுமாறன் என ஒரே மகன். நீண்டநாள் குழந்தையில்லாது வருந்தி இருந்த திருமாறனுக்கு முனிவர் ஒருவர் அருளால் பிறந்தவன் அவன்.

அன்று நெடுமாறனின் ஒன்பதாவது பிறந்த நாள் அதற்காக அந்த நாஞ்சில் நாடே விழாக் கோலம் பூண்டிருந்தது.

அன்று மாலை திருமாறனின் அரண்மனை நகரம் எல்லாம் ஒரே தீபாலங்காரம். அரசன் தன் சபையைக் கூட்டி வந்திருந்தவர்களில் முக்கியமானவர்களுக்கு தன் மகனின் பிறந்த நாளை ஒட்டி அரசன் பரிசுகள் வழங்கிக் கொண்டிருந்தான்.

அச்சமயம் திடீரென தாடியும் மீசையுமாக ஒருவன் சபை மண்டபத்துள் புகுந்தான். அவன் ஆடை அழுக்குப்படிந்திருந்தது. காவ லாளிகள் அவனைத் தடுத்தனர்.

"அவனைத் தடுக்கவேண்டாம். வரவிடுங் கள்" என்றுன் மன்னன்.

மண்டபத்துள புகுந்த தாடிக்காரன் அரசன் வீற்றிருந்த இடத்தை நோக்கி விரைந்தான்.

தாடிக்காரன் யாரையும் பொருட்படுத்த வில்லை. அரசனைக் கூட வணங்கவுமில்லை. மதிக்கவுமில்லை. புரோகிதரின் பாதத்தைத் தொட்டு வணங்கினன். தன் இடுப்பில் சொருகி இருந்த ஒரு முடிச்சை எடுத்து அவர் காலடியில் அவிழ்த்து வைத்தான். பத்தாண்டுகளுக்கு முன் அரண்மனையில் திருட்டுப் போன நகைகள!

"சுவாமி! நீங்கள்தான் என் கண்களைத் திறந்த தெய்வம். இனிநான் இந்தத்திருட்டுத் தொழிலுக்கே போகமாட்டேன்" என்றுன் தாடிக்காரன். அப்பொழுதுதான் அரசனுக்கு விஷயம் புரிந்தது. அரண்மனையில் திருடிய தற்காக பத்தாண்டுகளுக்கு முன்பு தான் தண் டித்த குற்றவாளியே அந்த தாடிக்காரன் என் பது அப்பொழுதுதான் அரசனுக்கு ஞாபகம் வந்தது. அங்கே அமர்ந்திருந்த பிரதம அமைச்சரும் மற்ற மந்திரிகளும் இதைப் பார்த்து திகைத்துப் போயினர்.

தாடிக்காரன் தன் காலடியில் வைத்த அரண்மனை நகைகளை எடுத்து அரசனிடம் நீட்டினர் புரோகிதர்.

"வேண்டாம்! அதை அவனுக்கே பிறந்த நாள் பரிசாகக் கொடுத்து விடுங்கள்" என்றுன் அரசன்.

"வேண்டாம் அரசே! எனக்கு ஆண்டவன் அளித்த பரிசாக என் கையிருக்கிறது. உடலில் தெம்பிருக்கிறது. உழைக்க ஊக்க மிருக்கிறது. ஆண்டவனளித்துள்ள இந்த பரிசுகளே எனக்குப் போதும். வேறு பரிசு கள் எதையும் நான் வேண்டேன்" எனக் கூறி விடுவிடுவெனச் சபையை விட்டு வெளி யேறி விட்டான் தாடிக்காரன்.

இதைப் பார்த்த அரசன் மட்டுமல்ல. அங்கு கூடியிருந்த அனைவருமே திகைத்துப் போயினர். அந்தத் திருடனை நல்லவனுகத் திருத்தியது அரசன் அளித்த பத்தாண்டு கடுங்காவல் அல்ல. பிள்ளையார் கோவிலைச் சுற்றவேண்டும் என்ற புரோகிதரின் வெறும் வார்த்தையே என்பதை அங்கு கூடியிருந்த அனைவரும் உணர்ந்தனர். அரசனும் உணர்ந்தான். தவறு செய்த மனிதனைத் திருத்த அவன் உடலை வருத்தும் தண்டனை யளிப்பது பயனளிக்காது. அவன் உள்ளத்தை வருத்தும் தண்டனை அளிப் பதே பயனளிப்பதாக இருக்கும் என்பது அரசனுக்குப் புரிய ஆரம்பித்தது. அன்று முதல் அவன் தன் நாட்டில் குற்றம் புரிபவர்களுக்கு அவர்கள் உடலை வருத்தும் கடுங்காவல் தண்டனை விதிப்ப தையே கைவிட்டுவிட்டான். புரோகிதருக்கு

வெகுவாகப் பரிசுகள் வழங்கி அவரையே தன் பிரதான அமைச்சராகவும் ஆலோசக ராகவும் ஆக்கிக் கொண்டான்.

குழந்தைகளே! உடலைவருத்தும் தண்டனை அளிப்பதைவிட உள்ளத்தை வருத்தும் தண்டனை அளிப்பதையே நீங்களும் உங்கள் வாழ்வில் வருங்காலத்தில் கடைப் பிடியுங்கள். அப்பொழுது தான் புரோகிதரைப் போன்று வாழ்வில் நீங்களும் உயர்வு பெறுவீர்கள்.

யார் சொல்லுவது சரி? (சரியான விடை)

(1) கீதா சொல்லுவதுதான் சரி. இத்தனை நாள் பூமத்திய ரேகை கற்பனைக் கோடாகவே கருதப்பட்டு வந்தது. ஆனால் சமீபத்தில் பூ பௌதிக ஆண்டில் பல நாட்டு ஆராய்ச்சி காரர்கள் அட்லாண்டிக், பசிபிக், இந்து மகா சமுத்திரங்களில் சோதனை நடத்திக் கடலடியில் கோடிட்டதுபோல் பூமியைச் சுற்றி திட்டு ஒன்று இருப்பதாகக் கண்டறிந்திருக் கிறார்கள். இந்தத் திட்டு கற்பனை பூமத்திய ரேகை அமைந்துள்ள கடல் பரப்புக்கு நேர் கீழே கடலடியில் அமைந்துள்ளதாம்.

(2) இருவர் சொல்லுவதும் தவறு. கிருஷ்ணமேனனுக்கு கல்யாணமுமில்லை, குழந்தைகளுமில்லை, அவர் பிரமச்சாரி.

(3) இருவர் சொல்லுவதும் தப்பு. புலிமலை என்பது இமயத்தில் டார்ஜிலிங் அருகே உள்ளது. கடல் மட்டத்துக்கு மேல் 8482 அடி உயரத்தில் அமைந்துள்ள இம்மலை உலகப் புகழ் வாய்ந்தது. அம்மலை உச்சியில் நின்று பனி மூடிய பிரதேசத்தின் ஊடே சூரியோதயத்தைப் பார்ப்பது மிக அற்புதமாக இருக்கும். இதற்காக உலகின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரீகர்கள் அங்கு வந்து போவதுண்டு. அங்கு இப்பொழுது புலி கிடையாது. முன் காலத்தில் ஒருவேளை மிகுதியாக இருந்திருக்கலாம்.

(4) இருவர் சொல்லுவதும் தவறு. புதிதாக அமையும் குஜராத் ராஜ்யத்தில் பதினாறு ஜில்லாக்கள் இருக்கும். மராத்தியர்கள் வாழும் ராஜ்யத்துக்கு பம்பாய் என்றே பெயர் தொடர்ந்து இருந்துவரும். அதில் 27 ஜில்லாக்கள் இருக்கும்.

(5) இருவர் சொல்லுவதும் தவறுதான். உலகில் இப்பொழுது இரண்டே இடங்களில் தான் சிங்கங்கள் உண்டு. நம் நாட்டில் குஜராத்தில் உள்ள கிர்நார் காடுகள். ஆப்பிரிக்காவில் சஹாராப் பாலைவனத்திற்குத்தெற்கே உள்ள புல்வெளிகள். இந்த இரண்டு இடங்களில் மட்டுமே சிங்கங்கள் உண்டு. 1956-ல் எடுக்கப்பட்ட கணக்குப்படி கிர்நார் காட்டில் மொத்தம் 290 சிங்கங்கள்தான் உள்ளன. அந்தக் காடு நீக்கி நம்நாட்டில் வேறு எங்கும் சிங்கங்கள் கிடையாது. ★

UMESH YOGA DARSHAN

உமேஷ் யோக தரிசனம்

(முதல் பாகம்)

ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராட்டி ஆகிய நான்கு மொழிகளில்

(ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்திரஜி எழுதியது.)

ஜீரணக்கருவி, நரம்பு, சுவாசகோசம், மூத்திர உறுப்புகள், மற்றும் வேறு அவயவங்கள் ஆகியவற்றைச் சீராக இயங்கவைக்கும் வழிவகைகளைக் கூறும் யோக சாஸ்திரத்தின் உண்மையைப் பற்றிய அருமையான விளக்கம். யோகம், இயற்கை வைத்தியம், ஜீவாணுக்களின் இயல்பான வல்லமை, மனத்தத்துவச் சிகிச்சை முதலியவற்றின் வாயிலாகப் பல வேறு நோய்களை முற்றும் குணப்படுத்தமுடியும் என்பதை, 108 அசல் யோகாசனப் படங்கள் நிரம்பிய இந்த நூல் நன்கு விளக்குகிறது. ஒவ்வொரு வீட்டிலும் ஆஸ்பத்திரியிலும் வாசகசாலையிலும் கட்டாயம் இருக்கவேண்டிய புத்தகம் இது.

விலை: ரூ. 15/-; தபால் செலவு ரூ. 2/- தனி. வி. பி பி. கிடையாது

யோகாசன சித்திரப்படங்கள்

வழவழப்பான ஆர்ட் காகிதத்தில் கண்ணைக்கவரும் விதத்தில் பெரிதாகச் சித்தரிக்கப்பட்ட வரைபடமும் இங்கே கிடைக்கும். இந்த யோகாசனங்களை உங்கள் வீட்டிலேயே எளிதாகச் செய்யலாம். அவை உங்கள் உடலுக்கு வலிவும் வனப்பும் அளிக்கும். விலை ரூ. 2-50. தபால் செலவு உள்பட மணியார்டர் மூலம் அனுப்பவேண்டும்.

ராம்தீர்த் பிராமி தைலம்

ஸ்பெஷல் நெ. 1 ரிஜிஸ்டர்டு

விலை: பெரிய புட்டி ரூ. 4/-; சிறிய புட்டி ரூ. 2/-.

எங்கும் கிடைக்கும்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

தாதர், சென்ட்ரல் ரயில்வே, பம்பாய்-14, போன்: 62899.

ராம்தீர்த் பிராமி ஆயில் டெப்போ, 257, தங்கசாலைத் தெரு, சென்னை-1

பெண்களுக்கு மட்டும்

எஸ். விஜயா

தெரிந்து கொள்ளுங்கள்

நைலான் ஆடைகளை குளிர்காலத்தில் மட்டுமே அணியலாம். வெயில் காலத்தில் அணிவது தீமை செய்யும். சரும நோய்கள் தோன்றவும் காரணமாகும். ஆடை அணிவதின் முக்கிய நோக்கம் அவயவங்களை மறைக்கவே என்பதை மறந்துவிடக்கூடாது. நைலானில் உடல் தெரியாத நயமான தினுசுகளும் உண்டு.

பூந்திக்கொட்டையை அரைத்து அல்லது கெட்டித்தயிரை தலையில் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் கூந்தல் கொட்டுவது குறைந்து விடும்.

குழந்தைகள் இரவில் தூங்காது தொந்தரவு கொடுத்தால் ஓமம், வாய்விடங்கம், இந்துப்பு மூன்றும் சம அளவாக எடுத்து தூள் செய்து சிறிதளவு ஜலத்தில் கரைத்துக் கொடுக்கலாம்.

மானசீக காரணமின்றி வேறு ஏதாவது காரணத்தால் இரவில் தூக்கம் சரியாகப் பிடிக்காவிட்டால் தேங்காய் எண்ணெயோடு சிறிது ஜலம் சேர்த்து உள்ளங்காலிலும் உச்சித்தலையிலும் நன்கு தேய்க்கவேண்டும். இப்படிச் செய்தால் நல்ல தூக்கம் வரும்,

அதிகமாக உழைப்பது யார்? ஆணா? பெண்ணா?

வெளியில் சம்பாதிக்கச் செல்லும் ஆண்களே அதிகமாக உழைக்கிறார்கள், வீட்டிலிருப்பதால் பெண்களுக்கு ஆண்களைப்போல் அவ்வளவு கடினமான சரீர உழைப்புக் கிடையாது என்றே இதுவரை நம்பப்பட்டு வந்தது. ஆனால் மேல்நாட்டு டாக்டர்கள் பலர் இது பற்றி ஆராய்ந்து இது தவறான கருத்து என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

சிகாகோ நகரில் உள்ள மைகேல் ரீஸ் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எட்வர்டு கோர்டனும் அவர் சகாக்களும் வீட்டுக் காரியங்களை செய்வது இள்ளுக் கீரையல்ல எனக் கூறுகின்றனர். குழந்தைகளை இடுப்பில் தூக்குவதால் ட்ராக்டர் ஓட்டுவதைவிட அதிக சக்தி விரயமாவதாக அவர்கள் கூறுகிறார்கள். உதாரணமாக வீட்டு மரச்சாமான்களை பாலிஷ் செய்ய, பாத்திரம் தேய்க்க நிமிடத்துக்கு 2.4 காலரி, குழந்தைகள் துணி துவைக்க 3.00 காலரி, பெரியவர்கள் துணி துவைக்க 3.6 காலரி, வீட்டை கூட்டுவது, பிரஷ் போட்டுத் தரையை அலம்புவதற்கு 3 6 காலரி, தையல் வேலைக்கு 1 8 காலரி, நாட்டியமாடுவதற்கு 5.5 காலரி, சங்கீதத்திற்கு 2·5 காலரி சக்தி செலவாவதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் ட்ராக்டர் ஓட்ட நிமிடத்துக்கு 2·8 காலரி சக்திதான் விரயமாகிறதாம். இதேபோல் ஆண்கள் வெளியில் போய் செய்யும் பெரும்பாலான வேலைகளுக்கு பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகளுக்கு சக்தி செலவாவதைப் போல் செலவாவதில்லை. ஆகையால் ஆண்களைப் போல் பெண்களுக்கு அவ்வளவு உடல் உழைப்பு இல்லை என நினைப்பது தவறு. ஆண்களை விட பெண்களுக்கே அதிக உடல் உழைப்பு என அவர்கள் கூறுகிறார்கள்.

குழந்தை வளர்ப்பு

குழந்தைகளை காலையில் சூரியோதயத்திற்கு முன்பாக எழுப்பி விடுங்கள். நீங்களும் அவர்களுக்கு முன் வழிகாட்டியாக அதிகாலையிலேயே எழுந்து பழகுங்கள். அளவுக்கதிகமாகத் தூங்குவதால் இரத்தத்தில் விஷப் பொருள்களின் அளவு அதிகரிப்பதாகவும். இதனால் சோம்பேறித்தனம் நாளுக்கு நாள் தடிப்பதாகவும் மேல் நாட்டு டாக்டர்கள் இப்பொழுது ஆராய்ந்து அறிந்துள்ளனர். அதிக தூக்கம் உங்களுடையவும் உங்கள் குழந்தைகளுடையவும் இரத்தத்தை விஷமாக மாற்றுகிறது. சோம்பேறிகளாகவும் ஆக்கி விடுகிறது என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

நீங்களும் சரி, உங்கள் குழந்தைகளும் சரி எண்ணெய் ஸ்நானம் செய்யும்போது உச்சம் தலையைப்போலவே உள்ளங்காலிலும் எண்ணெய் பூசுவது அவசியம். அதேபோல் நாபியிலும் பூசவேண்டுவது முக்கியம். உச்சித் தலையிலும் உடலிலும் மட்டும் பூசி ஸ்நானம் செய்வது அவ்வளவு பயனளிப்பதாகாது

நீங்களோ உங்கள் குழந்தைகளோ குறட்டையிடுவது உங்களுக்கு மட்டுமல்ல, வீட்டில் உள்ள மற்றவர்களுக்கும் தீமை செய்வதாகும். ஏனெனில் உங்கள் குறட்டையால் பிறர் தூக்கமும் கெட்டுப்போகிறது. முகட்டைப் பாாத்தபடி படுத்துத் தூங்க வேண்டாம். ஏதாவது ஒரு பக்கம் ஒருக்களித்துப்படுத்து தூங்கப் பழகவும். இதனால் குறட்டை வராது தடுத்துக் கொள்ளலாம். ஆகையால் நீங்களும் முகட்டைப் பார்த்தபடி படுத்துத் தூங்கப் பழகவேண்டாம். உங்கள் குழந்தைகளும் அவ்விதம் தூங்குவதை அனுமதிக்க வேண்டாம்.

வாசனை வாஸலின்

இதைத் தயாரிக்க கீழ்க்கண்ட பொருள்கள் வேண்டும்.

வெள்ளை வாஸ்லின்	... 1	ராத்தல்
யலாங் யலாங்	... 1	டிராம்
ரெக்டிபைடு ஸ்பிரிட்	... 1½	டிராம்
லானோலின்	... 2	அவுன்ஸ்
வானிலின்	... 5	கிரெய்ன்

யலாங் யலாங், வானிலின் இரண்டும் வாசனைப் பொருள்கள். இவை எஸன்ஸ் கடைகளில் கிடைக்கும். மற்ற மூன்றும் இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும்.

ஜலபாத்திரத்தில் வெள்ளை வாஸ்லின் லானோலின் இரண்டையும் ஒன்றாக இட்டு உருக்கவும். ஒரு சிறு பாட்டிலில் ரெக்டிபைடு ஸ்பிரிட்டை ஊற்றி அதோடு வாசனைத் திரவியங்களான வானிலின், யலாங் யலாங், இரண்டையும் சேர்த்து பாட்டிலை மூடி நன்கு குலுக்கிக் கொள்ளவும். அப்பொழுது சாராயத்தோடு வாசனைத் திரவியங்கள் இரண்டறக் கலந்து விடும். வாஸ்லினும் லானோலினும் உருகி திரவஉரு அடைந்ததும் ஸ்பிரிட்டில் கலக்கி உள்ள வாசனைப் பொருளை துளித்துளியாக அதோடு சேர்த்துக் கிளறிக்கொள்ளவும். வாசனை எல்லாம் சேர்த்து முடிந்ததும் அடுப்பை விட்டிறக்கி ஆறவிடவும். அப்பொழுது அது இறுகி கெட்டிப்பட்டு விடும். திருகுமூடி போட்ட பாட்டில்களில் பிறகு பத்திரப் படுத்தலாம்.

இரட்டை இழைப்பாகு

சாதாரணமாகப் பாகு காய்ச்சும்போது அதோடு சிறிது பால் சேர்த்தால் அதில் உள்ள அழுக்கெல்லாம் மேலே மிதக்கும். அதை அகற்றிவிட்டு பாகு பதம் வந்ததும் ஜலத்தில் விரலை முக்கி எடுத்து பாகை ஈரமான ஆள்காட்டி விரலால் தொடவும். பிறகு கட்டை விரலை ஆள்காட்டி விரலில் அழுத்தி பாகை ஆள்காட்டி விரலால் தொடவும். அதன் பிறகு மெதுவாக கட்டைவிரலை ஆள்காட்டி விரலிலிருந்து விலக்கவும். இப்படி விலக்கும் போது இரண்டு விரல்களுக்கும் இடையில் பாகு மெல்லிய நூல் இழைபோல் ஒட்டிக்கொண்டுவரும். இப்படி ஒட்டிக் கொண்டுவரும் நூல் போன்ற பாகு இழை ஒன்று என்றால் அது ஒரு இழைப்பாகு எனப்படும். இரண்டு என்றால் இரண்டிழைப்பாகு. மூன்று என்றால் மூன்றிழைப் பாகு. பாகு கெட்டிப்படப்பட இழையின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

சமையற் கலை

தேங்காய்ப்பால் கேக்

இதைத்தயாரிக்க இரண்டு பெரிய தேங்காய், கால்படி சுடுநீர், அரைக்கால்படி அரிசி மாவு அரைக்கால்படி சர்க்கரை, வாசனைக்கு ஏலக்காய் போதுமானது, முதலில் தேங்காயைத் துருவி சுடு நீர் விட்டு பால் பிழிந்து கொள்ளவும். பிறகு அப்பாலை அடுப்பேற்றிக் கொதிக்கவைக்கவும். நன்கு கொதி அதில் வந்ததும் மாவைக் கொட்டிக் கிளறவும். மாவு கட்டிபடாது கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். இதற்கு மாவை சிறிது சிறிதாகச் சேர்க்கவேண்டும். பிறகு இதேபோல் சர்க்கரையையும் சேர்த்துக் கிளறவும், பிறகு ஏலம் சேர்க்கவும். எல்லாம் கெட்டிப்பட்டு நீர் அம்சம் எல்லாம் சுண்டியதும் அடுப்பை விட்டிறக்கி தாம்பாளத்தில் கொட்டி ஒரே மட்டமாக்கவும். பிறகு துண்டு துண்டுகளாக வெட்டிக்கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் முந்திரிப் பருப்பு, கிஸ்மஸ் முதலியவைகளும் சேர்த்துக் கொள்ளலாம்.

கம்பு அடை

கம்பு, அரிசியை விட உடம்புக்கு நல்லது. அதிக சத்துள்ளதும்கூட. ஆனால் பழக்க தோஷத்தால் படித்தவர்களும், நகரில் வாழ்பவர்களும் நெல் விளையும் டெல்டா பகுதியினரும் கம்பை உணவாக உட்கொள்வதில்லை. அது மட்டுமல்ல; அதை உணவாக உட்கொள்ளுவதை தாழ்வாகவும் கருதுகிறார்கள். இது மிகவும் விசனிக்கத் தக்கதொரு நிலை எனச் சொல்லத் தேவையில்லை. சிலர் கம்பு தங்கள் உடம்புக்கு ஒத்து வராது. வயிற்றைக் கோளாறு செய்யும் எனவும் சொல்லுவதுண்டு. கம்பை வயிற்றுக்கு எதுவும் கோளாறு ஏற்படாத வகையில் எவ்விதம் அடையாகத் தயாரிக்கலாம் என்பதை கீழே விவரிக்கிறேன்.

அரைக்கால் படி கம்பு மாவுக்கு எட்டு பெரிய முள்ளங்கிக்கிழங்கு, சிறிதளவு பச்சைக் கொத்துமல்லி, கறிவேப்பிலை, பச்சை மிளகாய், காயம், உப்பு, நெய் இருந்தால் போதும். மாவு கமகம என இருக்கவேண்டுமானால் கம்பை வறுத்து மாவாக இடித்துக் கொள்ளலாம். முள்ளங்கியை இடித்து, அரைத்து அல்லது கழுவி சாறு பிழிந்து கொள்ளவும், மாவில் முள்ளங்கிச்சாறையும் உப்பையும் சேர்த்துப் பிசையவும். சாறு போதாவிட்டால் சுடுநீர் சேர்த்துக்கொள்ளலாம், பிறகு காயம், நறுக்கிய மல்லிக் கீரை, பச்சைமிளகாய், முதலியவைகளையும் அதோடு சேர்த்துப் பிசையவும். பிறகு அடைக்கல்லை அடுப்பில் வைத்து நெய் வார்த்து அடையாகச் சுட்டு எடுத்துச் சாப்பிடலாம் நல்ல ருசி. உடம்புக்கும் நல்லது. வயிற்றுக்கோளாறும் செய்யாது.

பிப்ரவரி இதழில் அவரைக்காயை பக்குவம் செய்யும் பல முறைகளை வெளியிடுகிறோம். அக்காயை பக்குவம் செய்யத் தங்களுக்குத் தெரிந்த புதுமையான முறைகளை சகோதரிகள் 15–1–60க்குள் எங்களுக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைத்தால் அவற்றையும் சேர்த்து வெளியிடுகிறோம்.

"மலைச்சாரல் மாதவி"யில் நடிக்கும் குமாரி நந்தினி

திரை உலகம்

விச்வம்

விமர்சனம்

பொன் விளையும் பூமி

கருத்துச் செறிவோடும், கட்டுக் கோப்போடும் பின்னப்பட்டு கம்பீரநடைபோடும் கதை முற்பகுதியில் உள்ளத்தைத் தொடுகிறது. "பொன் விளையும் பூமி" என்ற சொல் உவப்பை உண்டு பண்ணுகிறது. பாதிவரையில் பெருவிருந்தளிக்கும் படம், முடிவை நெருங்கும்போது சுவையிழக்கிறது. திட்டமான கருத்து இல்லை, கட்டுக்கோப்பும் தளர்கிறது.

இருந்தும் படம் வெற்றி. வெற்றிக்குக் காரணம் திறமைமிக்க டைரக்‌ஷன், உயர்ந்த நடிப்பு, நல்ல ஒளி, ஒலிப்பதிவுகள், சிறந்த வசனம்.

பல கட்டங்களில் டைரக்டரின் திறமை மிளிர்கிறது. முதற்பகுதியின் விறுவிறுப்புக்கு டைரக்‌ஷனும் சிறந்த எடிட்டிங்கும் முக்கிய காரணங்கள். பாலையாவை அறிமுகப் படுத்தும் புதுமையே புதுமை! காதல் காட்சிகளின் நாசூக்கு தமிழ்ப் பட உலகிற்கே ஒரு எடுத்துக்காட்டு. மிகையுமில்லாமல் குறையுமில்லாமல் கனகச்சிதம். பத்மினியும் சுகுமாரியும் மாறிமாறி ஆடும் நடனத்தின் ஷாட்டுகள் அபாரம். ஆள் மாறும் உத்தி அற்புதம். போக்கிரிகளிடமிருந்து தப்பி ஓடும் நல்லான்தெருவில் போகும் பிணத்தைத் தன் தோளில் தாங்கி, இறந்தது தன் தந்தை என்று அறிந்து அவர் முகத்தைப் பார்க்கமுடியாமல் பாதத்தை முத்தமிட்டு விம்மும் காட்சி மேதைக் கற்பனை, எண்ணத்தை விட்டு என்றும் அகலாது. இந்த விதமாகச் சிறு சம்பவங்களையும் ஆணித்தரமாக அறிவுறுத்தும் டைரக்டர் பாராட்டுக்குரியவர்.

நாகன் வேஷம் தாங்கும் S. V, சுப்பையா உண்மை நாகனாக மாறிவிடுகிறார்.

நல்லானும் நாகனுக்குச் சளைக்கவில்லை. கொச்சைத் தமிழ் பேசி, அதிலேயே கோப தாபங்களெல்லாம் காட்டி அனாயாசமாக நடிக்கிறார் ஜெமினி கணேசன்.



சுட்டி நடிகன் மாஸ்டர் ரவி

முத்தம்மாவாக பத்மினி ஆடி, அழுது, நம்மையும் ஆட்டி அழவைக்கிறார். பிரமாதம் என்று சொல்ல ஒன்றுமில்லா விட்டாலும், பொருத்தம் – கச்சிதம் – அவர் நடிப்பு.

பலகோடியின் பாத்திரம் வெறும் முலாம். அழுத்தமுமில்லை. அர்த்தமு மில்லை.

"ரூபா"வின் பாத்திரம் 'கனிசமா யில்லை. அது ரூபாயல்ல, வெறும் செப்பு நயா பைசா. ராகினியின் நடனங்கள் நன்றாயிருக்கின்றன. நடிப்பும் தேவலை.

வசனம் பிரமாதம். வெகு இயற்கை யான நடை. பழக்கமான சொற்றொடர் கள். தினசரி நாம் கையாளும் பழமொழி கள். உணர்ச்சியுள்ள கட்டத்திற்கென்று தனிரக 'தீப்பொறி'யில்லாமல் நடை முறை வசனம்— அரங்கண்ணல் சிறந்த வசனகர்த்தா என்பதை எடுத்துக்காட் டுகின்றது. சில இடங்களில் வசனம் அழகுக்களஞ்சியம் "பட்டணத்திலே வீதி தான் விசாலமாயிருக்குது, மனுஷங்க உள் ளம் குமுறியது" இதுபோல் எத்தனையோ எடுத்துக்காட்டலாம். ஐயருக்குக் கொடுத் திருக்கும் ஒவ்வொரு வாக்கியமும் ஒரு பொன் பெறும்.

வளரும் நட்சத்திரம்

பிரமீளா-தேவிகா

பிரதிபா பிக்சர்சார் தயாரித்த "ரேசுகா" என்ற தெலுங்குப் படத்தில் கதாநாயகி, அஞ்சலிதேவி. உபகதாநாயகியாக நடித்தி ருப்பது பிரமீளா என்ற புதுமுகம். அப் படத்தை "நாட்டியதாரா" என்ற பெயரில்

வீட்டில் தேவிகா

ரவி பிலிம்சார் தமிழில் டப் செய்து 1955-ம் வருஷம் தீபாவளியன்று வெளியிட்டார்கள். படம் நல்ல வசூல் கொடுத்தது.

டி. என். ஆர். புரொடக்ஷன்ஸ் அதிபர் திரு ஆர். கல்யாணராமன் அவர்கள் இளம் நடிகை பிரமீளாவை "ராணி லலிதாங்கி"க்கு ஒப்பந்தம் செய்தார். பிரமீளாவைத் தமிழ்ப் பட உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர் அவரே. "ராணி லலிதாங்கி" தயாராகிக் கொண்டிருந்தபோதே பரணியின் "மண மகன் தேவை" என்ற தமிழ்-தெலுங்குப் படத்துக்கு பிரமீளா ஒப்பந்தம் செய்யப் பட்டாள். லலிதாங்கியில் பானுமதிக்குத் தோழியாகவும், மணமகன் தேவையில்

பானுமதிக்குத் தங்கையாகவும் நடித்துக் கொண்டிருந்த பிரமீளாவின்மேல் முதலாளி எம். ஏ. வேணுவின் பார்வை விழுந்தது. "முதலாளி"யில் கதாநாயகி பாகம் கிடைத்தது பிரமீளாவுக்கு. பிரமீளா தேவிகாவாக மாறினுள். "முதலாளி" அதில் நடித்த பலரையும் முதலாளிகள் ஆக்கி விட்டது பிரசித்தம்.

தொடர்ந்து தேவிகாவுக்குக் கிராக்கி குவிந்தது. "மாதவி," "அன்பு எங்கே?" "சகோதரி" ஆகிய பல படங்கள் தேவிகாவை வளரும் நட்சத்திர மாக்கின. உழைப்பால் உயர்ந்து வரும் பிரமீளா கூடிய சீக்கிரம் முன்னணிக்கு வந்து விடுவார் என்பதில் ஐயமில்லை.

தேவிகா - தம்பியோடு

புது முகங்கள்

குமாரி நந்தினி

ரவி பிலிம்சின் "மலைச்சாரல் மாதவி" என்ற படத்தில் ஜயந்தி என்ற முக்கியமான பாத்திரத்தில் நடிப்பவர் குமாரி நந்தினி என்ற கல்லூரி மாணவி. பரத நாட்டியத்தில் தேர்ச்சி பெற்ற நந்தினிக்கு படத்திலும் சில நடனங்கள் இருக்கும் என்று தெரிகிறது.

மாஸ்டர் ரவி

"வீரசிவாஜி"க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் குட்டி நடிகன் மாஸ்டர் ரவி. குட்டி நடிகனுயினும் சுட்டிப் பயல்.

இரும்புத் திரை

பேரழகி வைஜயந்திமாலா சிவாஜி கணேசனுடன் காதல் கட்டங்களில் உன்னதமாக உள்ளத்தைக் கொள்ளும் வகையில் இரும்புத் திரையில் நடித்துள்ளார். முதன் முதலாக பிரசித்திபெற்ற இந்த ஜோடிகள் சேர்ந்து நடிக்கின்றுர்கள்.

வைஜயந்திமாலாவின் பெற்ற தாய் வசுந்தராதேவி. படத்திலும் தன் பெண்ணுக்கு தாயாக நடிப்பது ருசிகரமான அம்சம்.

ஜெமினியின் சிருஷ்டிகளில் இரும்புத்திரை அற்புதமான சமூக திரைப்படம். நவீன தற்காலத்துக்கு உகந்த கருத்துக்கள் அமைந்தது.

சிவாஜிகணேசன், வைஜயந்திமாலா, B. சரோஜா தேவி, பண்டரிபாய், வசுந்தராதேவி, S.V.சுப்பையா, S. V.ரெங்காராவ், D.பாலசுப்பிரமணியம், ஜாவர் சீதாராமன், S. R. ஜானகி, K. A. தங்கவேலு, T. S. துரைராஜ், வனஜா மற்றும் பலர் நடிக்கும் திரைச் சித்திரம்.

S. S. வாசன் டைரக்ட் செய்துள்ள இப்படம் தென்னிந்தியா முழுதும் விரைவில் வெளியிடப்படும்.

Edited & Published by N. R. Ramanujam, B.A., & Printed by S. Rangaswami, B.A., at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

20 FEB 1960